Agatha Christie

# அகதா கிறிஸ்டி

THE MOVING FINGER

# நகரும் விரல்

கண்ணதாசன் பதிப்பகம்

மின்நூல் ஆக்கம்: தமிழ் நேசன்

மின்நூல் கூடம்

2017

# நகரும் விரல்

## (Moving Finger)

**அகதா கிறிஸ்டி**

**தமிழில்**

கொரட்டூர் கே. என். ஸ்ரீனிவாஸ்

கண்ணதாசன் பதிப்பகம்

23, கண்ணதாசன் சாலை,

தியாகராய நகர்,

சென்னை-600017.

தொலைபேசி: 24332682

மதுரை ❖ கோவை ❖ பாண்டி

முதற் பதிப்பு ஜனவரி, 2017

Copyright © 2017 Agatha Christie Limited, a Chorian Company. All Right Reserved.

E-mail: sales@kannadasan.co.in
Our Web Site: www.kannadasan.co.in

பதிப்பாசிரியர்: காந்தி கண்ணதாசன்

**எச்சரிக்கை**

காப்பிரைட் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றி பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

**-காந்தி கண்ணதாசன் பி.ஏ., பி.எல்.,**

No Part of this book may be reproduced or transmitted in any form or by any means electronic or mechanical including photocopying or recording or by any information storage and retrieveal system without permission in writting from Gandhi Kannadhasan, B.A., B.L., Chennai.

**Price Rs:190/-**

**"NAGARUM VIRAL"**-Tamil

Translated from the English Original **"The Moving Finger"**

- Written By **AGATHA CHRISTIE**
- Translated By **Korattur K.N.Srinivas**
- First Edition January, 2017
- Publishing Editor **Gandhi Kannadhasan**
- Published By **Kannadhasan Pathippagam**
  23, Kannadhasan Salai,
  Thiyagaraya Nagar, Chennai - 600 017
  Ph: 044-24332682 / 24338712

**ISBN: 978-81-8402-581-1**

- Our Branches
  - No: 1212, Range Gowder Street, **Coimbatore** - 641001 ☎: 0422 - 2479774
  - 1, Annai Complex, III Street, Vasantha Nagar, **Madurai**-625 003. ☎: 0452 - 2373793, 2373180.
  - 37, Bharathy Street, **Puducherry** - 605 001. ☎: 0413 - 2221241
- Our Bankers State Bank of India, T.Nagar, Chennai-17

Print & Bind at United Bind Graphics Chennai-10 Ph 26401531

# மொழிபெயர்ப்பாசிரியரின் நூல் அறிமுகம்

*மொட்டைக் கடுதாசிகள், அந்த சிறு கிராமம் முழுக்க ஒருத்தர் பாக்கியில்லாமல் அனைவருக்கும் வருகின்றது. அனைத்தின் சாரமும் ஒன்றுதான்: செக்ஸ் தாக்குதல்கள்.*

*கடுதாசிகள் கூறும் அனைத்தும் பொய் என்று ஒதுக்கி விடுகிறவர்கள் இருக்கிறார்கள்.*

*அதேசமயம், அது பொய்யென்று தனக்கும் மற்றவர் களுக்கும் தெரியும் என்று அறிந்திருந்தாலும், சீரியஸாக எடுத்துக் கொள்பவர்களும் இருக்கிறார்கள்.*

*இவ்வாறு மனத்தளவில் பாதிக்கப்பட்டு விடும் ஒருவர் இறந்து போகிறார்.*

*இங்கு ஒரு சந்தேகம்: வந்த மொட்டைக் கடுதாசியின் தாக்குலால்தான் அவர் இறந்தாரா? அல்லது.........?*

*ஒருவேளை அது கொலையாய் இருந்தால், யார் செய்திருப்பார்கள்?*

*காரணம்?*

*கொலைக்கான இலக்கே தட்டுப்படாதபோது அது கொலைதான் என்று நிரூபிக்க எடுக்கப்படும் முயற்சிகள் ஜெயிக்குமா?*

மொட்டைக் கடுதாசி எழுதிய அதே நகரும் விரல்கள்தான், இக்கொலைக்கான காரணமா? அல்லது இக்கொலையே, மொட்டைக் கடுதாசிகளுடன் தொடர்பற்ற ஒரு தனி ட்ராக்கா?

அற்புதமாய் நகரும் இந்த க்ரைம் த்ரில்லரின் க்ளைமாக்ஸ் இருக்கிறது பாருங்கள்... மொட்டைக் கடுதாசிகள் மற்றும் கொலை ஆகியவவை தோலுரிக்கப்படும் அந்தக் கடைசி நிமிடங்கள் இருக்கின்றன பாருங்கள்...! வாவ்... நேரத்தை ஒதுக்கி ஏறத்தாழ முன்னூறு பக்கங்கள் படித்ததன் பலன் கிட்டும் நிமிடங்கள் அவை!

அகதா கிறிஸ்டியின் The Moving Finger, இங்கு என் மொழிபெயர்ப்பில் மொட்டைக் கடுதாசிகளை எழுதித்தள்ளும் நகரும் விரல்களாய் உங்களைக் குடைய வருகின்றன.

ஜாக்கிரதை!

அன்பன்,

முனைவர் கே. என். ஸ்ரீனிவாஸ், Ph.D.,
knsrinivas@gmail.com
9940456454



# முக்கிய கதாபாத்திரங்கள்

- *ரிச்சர்ட் ஸிம்மிங்டன்*
- *மிஸஸ் மோனா ஸிம்மிங்டன்*
- *இவர்களுடைய பிள்ளைகள்: மேகன் ஹண்ட்டர், ப்ரையான் மற்றும் காலின்*
- *அண்ணன் தங்கையான ஜெர்ரி பர்ட்டன் மற்றும் மிஸ் ஜோன்னா பர்ட்டன்*
- *இவர்கள் தங்கியிருக்கும் லிம்ஸ்டாக் கிராமத்து லிட்டில் ஃபர்ஸ் வீட்டு ஓனர், மிஸ் எமிலி பார்ட்டன்*
- *அண்ணன் தங்கையான டாக்டர் ஓவன் க்ரிஃபித் மற்றும் மிஸ் ஐமீ க்ரிஃபித்*
- *பாதிரியார் ரெவரெண்ட். கலேப் டேனே கேத்ராப் மற்றும் அவரது மனைவி மிஸஸ் டேனே கேத்ராப்*
- *மிஸ்டர் பை*
- *வேலைக்காரப் பெண்கள், பேட்ரிட்ஜ், ஏக்னஸ், ஃப்ளாரன்ஸ், எல்ஸீ ஹாலண்ட்*
- *சூப்பரின்டெண்டெண்ட் நாஷ்*
- *இன்ஸ்பெக்டர் க்ரேவ்ஸ்*

  *மற்றும்*
- *மிஸ் மார்ப்பிள்*

# பொருளடக்கம்


அத்தியாயம் 1 .......... 7

அத்தியாயம் - 2 .......... 31

அத்தியாயம் - 3 .......... 53

அத்தியாயம் - 4 .......... 75

அத்தியாயம் 5 .......... 94

அத்தியாயம் 6 .......... 123

அத்தியாயம் - 7 .......... 161

அத்தியாயம் - 8 .......... 199

அத்தியாயம் - 9 .......... 237

அத்தியாயம் 10 .......... 278

அத்தியாயம் 11 .......... 298

அத்தியாயம் - 12 .......... 315

அத்தியாயம் - 13 .......... 329

அத்தியாயம் 14 .......... 358

அத்தியாயம் 15 .......... 373

# அத்தியாயம் - 1

## I

ஒருவழியாக கடைசியாய் நான் ப்ளாஸ்டரிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு பிழைப்பானா என்ற பட்டியலிலிருந்து டாக்டர்கள் என்னை அகற்றிய பிறகு நான் இனிமேல் எச்சரிக்கையாய் நடக்கலாம் என்று நர்சுகள் கண்களையுருட்டி அனுமதித்த பிறகு நான் கிளம்பலாம் என்றும், கிளம்பியபிறகு நேராய் ஒரு கிராமத்தில் போய் இருக்க வேண்டும் என்றும் சொன்னார் மார்கஸ் கென்ட்.

''ஆரோக்கியமான காற்று, அமைதியானதொரு வாழ்க்கை, ஒன்றும் செய்யாமல் இருக்கும் சூழ்நிலை இவைதான் உங்களுக்கான ப்ரிஸ்க்ரிப்ஷன்'' என்றார் அவர். உங்களுடைய சகோதரி உங்களை கவனிச்சுப்பா. நல்லா சாப்பிடுங்க. பேசாம தூங்குங்க. தட்ஸ் ஆல்.''

இனி என்னால் மறுபடியும் பறக்க முடியுமா என்று நான் அவரைக் கேட்கவில்லை. சில கேள்விகள் இருக்கின்றன... அவற்றுக்கு வரக்கூடிய பதிலை நினைத்து உருவாகும் பயத்தால் நாம் கேட்காமலே விட்டுவிடும் கேள்விகள்

அவை. இவ்வகையில், வாழ்நாள் முழுதும் இப்படியே நான் படுத்தே கிடக்க வேண்டியதுதானா என்ற கேள்வியை நான் கடந்த ஐந்து மாதகாலமாக ஒருமுறைகூட கேட்கவில்லை. ‘‘அய்யய்யே... என்ன ஒரு கேள்வி! இப்படியெல்லாம் எங்க பேஷண்டுகள் அதைரியப்படுவதை நாங்க அனுமதிப்ப தில்லை!’’ போன்ற பாசாங்குப் பதில்கள் என்னை நிச்சயம் புண்படுத்திவிடும்.

ஆகவே நான் கேட்கவில்லை - அதனால் பாதகமொன்று மில்லை. அப்படியொன்றும் நான் மொத்தமும் உடைந்து, ஒரு ஐந்துபோல கிடக்கவில்லை. என்னால் என் கால்களை அசைக்க முடிந்தது, அவற்றின் தயவால் நிற்க முடிந்தது, இறுதியாய் சில அடிகள் நடக்க முடிந்தது. நடைபழகும் ஒரு குழந்தையைப் போல என்னை கைத்தாங்கலாய் பிடித்துக் கொண்டு, என் கால்களைத் தூக்கி வைப்பதில்கூட நர்சுகள் உதவியதை, ஏதோவொரு வீரதீர சாகசம் போல நான் அனுபவித்தாலும் - வெல், அதெல்லாம் பலஹீனத் தாலும் பல நாட்கள் பயன்படுத்தாமலே விட்டு வைத்ததாலும்தான். எல்லாம் கடந்து விடும்.

நோயாளியை சரியாய் கணித்துவிடும் கூர்மையான டாக்டரான கென்ட், நான் கேட்காமல் விட்டு வைத்ததற்கு பதில் தந்தார். நீங்க முழுக்கவும் பழையபடி ஆகத்தான் போறீங்க’’ என்றார் அவர். ‘‘போன செவ்வாய்க்கிழமை வரை எங்களுக்கேகூட நம்பிக்கை இல்ல. ஆனா இப்ப நிச்சயப்படுத்தி சொல்றேன்: உங்களால் முடியும். ஆனா ஒண்ணு இது ஒரு நீண்ட பிஸினஸா இருக்கப் போகுது. மிகவும் நீளமாள மற்றும் அசதி ஏற்படுத்திவிடும் பிஸினஸ். நரம்புகள் மற்றும் தசைகள் ஆகியவற்றுக்கான சிகிச்சை என்றால், அதற்கு மூளை ஒத்துழைப்பு தந்தாக வேண்டி

யிருக்கு. பொறுமையில்லாம நடந்துக்கிட்டாலோ அல்லது சோம்பேறித்தனமா விட்டுட்டாலோ, மறுபடியும் பழைய நிலைமைக்கே போயிடுவீங்க. அவசரப்பட்டுடா தீங்க. 'இதோ, சீக்கிரம் ஓடிடறேன்'னு கிளம்பிடாதீங்க. அதெல்லாம், இந்த ஆஸ்பத்திரி படுக்கைக்கே உங்களை சடுதியில் கொண்டு வந்து போட்டுடும். ஸோ, இனிமே, நீங்க வாழ்க்கையை ஈஸியாகவும் வேகமில்லாம மெதுவாகவும் எடுத்துக்கணும். உங்க உடம்பு குணமடையணும் என்பது கிடையாது இப்ப முதன்மை பிரச்சினை நெடுநாட்களுக்கு உங்களை வலுவான மருந்துகளின் பிடியில் வைக்க வேண்டிய அவசியம் இருந்ததால் உங்களுடைய நரம்புகள் அனைத்தும் பலஹீன மடைந்திருக்கு. அவை முறுக்கேறணும்.

''இந்த ஒரு காரணத்துக்காகத்தான் உங்களை நான் ஏதாவதொரு கிராமத்துக்கு போகச் சொல்வதே. ஒரு வீட்டை எடுத்துக்கங்க. லோக்கல் குழப்பங்கள்ல பங்கெடுத்துக்கங்க. கிராமத்துப் புரளிகள், கிசுகிசுக்கள், ஊழல்கள், இதிலெல்லாம். அங்கே உங்களைச் சுற்றியிருப்பவர்கள் மீதும் அக்கம்பக்கத் தார் மீதும் வெறித்தனமான ஓர் ஈடுபாட்டையும், துளைத் தெடுக்கும் இண்ட்ரஸ்ட்டையும் உருவாக்கிக்கங்க. இன்னும் தெளிவா ஆலோசிக்கணும்னா, கண்ணுக்கெட்டிய தூரம் வரை உங்களுக்குத் தெரிஞ்சவங்க யாருமே இல்லாத உலகத்தின் ஒரு பகுதியைத் தெரிந்தெடுங்கன்னு நான் சொல்வேன்.''

நான் ஒப்புதலாய் தலையசைத்தேன். ''அப்படிப்பட்ட ஒரு பகுதியை'' என்ற நான், ''ஏற்கனவே நினைச்சு வெச்சிருக்கேன்'' என்றேன்.

வேண்டப்பட்டவர்கள் கூட்டம் ஓடோடி வந்து கண்களையும் மூக்கையும் சிந்திக்கொண்டு காட்டும்

இரக்கத்தைவிட அதிக வேதனை, அடிபட்ட ஒருத்தனுக்கு இருக்கவே முடியாது என்பது எனது கருத்து.

ஆக, நானும் ஜோன்னாவும், வீட்டுத் தரகர்களின் பட்டியலிலிருந்து பிரிட்டன் முழுவதையும் சலித்தெடுத்து, லிம்ஸ்டாக் பகுதியிலிருக்கும் லிட்டில் ஃபர்ஸ் வீட்டினை, 'போய்ப் பார்த்து வரலாம்' என்று சிபாரிசு செய்தோம். லிம்ஸ்டாக் பகுதிக்கு நாங்கள் இதுவரை போனது கிடையாது, மற்றும் அங்கு அக்கம்பக்கத்தில் எங்களுக்கு ஒருத்தரையும் தெரியாது ஆகிய இரு காரணங்களால் செய்த தெரிவு இது.

லிட்டில் ஃபர்ஸினை ஜோன்னா பார்த்ததும், அதுதான் நாங்கள் வேண்டிய வீடு என்று உடனடியாய் முடிவு கட்டி விட்டாள்.

சதுப்புநிலப் பகுதி வரை நீளும் சாலையில், லிம்ஸ்டாக் கிலிருந்து அரை மைல் தள்ளி அமைந்திருந்தது லிட்டில் ஃபர்ஸ் வீடு. அது ஒரு வெள்ளைநிற சிறுவீடு. வாசலில், மங்கிப் போயிருந்த பச்சைநிறத்தில் வராண்டா ஒன்றிருந்தது. புதர்கள் செறிந்திருந்த பிரதேசத்தின் அமைதியான காட்சி தெரியும்படியும், இடப்புறத்தில் லிம்ஸ்டாக்கின் சர்ச் அமையும்படியும் வீடிருந்தது.

பார்ட்டன் எனும் குடும்பத்தின் ஒருசில பெண்களுக்குச் சொந்தமாயிருந்துள்ளது லிட்டில் ஃபர்ஸ். அக்குடும்பத்தின் இளையவரான மிஸ் எமிலி மட்டுமே எஞ்சியிருந்தார்.

மிஸ் எமிலி, வசீகரமான முதியவர். தனது வீட்டினை அசாத்திய சுத்தமாய் வைத்திருந்தார். தணிந்த, மன்னிப்புக் கோரும் தொனியில் குரலை அமைத்துக் கொண்டு, தனது

வீட்டை வாடகைக்கு விட்டதே கிடையாது என்று ஜோன்னாவிடம் விளக்கினார் அவர். அப்படி வாடகைக்கு விடவும் நினைத்ததேயில்லை என்றும் சொன்னார். "ஆனா, பாருங்க... இப்பல்லாம் மாறிப்போயிடுச்சு. வரியெல்லாம் கெடுபிடியாயிடுச்சு. கிடைக்கும் ஒவ்வொரு காசுக்கும் கணக்குக் காட்டணும். எனக்கிருக்கும் சேமிப்பு மற்றும் ஷேர்கள் தான் எப்போதும் பாதுகாப்பானது என்பது என் கருத்து. அஃப்கொர்ஸ், இவற்றில் சிலவற்றை பேங்க் மானேஜரே சிபாரிசு செஞ்சார். ஆனா அதனாலெல்லாம் இப்ப பெரிய வரவு கிடையாது, தெரியுமா! அதுல பல ஷேர்கள் அயல்நாட்டுடையது. இது ஒரு பெரிய கஷ்டம்.

அயல்நாட்டு ஷேர்களைப் பணமாக்குவது பெரிய சிரமம். ஓகே... நீங்க வந்த விஷயத்தைப் பேசுவோம். நீங்க பார்க்க நல்லவங்களா தெரிவதால சொல்றேன்: தப்பா எடுத்துக் காதீங்க... முன்பின் தெரியாதவங்களுக்கு வீட்டை வாடகைக்கு தருவதை யாரும் சட்டுனு விரும்புவது கிடையாது. ஆனா உங்களைப் பார்த்ததுமே நீங்க இங்கே இருந்தால் நல்லாயிருக்குமேனு நினைக்க ஆரம்பிச்சுட்டேன். இளையவர்களுடன் இருப்பது, தேவைதான், இல்லையா! ஆங், சொல்ல மறந்துட்டேனே... ஆண்கள் இங்கிருப்பதில் எனக்கு இஷ்டம் கிடையாது!"

இக்கட்டத்தில் என்னை பற்றிய விவரங்களை ஜோன்னா உடைக்க வேண்டியதாயிற்று.

"ஓ, டியர், அப்படியா? என்ன துரதிர்ஷ்டம்! பறக்கும் போது விபத்தா? இந்தக்காலத்துப் பசங்களுக்கு பயமே கிடையாது. அய்யோ பாவம்... இன்னமும் அவர் படுத்த படுக்கையாகவே இருக்காரா?"

ஓர் ஆணாகிய என்னைப் பற்றிய அறிமுகம் அந்த முதியவருக்கு சங்கடத்தைத் தராததாய் ஆனது. மிஸ் எமிலி பயப்படுவதைப் போன்ற ஆஜானுபாகுவான சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவனாய் நானிருக்கக் கூடாது. நான் புகைபிடிப்பேனா என்று பட்டென்று கேட்டிருக்கிறார் அவர்.

"ஒரு புகைபோக்கியைப் போல" என்றிருக்கிறாள் ஜோன்னா. "அப்படிப் பார்க்கப்போனால்" என்ற அவள், "நானும்!" என்று முடித்திருக்கிறாள்.

"அஃப்கொர்ஸ், அஃப்கொர்ஸ். நான்தான் ஒரு முட்டாள். காலத்துக்கேற்றாற்போல நான் மாறல. என் சகோதரிகள் அத்தனை பேரும் என்னைவிட மூத்தவர்கள். நினைச்சுப் பாருங்க என் அம்மா தொண்ணூத்து மூணு வயசு வரை இருந்தாங்க! அதுவரைக்கும் தன் வேலைகளை தானே செஞ்சுக்கிட்டு பிரமாதப்படுத்துவாங்க. யெஸ், யெஸ், இப்பல்லாம் ஒவ்வொருத்தரும் புகைபிடிக்கிறாங்க. ஒரேயொரு சிரமம், இந்த வீட்டுல ஆஷ் ட்ரே கிடையாது."

இதற்கு ஜோன்னா "நாங்க கையோட நிறைய ஆஷ் ட்ரே கொண்டு வந்துடறோம்" என்று பதில் சொல்லியிருக்கிறாள். கூடவே, "அங்கங்கே சிகரெட் துண்டைப் போட்டு வெப்போம்னு மட்டும் நினைச்சுடாதீங்க" என்று ஆறுதல் தந்திருக்கிறாள். "அப்படி துண்டு சிகரெட் இங்குமங்கும் சிதறிக் கிடப்பது எனக்கேகூட பிடிக்காது."

ஆக, இருபுறமும் பிடித்துப் போயிற்று. ஆறு மாத காலத்துக்கு என்றும், தேவைப்பட்டால் மூன்று மாதங் களுக்கு நீட்டித்துக் கொள்வோம் என்றும் லிட்டில் ஃபர்ஸ் வீட்டினை நாங்கள் வாடகைக்கு எடுத்துக் கொண்டோம்.

தான் ஒரு பழைய தோழியின் வீட்டுக்குப் போகப் போவதாகவும் அது ஜோன்னாவுக்கு இன்னும் வசதியாக அமையும் என்றும் சொல்லியிருக்கிறார் மிஸ் எமிலி பார்ட்டன்.

''என் நம்பிக்கைக்குரிய ஃப்ளாரன்ஸ். எங்களோட பதினைந்து வருடங்கள் இருந்த பிறகு கலியாணம் கட்டிக் கிட்டா அவ. அற்புதமான ஒரு பொண்ணு. அவ புருஷன் பில்டிங் பிஸினஸ்ல இருக்கான். ஹை ஸ்ட்ரீட்ல அவங் களுக்கு ஒரு நல்ல வீடு இருக்கு. மாடில ரெண்டு அறைகள். அவை எனக்கு ரொம்ப வசதியா இருக்கும். மேலும் நான் வருவதுல ஃப்ளாரன்ஸூக்கு ரொம்ப சந்தோஷம்.''

அனைத்துமே எங்களுக்கு திருப்திகரமாய் அமைந்ததைப் போலானது. ஆக, ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டோம். நாங்களும் வந்து குடியமர்ந்தோம். மிஸ் எமிலியின் வேலைக் காரியான பேட்ரிட்ஜ் தொடர்ந்து அங்கேயே இருக்க ஒப்புக் கொண்டாள். பாதி மரைகழன்றதைப் போல தோன்றிய ஒரு 'பெண்ணால்' நாங்கள் கவனித்துக் கொள்ளப்பட்டோம். ஆயினும், அமரிக்கையாய் இயங்கினாள் அப்பெண்.

மத்திய வயதையொட்டிய பேட்ரிட்ஜ் ஈடுஇணையற்று சமைத்தாள். இரவில் நேரங்கழித்துச் சாப்பிடுவதில் அவளுக்கு சம்மதம் இல்லாவிட்டாலும், எங்களின் ஏனைய அனைத் திலும் அவள் ஒத்து வந்தாள். என் உடலில் பலம் கூட தேவை யான அனைத்தையும் அவள் செய்து தரத் தயங்க மாட்டாள் என்று சொல்லும் அளவுக்கு நெருங்கி வந்தாள் அவள்.

லிட்டில் ஃபர்ஸ் இல்லத்தில் நாங்கள் பொருந்தி வாழ்ந்து வந்தபோது, ஒருநாள் மிஸ் எமிலி பார்ட்டன் வந்தார் கையில் சீட்டுக் கட்டுகளுடன். அவரைப் போலவே

வக்கீலின் மனைவி மிஸஸ் ஸிம்மிங்டன், டாக்டரின் சகோதரி மிஸ் க்ரிஃபித், பாதிரியாரின் மனைவி மிஸஸ் டேனே கேல்த்ராப், ப்ரியர் எண்ட்டில் வாழும் மிஸ்டர் பை ஆகியோரும் அவ்வப்போது வர ஆரம்பித்தார்கள்.

ஜோன்னாவுக்கு கொண்டாட்டமாய் போனது.

ஆச்சரியம் அடைந்த அவள் சொன்னாள்: ''சீட்டு விளையாட என்று மக்கள் வீடுதேடி வருவாங்கன்னு நான் எதிர்பார்க்கவேயில்ல.''

''குழந்தே, அப்படின்னா உனக்கு கிராமத்தைப் பற்றி ஒண்ணும் தெரியலேனு அர்த்தம்.''

''முட்டாள் மாதிரி பேசாதே. நிறைய பேரோட வார இறுதி நாட்கள்ல புதர் சூழ்ந்த கிராமங்கள்ல நான் தங்கியிருக்கேன்.''

ஜோன்னாவைவிட நான் ஐந்து வருடம் மூத்தவன். குழந்தையாய் இருந்தபோது நான் இருந்த கிராமம் பற்றி என்னால் ஞாபகப்படுத்த முடிந்தது. கசாமுசாவென்று அழுக்கேறிக் கிடக்கும் எங்களுடைய பெரிய வெள்ளை வீடு, அதன் பின்னால் நதிதீரம்வரை நீளும் வயல் என எல்லாவற்றையும் ஞாபகப்படுத்திக் கொள்ள முடிந்தது. தோட்டக்காரனுக்குத் தெரியாமல் பறித்த கனிகள், காய்கள், வெள்ளை சிராய்களின் வாசம், குறுக்கே போன ஆரஞ்சு பூனை, வைக்கோலை எத்தியெத்தி ஓசையெழுப்பிய குதிரை...

ஆனால் எனக்கு ஏழு வயதும் ஜோன்னாவுக்கு இரண்டு வயதும் ஆனபோது, லண்டனிலிருந்த ஒரு ஆன்ட்டியுடன் வாழ்வதற்காக நாங்கள் அங்கு குடிபெயர்ந்து விட்டோம்.

அதற்குப் பிறகு கிறிஸ்துமஸும் புத்தாண்டும் இன்னபிற கொண்டாட்டங்களும் தியேட்டர்களிலும் ஓட்டல்களிலும் பொதுயிடங்களிலுமே முடிந்து போயின. அதுவே வழக்க மாகவும் ஆயிற்று.

இதெல்லாம் நினைவில் ஓட, நான் எந்த அளவுக்கு இப்போது பிரயோஜனமற்றுக் கிடக்கிறேன் என்ற சிந்தனை யினூடே ஜோன்னாவிடம் சொன்னேன்: "உனக்கும் இந்தக் கிராமத்துக்கும் ஏணி வெச்சாலும் எட்டாது. இதை நினைச் சாத்தான் எனக்குப் பயமாயிருக்கு. உன்னோட பார்ட்டி, கூத்து எல்லாத்தையும் நீ இங்கிருப்பதால் இழப்பே."

ஜோன்னா கவர்ச்சியானவள், ஆகவே ஒரு உல்லாசி. பாட்டில்கள் சியர்ஸ் பேசும் பார்ட்டிகள், அப்போது இடம் பெறும் நடனங்கள், காதல் சமாச்சாரங்கள், உயர் சக்தி கார் களில் காற்றின் வேகத்தில் பறப்பது... இவையெல்லாம்தான் ஜோன்னா.

இப்போது கலகலவென்று சிரித்த ஜோன்னா, அதெல்லாம் அவளுக்கு கவலையே கிடையாது என்றாள்.

"சொல்லப்போனா அந்த அனைத்து ஆரவாரங்களி லிருந்தும் நான் விலகியிருப்பதுல எனக்கு சந்தோஷந் தான். கூட்டங்கூட்டமான கூத்துகள் எனக்குப் போரடிச்சுடுச்சு. சொன்னால் நீ இரக்கப்பட மாட்டேனு தெரிஞ்சும் சொல்றேன்: இந்த ஜான்பால் வேற என்னை நொறுக் கிட்டான், படுபாவி. அதை நான் மறக்க இன்னும் பலகால மாகும்."

இதில் எனக்குப் பெருத்த சந்தேகம்தான். ஜோன்னாவின் காதல் கதைகளெல்லாமே இந்த ஜான்பால் கதை போலவேதான் போகும். தன்னை ஒரு மேதாவி என்று

தப்பாய் அறிவித்துக் கொள்ளும் முதுகெலும்பற்ற ஒரு ஐந்துமீது பைத்தியக்காரத்தனமான எதிர்பால் ஈர்ப்புக் கொள்வாள் இவள். அவன் என்ன குற்றஞ்சொன்னாலும் அதை சிரமேற்கொண்டு, எப்படியாவது சரிசெய்து அவனுடைய அங்கீகாரத்தைப் பெற்று விட உழை உழை என்று உழைப்பாள். பிறகு அவன் நன்றி கெட்டு நடந்து கொள்ளும்போது, ஆழமாய் காயமடைந்து விட்டதாய் சொல்பவள், நெஞ்சுடைந்து சிதறிப் போய் விடுவாள் அப்புறம் ஒன்றுக்கும் உதவாத வெட்டிப்பயல் ஒருத்தன் கிடைக்கும்வரை. இது, ஏறத்தாழ மூன்று வாரங்களுக்குள் நடந்துவிடும்!

ஆகவே, நெஞ்சுடைந்து போன ஜோன்னாவை நான் தற்சமயம் ஸீரியஸாகக் கருதவில்லை. ஆனால், இது போன்ற கிராமத்தில் வந்து வாழ்வதென்பது, சுண்டியிழுக்கும் விதமான அமைப்புள்ள என் தங்கைக்கு ஒரு புது விளை யாட்டினைப் போலத்தானிருக்கும் என்று மட்டும் விளங்கிக் கொண்டேன்.

''அத விடுற என்றாள் அவள். ''நான் எப்படியிருக்கேன், இத சொல்லு.''

அவளை நுணுக்கமாய்க் கவனித்த என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஸ்போர்ட்ஸ் சாயலில் ஜோன்னா ஆடையணிந்திருந் தாள். கனம்கனமான கட்டங்கள் போட்டதொரு பாவாடை. அது உடலோடு உடலாய் இறுக்கிக் கிடந்தது. அவளுடைய மேல்பக்கத்தில் சிரிப்பை உண்டாக்கும் ஓர் அரைக்கை ஜாக்கெட் போட்டிருந்தாள். இதற்கெல்லாம் ஒத்தே வராத சில கைவளையங்கள்.

''நோ'' என்று விட்டேன் நான். ''உன் முழு அலங்காரமும் தப்பு. மணிகள் கொண்ட பழங்காலத்திய பாவாடையைத் தான் நீ கிராமத்துல இருக்கும்போது அணிஞ்சிருக்கணும். முடிந்தால், அது அழுக்கேறிய ப்ரவுன் அல்லது சாயம்போன பச்சை நிறத்தில் இருந்தால் இன்னும் விசேஷம். அதுக்கு மேல ஒரு காஷ்மீரியன் கோட். கனமான தொப்பி. பழைய ஷூ. அப்பத்தான், அப்ப மட்டுந்தான் நீ லிம்ஸ்டாக் ஹை ஸ்ட்ரீட்டின் பின்னணிக்குப் பொருந்துவே. இப்ப தெரிவதைப்போல ஒரு தனியாளா தெரிய மாட்டே.'' பிறகு கூடுதலாய் சொன்னேன் ''உன் மூஞ்சியும், முழுக்கவும் தப்பு ஜோன்னா.''

''இதுல என்ன தப்பைப் பார்த்தே நீ? அற்புதமான மேக்-அப் நெ.2 வாங்கியிருக்கேன்.''

''எக்ஸாக்ட்லி'' என்றேன் நான். ''அதான் தப்பு! நீ லிம்ஸ்டாக்குல இருக்கும்போது, மூக்குல வழியும் எண்ணெயை மறைக்க மட்டும் கொஞ்சம் பவுடர் தடவலாம்... அவ்வளவே. கொஞ்சம் லிப்ஸ்டிக் அதை காடியா ரொம்பல்லாம் அடிக்கக்கூடாது.''

ரொம்பவுமே ஆச்சரியப்பட்டவளாய் ஆனாள் ஜோன்னா. ''அப்ப என்னைப் பார்த்தால் இங்கிருப்பவர்களால சகிக்க முடியாதா?''

''அப்படியில்ல'' என்றேன் நான். ''விசித்திரமா பார்ப்பாங்க.''

டேபிளில் விட்டுப் போயிருந்த சீட்டுக்களைப் பார்த்தாள் ஜோன்னா. ''எல்லாரும் சந்தோஷமான ஒரு குடும்பம் போல பழகறாங்க, இல்ல? டாக்டரின் மகளான, மிஸ் மருந்து. வக்கீலின் மனைவி, மிஸஸ் கேஸ்க்கட்டு...'' உற்சாகமான

அவள், கூடுதலாய் சொன்னது: ''இதென்னவோ ஒரு நல்ல இடமா எனக்குப்படுது, ஜெர்ரி! இனிமையான அதேசமயம் கோமாளித்தனமான ஒரு பழைய உலகம். இங்கே கீழ்த்தரமான எந்த சம்பவத்துக்கும் இடமே இருக்காதுனு நினைக்கிறேன், என்ன சொல்றே?''

அவள் சொல்வது முழுக்கவும் ஒரு முட்டாள்தனமானது என்பது எனக்கு தெரிந்திருந்தாலும் அவள் சொன்னதை நான் ஒப்புக் கொண்டேன். லிம்ஸ்டாக் போன்ற குக்கிராமப் பிரதேசங்களில் கேவலமான எதுவும் நடக்காதுதான். இப்படி இருவரும் நினைத்துக் கொண்டிருக்கையில், அந்தக் கடிதம் ஜஸ்ட் ஒரே வாரத்தில் எங்களுக்குக் கிடைக்கும்படி ஆனது, விசித்திரந்தான்.

## II

என் கதையை நான் தப்பாய் ஆரம்பித்துச் சென்று கொண்டிருப்பதை இப்போது நான் உணர்கிறேன். லிம்ஸ்டாக் பற்றிய எந்தவொரு விவரணையையும் நான் நேயர்களுக்குத் தரவில்லை. லிம்ஸ்டாக் எப்படிப்பட்ட ஒன்று என்பதை விளங்கிக் கொள்ளாமல், என் கதையைப் புரிந்து கொள்ள முடியாது.

**ஆ**ரம்பிக்கிறேன். லிம்ஸ்டாக்கின் ஆணிவேர் கடந்த காலங்களுக்குள் வேரூன்றியுள்ளது. நார்மன் ஆக்கிரமிப்பு நடந்த காலகட்டத்தில், லிம்ஸ்டாக் ஒரு முக்கியப் பகுதியாயிருந்தது. இங்கு ஒரு சாமியார் மடமிருந்தது. அதில் மடாதிபதிகளாக, ஈடுபாடும் அர்ப்பணிப்பும் கொண்டிருந்த பல சக்திமிகு சாமியார்கள் வழிவழியாய் பதவி வகித்து வந்தார்கள். போகும் வழிக்குப் புண்ணியம் தேடிக்

கொள்ளும் நம்பிக்கையோடு, அக்கம்பக்கத்துக் கிராமத்து பிரபுக்களும் ஜமீன்தாரர்களும் தங்களது நிலங்களில் சிலவற்றை மடத்துக்கு எழுதி வைத்துச் சென்றார்கள். லிம்ஸ்டாக் மடம், பணக்கார ஆலயமாகியது. முக்கிய பகுதி யானது. பல நூற்றாண்டுகளாய் இப்பகுதியின் அசையாத் தூணாய் பலங்கொண்டு வாழ்ந்தது. இப்படியிருக்கையில், இதற்குப் போட்டியாய் சில இடங்களை இங்கு உருவாக் கினான் எட்டாவது ஹென்றி. அப்போதிலிருந்து ஒரு மாளிகை இந்நகரத்தை ஆக்கிரமிக்க ஆரம்பித்தது. அதுவும் முக்கியமானதானது. அதற்கும் உரிமைகளும், பணபலமும், முக்கியத்துவமும் செழித்திருந்தன.

இதன் பிறகு, 1700ஆம் ஆண்டினையொட்டிய காலத்தில், முன்னேற்றங்களின் பேரலைகள், லிம்ஸ்டாக்கினைப் பின்னுக்குத் தள்ளின. மாளிகை சிதிலமடைந்தது. ரயில் வேயும் லிம்ஸ்டாக்குக்கு அருகில் வரவில்லை... சாலைப் போக்குவரத்தும் இந்நகரைத் தொடவில்லை. இது ஒரு முன்னேற்றங்காணாத ஒதுக்குப்புறமானது. முக்கியமற்ற தானது. மறக்கப்பட்டதானது.

வாரமொரு சந்தை மட்டும் இடம்பெற்றது. அப்போது தான் ஒருத்தரால் ஆடுகளையும் மாடுகளையும் இங்கு தெருக்களில் பார்க்க முடியும். வருடமொருமுறை ஒரு பந்தயப்போட்டி நடைபெறும். அதிலும்கூட ஒப்பேறாத சில குதிரைகள்தான் பங்கெடுக்கும். வசீகரமான ஹை ஸ்ட்ரீட் ஒன்றிருந்தது. இதில்தான் மதிக்கத்தக்க சில வீடுகள் அமையும். குலைந்த நிலையிலிருந்த ஒரு நீளமான துணிக் கடை, இருளடைந்த இரும்புக்கடை, தபாலாபீஸ் ஒன்று, அங்குமிங்குமாய் விளங்கிக்கொள்ள முடியாத தினுசில் சிதறிய சில கடைகள், சண்டையிட்டுக் கொண்டேயிருக்கும்

இரு கசாப்புக் கடைக்காரர்கள் மற்றும் ஒரு சர்வதேச ஸ்டோர்ஸ்... இவையே லிம்ஸ்டாக்கில் மிஞ்சின. இதில் ஒரு டாக்டரிருந்தார். சில வக்கீல்கள் கொண்ட கால்ப்ரைத் மற்றும் ஸிம்மிங்டன் எனும் நிறுவனம். 1420லிருந்து இயங்கும், அழகான மற்றும் விசாலமான ஒரு சர்ச். புதிய ஆனால் பிரசித்தி பெறாத ஒரு பள்ளி. இரு பப்புகள்.

இப்படிப்பட்டது, லிம்ஸ்டாக். எமிலி பார்ட்டனின் கோரிக்கைக்கு இணங்க, யார் வேண்டுமானாலும், யெஸ்... யார் வேண்டுமானாலும் எங்களை நாடி இங்கு வரலாம் என்று ஓடிக்கொண்டிருந்தது.

எங்களுக்கு இவையத்தனையும் புதுமையானவை மற்றும் பொழுது போக்குக்கு ஏற்றவை. நாங்கள் இங்கு வாழ்க்கை நடத்த வரவில்லை. இது, எங்களுக்கு ஓர் இடைச்செருகல். எனது டாக்டரின் கட்டளைக்கிணங்க கிராமத்து அக்கம் பக்கங்களில் இண்ட்ரஸ்ட் காட்ட, நான் என்னை தயாராக்கிக் கொண்டேன்.

ஆக, ஜோன்னாவுக்கும் எனக்கும், எல்லாமும் கோமாளித்தனமாய் மகிழ்ச்சியூட்டின.

லோக்கல் கிசுகிசுக்களில் பங்கெடுத்துக் கொள்வதும் மார்கஸ் கென்ட்டின் ஒரு கட்டளை என்று ஞாபகம். ஆனால் அப்படிப்பட்ட புரளிகள் எப்படி என் காதுகளுக்கு எட்டும் என்பது பற்றி எனக்கொன்றும் ஐடியா இல்லை.

இந்நிலையின் விசித்திரமான பகுதி என்னவென்றால், அக்கடிதம் எங்களை வந்தடைந்தபோது, அது எங்களை, வேறெதையும்விட மிக அதிகமாக வியக்க வைத்ததுதான்.

காலைச் சிற்றுண்டியின்போது அது எங்களுக்கு வந்தது என்று நினைக்கிறேன். நேரம் மிக மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு தருணத்தில், செய்யும் எதையும் நீட்டி முழக்கி செய்து காலத்தை ஓட்டும் ஒருத்தனைப் போல, அக்கடிதத்தை நான் மிகவும் மெதுவாகத் திருப்பினேன். அது, தட்டச்சு செய்யப்பட்ட முகவரி கொண்ட, ஒரு லோக்கல் கடுதாசி.

லண்டன் தபால் அச்சு கொண்டு வந்திருந்த ஒரு பில் மற்றும் என் போரடிக்கும் ஒரு கஸினின் கடிதம் ஆகிய இரண்டுக்கும் முன்னமேயே, இதை நான் பிரித்தேன்.

உள்ளே, பிரிண்ட் பண்ணப்பட்டிருந்த அட்சரங்கள் மற்றும் வார்த்தைகள், வெட்டியெடுக்கப்பட்டு ஒரு தாளில் ஒட்டப்பட்டிருந்தன. அவற்றின் அர்த்தத்தை உள்வாங்கிக் கொள்ளாமல் வெறுமனே அவ்வார்த்தைகளை மட்டும் நான் ஓரிரு நிமிடங்கள் முறைத்துக் கொண்டிருந்தேன். பிறகு நான் விக்கித்துப் போனேன்.

சில பில்களின் மீது முகஞ்சுளித்தபடி கவனம் பதித்திருந்த ஜோன்னா, நிமிர்ந்து பார்த்தாள்.

''ஹல்லோ'' என்றாள் அவள். ''என்னது அது? திணறிட்ட மாதிரி தெரியுது...''

அக்கடிதம், கொச்சைத்தனமான வார்த்தைகள் கொண்டு, நானும் ஜோன்னாவும் சகோதர சகோதரி கிடையாது என்று, அதை எழுதியவனுடைய கருத்தை முன்வைத்தது.

''இது ஒரு போலிக் கடுதாசி'' என்றேன் நான். ''மொட்டைக் கடிதம்.''

நான் இன்னமும்கூட அதிர்ச்சியால் பீடிக்கப் பட்டிருந்தேன். லிம்ஸ்டாக் போன்ற ஓர் ஒதுக்குப்புறத்தில் வந்து தங்கும் ஒருவன் இப்படிப்பட்டதையெல்லாம் எதிர்பார்க்க மாட்டான்.

ஜோன்னா, உடனடியாய் ஓர் இயல்பான ஆர்வத்தை வெளிக்காட்டினாள். "கிடையாதா? என்ன இருக்கு அதுல?"

யாரென்று அடையாளம் காட்டிக் கொள்ளாமல் எழுதப்படும் மொட்டைக் கடிதங்கள், வெளியில் யாருக்கும் காட்டப்படுவதில்லை... அதிலும் குறிப்பாக, பெண்களிடம் கூடுமான வரையில் காட்டப்படுவதே இல்லை என்று நான் பல நாவல்களில் படித்திருக்கிறேன். பெண்களின் மென்மை யான நரம்பு மண்டலத்துக்கு அப்படிப்பட்ட கடிதங்கள் ஏற்படுத்தவல்ல ஷாக்கிலிருந்து அவர்களை மீட்க அவ்வாறு செய்யப்படுவதாய் அந்நாவல்களில் விளக்கமிருக்கும்.

இதெல்லாம் ஜோன்னாவிடம் கடிதத்தைத் தந்தபோது எனக்கு நினைவில் வரவேயில்லை. உடனடியாய் அதனை அவளிடம் நான் ஒப்படைத்தேன்.

எவ்வித உணர்ச்சிகளுக்கும் ஆட்படாமல் அவள் காட்டிய ஆச்சரியத்திலிருந்து, நாவல்கள் மூலம் எனக்குள் விளைந் திருந்த கருத்தினை ஜோன்னா தகர்த்தெறிந்து விட்டாள்.

"குப்பை!" என்று விட்டாள். "மொட்டைக் கடுதாசிகள் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கேனே ஒழிய, ஒரு கடிதத்தை நான் இதுவரை பார்த்ததில்லை. அவை எல்லாமே இப்படித் தான் இருக்குமா?"

"எனக்கு விளக்கம் தர இயலாது" என்றேன் நான். "எனக்கும் இது ஒரு முதல் அனுபவம்."

ஜோன்னா அதை அப்படியே காற்றில் விட்டு விட்டாள். ‘‘என் மேக்-அப்ல நான் சரியா கவனம் செலுத்தியிருக்கணும்னு நினைக்கிறேன், ஜெர்ரி. என்னை எல்லாரும் இங்கே ஒரு ஜந்து போல இன்னிக்குப் பார்க்கப் போறாங்க...’’

‘‘இதுக்கு நம் பெற்றோர்கள் ஒரு காரணம்’’ என்றேன் நான். ‘‘அப்பா ஒரு நெட்டை. கறுப்பு. அம்மாவோ வெண்ணிறக் கூந்தலும் நீலநிறக் கண்களும் கொண்ட ஒரு குட்டைப் பிறவி. நான் அப்படியே அப்பாவைக் கொண்டு வந்திருக்கேன். நீ, அம்மாவை.’’

ஜோன்னா சிந்தனையாய் இதனை ஆமோதித்தாள். ‘‘யெஸ். நாம ரெண்டு பேரும் கொஞ்சங்கூட ஒரே மாதிரி இல்ல. யாரும் நம்மை சகோதரன் சகோதரினு எடுத்துக்க மாட்டாங்க.’’

‘‘ஆமாம்... யாரோ ஒருத்தர் அப்படி எடுத்துக்கல’’ என்றேன் நான், உணர்ந்து.

வந்திருக்கும் சேதி செமத்தியான ஒரு கோமாளித்தனம் என்றாள் ஜோன்னா.

அக்கடிதத்தினை ஒரு மூலையில் பிடித்து ஆட்டிக் கொண்டே அதனை என்ன செய்வது என்று கேட்டாள் அவள்.

‘‘இதுக்கு சரியான பதில் என்னன்னா’’ என்ற நான், ‘‘அழகா அதை கொண்டு போய் நெருப்புல போட்டு விடுவதுதான்’’ என்றேன்.

என் வார்த்தைகளை நான் செயல்படுத்த அதற்கு ஜோன்னா கைதட்டினாள்.

''அழகா செஞ்சே அதை'' என்றாள் அவள். ''நீ நடிக்கப் போயிருக்கலாம். இங்கே கனப்பு இருந்தது ஓர் அதிர்ஷ்டம்.''

''குப்பைத்தொட்டி இதுக்கு ஒத்து வராது. கணப்பு இல்லேனா, நானே அதைக் கொளுத்தி, அது மெல்ல எரிவதைப் பார்த்து ரசித்திருப்பேன்.''

''விஷயங்கள், அவை எப்ப எரியணும்னு நீ நினைக்கிறியோ அப்போ எரிந்து விடுவதில்லை'' என்றாள் ஜோன்னா. ''அவை வெளியே போகும். பரவும். தீக்குச்சிக்கு அடுத்து தீக்குச்சியா நீ கொளுத்த வேண்டி வரலாம்.''

அவள் எழுந்து கொண்டாள். ஜன்னல் வரை போய் நின்று கொண்டாள். அப்படியே நின்றபடி அவள் தலையைச் சட்டென்று திருப்பினாள். கேட்டாள்: ''யார் எழுதியிருப் பாங்கன்னு நான் யோசிக்கிறேன்.''

''அது நமக்குத் தெரிய வாய்ப்பே இல்ல.''

ஆமோதித்தாள் அவள். ''இங்கிருப்பவர்கள் இங்கிருப்பவர்கள் நாம இங்கே வந்து இறங்கியிருப்பதை விரும்பறாங்கன்னு நான் நினைச்சுக்கிட்டிருந்தேன்.''

''அப்படித்தான் நினைச்சுக்கிட்டிருக்காங்க'' என்றேன் நான். ''பாதி பைத்தியமாகி, புத்தி கெட்டு அலையும் ஏதோ ஒரு ஜென்மம் பண்ணியிருப்பது இது.''

''இருக்கலாம். ஊஹ்... அசிங்கமானவன்!''

அவள் சூரிய வெளிச்சம் நாடிப் போனபிறகு, சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்ட நான், அவள் சொன்னதும் சரிதான் என்று எண்ணிக் கொண்டேன். அசிங்கமான சமாச் சாரம்தான் இது. நாங்கள் இங்கு வந்திருப்பதில் யாருக்கோ கடுங்கோபம் உள்ளது. ஜோன்னாவின் தகதகக்கும் ஆடம்பர

மான அழகினை யாரோ வெறுக்கிறார்கள். இதை ஒரு ஹாஸ்யமாக எடுத்துக் கொண்டு விடுவதே இப்போதைக்கு ஒரு சிறந்த வழியாகும். ஆனால், இதன் அடியாழத்தில், இது ஒன்றும் நகைச்சுவையான சமாச்சாரம் கிடையாது...

டாக்டர் க்ரிஃபித் அன்று காலையில் வந்தார். வாரமொரு முறை வந்து எனக்கு மருந்து தருவதற்காக அவரை நான் அமர்த்தியிருந்தேன். எனக்கு ஓவன் க்ரிஃபித்தைப் பிடித்தது. அவர் கறுப்பான, அதிகத் திறமையற்ற மனிதர். இப்படியப் படியும் போய்க் கொண்டிருப்பார். மிகவும் ஜென்டிலான கைகள் அவருடையவை. விட்டுவிட்டுப் பேசும் வழக்கம் கொண்டிருந்த அவர் கொஞ்சம் சங்கோஜமானவர்.

என்னுடைய முன்னேற்றம் சிறப்பாய் அமைந்துள்ளதாய் அறிக்கை தந்தார். பிறகு ''நல்லாத்தானே இருக்கீங்க?'' என்றார் கூடுதலாய். ''எனக்கென்னவோ நீங்க டல்லா இருப்பதைப் போல தெரியுது. ஒருவேளை வானிலை ஒத்துக்கலியா?''

''ஒண்ணுமில்ல'' என்றேன் நான் பொதுவாய். ''காலைக் காபியுடன் குழப்பமான ஒரு மொட்டைக் கடுதாசியும் வந்தது. அது, சுவையான பதார்த்தங்களுக்கு நடுவுல ஒரு கசப்பான சுவையை நாக்குல விட்டு வெச்சிருக்கு.''

அவர் தனது பையை சட்டென்று தரையில் வைத்தார். அவரது ஒடிசலான கறுப்பு முகம் பரபரப்பானது.

''உங்களுக்கும் அதுல ஒண்ணு வந்துடுச்சுனா சொல்றீங்க?''

எனக்கு ஆர்வம் கூடியது. ''அப்போ அப்படிப்பட்ட கடிதங்கள் இங்கே சுத்திக்கிட்டிருக்கா?''

''யெஸ். கொஞ்ச நாளாவே.''

''ஓ'' என்றேன் நான். ''ஐ ஸீ. அந்நியர்களான நாங்க இங்கே வந்து தங்கியிருப்பதுதான் யாருக்கோ பிடிக்கலேன்னு நான் நினைச்சுக்கட்டிருந்தேன்.''

''நோ, நோ. இதுக்கும் அதுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. இது ஜஸ்ட் அவர் சற்று தாமதித்து விட்டு பிறகு கேட்டார்: ''அது என்னனு சொல்லுது? அதாவது---'' சட்டென்று சிவந்த அவர், ''ஒருவேளை நான் கேட்கக்கூடாதோ?'' என்றார் லஜ்ஜையாய்.

''ச்சை! நான் அதை சந்தோஷமா உங்களுக்கு சொல்றேன்'' என்ற நான், ''நான் என்னுடன் அழைத்து வந்திருப்பவள் என் சகோதரி அல்ல அப்படினு சொல்லுது அது'' என்றேன்.

அவரது கரிய முகம் கடுங்கோபம் காட்டியது. ''என்ன திமிரு! உங்க சகோதரி - ஓஹ், அவங்க அப்செட் ஆகலியே?''

''ஜோன்னா, புத்திசாலித்தனமான நாகரீகப் பொண்ணு... மற்றும் இறுக்கமானவ. இதை அவள் ரொம்பவுமே பொழுது போக்கான ஒண்ணாத்தான் எடுத்துக்கிட்டா. இதுக்கு முன்னாடி இப்படிப்பட்ட கடிதங்களை அவ எதிர் கொண்டது கிடையாது.''

''இனியும் கூடாதுன்னே வேண்டிக்கிறேன்'' என்றார் க்ரிஃபித் கதகதப்பாய்.

''எப்படியோ'' என்ற நான் கறாராய் குறிப்பிட்டேன்: ''இதை ஈஸியா எடுத்துக்க ஒரேவழிதான் இருக்குனு நினைக்கிறேன். 'சுத்தப் பேத்தல்... கோமாளித்தனம்...' இதான் ஒரே வழி.''

''யெஸ்'' என்றார் ஓவன் க்ரிஃபித். ''யெஸ், இது---''

“அப்படித்தான், அப்படியேதான்” என்றேன் நான். “இது வெறும் வாய்ச்சவடால்தான்!”

“இதுல பிரச்சினை என்னன்னா” என்று தொடர்ந்த அவர், “இப்படிப்பட்ட புரளிகள் கிளம்ப ஆரம்பிச்சுட்டா, குன்றாமல் வளர்ந்துகிட்டேயிருக்கும் என முடித்தார்.”

“நானும் அப்படியேதான் நினைக்கிறேன்.”

“இது ஒரு வியாதி மாதிரி, அஃப்கொர்ஸ். தாங்கிக்க முடியாம ஆகிடும்.”

ஆமோதிப்பாய் தலையசைத்தேன். கேட்டேன்: “இதுக்குப் பின்னாடி யார் இருப்பாங்கன்னு ஏதாவது ஐடியா இருக்கா?”

“நோ. தெரிஞ்சுடக் கூடாதானு நினைப்பதுண்டு. கவனிங்க. இந்த மொட்டைக் கடுதாசி கரையான் விளைய, ரெண்டு முகாந்திரம் இருக்கு. இது குறிவெச்சு எய்யப்பட்ட அம்பாயிருக்கும் - ஒரு குறிப்பிட்ட மனிதரையோ அல்லது ஒரு சிறு கூட்டத்தையோ நோக்கி போடப்பட்ட அம்பு. அதாவது, இதுக்கு இலக்குனு ஒண்ணு இருக்கும். யாருக்கோ, நிச்சயப்படுத்தப்பட்ட ஒரு பழிவாங்கும் காரணமிருக்கு... அவர், அதை இப்படிப்பட்ட ரகசிய வழியில தீர்த்துக் கட்டிக்கிறார். இது கீழ்த்தரமானது, கேவலமானது. அதுக்காக இதை கோமாளித்தனமானதுனு ஒதுக்கிடவும் கூடாது. இந்தக் கேஸ்ல கடிதத்தை யார் எழுதினதுனு சுலபமா ட்ரேஸ் பண்ணிடலாம் ஒரு ஒதுக்கப்பட்ட பணியாள், பொறாமைப் பிடிச்ச ஒரு பெண், இத்யாதிகள். ஆனா, இது குறிவெச்சு எழுதப்படாத ஒரு பொதுவான சமாச்சாரமா ஆகிவிட்டால், அப்ப ஸீரியஸானதா ஆகிடும். தராதர வித்தியாசம் பார்க்காமல் கடிதங்கள் அனுப்பப்படும். எழுதிய

நபரின் மூளையில் இருக்கும் எரிச்சலுக்கான ஒரு வடிகாலா இவ்வகை, நான் சொன்னதைப் போல, தாங்கிக்கொள்ள முடியாமல் வளர்ந்துடும். இக்குழப்பம் வளரும். இங்குமங்கும் கடிதங்கள் போய்ச் சேரும். எப்படியோ கடைசியில் ஆளைப் பிடிப்பீங்க அது வாடிக்கையா நாம எதிர்பார்த்திராத ஒரு நபர்மேலபோய் விடியும். அப்படித் தான். போன வருஷம் இப்படியொரு வெடிப்பு நடந்தது ஒரு பெரிய டிபார்ட்மெண்ட் கடைல இருக்கும் ஹெட்தான் அதுக்குக் காரணம்னு அப்புறமா தெரிய வந்தது. ரொம்பவும் நாசூக்கான பொம்பிளைதான் அவ அங்கேயே பல வருடங்களா வேலைல வேற இருந்தவ. வடக்குல நான் பணியாற்றிக்கிட்டிருந்தபோது இதேபோல நடந்த என்னவோ ஒரு சமாச்சாரம் இப்ப என் நினைவுக்கு வருது - ஆனா அது முழுக்க முழுக்க தனிப்பட்ட பகை சம்பந்தப் பட்டது. இப்பவும் சொல்றேன்... இப்படிப்பட்ட விஷயங் களை நான் அங்கொன்றும் இங்கொன்றுமா பார்த்திருக்கேன் - இருந்தாலும் பயமுறுத்துது!''

''இது இங்கே ரொம்ப காலமா நடந்துக்கிட்டிருக்கா?'' கேட்டேன் நான்.

''அப்படித் தெரியல. இதுக்கு விடை சொல்வது கஷ்டம். ஏன்னா, இதுபோன்ற மொட்டைக் கடுதாசிகளை வாங்குவோர் அதை விளம்பரப்படுத்திப்பது இல்லையே. அதை அவங்க நெருப்புல போட்டுடறாங்க.''

அவர் நிறுத்தினார். பிறகு பேசினார்:

''எனக்கு ஒண்ணு வந்திருக்கு. ஸிம்மிங்டன், வக்கீல் இருக்காரே, அவருக்கு ஒண்ணு. என்னுடைய ஓரிரு பரிதாப மான நோயாளிகளும் இதுபற்றி சொல்லியிருக்காங்க.''

“எல்லாம் ஒரே மாதிரியான கடிதங்கள்தானா?”

“ஓ, ஆமாம். செக்ஸ் பற்றியே சுழலும் கடிதங்கள். அதுதான் அக்கடிதங்களின் முக்கியமே.” அவர் சிரித்தார். “ஸிம்மிங்டன், அவருடைய லேடி குமாஸ்தாவுடன் தவறான உறவு வைத்திருப்பதாய் அவருடைய கடிதம் குற்றஞ் சாட்டியது. பாவம் அந்த மிஸ் கிஞ்ச்... குறைந்தபட்சம் நாற்பது வயசிருக்கும் அவளுக்கு. மூக்குக் கண்ணாடி. முயல் போல முன்னாடி ரெண்டு பல்லு. அதை நேரா போலீஸுக்குக் கொண்டு போயிட்டார் ஸிம்மிங்டன். எனக்கு வந்த கடிதங்கள், நான் காட்ட வேண்டிய ஒழுக்கம், என்னுடைய பெண் நோயாளிகளிடம் காட்டப்படுவ தில்லைனு விளக்கங்களுடன் சொல்லிச்சு. அவை எல்லாமுமே குழந்தைத்தனமாயும் முட்டாள்தனமாயும் எழுதப்பட்டவை. ஆனா ஆபத்தான விஷமத்தனம் கொண்டவை.” அவருடைய முகம் இப்போது மாறியது. ஆழ்ந்து குன்றியது. “எப்படியிருந்தாலும், நான் பயந்து போயிருக்கேன். இவை, ஆபத்தானதா முடியலாம், தெரியுமா?”

“முடியலாம், யெஸ்.”

“கவனிங்க” என்று மீண்டும் கூர்மையான அவர், “குருட்டாம்போக்கில் எழுதப்பட்ட குழந்தைத்தன மானவையா இவை இருந்தாலும், விரைவில் நாலு பேருக்குத் தெரிய வரலாம். அப்புறம் என்ன நடக்கும்னு கடவுளுக்குத் தான் வெளிச்சம்! இதன் விளைவு, கல்வியறிவற்ற மற்றும் சுலபமா சந்தேகப்படவல்ல மூளைகளில் எத்தனை தீவிரத்தை உண்டுபண்ணலாம் என்பதை நினைச்சாலே எனக்குப் பயமா யிருக்கு. எழுதப்பட்ட எதைப் பார்த்தாலும், இவனுங்க

உண்மைனு நம்பிடுவாங்க. எல்லாவிதமான சிக்கல்களும் அப்ப எழும்.''

வந்திருக்கும் கடிதங்கள் பகுத்தறிவற்று எழுதப் பட்டுள்ளவை'' என்றேன் நான் சிந்தனையுடன். ''எழுதப் படிக்கத் தெரியாத எவனோ ஒருவனால் எழுதப் பட்டிருக்குனு சொல்வேன் நான்.''

''அப்படியா?'' என்ற ஒவன், போய் விட்டார்.

பிறகு நான் இந்த சம்பாஷணையை மனதில் ஓட்டிய போது, 'அப்படியா?' என்பது என்னை அசௌகரிய மாக்கியதை நான் உணர்ந்தேன்.

# அத்தியாயம் - 2

## I

மொட்டைக் கடுதாசிகள் வந்ததால் எனக்குள் பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை என்று நான் நடிக்கப் போவதில்லை. அவை பாதித்தன. அதே சமயம், அவை சீக்கிரமாகவே என் மூளையிலிருந்து விலகியும் விட்டன. அக்கட்டத்தில் அவற்றை நான் ஸீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்ல வருகிறேன். ஒதுக்குப்புற மாயிருக்கும் கிராமங்களில் இப்படிப்பட்ட அசிங்கமான சமாச்சாரங்கள் நடக்கத்தான் செய்யும் என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். தன்னை முன்நிறுத்திக் கொள்ள விரும்பும் ஏதோவொரு பைத்தியக்காரப் பெண் இதனடியில் இருக்கலாம். எப்படியோ, கடிதங்கள், எங்களுக்கு வந்ததைப் போலவே குழந்தைத்தனமானதாகவும் பைசாவுக்குப் பிரயோஜனப்படாததாகவும் இருந்தால், அவை நிச்சயம் அதிக ஆபத்தினை விளைவித்து விடாது.

அடுத்த நிகழ்வு, ஒரு வாரம் கழிந்து நடந்தது. பேட்ரிட்ஜ், அவளது வாயை இறுக்கமாய் வைத்துக் கொண்டு, எங்களுக்கு

உதவிவரும் பெண்ணான பீட்ரிஸ் அன்றைய தினம் வரப்போவதில்லை என்று சொன்ன போது நடந்தது அது.

''அந்தப் பொண்ணு அப்செட் ஆகியிருப்பதாய் கேள்விப்பட்டேன், ஸார்'' என்றாள் அவள்.

பேட்ரிட்ஜ் எதை மனதில் வைத்துக் கொண்டு சொல் கிறாள் என்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடிய வில்லை. ஆனால், அப்பெண்ணுக்கு ஏதாவது வயிற்றுப் பிரச்சினையாக இருக்கும் என்று நானாய் (தவறாய்) புரிந்து கொண்டேன்... அந்த 'மாதாந்திர' விஷயத்தை பேட்ரிட்ஜ் என்னிடம் நேராய் சொல்லத் தயங்குகிறாள் என்று வேறு நினைத்துக் கொண்டேன். நான் வருந்துவதாகவும் அவள் சீக்கிரம் குணமடைய வேண்டும் என்றும் சொல்லி முடித்தேன்.

''அய்யய்யோ... அந்தப் பொண்ணு பர்ஃபெக்டா இருக்கா, ஸார்'' என்றாள் அவள். ''அவ, உணர்வுகளால் அப்செட் ஆகியிருக்கா.''

''ஓ'' என்றேன் நான் விளங்காமல், சந்தேகமாய்.

''அவளுக்கு வந்துள்ள ஏதோவொரு கடுதாசி விஷயமா'' என்றாள். ''அந்தரங்கம் சம்பந்தப்பட்டதுனு நினைக் கிறேன்..''

பேட்ரிட்ஜின் கண்களில் இருந்த இறுக்கம் மற்றும் அந்தரங்கம் என்று அவள் சொன்னதில் இருந்த அழுத்தம் ஆகிய இரண்டும் சேர்ந்து, அந்த அந்தரங்கம் என்னைக் குறிப்பதுதான் என்பதை நான் சேர்த்துப் போட்டுப் புரிந்து கொண்டேன். ஒரு கூட்டத்தின் நடுவில் நான் பீட்ரிஸைப் பார்த்தால் அவள்தான் பீட்ரிஸ் என்று என்னால்

அடையாளம் காண இயலாது... அந்த அளவுக்கு அவளை நான் சரியாகப் பார்த்ததுகூட இல்லை. மேலும் இரண்டு ஊன்றுகோல்களை வைத்துக் கொண்டு நடக்கவே முடியாமல் அல்லாடும் ஒருத்தன் நிச்சயமாய் ஒரு கிராமத்துப் பெண்ணைத் துரத்திப் பிடிக்கப் போவதுமில்லை. நான் எரிச்சலாய் சொன்னேன்:

''நான்சென்ஸ்!''

''இதே, இதே வார்த்தையைத்தான் ஸார் நானும் சொன்னேன், அந்தப் பொண்ணோட அம்மாகிட்டே'' என்றாள் பேட்ரிட்ஜ். ''நானிருக்கும் இந்த வீட்டுல அப்படிப்பட்ட எதுவும் நடந்ததே கிடையாது... நடக்கவும் நடக்காதுனு சொன்னேன் நான். இதுல விஷயம் என்னன்னா ஸார், இந்த பீட்ரிஸ் பொண்ணு வெளில போகும்போது, கூட சேர்த்துக்கிட்டே போகுமே அந்த கார் கேரேஜ் பையன்... அவனுக்கும் ஒண்ணு வந்திருக்காம். ஆனா அவன் அதை பொருட்படுத்தல போல.''

''இப்படிப்பட்ட ஒரு மதிகெட்ட சமாச்சாரத்தை இதுவரைக்கும் என் வாழ்க்கைல கேட்டதே கிடையாது'' என்றேன் நான் கோபம் கொப்பளிக்க.

''இந்தப் பொண்ணை அவுத்து விட்டுடறது நல்லது என்பது என் ஆலோசனை ஸார்'' என்றாள் அவள். ''என்ன சொல்ல வரேன்னா, அந்தக் கடிதத்துல அவ எதை இடம்பெற்றிருக்கக் கூடாதுனு நினைச்சுக்கிட்டிருக்காளோ அது இடம் பெற்றிருக்கு. இல்லேனா, அவ இந்த அளவுக்கு அப்செட் ஆகியிருப்பாளா? நெருப்பில்லாம புகையாது அவ்ளோ தான் நான் சொல்வேன்.''

இந்த பொன்மொழியால் நான் எந்த அளவுக்கு உலுத்துப் போகப்போகிறேன் என்று நான் அப்போது நினைக்கவில்லை.

## II

அன்று காலை, பழக வேண்டும் என்ற உடற்பயிற்சி காரணத்துக்காக, கிராமத்தில் நான் நடந்து போக வேண்டியிருந்தது.

சூரியன் பளபளத்துக் கொண்டிருந்தது. காற்று ஜில்லிட்டிருக்க, அதில் வஸந்தகாலத்தின் இனிமை கொட்டிக் கிடந்தது. என் ஊன்றுகோல்களைச் சரியாக்கிக் கொண்டு நான் கிளம்பினேன் நிச்சயமாக ஜோன்னா எனக்குத் துணையாய் வரக்கூடாது என்ற கறாரான மறுப்புடன்.

''கிடையாதுனா கிடையாது'' என்று விட்டேன் நான். ''ஓர் அழகான இளம்பெண் என் பக்கத்துலேயே வந்துக்கிட்டு பரிதாபமான உச்சுகளைச் சிந்த நான் அனுமதிக்கப் போவதில்லை! தனியா போகும் ஆள் வேகமா போவான், நினைவுல வெச்சுக்க. நான் நிறைய வேலைகள் பண்ண வேண்டியிருக்கு. கால்ப்ரைத், கால்ப்ரைத் அண்ட் ஸிம்மிங்டன் போய் அந்த பங்கு மாற்று விஷயத்துக்காக கையொப்பம் போடணும். பேக்கரி ஆள்கிட்டே போய் அவன் கொடுத்த பன்றிக்கறி பற்றிய கம்ப்ளெயிண்ட் தரணும். நாம கடன் வாங்கின புத்தகத்தை திருப்பிக் கொடுக்கணும். பேங்க் வேற போக வேண்டியிருக்கு. இன்னிக்குக் காலை பொழுது பத்தாதும்மா இதுக்கெல்லாம். புண்ணியமாப் போகும் கொஞ்சம் வழிய விடு.''

ஜோன்னா என்னை வந்து காரில் அழைத்துக்கொண்டு மலைப்பாதை வழியாக லஞ்சுக்கு வீட்டுக்கு வந்துவிட வேண்டும் என்று ஏற்பாடாயிற்று.

ஹை ஸ்ட்ரீட் கடைக்காரர்களுக்கு காலை நேரம் செய்திகளைப் பகிர்ந்து கொள்ள வசதியாக ஓர் அளவளாவல் போல அமைந்தது.

டவுன் வரை தனியாகவே நடந்து போவதாய் நான் கிளம்பியிருந்தாலும், அப்படி அமைந்து விடவில்லை. நூறு கெஜதூரம் போல நடந்து போயிருப்பேன்... அப்போது சைக்கிள் மணியோசை எனக்குப் பின்னால் கேட்டது. பிறகு சட்டென்று பிடிக்கப்பட்ட பிரேக் ஓசை. இறுதியாய் ஏறத்தாழ சைக்கிளை என் காலடியில் கொட்டியே விட்டாள் மேகன் ஹண்ட்டர்.

சைக்கிளிலிருந்து இறங்கும்போது ‘‘ஹலோ’’ என்றாள் அவள் மூச்சிரைக்க.

எனக்கு மேகனைப் பிடித்தது. அதேசமயம் எப்போதும் அவளுக்காக நான் ஏனோ வருந்தியதுமுண்டு.

வக்கீல் ஸிம்மிங்டன்னின் வளர்ப்பு மகள் அவள். அதாவது மிஸஸ் ஸிம்மிங்டன்னின் முதல் திருமணத்தின் மூலம் பிறந்தவள். இங்கு யாரும் மிஸ்டர் (அல்லது கேப்டன்) ஹண்ட்டரைப் பற்றி பேசியது கிடையாது. அவரை மறந்து தொலைப்பது நல்லது என்ற ஒரு கருத்தை இங்கு நான் சேகரித்திருந்தேன். மிஸஸ் ஸிம்மிங்டன்னை அவர் மிகமோசமாக நடத்தியதாக தகவல் உள்ளது. கலியாணம் முடிந்த ஓரிரு வருடங்களிலேயே அவரை மிஸஸ் ஸிம்மிங்டன் விவாகரத்து செய்து விட்டார். மிஸஸ், என் வழி தனி வழி எனும் ஒரு

ரகம். 'அனைத்தும் மறக்க' என்ற ஒரே காரணத்துக்காக தனது ஒரே சின்ன மகளுடன் லிம்ஸ்டாக்கில் செட்டில் ஆகியிருக்கிறார் அவர். பிறகு, இப்பகுதியிலிருந்த ஒரே தகுதியான பேச்சிலரான ரிச்சர்ட் ஸிம்மிங்டன்னை அவர் மணந்திருக்கிறார். இரண்டாவது திருமணத்தின் மூலம் அவர்களுக்கு இரு பையன்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீது பெற்றவர்களுக்கு கொள்ளைப் பாசம். இந்தக் கூட்டத்திலிருந்து தான் தனிமைப் படுத்தப்பட்டவள் என்று மேகன் சிலசமயங்களில் நினைப்பதாய் நான் எண்ணியதுண்டு. மேகன் அவளுடைய அம்மாவைப் போல நிச்சயமாய் இல்லை. மிஸஸ் ஸிம்மிங்டன் ஒரு சோகைப் பெண். மங்கிப்போன தினுசு. மெல்லிய நோஞ்சான் குரலில் சிரமப்பட்டு பேசும் வகை.

மேகன் உயரமான பெண். அவள் இப்போது இருபது வயதிலிருந்தாலும் பார்ப்பதற்கு ஜஸ்ட் பதினாறு வயது பள்ளிக்கூடப் பெண் போலத்தான் தோன்றுவாள். பராமரிக்கப்படாத ப்ரவுன் கேசமும், பளபளக்கும் பச்சை நயனங்களும் அவளுக்கு அழகானவை. எலும்பு துறுத்தும் சிறிய முகத்தில், வசீகரித்திழுக்கும் ஒருபக்க சிரிப்பு. அவளது உடைகள் ஈர்ப்பின்றி கசாமுசாவென்றிருக்க, பாவாடையில் எப்போதும் ஓட்டைகள் உண்டு.

வழக்கம்போலவே அவள் மூச்சு நிறுத்தாமல் மளமள வென்று பேசினாள்: ''பண்ணைக்குப் போய்க்கிட்டிருக்கேன். லேஷர்ஸ் பண்ணை தெரியுமில்ல உங்களுக்கு? அவங்க கிட்டே வாத்து முட்டைகள் இருக்கானு பார்க்க. அவங்க நிறைய குட்டிப் பன்றிகள் வெச்சிருக்காங்க, தெரியுமா? ஸ்வீட்! உங்களுக்கு பன்றிகள் பிடிக்குமா? எனக்கு அவற்றின் வாசனைகூட பிடிக்கும்.''

''பராமரிக்கப்பட்ட பன்றிகளிடமிருந்து வாடை வராது'' நான் சொன்னேன்.

''அப்படியா என்ன? இங்கிருக்கும் எல்லா பன்றிகளிலும் வாடை இருக்கு. டவுன் வரைக்கும் நடந்து போயிட்டிருக்கீங்களா? நீங்க தனியா இருப்பதைக் கவனிச்சேன் நான். வந்து இறங்கி உங்களுடன் நடந்து போகலாம்னு நினைச்சேன். அதான் சட்டுனு நிறுத்தினேன்.''

''அதுல, நீ உன் பாவாடையை கிழிச்சுக்கிட்டே'' என்றேன் நான்.

மேகன் தனது வலது காலைப் பார்த்தாள். ''ஆமாம்'' என ஆமோதித்தாள். ''ஆனா அதுல ஏற்கெனவே ரெண்டு ஓட்டைங்க இருந்தது. அதனால இந்த புது கிழிசல் ஒண்ணும் பெருசா தெரியல. என்ன சொல்றீங்க?''

''உன் பாவாடையை நீ தைக்கவே மாட்டியா, மேகன்?''

''ம், செய்வேன் அம்மா என்னை இதுக்காக பிடிக்கும்போது! ஆனா அவங்க நான் என்ன பண்றேன் என்பதிலெல்லாம் அதிக கவனம் வைப்பது இல்ல. இதுவும் ஒரு வகைல லக்தான், என்ன?''

''நீ வளர்ந்துட்டே என்பதை நீ உணர்ந்ததா படல.''

''என்னையும் என்ன உங்க சகோதரியைப் போல இருக்கணும்னு நினைக்கிறீங்களா? உடம்பு முழுக்க அரிதாரம் பூசிக்கிட்டு...?!''

ஜோன்னாவைப் பற்றிய இந்த வர்ணிப்பை நான் மறுதலித்தேன். ''அவ சுத்தமாகவும், சீராகவும், பார்க்கும் கண்களுக்கு குளுமையாகவும் இருக்கா'' என்றேன் நான் அழுத்தமாய்.

''அவங்க ரொம்பவும் அழகு'' என்றாள் மேகன். ''அவங்க கொஞ்சங்கூட உங்களைப் போன்ற சாயலிலே இல்லவே இல்ல - கவனிச்சீங்களா? ஏன் அப்படி?''

''சகோதர சகோதரிகள் எப்பவும் ஒரே மாதிரி இருந்து விடுவதில்லை.''

''நோ, அஃப்கொர்ஸ். ப்ரையான் அல்லது காலின் போல நான் இல்ல. ப்ரையானும் காலினும்கூட ஒருத்தரைப் போல மற்றொருத்தர் இல்ல.'' இங்கு நிறுத்திவிட்டு அவள் சொன்னாள்: ''இது குழப்படி, இல்ல?''

''எது?''

சுருக்கமாய் மேகன் முடித்தாள்: ''குடும்பங்கள்.''

சிறு சிந்தனையூடே ''அப்படித்தான் நானும் நினைக் கிறேன்'' என்றேன் நான்.

அவளுக்குள் ஜஸ்ட் அந்த சமயத்தில் என்ன நினைவு ஓடிக்கொண்டிருக்கிறது என்று வியந்தேன் நான். சில கணங்கள் நாங்கள் மவுனத்தில் நடந்து கொண்டிருந்தோம். பிறகு மேகன் ஒருவித கூச்சக் குரலெடுத்து கேட்டாள்: ''நீங்க பறப்பீங்க, அப்படித்தானே?''

''யெஸ்.''

'அதனாலதான் உங்களுக்கு காயம் ஏற்பட்டிருக்கு?'

''யெஸ்.''

மேகன் சொன்னாள்: ''இங்கே யாரும் பறப்பதில்ல.''

ஆமோதித்தேன் நான். ''உனக்கு பறக்க விருப்பமா?''

''நான்?'' ஆச்சரியமானாள் மேகன். ''கடவுளே, நோ. மயங்கிடுவேன் நான். வெறும் ட்ரெயின் பிரயாணத்துலேயே என் தலை சுத்தி திருகிடும்.''

அவள் நிறுத்தினாள். பிறகு, குழந்தை மட்டுமே வெளிப் படுத்தவல்ல நேரடியான அணுகுமுறையில் அவள் கேட்டாள்: ''உங்களுக்கு உடம்பு சரியாகி மறுபடியும் பறப்பீங்களா, இல்ல வாழ்க்கைப் பூரா இப்படி ஊனமாகவே இருந்துட வேண்டியதுதானா?''

''என் டாக்டர்கள் நான் பூரண குணமாகிடுவேன்னு சொல்றாங்க.''

''இருக்கலாம். ஆனா அந்த டாக்டர் ஆறுதலுக்காக பொய் சொல்லும் வகை கிடையாதே?''

''அப்படித் தோணல எனக்கு'' என்று பதிலளித்தேன் நான். ''நானேகூட அந்த எண்ணத்துல நிச்சயமாயிருக்கேன். நான் அவரை நம்பறேன்.''

''அப்ப சரி, பாதகமில்ல. ஆனா பலர் பொய் பேசறாங்க.''

இந்த மறுக்க முடியாத வாக்கியத்தை நான் மவுனமாய் ஏற்றுக் கொண்டேன்.

''எனக்கு சந்தோஷமாயிருக்கு. கால் முடங்கி உக்காந் துட்டதால, நீங்க கோபக்காரரா இருப்பீங்களோனு நான் பயந்தேன். ஆனா அந்தக்குணம் இயற்கையானதுதான்னா, நோ ப்ராப்ளம்.''

''நான் முன்கோபி கிடையாது'' என்றேன் கறாராய்.

''வெல், அப்ப எரிச்சலானவர்.''

"நான் எரிச்சலா இருக்கேன் - சீக்கிரத்துல நலமாகிடணும் எனும் அவசரத்தால. ஆனா, இப்படிப்பட்ட சமாச்சாரங் களை அவசரப்படுத்த முடியாதே..."

"தெரியுதுல்ல... அப்ப எதுக்கு அவசரப்படணும்?"

நான் சிரிக்க ஆரம்பித்தேன். "மை டியர் கேர்ள்... சீக்கிரத்துல முடியணும்னு ஓர் அவஸ்தை உனக்கு வாழ்க்கைல இருந்ததே கிடையாதா?"

மேகன் கேள்வியை உள்வாங்கிக் கொண்டாள். பிறகு சொன்னாள்: "நோ. எதுக்கு அவஸ்தைப்படணும்? அவசரப் படத் தேவையே கிடையாது. அவசரப்படுவதால எதுவும் எப்பவும் நடந்துவிடுவது கிடையாது."

இவ்வார்த்தைகளிலிருந்த ஏதோவொரு அறிவுரையால் நான் அறையப்பட்டேன். நான் மிருதுவாய் கேட்டேன்: "நீ இங்கே எப்படி உன்னை என்கேஜ் பண்ணி வெச்சுக்கறே?"

தோள்களைக் குலுக்கினாள் அவள். "இங்கே செய்ய என்னயிருக்கு?"

"உனக்கு ஹாபீஸ் ஏதுமில்லையா? பொழுதுபோக்குகள்? விளையாடுவியா? இங்கே உனக்கு நண்பர்கள் இருக்காங் களா?"

"விளையாட்டுக்கும் எனக்கும் ஏழாம் பொருத்தம். எனக்கு விளையாடவும் பிடிக்காதுனு வெச்சுக்கங்க. இங்கே நிறைய பெண்பிள்ளைகள் கிடையாது. இருக்கும் ஒண்ணு ரெண்டையும் எனக்குப் பிடிக்கல. என்னைக் கண்டாலே பயப்படுதுங்க."

"நான்சென்ஸ். எதுக்கு அவங்க பயப்படணும்?"

மேகன் மறுப்பாய் தலையசைத்தாள்.

''நீ பள்ளிக்கூடத்துக்குப் போனதே இல்லையா?''

''போயிருக்கேன். ஒரு வருஷத்துக்கு முன்னால திரும்பி வந்துட்டேன்.''

''பள்ளிக்கூடம் உனக்கு பிடிச்சதா?''

''மோசமாயில்ல விஷயங்களை ரொம்பவும் பைத்தியக் காரத்தனமா சொல்லித்தந்தாலும்!''

''என்ன அப்படி சொல்லிட்டே...''

''வெல் அங்கொண்ணும் இங்கொண்ணுமா துண்டுத் துண்டா நடத்தறாங்க. ஒரு விஷயம் பேசிக்கிட்டிருப்பாங்க. டக்குனு அடுத்த விஷயத்துக்கு தாவிடுவாங்க. ரெண்டும் முற்றுப் பெற்றிருக்காது. அது ஒரு சுமாரான பள்ளிக்கூடம். டீச்சர்ங்களும் வெரி குட் எல்லாம் கிடையாது. அவங்களால ஒரு தடவைகூட நாம கேட்கும் கேள்விகளுக்கு சரியா பதில் சொல்ல வராது.''

''சொற்பமான டீச்சர்ங்களாலதான் அது முடியும்'' - நான் சொன்னேன்.

''ஏன் எல்லா டீச்சர்ங்களாலேயும் முடியாது? அவங்களால முடியணும், ஆமாம்.''

நான் ஒப்புக்கொண்டேன்.

''அஃப்கோர்ஸ், நான் ஒரு முட்டாள்'' என்றாள் மேகன். ''எத்தனை விஷயங்களை சொல்லித் தந்தாலும் அத்தனையும் எனக்கு அழுகின முட்டையாத்தான் தெரிஞ்சது. உதாரணத் துக்கு வரலாறு. ஒரே வரலாறு ஒவ்வொரு புத்தகத்திலும் ஒவ்வவொரு மாதிரி சொல்லப்படுது!''

“அதுலதான் ரியல் இண்ட்ரஸ்ட்டே பதுங்கியிருக்கு.”

என் பதிலைப் புறக்கணித்து விட்டாள். “பிறகு இந்த இலக்கணம்” என தொடர்ந்தாள்: “ஆங்கிலத்தை எடுத்துக்கங்க. ஷெல்லி, வேர்ட்ஸ்வொர்த்துனு ஒரு கூட்டம். இதுல ஷேக்ஸ்பியர் வேற.”

“அய்யய்யோ... ஷேக்ஸ்பியர்ல என்ன தப்பு!” ஈடுபாட்டோடு கேட்டேன்.

“தன்னைத்தானே முறுக்கிப்பார், ஒரு சின்ன சமாச் சாரத்தை அத்தனை கஷ்டப்படுத்திச் சொல்ல. இறுதியில அவர் என்ன சொல்ல வரார்னே விளங்காம முடிஞ்சுடும்! ஆயினும், சில ஷேக்ஸ்பியர் படைப்புகளை நான் விரும்பறேன்.”

“இதை கேட்டால் அவர் நிச்சயமா சந்தோஷப்படுவார்.”

வஞ்சப்புகழ்ச்சியையெல்லாம் அவள் கருதுவதே கிடையாது. முகத்தில் பிரகாசம் பொங்க அவள் சொன்னாள்: “கொனரில் மற்றும் ரேகன் - ரெண்டும் எனக்கு பிடிக்கும்.”

“ஏன், இது ரெண்டு மட்டும்?”

“ஓ, எனக்கு சொல்லத் தெரியல. எதனாலோ, அவங்க திருப்திகரமா தெரியறாங்க. அவங்க ஏன் அப்படி இருந்தாங் கன்னு நீங்க நினைக்கிறீங்க?”

நான் முழித்தேன்: “எப்படி இருந்தாங்கன்னு?”

“ப்ச், அவங்க எப்படி இருந்தாங்களோ அப்படி! ஏதோ வொண்ணு அவங்களை அப்படி பண்ணியிருக்கணுமோ?”

முதல் முறையாய் நான் வியந்தேன். லியாரின் முதல் இரு பெண்பிள்ளைகளையும் இரண்டு அழுக்கு மூட்டைகள்

என்ற அளவில் அப்படியே நான் விட்டு வைத்திருக்கிறேன். ஆனால் அதற்கான காரணத்தை அதிரடியாய் அறிய விரும்பும் மேகனின் அழுத்தம் என்னை கவர்ந்தது.

"நான் அதைப் பற்றி சிந்திக்கிறேன்" என்றேன் நான்.

"ஓ, அதெல்லாம் தேவையில்ல. ஜஸ்ட், நானா யோசிச்சுப் பார்த்தேன், அவ்ளோதான். எப்படியோ, அது வெறும் ஆங்கில இலக்கியம், அவ்வளவுதானே?"

"நிச்சயமா, நிச்சயமா. அது சரி... நீ விரும்பிய பாடங்கள் எதுவுமே இல்லையா?"

"கணக்கு மட்டுந்தான்."

"கணக்கு?" - ஆச்சரியப்பட்டு கேட்டேன்.

மேகனின் முகம் பிரகாசமடைந்திருந்தது. "நான் கணிதத்தை விரும்பினேன். கூல் என்று சொல்லலாம். ஆனா அது ஆணித்தரமா எனக்கு நடத்தப்படல. எனக்கு கணிதம் சரியான முறைல சொல்லிக் கொடுக்கப்படணும்னு விரும்பறேன். அது ஒரு சொர்க்கம். எண்கள்ல ஏதோவொரு வகை தெய்வீகம் இருக்குனு நான் ஸ்திரமா நம்பறேன். நீங்க?"

"அப்படியெல்லாம் நான் உணர்ந்ததே கிடையாது" என்றேன் நான் நிஜமாய்.

நாங்கள் இப்போது ஹை ஸ்ட்ரீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தோம். மேகன் கூர்மையாய் சொன்னாள்: "அதோ, மிஸ் க்ரிஃபித். வெறுக்க வேண்டிய பொம்பிளை."

"அவங்களை உனக்குப் பிடிக்காதா?"

''நான் அவங்களை அடிவரை வெறுக்கறேன். அவங்க நடத்தும் போலித்தனமான சாரணியர் கும்பல்ல நானும் சேரணும்னு ஒத்தைக்கால்ல நிக்கிறாங்க. எனக்கு சாரணியர் சங்கம் பிடிக்கல. நீங்க சரிவர செய்ய இதுவரை கற்றுக் கொள்ளாத ஒரு விஷயத்துக்காக எதுக்கு ஒரு பேட்ஜைக் குத்திக்கிட்டு யூனிபார்மையும் போட்டுக்கிட்டு கொத்துக்கொத்தா போய் நிக்கணும்? இதெல்லாம் எனக்குப் பிடிப்பதே இல்லப்பா. அழுகிய சமாச்சாரங்கள்...''

ஒட்டுமொத்தமாய் நானும் இதை ஆமோதித்தேன். இப்படி என் கருத்தை நான் சொல்வதற்குள் மிஸ் க்ரிஃபித் எங்களருகே வந்து சேர்ந்திருந்தார்.

டாக்டரின் சகோதரி, அவருக்குப் பொருத்தமேயில்லாத ஐமீ எனும் பெயரை வைத்திருந்தாலும், டாக்டரிடம் காணக் கிடைக்காத அனைத்து பாஸிடிவ் உறுதியும் தன்னம் பிக்கையும் இருந்தன. இதயத்திலிருந்து வரும் ஆழமான குரல் அவருக்கு. அழகும் சற்று தூக்கலே.

''ஹலோ, நீங்க ரெண்டு பேருமா?'' என்று எங்களிடம் வந்தார். ''சூப்பரான காலைப்பொழுது, இல்ல? மேகன்... உன்னைத்தான் நான் ஜஸ்ட் பார்க்கணும்னு நினைச்சுக் கிட்டேயிருந்தேன். கான்ஸர்வேடிவ் அசோஸியேஷனுக்கு அனுப்பும் கடுதாசிகள்ல முகவரிகள் எழுத கொஞ்சம் உதவி தேவைப்படுது.''

தந்திரமாய்த் தவிர்க்கும் விதமாய் என்னவோ சொன்னாள் மேகன். சைக்கிளை ஓங்கி உதைத்து இழுத்தாள். வேண்டு மென்றே அதனை இண்டர்நேஷனல் ஸ்டோர்ஸ் பக்கமாய் ஓட்டிச் சென்று விட்டாள்.

போனவளைப் பார்த்தபடி "அசாதாரணமான சைல்ட்" என்றார் மிஸ் க்ரிஃபித். "முழுச்சோம்பேறி. இப்படியப் படியும் சுத்திச்சுத்தியே நேரத்தைக் கழிச்சுக்கிட்டிருக்கா. மிஸஸ் ஸிம்மிங்டன்னுக்கு இவ நிச்சயமா ஒரு தலைவலியாத் தான் இருக்கணும். இவளை எதிலாவது சேர்த்து விடணும்னு இவ அம்மாக்காரி முயற்சி பண்ணின சங்கதி எனக்கும் தெரியும். குறுக்கெழுத்து, தட்டச்சு, இல்லேனா சமையல், அதுவும் இல்லேனா தோட்டக்கலை. இவளுக்கு வாழ்க்கைல முதல்ல ஓர் ஈடுபாடு தேவைப்படுது."

இதுவும் சரியே என்று நான் நினைத்தேன். ஆனால் மேகனின் இடத்தில் நின்று பார்த்தேன்... மிஸ் க்ரிஃபித்தின் அமிலத்தன்மையான அணுகுமுறையைக் கவனத்தில் கொண்டு இவர் என்ன சொன்னாலும் அதை எதிர்த்தே நிற்க வேண்டும் என்றே மேகன் இருப்பாள் என்பது விளங்கியது.

"எனக்கு சும்மாவே உட்கார்ந்திருப்பது பிடிக்காது" என்று மிஸ் க்ரிஃபித் தொடர்ந்து கொண்டிருந்தார். "அதுவும் நிச்சயமா இந்த இளைய பசங்க சும்மா இருக்கவே கூடாது. சில சமயங்கள்ல, அழகோ வசீகரமோ இல்லாத இந்த மேகன் பொண்ண ஓர் அரைக்கிறுக்கோனு நான் எண்ணுவதுண்டு. இவ அப்பா இருந்தார் இல்ல" என்று குரலை சட்டென்று தாழ்த்திக் கொண்டு பேசிய மிஸ் க்ரிஃபித், "நிச்சயமா அவர் ஒரு அழுக்கு மூட்டை. இவ அவரை ஒற்றி அப்படியே வந்துட்டாளோனு நினைக்கிறேன். ஓ வெல், உலகம் ஆக்கப்பட அனைத்து வகையறாக்களும் தேவைப்படுது" என்றார்.

"அதிர்ஷ்டவசமாக" என்றேன் நான்.

ஐமீ க்ரிஃபித் ஒரு ஜாலியான சிரிப்பினை உதிர்த்தார்.

"ஆமாம். நாம எல்லாரும் ஒரே மாதிரி படைக்கப் பட்டிருந்தால் அது சுவாரஸ்யமாகவா இருக்கும்? ஆனா, வாழ்க்கையிலிருந்து ஒருத்தர் அள்ளி எடுக்க முடிந்த அனைத்தையும் எடுக்காமல் விட்டு விட்டால் அதை என்னால பொறுத்துக்க முடியாது. நான் வாழ்க்கையைக் கொண்டாடறேன்... அப்படியே மற்றவர்களும் கொண்டா டணும்னு நினைக்கிறேன். வருஷம் முழுக்க ஒரே கிராமத் திலேயே அடைஞ்சுக் கிடப்பதால எனக்கு போரடிச்சுப் போயிருக்கணும்னு சிலர் சொல்வாங்க. ஒரு துளிகூட அப்படிக் கிடையாதும்பேன் நான். நான் எப்பவும் பிஸி, எப்பவும் ஹாப்பி! இந்த கிராமங்கள்ல தினந்தோறும் ஏதாவது நடந்துக்கிட்டுத்தானிருக்கும். சாரணர் குழாம், நிறுவன வேலைகள், பல்வேறு கமிட்டிகள் இதனாலெல்லாம் என் நேரம் முழுக்க விழுங்கப்பட்டுடுது. ஓவனைக் கவனிக்கக் கூட நேரம் விடப்படுவதில்லைனு சொல்வேன், யெஸ்."

இக்கணத்தில் சாலையின் மறுபுறத்தில் அவருக்குத் தெரிந்த யாரையோ கவனித்தார் மிஸ் க்ரிஃபித். அதன் அடையாளமாய் கையசைத்துக் காட்டிய அவர், சாலையின் குறுக்காய் கிளம்பி விட்டார். பாங்குக்கு நான் கிளம்ப இது உதவியது.

மிஸ் க்ரிஃபித்தின் நடவடிக்கைகள் எப்போதும் காட்டாறாய் அமைந்திருப்பதை நான் கவனித்திருக்கிறேன். அவருடைய சக்தியையும் இளமை வேகத்தையும் நான் வியந்திருக்கிறேன். கதிர்வீச்சாய் பரவும் அவருடைய ஆளுமை, வழக்கமாய் யாரை பற்றியாவது கீழ்ஸ்தாயியில் முணுமுணுத்துக் குற்றம் சுமத்திக் கொண்டேயிருக்கும் அனைத்துவகைப் பெண்களின் குணங்களிலிருந்தும், முற்றிலும் மாறுபட்டு என்னை ஈர்த்தது.

பேங்க் பரிவர்த்தனை திருப்திகரமாய் முடிந்தது. கால்ப்ரைத், கால்ப்ரைத் அண்ட் ஸிம்மிங்டன் நிறுவனத்துக்கு சென்றேன். கால்ப்ரைத் என்று அங்கு யாராவது இருக்கிறார்களா என எனக்கு தெரியவில்லை. அப்படி யாரையும் நான் அங்கு பார்க்கவில்லை. உள்ளேயிருந்த ரிச்சர்ட் ஸிம்மிங்டன்னின் அலுவலகப் பகுதிக்கு எனக்கு வழி காட்டப்பட்டது. நீண்ட நாட்கள் இருக்கும் ஒரு சட்ட அலுவலகத்துக்கான அனைத்து அம்சங்களும் அதிலிருந்தது. அதிகமான கேஸ் கட்டுகள், தாள்கள், டைப்-ரைட்டர் இயந்திரம்...

நான் கொண்டு போயிருந்த தஸ்தாவேஜை அவர் படிக்கும்போது மிஸ்டர் ஸிம்மிங்டன்னை நான் கூர்மையாய் படித்தேன். அப்போது, முதல் திருமணத்தில் ஒரு பெரிய பூகம்பத்தை மிஸஸ் ஸிம்மிங்டன் அனுபவித்திருக்கிறார் என்றால், தனது இரண்டாவது திருமணத்தில் அவர் மிகவும் பாதுகாப்பாய் காய்களை நகர்த்தியிருக்கிறார் என்று எனக்கு பட்டது. அமைதியான மரியாதைக்கு ஒரு முழு உதாரணம், மிஸ்டர் ஸிம்மிங்டன். மனைவிக்கு ஒரு நொடிப்பொழுது படபடப்புக்கூட தந்துவிடாத கணவன் வகையைச் சேர்ந்தவர். நீண்ட கழுத்தும், முன்னே துறுத்தும் முகவாயும். கொஞ்ச மாய் இளைத்த முகம்... அதில் நீளமான மற்றும் ஒல்லியான மூக்கு. கனிவான மனிதன். ஒரு நல்ல தகப்பன் மற்றும் கணவன் என்பதில் சந்தேகம் இல்லை.

தற்சமயம் மிஸ்டர் ஸிம்மிங்டன் பேச ஆரம்பித்தார். அவர் மெதுவாகவும் துல்லியமாகவும் பேசினார். தன்னைப் பற்றி, 'ஒரு சிறந்தவர் மற்றும் கூர்மையாய் கவனிக்க வல்லவர்' ஆகிய பதிப்புகளை தனது நிதானமான பேச்சின் மூலம் அவர் வெளியிட்டுக் கொண்டிருந்தார். அப்போதே எனது

பிரச்சினையை நாங்கள் முடித்துக் கொண்டோம். எழுந்து கிளம்பினேன். அப்படியே ''நான் மலைப்பகுதியில உங்க வளர்ப்பு மகளோட வந்தேன்'' என்றேன்.

அவருடைய வளர்ப்பு மகள் யாரென்று அவருக்கு தெரியாததைப் போல ஒருசில கணங்கள் தோன்றினார் மிஸ்டர் ஸிம்மிங்டன். பிறகு அவர் புன்னகைத்தார்.

''ஓ, யெஸ், அஃப்கொர்ஸ் மேகன். ஸ்கூலிலிருந்து கொஞ்ச நாட்களுக்கு முன்னாலேயே வந்துட்டா. அவ எதையாவது செய்யணும் யெஸ், செய்யணும். அதுக்காக எங்கேயாவது சேர்த்துவிட நாங்க வழி தேடிக்கிட்டிருக்கோம். ஆனா, அவளும் ரொம்ப சின்னவ. எதிலும் சேர்க்க முடியல இன்னும் வயசு ஆகலேனு சொல்லிடறாங்க. யெஸ், இதைத் தான் காரணமா என்கிட்டே சொல்றாங்க.''

நான் வெளியே வந்தேன். அங்கிருந்த அலுவலகத்தில் ஒரு வயதான முதியவர் ஸ்டூலில் உட்கார்ந்திருந்தார். மெது வாகவும் சிரத்தையுடனும் அவர் எழுதிக் கொண்டிருந்தார். ஒரு பையன். பிறகு, மூக்குக் கண்ணாடியை மூக்கின் நுனியில் அணிந்து கொண்டு நல்ல வேகத்தில் டைப் பண்ணிக் கொண்டிருந்த ஒரு நடுத்தர வயதுப் பெண்.

இவள்தான் மிஸ் கிஞ்ச் என்றால், இவளுக்கும் இவளுடைய முதலாளிக்கும் இடையே அன்பான வார்த்தைப் பரிமாற்றங்களுக்கு சாத்தியமே கிடையாது எனும் ஓவன் க்ரிஃபித்தின் கருத்தை நான் முழுமைக்கும் ஆமோதிக் கிறேன்.

பேக்கரிக்குப் போய் எனக்கு தரப்பட்டிருந்த பன்றிக்கறி பற்றி கம்ப்ளெயிண்ட் தந்தேன். ஆச்சரியமாய் அது

பெறப்பட்டது. 'இப்பத்தான் ஓவனிலிருந்து எடுத்தது இது' என்ற குறிப்புடன் சூடான மாமிசம் மாற்றித் தரப்பட்டது.

வெளியில் வந்த நான், ஜோன்னா காரோடு வந்திருப்பாள் என்ற ஆசையில் சாலையின் மேலும் கீழும் பார்த்தேன். நடந்து வந்தது என்னை அசதியாக்கியிருக்க, இரண்டு ஊன்று கோல்கள் மற்றும் சூடான பன்றிக்கறி ஆகியவற்றைச் சுமந்து கொண்டு இனி திரும்பி நடப்பது என்பது என்னால் இயலாதது.

ஆனால், அதுவரை ஜோன்னா வருவதற்கான அறிகுறிகளே தெரியவில்லை.

திடீரென்று, என் கண்கள், மிகுந்த சந்தோஷத்தாலும் தாளவொண்ணா ஆச்சரியத்தாலும், இமைக்க மறந்தன.

நடைபாதை வழியாக, என்னை நோக்கி ஒரு தேவதை வந்து கொண்டிருந்தது. நிஜமாய் சொல்கிறேன்... என்னை நோக்கி வந்தவளைக் குறிப்பிட வேறு வார்த்தை கிடையாது.

துல்லியமான உடல் அமைப்புகள், சுருண்டு தளதளக்கும் அந்த மொறுமொறு கருங்கூந்தல், அசத்தலான உயரத்தில், தகுந்த போஷாக்காய் வடிவாகியிருந்த அங்கங்கள்! இவற்றோடு, எவ்வித பிரயத்தனமும் இல்லாமல் அவள் ஒரு தேவதையென நடந்தாள், என்னை நோக்கி நீந்திநீந்தி வருவதைப்போல! தகதகக்கும், யாருடனும் ஒப்பிடவே முடியாத, மூச்சடைக்க வைக்கும் ஒரு பெண்!

என்னுடைய உடல் ஆனந்தக் கிளர்ச்சியில் நடுநடுங்கும் போது, ஏதேனும் கைதவறியாக வேண்டும். தவறியது, பன்றிக்கறி. அது என்னுடைய இறுக்கிய பிடியிலிருந்து நழுவிவிட்டது. அதற்காக ஓர் எகிறு எகிறினேன் நான்...

அந்நிலையில் என்னையே நான் மறந்திருந்தபடியால், ஊன்றுகோலின் துணையோடு நான் வாழ்வதும் மறந்து போய்விட, அதனையும் தவற விட்டுவிட்டேன். நானும் நழுவினேன். ஏறத்தாழ விழுந்து விட்டேன்.

இறுக்கமான தேவதையின் பிடிதான் நான் முழுக்கவும் விழுந்து விடாமல் என்னைப் பிடித்து நிறுத்தியது. நான் தெற்றினேன்: ''தே-தே-தேங்க்ஸ். எ-என்-என்னை... அ-அதாவது, ஐம் ஸாரி.''

தற்சமயம் பன்றிக்கறிப் பொட்டலத்தை எடுத்திருந்த அவள், அதனை என்னிரு ஊன்றுகோல்களுடன் சேர்த்து என்னிடம் கொடுத்தாள். இதற்குப் பிறகு கனிவாய் சிரித்த அவள் உற்சாகமாய் பேசினாள்: ''அப்படியெல்லாம் சொல்லாதீங்க. எனக்கொண்ணும் பிரச்சினையேயில்ல.''

தேவதை உருவாக்கியிருந்த மேஜிக், இப்போது நான் கேட்ட அதாவது தட்டையான குரலுக்கு முன்னால் மடிந்தது சுரத்தற்ற குரல்.

அவள், ஆரோக்கியமாய் தோன்றும், வாளிப்பான மற்றும் அழகான வடிவமைப்பிலான ஒரு பெண்... அவ்வளவே. இப்படியானது நிலைமை.

வாய் திறக்காத வரைக்கும், உங்கள் உள்ளே உறையும் ஆன்மாவையே உலுக்குமளவுக்கு ஒரு பெண் செய்துவிடுவது தான், என்னே ஒரு விந்தை. அவள் பேசிய கணம், அந்த கவர்ச்சி ஏதோ அப்படி ஒன்று நடக்கவேயில்லை என்பதைப் போல கரைந்து, அவள் மேல் எழுந்த அவமானத்தை முழுதும் உடைத்து விடுவதும்தான், என்னே ஒரு விந்தை.

இதற்கு எதிர்ப்பதமாய் நடப்பதையும் நான் கேள்விப் பட்டிருக்கிறேன். குரங்கு போல முகங்கொண்டு, யாரும் மறுமுறை திரும்பிப் பார்க்க பிரியப்படாத மாதிரியான பெண்களை நான் கவனித்திருக்கிறேன். அப்போது அவள் பேச வாய் திறப்பாள்... அது ஆன்மா வரை போய் மீட்டி, ஏதோ க்ளியோபாட்ராவே மீண்டும் உயிர்க் கொண்டு வந்து விட்டதைப் போல நம்மை ஆக்கிவிடும்.

ஜோன்னா எனக்குப் பின்னால் வந்திருந்தாள். அதை நான் கவனித்திருக்கவில்லை. அவள் வருவதற்குள் ஏதாவது ஆகிவிட்டதா என்று என்னைக் கேட்டாள் அவள்.

''நத்திங்'' என்றேன் நான், என்னைக் கட்டுக்கள் கொண்டு வந்துக் கொண்டு. ''காதல் தேவதைகளைப் பற்றி நினைச்சுக் கிட்டிருந்தேன் நான்.''

''அதை நினைக்க எப்படியாப்பட்ட இடத்தை தேர்ந் தெடுத்திருக்கே, நீ!'' என்றாள் ஜோன்னா. ''வாயை ஆன்னு திறந்துக்கிட்டு நெஞ்சோட ஒரு பொட்டலத்தையும் அணைச் சுக்கிட்டு, பார்க்க சகிக்காம நீ நின்னுக்கிட்டிருந்தே.''

''ஓர் அதிர்ச்சி'' என்றேன் நான். ''அது யார்னு தெரியுமா?'' என்று கூடுதலாய் கேட்டேன் நான். திரும்பிப் போய்க் கொண்டிருந்த அந்த தேவதையை சுட்டிக் காட்டினேன்.

அவளையே முறைத்துப் பார்த்து முடித்து விட்டு ''அது ஸிம்மிங்டன் வீட்டு வேலையாள்'' என்றாள் ஜோன்னா. ''அவதான் நீ சொன்ன அந்த அதிர்ச்சியா?'' என்று அவளே தொடர்ந்தாள். ''அவ அழகா இருப்பா. ஆனா ஈரமீன் கழுவுற கைல நழுவிடுவா.''

''எனக்குத் தெரியும்'' என்றேன் நான். ''ஜஸ்ட், ஒரு நைஸ் கேர்ள்.''

ஜோன்னா கார் கதவைத் திறந்துவிட, நான் உள்ளே நுழைந்தேன்.

''இது ஒரு விசித்திரம் இல்ல?'' என்று கேட்டாள் அவள். ''சிலருக்கு அற்புதமான அமைப்பு இருக்கு. ஆனா, ஒரு முழு ஸீரோ. இந்தப் பெண்ணைப் போல. இதெல்லாம் ஒரு பரிதாபம்.''

''ஒரு வீட்டுப் பணியாளுக்கு இவ்வளவு போதும்'' என்றேன் நான்.

# அத்தியாயம் - 3

## I

அந்த மத்தியானப் பொழுதில் மிஸ்டர் பையுடன் டீ அருந்த நாங்களிருவரும் சென்றிருந்தோம்.

மிஸ்டர் பை, ஒரு பெண்ணைப் போல அதிகம் காட்டிக்கொண்ட ஒரு குண்டு குள்ள மனிதன். அவருடைய ஆதிகாலத்து நாற்காலிகள், பீங்கான் சேகரிப்புகள் போன்றவற்றில் தன்னை முழுக்க அர்ப்பணித்தவர். பாதிரியார்களின் தங்கும் விடுதியான ப்ரியர்ஸ் லாட்ஜில் அவர் தங்கியிருந்தார். அக்கட்டிடத்தின் கீழ்த்தளத்தில் பழைய பாதிரியார்களின் காலத்திலிருந்த உடைந்துபோன சாமான்களெல்லாம் அடைக்கப்பட்டிருந்தன.

ப்ரியர்ஸ் லாட்ஜ், ஓர் உன்னதமான இல்லமாய் இருந்தது. அதிலும் மிஸ்டர் பையின் கரிசனமான பார்வையில் அது அதனுடைய அழகின் உச்சத்திலிருந்தது. அங்கிருந்த ஒவ்வொரு மரச்சாமானும் தகதகவென பாலிஷ் செய்யப்பட்டு அவற்றுக்கு மிகவும் பொருந்தியதோர் இடத்தில் அமர்த்தப்பட்டிருந்தன. உயர்வான தரத்திலும்

நிறத்திலும் இருந்த திரைச்சீலைகளும் நாற்காலியின் குஷன்களும், உயர்பட்டால் ஆக்கப்பட்டிருந்தன.

அங்கு தங்கியிருப்பது, ஒருவரை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கே அழைத்து சென்றுவிடும் மியூஸியத்தில் தங்கியிருப்பதற்கு ஒப்பானது என்று எனக்குப் பட்டது. சுற்று வட்டாரம் பற்றியெல்லாம் அதிகம் கவனம் வைக்காதவர்கள் கூட இப்படி எண்ணுவதிலிருந்து தப்பிவிட முடியாது.

பையின் சிறிய தடிமனான கைகள், பொக்கிஷமாய் சேகரித்து வைக்கப்பட்டிருந்தவற்றை அவர் விளக்கியபோது உணர்ச்சிபூர்வமாய் அல்லாடின. எந்தவிதமான ஒரு பரபரப்பு சூழ்நிலையில் அத்தகைய உன்னதப் பொருட்களை அவர் வாங்கி வந்தார் என்பதை பற்றி மிஸ்டர் பை விளக்கிய சமயங் களில் அவர் குரல் கிறீச்சிட்டு உச்சஸ்தாயிக்குச் சென்றது.

கலைப்பொருட்கள் மற்றும் கடந்தகாலத்து மரச் சாமான்கள் ஆகியவற்றில் எனக்கும் ஜோன்னாவுக்கும் ப்ரியம் அதிகமாகையால், அவரையும் அவரின் ஆனந்தத்தையும் நாங்களிருவரும் ஆமோதித்தோம்.

‘‘நம் கடந்தக்கால வரலாறு குறித்து தெரிந்து வைத்துக் கொள்வது நிஜமாகவே சந்தோஷமான அனுபவம். பெரும் சந்தோஷமது. இங்கு வசிக்கும் டியர் மக்கள் இருக்காங்க பாருங்க, அத்தனையும் காட்டுமிராண்டிகள் நாகரீக மற்றவர்கள்னு சொல்வேன் நான். இதுங்களுக்கு ஒண்ணும் தெரியாது. காட்டுமிராண்டிகள் ஒப்புயர்வற்ற காட்டு மிராண்டிகள்! இதுங்க வீடுகளுக்குள்ளே போய் பார்த்தீங் கன்னா, அது உங்களை அழ வெச்சுடும், டியர் லேடி, தேம்பித் தேம்பி அழவெச்சுடும். இந்த அனுபவம் உங்களுக்கும் நேர்ந்திருக்கணுமே?’’

வீட்டுக்குள் போகுமளவுக்கு இன்னும் தான் யாருடனும் பழக ஆரம்பிக்கவில்லை என்று சொன்னாள் ஜோன்னா.

''ஆனா நான் என்ன சொல்ல வரேன்னு உங்களுக்கு புரியது இல்லியா? சாமான்களை படுகேவலமா கலந்து வெப்பாங்க அவங்க. என் கண்ணாலேயே நான் பார்த் திருக்கேன்: கண் கவரும் ஓர் அற்புத பீங்கான் பொம்மை யொன்று இருக்கும்... அதுக்கு பக்கத்திலேயே தீஞ்சுப்போன ஓக் மரத்தால பண்ணப்பட்ட ஒரு ரிவால்விங் புக் ஷெல்ஃப் இருக்கும். யெஸ், அதுவும் தீஞ்சுப்போனதொரு ஓக்.''

அவர் நடுநடுங்கிப் போனார். சப்பையாய் சொன்னார்: ''மக்கள் ஏன் இப்படி குருடர்களா வாழணும்? அழகு ஒன்றுதான் நாம் வாழ்வதற்கான அர்த்தத்தையே கொடுக்கும் என்பதை நீங்க நிச்சயமா ஒத்துப்பீங்கன்னு நம்பறேன்.''

''அவருடைய நேர்மையின்பால் மயங்கிப் போயிருந்த ஜோன்னா, ஆமாம், ஆமாம், அப்படித்தான்'' என்றாள்.

''அப்படினா?'' என்று மிஸ்டர் பை அதிகாரமாய் கேட்டார்: ''மக்கள் ஏன் தங்களை சுற்றிலும் அழுக்கையே கொட்டி வெச்சுக்கிறாங்க?''

ஜோன்னா, விளங்கிக்கொள்ள முடியாதவர்கள் என்று பதில் சொன்னாள்.

''விளங்கிக்கொள்ள முடியாதவர்கள்? கிடையாது கொலைகாரர்கள்! அப்படித்தான் நான் அவனுங்களை சொல்வேன் கொலைகாரர்கள்! இப்படி நடந்து கொள் வதற்கு அவங்க தரும் காரணங்கள் இருக்கு பாருங்க - ஊஃப்! எதுவோ ஒண்ணு! வசதி கெடாமல் இருந்தாப் போதும்பாங்க. என்ன ஒரு கேவலமான அணுகுமுறை பார்த்தீங்கள்லே?''

கேட்டுவிட்டு, நிறுத்துவதாயில்லை அவர். போய்க் கொண்டேயிருந்தார்: "நீங்க குடியிருக்கும் மிஸ் எமிலி பார்ட்டனின் வீடு. இப்ப அது வசீகரமாயிருக்கு. அந்நதம்மாவும் சில நுணுக்கமான சமாச்சாரங்களை யெல்லாம் பண்ணியிருக்காங்க. நிச்சயம் நுணுக்கமானவை தான். அதுல ஓரிரு சாமான்கள், முதல் தரமானவை. அவங்களுக்கும் கலைச்சுவையிருக்கு அது அவங்களுக் குள்ளேயே ஊறும் ஒரு நிஜமான சுவையா என்பதுல எனக்கு சந்தேகமிருந்தாலும்! அதாவது என்ன சொல்ல வரேன்னா, சில சமயங்கள்ல, இக்கலைச்சுவை, வெறும் செண்டிமெண்ட் சார்ந்ததோன்னு நான் வியப்பதுண்டு. சாமான்கள் எப்படி யிருக்கோ அல்லது எப்படிக் கிடைச்சதோ அப்படியே வெச்சுக்க அவங்க விரும்பறாங்க, இதுல நோ டவுட். ஆனா இது அவங்களுடைய ஆத்மார்த்தமான கலைச்சுவையால கிடையாது... அவங்க தாயார் அப்படிப்பட்ட ஒரு நிலைல தான் அவற்றை வெச்சிருந்தாங்க அந்த செண்டி மெண்ட்டால."

அவர் தனது கவனத்தை இப்போது என்பக்கமாய் திருப்பினார். அவரது குரல் மாறியது. அது, அற்புதமான கலைஞன் எனும் நிலையிலிருந்து ஒரு பிறவி வம்பன் எனும் நிலைக்குத் தாழ்ந்து மாறியது.

"அவங்க குடும்பம் பற்றி உங்களுக்கு ஒண்ணுமே தெரியாது போல தெரியுது. ஆமாம் தரகன் அதை யெல்லாமா சொல்லியிருக்கப் போறான்? ஆனா, மை டியர்ஸ், அந்தக் குடும்பத்தைப் பற்றி நீங்க தெரிஞ்சு வெச்சுக் கணும்! நான் இங்கே வந்தபோது அந்த ஓல்ட் மதர் உயிரோடத்தானிருந்தாங்க. தாளவொண்ணா பிறவி தாளவொண்ணா பிறவி! ஒரு ராட்சஸி, யெஸ்.

சந்தேகத்துக்கிடமின்றி ஒரு ராட்சஸி அவ. தன்னுடைய இளைய தலைமுறையையே விழுங்கும் அரக்கி. யெஸ், இப்படித்தான் நான் அவங்களை கணக்குப் பண்ணி வெச்சிருக்கேன். அவங்க அப்படி ஓர் ஆஜானுபாகு தெரியுமா? பதினேழு பாறைகள் சேர்ந்த கனமிருக்கும். தனது ஐந்து பெண்களும் அவங்களை சுற்றியே இயங்கினாங்க. ''பொண்ணுங்க!'' தன்னுடைய பெண்களை இப்படித்தான் அவங்க குறிப்பிடுவாங்க. பொண்ணுங்க! மூத்தவ அப்பவே அறுபதைத் தாண்டியிருந்தா. அப்பப்போ தன்னுடைய பெண்களை 'அந்த முட்டாப் பெண்ணுங்க!'னு விளிப்பாங்க. அடிமைங்க, அப்படித்தான் வாழ்ந்தாளுங்க அந்த அஞ்சு பேரும். அம்மாவை கவனிச்சுக்கிட்டு, அவங்க என்ன சொன் னாலும் அதுக்கு ஜால்ரா போட்டு மண்டையையும் ஆட்டிக் கிட்டு! பத்து மணிக்கு எல்லாரும் படுக்கப் போயிடணும். அவங்களுடைய படுக்கை அறைகள்ல கணப்பு கூடாது. அவங்க அஞ்சு பேர்ல ஒருத்தராவது தன்னுடைய நண்பர் களை வீட்டுக்குக் கூட்டிட்டு வந்திருப்பாங்களா ம்ம், அப்படியெல்லாம் யாரும் இங்கே கேள்விப்பட்டதுகூட கிடையாது. ஒரு பொண்ணுக்கும் கலியாணம் ஆகலேனு எள்ளி நகையாடுவா கிழவி ஆனா அதே சமயம் வேற ஆம்பிளைங்க யாரையும் பொண்ணுங்க பார்க்கவே முடியாதபடிக்கு அலர்ட்டா கவனிச்சுப்பா. எமிலிக்கோ, அல்லது ஆக்னஸுக்கோ யாரோ ஒருத்தன்கூட தொடர்பு இருந்ததா நான் நினைக்கிறேன். ஆனா அவன் குடும்பம் நல்லதாயில்ல மேலும் அம்மாக்காரியும் அதுக்கு சீக்கிரத் துலேயே முற்றுப்புள்ளி வெச்சுட்டா!''

''ஏதோ நாவல் கதையை கேட்பதுபோல இருக்கு'' என்றாள் ஜோன்னா.

''ஓ, மை டியர், அப்படித்தான் இருந்தது. பிறகு அந்த பயங்கரி மண்டையைப் போட்டா... ஆனா அப்ப அது டூ லேட். அஞ்சுப்பேரும், அம்மா இருந்திருந்தால் என்ன விரும்பியிருப்பாங்கனு கீழ்க்குரலில் பேசிப்பேசி அங்கேயே வாழ்ந்ததுங்க. இவ்ளோ ஏன்... அவங்களுடைய அறையை மறுசீரமைப்பதையேகூட பெண்கள் தவறுனு நினைச்சுக் கிட்டாளுங்க. அதுங்களுக்குள்ளேயே சந்தோஷமா இருந் தாங்க. ஆனா ஒருத்தருக்கும் வலிமை கிடையாது. ஒருத் தருக்கு அடுத்து இன்னொருத்தர்னு வரிசையா காலமா யிட்டாங்க. எடித்தை இன்ஃப்ளூ நோய் தட்டிட்டுப் போச்சு. மின்னிக்கு ஒரு ஆபரேஷன் நடந்தது, புவர் கேர்ள் அதுக்கப் புறம் நிவாரணமே அடையல. மேபிள்ளுக்கு வாதம் கண்டது. அவளை அர்ப்பணிப்போட கவனிச்சுக்கிட்டாங்க எமிலி. கடந்த பத்து வருஷமா நர்ஸ் வேலையைத் தவிர அவங்க வேற ஒண்ணும் பண்ணலேனுதான் சொல்லணும். வசீகரமானவ - இல்லையா? பணசம்பந்தமா படபடப்பாகவே இருப்பா அஃப்கொர்ஸ் அனைத்து முதலீடுகளும் கரைஞ்சிடுச்சு.''

''அவங்க வீட்டுல இருப்பதையே கடுமையா நினைக்கிறோம்'' என்றாள் ஜோன்னா இப்போது.

''நோ, நோ, மை டியர் யங் லேடி. அப்படி நீங்க எடுத் துக்கக் கூடாது. அவங்களுடனிருக்கும் ஃப்ளாரன்ஸ், அவங்க மேல பாசமா வேலை செஞ்சுக்கிட்டிருக்கா. அவ, எத்தனை அற்புதமான நபர்கள் வாடகைக்கு கிடைச்சிருக்காங்கனு எமிலி சொல்வதா சொல்வா.'' இங்கு மிஸ்டர் பை ஒரு சின்ன வணக்கம் வைத்தார். ''அவங்க மிகவும் அதிர்ஷ்டசாலினு சொல்லிக்கிட்டதா ஃப்ளாரன்ஸ் சொன்னா.''

''அந்த வீடு'' என்ற நான், ''நல்ல ஆறுதலான சூழ்நிலையை ஏற்படுத்துது'' என்றேன்.

மிஸ்டர், ஒரு துரிதப்பார்வையை என்னை நோக்கி பதித்தார். ''ரியலி? நீங்க அதை உணர்றீங்களா? ஓ, இது வெரி இண்ட்ரஸ்ட்டிங். நானும் வியந்திருக்கேன் தெரியுமா, வியந்திருக்கேன்.''

''என்ன சொல்ல வரீங்க, மிஸ்டர் பை?'' என்றாள் ஜோன்னா.

மிஸ்டர் பை அவரது குண்டுக்கைகளை விரித்தார். ''ஒண்ணுமில்ல, ஒண்ணுமில்ல. ஒருத்தர் வியப்பதுண்டே! எனக்கும் சூழ்நிலைகள் மேல நம்பிக்கை உண்டு, தெரியுமா? வசிக்கும் மக்களுடைய சிந்தனைகளும் உணர்வுகளும். ஓஹ்... இவை, இவற்றின் பதிப்புகளை, சுவர்கள் மரச்சா மான்கள் என அனைத்தின் மீதும் பதிக்கும்.''

நான் சில கணங்கள் பேசவில்லை. என்னைச் சுற்றிலும் ஒருமுறை பார்த்து விட்டு இந்த ப்ரியர்ஸ் லாட்ஜின் சூழ்நிலை பற்றி என்ன சொல்வேன் என்று சிந்தித்தேன். இதில் விசித்திரம் என்னவென்றால், இங்கு, இதற்கென்று ஒரு சூழலே இல்லை என்றே எனக்குத் தோன்றியது! இது, நிச்சயம் ஒரு மெச்சத்தக்க விஷயம்.

மிஸ்டர் பை மற்றும் ஜோன்னாவுக்கு இடையே என்ன உரையாடல் போய்க் கொண்டிருந்தது என்பது என் காதுகளில் ஏறாவண்ணம் இந்த சமாச்சாரம் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். கிளம்புகிறோம் என்று ஜோன்னா உதிர்த்த வார்த்தைகளால் நான் மீட்கப்பட்டேன். என்

கனவுலகிலிருந்து வெளியே வந்த நான், என் பங்குக்கு விடைபெற்றுக் கொண்டேன்.

நாங்களனைவரும் ஹாலுக்கு வந்தோம். நாங்கள் முன்கதவு நோக்கி நகர்ந்தபோது தபால்பெட்டியிலிருந்து ஒரு கடிதம் நழுவி தரைவிரிப்பில் விழுந்தது.

''மதிய தபால்'' என முணுமுணுத்த பை, அதனை எடுத்துக் கொண்டார். ''என் டியர் கண்ணுகளா... மறுபடியும் நீங்க வருவீங்க, இல்லையா? பரந்த சிந்தனை கொண்டவர்களை சந்திப்பதில் அப்படியொரு மகிழ்ச்சி உருவாகும். கலை பற்றி பாராட்டும் குணம் கொண்டவர்கள். இங்கிருக்கும் அனைத்தும் ஐம்பது வருடங்கள் பின்தங்கி இருக்குங்க இதுதான் என் கணிப்பு. இங்கிலாந்து ஓர் அதிசயங்கள் நிரம்பிய நாடு. அதுக்கு நிறைய பாக்கெட்டுகள் இருக்கு. லிம்ஸ்டாக் அவற்றில் ஒன்று. அமைதியான பிரதேசம் இங்கு நாராசமா எதுவும் எப்பவும் நடக்காது.''

மறுபடியும் எங்களுடன் கைகுலுக்கல் பண்ணிக் கொண்டார் அவர். நான் காரில் ஏற அவர் மிகைப்படுத்தப் பட்ட ஒத்துழைப்பு தந்தார். காரை அவள் செலுத்தினாள். அங்கிருந்த சிறு புல் புதரைச் சுற்றி திருப்ப சற்று பிரயத்தனப் பட்டுவிட்டு, பிறகு எதிரே விரிந்த நேர் பாதையில் பறக்க ஆரம்பித்தாள். அப்போது வீட்டின் நுழைவில் நின்று கொண்டிருந்த மிஸ்டர் பைக்கு அவள் கைவீசி டாட்டா காட்டினாள். நானும் அதையே செய்ய வளைந்து முன்வந்தேன்.

ஆனால் பிரியாவிடைக்கான எங்களின் கைவீசல்கள் அவரால் கவனிக்கப்படாமலே போயின. மிஸ்டர் பை வந்திருந்த கடிதத்தைப் பிரித்திருந்தார்.

திறக்கப்பட்ட அந்தத் தாளையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார் அவர்.

ஜோன்னா ஒருமுறை அவரை ஒரு சந்தோஷ குண்டு மூட்டை என்று வர்ணித்திருக்கிறாள். அவர் இப்போதும் குண்டாய்தானிருந்தார், ஆனால் சந்தோஷமாயில்லை. அவர் முகம் வெளிறிப்போய் அறையப்பட்டிருந்தது. ஆவேசம் மற்றும் ஆச்சரியங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தது அம்முகம்.

அந்தக் கணத்தில், அவர் கையிலிருந்த கடிதஉறையின் பிரபல்யத்தை நான் உணர்ந்தேன். அப்போது நான் இந்த பாயிண்ட்டை கவனித்திருக்கவில்லை அஃப்கொர்ஸ், இப்படிப்பட்டவற்றையெல்லாம் கவனிக்கிறோம் என்ற அறிதலே இல்லாமல் நம் ஆழ்மனது கிரகித்து வைத்துக் கொள்ளுகின்றது.

''என்னாச்சு அவருக்கு?'' என்றாள் ஜோன்னாவும். ''பாம்பு கடிச்சதைப் போல ஆகியிருக்கார், மனுஷன்...''

''இதுக்குக் காரணம்'' என்ற நான் சொன்னேன்:, ''அந்த ரகசிய கை என்றே நினைக்கிறேன்.''

அவள் உடனடியாய் ஆச்சரியத்துடன் என்னை பார்த்து திரும்ப, கார் சற்று அல்லாடிவிட்டது.

''பார்த்து, பார்த்து. பள்ளம்.''

ஜோன்னா உடனே கவனத்தை சாலையில் பதித்து சரிசெய்து கொண்டாள். அவள் முகம் சுளித்துக்கொண்டு, ''உனக்கு வந்த கடிதம் போல ஒரு கடிதம்னா சொல்றே?'' என்றாள்.

''அது என்னுடைய ஊகம்.''

''என்ன இடம்யா இது?'' என்றாள் அவள். ''இங்கிலாந்தின், அசைவேயற்ற, அமைதியான, குற்றங்குறை இடம்பெற சாத்தியமில்லாத ஓர் இடமாத்தான் நினைக்கத் தோணுது---''

''---மிஸ்டர் பையின் வர்ணனை போல 'இங்கு நாராசமா எதுவும் எப்பவும் நடக்காது''' என்று நான் முடித்துக் கொடுத்தேன். ''அப்படி வர்ணிக்க அவர் ஒரு தவறான காலத்தைத் தெரிந்தெடுத்திருக்கார். என்னவோ நடந்திருக்கு.''

''ஆனா யார் இப்படி எழுதிக்கிட்டிருப்பது, ஜெர்ரி?''

நான் என் தோள்களைக் குலுக்கினேன். ''மை டியர் கேர்ள் எனக்கெப்படித் தெரியும்? மரை கழன்ற யாரோ ஒரு லோக்கல் ஆசாமியா இருக்கணும்.''

''ஆனா, எதுக்காக? முட்டாள்தனமால்ல இருக்கு.''

''டாக்டர் ஓவனைக் கேட்டுப்பார்.''

ஜோன்னா தலையைக் கவிழ்த்தாள். ''டாக்டர் ஓவனுக்கு என்னைப் பிடிப்பதில்ல.''

''அவர் உன்னைப் பார்த்ததுகூட கிடையாது.''

''எல்லாம் பார்த்திருக்கார் ஹை ஸ்ட்ரீட்ல நான் இந்தப்பக்கம் வந்தால் சட்டுனு மாறி அந்தப்பக்கம் அவர் ஓடிடும் அளவுக்கு.''

''அசாதாரண ரியாக்ஷன்'' என்றேன் நான் இரக்கமாய். ''இப்படிப்பட்ட ரியாக்ஷன் உனக்கும் புதுசு.''

ஜோன்னா மீண்டும் முகஞ்சுளித்தாள்.

''ஸீரியஸா கேட்கிறேன் ஜெர்ரி... எதுக்காக இப்படி மொட்டைக்கடுதாசி எழுதறாங்க?''

''சொன்னேனே, மரை கழன்றிருக்கு. அவங்களோட ஏதோவொரு தாகத்தை இது தீர்த்து வைக்குதுனு நினைக்கிறேன். நீ தவறாய் முத்திரை குத்தப்பட்டோலோ அல்லது ஒதுக்கப்பட்டாலோ அல்லது எரிச்சலானாலோ அல்லது உன் வாழ்க்கை முழுக்க சூனியமா ஆகிவிட்டாலோ எனக்கென்னவோ, சந்தோஷமாகவும் உல்லாசமாகவும் இருக்கும் மக்களைக் குறிவெச்சு மறைவிலிருந்து தாக்க ஒரு மகோன்னத பலம் வரும்.''

இதற்கு நடுங்கினாள் ஜோன்னா. ''இது நல்லதில்ல.''

''கிடையாது, நல்லது கிடையாது. இதுபோன்ற கிராமத்து மக்களெல்லாம் சுயமா ஆக்கப்பட்டவங்க என்பது என் எண்ணம் ஆகவே இதேபோல விளக்க முடியாத பல விஷயங்கள் இங்கே கிடைக்கும்.''

''யாரோ, படிப்பு வாசனையில்லாத, நாகரீகம்னா என்னனு தெரியாதவன் பண்ணணும்னு நினைக்கிறேன். கல்வி கற்றிருந்தால்---''

ஜோன்னா, அவளது வாக்கியத்தை முடிக்கவில்லை. நான் அதற்கு ஒன்றும் பேசவில்லை. படித்திருந்தால் தவறுகள் நடக்காது எனும் ஒரு சுலபமான நம்பிக்கையை நான் என்றும் அனுமதிப்பவனில்லை. இது அவளுக்கும் தெரியும்.

காரை நகரில் ஓட்டிச்சென்று மலைச்சாலையில் ஏறுமுன் ஹை ஸ்ட்ரீட்டில் தென்பட்ட சில முகங்களை நான் விந்தையாய் கவனித்தேன். அதோ, அமைதியான புருவங்களுக்குக் கீழே வன்மமும் விஷமமும் கடுமையும் தாங்கியபடி, அங்கு செல்லும் வலிமையான கிராமத்துப் பெண்களில் ஒருத்தி, தனது பழிவாங்கும் நடவடிக்கையின் அடுத்த கட்டத்துக்கான திட்டத்தைத் தீட்டிக் கொண்டிருப்பாளோ?

ஆனால் நான் அப்போதும்கூட நாங்களிருவரும் பேசிக் கொண்டிருந்த சமாச்சாரத்தை முக்கியப்படுத்தி ஸீரியஸாய் எடுத்துக் கொள்ளவில்லை.

## II

ஸிம்மிங்டன் ஜாகைக்கு இரண்டு நாட்களுக்கு பிறகு பிரிட்ஜ் சீட்டாட்டம் ஆட நாங்கள் சென்றிருந்தோம்.

அது ஒரு சனிக்கிழமை மத்தியானம். ஸிம்மிங்டன் மக்கள் சனிக்கிழமை அன்று அலுவலகம் அடைத்திருக்கும் காரணத் தால் அன்றுதான் சீட்டாட்டத்தினை வைத்துக் கொள் கிறார்கள்.

அங்கு இரண்டு டேபிள்கள் இருந்தன. ஆட்டக்காரர் களாக, ஸிம்மிங்டன்னு தோணுது, நாங்களிருவர், மிஸ் க்ரிஃபித், மிஸ்டர் பை, மிஸ் பார்ட்டன் மற்றும் ஆப்பிள்டன் எனும் கலோனல் ஆகியோர் இருந்தோம். இங்கிருந்து ஏழு மைல்கள் தள்ளியிருக்கும் கம்பேக்கர் எனும் கிராமத்தில் வசித்துவரும் கலோனலை நாங்கள் இதுவரை சந்தித்த தில்லை. அவருக்கு அறுபது வயதிருக்கும். ஜோன்னாவால் அதிகம் வசியமாகியிருந்த அவர் அன்று மதியம் முழுக்கவும் தனது பார்வையை அவளை விட்டு அகற்றவேயில்லை.

லிம்ஸ்டாக் பிரஜைகளால் நீண்ட நெடுநாட்களாக பார்க்கப்படாத ஒரு கவர்ச்சிப்புயல் என் தங்கை என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

நாங்கள் வந்து சேர்ந்தபோது, எல்ஸீ ஹாலண்ட் பசங்களைக் கவனித்துக் கொள்பவள் ப்ரிட்ஜ் விளையாட்டுக்குத் தேவைப்படும் எக்ஸ்ட்ரா காய்களுக்காக

டெஸ்க்குகளில் தேடிக்கொண்டிருந்தாள். அவள் அதற்காக தரையிலெல்லாம் குனிந்து தேடியபோது, அன்று பார்த்த அதே தேவதையைப் போன்றே இயங்கினாள், ஆனால் அந்தக் கிளர்ச்சி மற்றுமொரு முறை நிகழவில்லை. ஆனால் இப்பொழுது நான், அவளுக்கு சுண்ணாம்புக் கற்களைப் போல விதிவிலக்காய் அமைந்திருக்கும் அந்த வெண்ணிற குண்டுப்பற்களையும், அவள் சிரிக்கும்போது முன்னிறுத்திக் காட்டிய ஈறுகளையும், குறிப்பிட்டுக் கவனித்தேன். வம்பு பேசும் பெண்ணாய் இருப்பதால் இதனை நன்கு கவனிக்க முடிந்தது.

‘‘இத பாருங்க, மிஸஸ் ஸிம்மிங்டன்... ஒரு சாமானைக் கடைசியா எங்கே வெச்சோம்னு என்னால நினைவு வெச்சுக்கவே முடியாது. என் தப்புதான் இது. கைல வெச்சுக் கிட்டுந்தேன், அப்போ ப்ரையான் என்ஜின்ல ஏதோ கோளாறுனு கத்தினான். அப்ப கைல ஒரு செட்டை வெச்சுக்கிட்டு ஓடின நான், அடுத்த செட்டை எங்கேயாது செருகியிருக்கணும். முட்டாள் நான். ஆங்... டீயை அஞ்சு மணிக்கு தயாராக்கும்படி ஏக்னஸிடம் சொல்லிடவா? குழந்தைகளை நான் கூட்டிட்டு வெளியே போறேன், ஸோ, ஒரு கூச்சலும் உங்களுக்கு இருக்காது.’’

அமரிக்கையான மற்றும் புத்திசாலிப் பெண். நான் ஜோன்னாவின் கண்களுக்குள் அகப்பட்டேன். அவள் சிரித்துக் கொண்டிருந்தாள். நான் அவளை கண்ணகல முறைத்தேன். என் மூளைக்குள் என்ன ஓடிக் கொண்டிருக் கிறது என்பதை எப்போதும் ஜோன்னாவால் சரியாய் படித்து விட முடியும். ஆகவே அவளை சபித்தேன்.

நாங்கள் ப்ரிட்ஜ் ஆட்டத்துக்குள் நுழைந்தோம்.

லிம்ஸ்டாக்கில் இருப்போரின் ப்ரிட்ஜ் திறமையை பற்றி எனக்கு உடனடியாகவே தெரிந்து போனது. மிஸஸ் ஸிம்மிங்டன், போதும் போதுமெனும் அளவுக்கு ஒரு மிகச்சிறந்த ப்ரிட்ஜ் ப்ளேயர். வழக்கமான மூளையற்ற பெண்களைச் சாராமல், இயற்கையிலேயே இவருக்கு நிச்சயமானதொரு சாதுர்யம் வாய்த்திருந்தது. அவர், முட்டாள் அல்ல. அவரது கணவர், சற்று முன்ஜாக்கிரதை நிரம்பிய, சிறந்த ஆட்டக்காரர். புத்திசாலித்தனம் என்பதன் சிறந்ததோர் உதாரணமாய் அங்கிருந்தார், மிஸ்டர் பை. நாங்கள்தான் அழைக்கப்பட்டிருந்தோம் ஆகையால் மிஸஸ் ஸிம்மிங்டன் மற்றும் மிஸ்டர் பை ஆகியோர் இருந்த டேபிளில் நானும் ஜோன்னாவும் பங்குபெற்றோம். மிஸ் பார்ட்டன், சந்தேகத்துக்கிடமின்றி ஒரு மோசமான ப்ரிட்ஜ் ப்ளேயர். இருந்தாலும் கொண்டாட்டமாய் ஆடினார். எந்தச் சீட்டை விடக்கூடாதோ, சரியாய் அதை இறக்கிவிட்டு விளையாடினார் அவர். 'இந்த விளையாட்டு பிடிக்கும். ஆனால் இதை விளையாடப் பிடிக்காது' என தான்சொன்ன வார்த்தைகளுக்கு ஒப்ப நடந்து கொண்டிருந்தார் ஐமீ க்ரிஃபித்.

ஒற்றுமையுடன் விளையாட்டு நகர்ந்து கொண்டிருந்தது. அவ்வப்போது ஜோன்னாவைப் பார்த்து கலோனல் அப்படியே ஸ்தம்பித்தபடியால் ஏற்பட்ட தாமதத்தை தவிர வேறு தடங்கல்கள் ப்ராக்டிக்கலாக இல்லை.

டைனிங் அறையிலிருந்த ஒரு பெரிய டேபிளைச் சுற்றி டீ பரிமாறப்பட்டது. நாங்கள் தேநீரை முடித்தபோது, பரபரப் பாயிருந்த இரண்டு பையன்கள் உள்ளே வர, அவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். மிஸஸ் ஸிம்மிங்டன் தாயின்

பெருமிதத்துடன் அறிமுகம் செய்தார். அதே ஆனந்தத்தில், தந்தையும்.

பிறகு, நாங்கள் எழுந்திருக்க ஆரம்பித்தபோது, ஒரு நிழல் என் தட்டினை மேவியது. நான் திரும்பினேன். மேகன் அங்கே ஜன்னலருகே நின்று கொண்டிருந்தாள்.

''ஓ'' என்றாள் தாய். ''இதோ, மேகன்.''

அவர் குரலில் ஆச்சரியம் சின்னதாய் தொனித்தது - ஏதோ மேகன் என்றொருத்தி இருப்பதையே மறந்து விட்டதைப் போல.

உள்ளே முன்னுக்கு வந்த அவள் எவ்வித கரிசனமுமின்றி கைகுலுக்கினாள்.

''அய்யய்யோ... உனக்கு டீயை மறந்துட்டேனே டியர்'' என்றார் மிஸஸ் ஸிம்மிங்டன். ''மிஸ் ஹாலந்தும் பையன் களும் அவங்களுக்கான டீயை எடுத்துக்கிட்டு வெளியே போயிட்டாங்க. நீ அவங்ககூட இல்லாதபோதும் நான் மறந்திருக்கேன் பார்...''

மேகன் ஒப்புதலாய் தலையசைத்தாள். ''பரவாயில்ல விடுங்க. நான் கிச்சனுக்குப் போய் பார்த்துக்கறேன்.''

அவள் அறையை விட்டகன்றாள். எப்போதும் போலவே அவள் அசுத்தமாயிருந்தாள்.

மிஸஸ் ஸிம்மிங்டன் வருத்தம் தொனிக்க சிறு புன்னகை யுடன் பேசினார்: ''என் புவர் மேகன். பள்ளிக்கூடத்தை முடிச்ச சிறுமிகள் முழு வளர்ச்சியை அடையுமுன் ஒருவித கூச்சத்துடனும் அவஸ்தையிலும் இருப்பாங்கள்ல அப்படியிருக்கா அவ.''

போருக்கு முந்துபவளைப் போன்ற வேகத்துடன் ஜோன்னாவின் தலை திரும்பியதை நான் கவனித்தேன். ''ஆனா மேகனுக்கு வயசு இருபது, இல்லையா?''

''ஓ, யெஸ், யெஸ். அவளுக்கு வயசு இருபது. ஆனா அவ வயசுக்கு அவ வளரலியே... இன்னும் குழந்தையாத்தான் இருக்கா. பெண்கள் சீக்கிரமா வளராமல் இருப்பதே நல்லதுனு நான் நினைப்பதுண்டு'' என்ற அவர், மறுபடியும் சிரித்தார். ''எனக்கென்னவோ எல்லா அம்மாக்களும் தங்களுடைய பிள்ளைகள் குழந்தைகளாகவே இருக் கணும்னு நினைப்பதா தோணுது.''

''அதெப்படி நினைப்பாங்க?'' என்றாள் ஜோன்னா. ''ஒரு குழந்தையின் வயசு கூடி மூளையால அது குழந்தையா இருப்பதை எந்த பெற்றவர்களும் விரும்ப மாட்டாங்க.''

''ஓ, பேசுபவற்றை அப்படியே நீங்க அர்த்தப்படுத்திக்கக் கூடாது, மிஸ் பர்ட்டன்'' என்றார் மிஸஸ் ஸிம்மிங்டன்.

அக்கட்டத்தில் மிஸஸ் ஸிம்மிங்டன்னை நான் சரியாய் கவனிக்காமல் விட்டிருக்கிறேனோ என்று எனக்குப் பட்டது. அந்த சோகையான, வண்ணம் குறைந்த முகம், சுயநலம் எனும் நிஜத்துக்கான முகமூடியோ? அவர் மேலும் பேசிய போது வெறுப்பு சற்று அதிகம்தான் ஆனது.

''என் புவர் மேகன்... சமாளிக்க முடியாத ஒரு பொண்ணோனு தோணுது எனக்கு. அவ எதையாவது பண்ணணும்னு நான் முயற்சிகள் எடுத்தேன் - தபால் மூலமா நிறைய படிக்க முடியும்னு தெரிஞ்சுக்கிட்டேன். ஆடை வடிவமைப்பு, தையல் - இல்லேனா சுருக்கெழுத்து தட்டச்சுக் கூட அவ பயிலலாம்.''

நெருப்பின் தகதகப்பு இன்னமும் ஜோன்னாவின் கண்களில் இருந்தது. நாங்கள் மறுபடியும் ப்ரிட்ஜ் டேபிளில் அமர்ந்தபோது அவள் சொன்னாள்: "அவ பார்ட்டி போன்ற சந்திப்புகளுக்கு போவானு நினைக்கிறேன். அவளுக்கு ஏன் டேன்ஸ் கற்றுக் கொடுக்கக் கூடாது?"

"டேன்ஸ்?" ஆச்சரியமாகிப் போனார் மிஸஸ் ஸிம்மிங்டன். "அதெல்லாம் இங்கு நடப்பது கிடையாது."

"ஐ ஸீ. அப்ப டென்னிஸ்?"

"எங்க டென்னிஸ் கோர்ட்டுல விளையாடி வருஷங்கள் ஆகுது. நானும் விளையாடுவது கிடையாது, ரிச்சர்ட்டும் விளையாடுவது கிடையாது. பசங்க வளர்ந்தால் பார்க்கணும். ஆனா இந்த மேகன் இப்படி சுற்றுவதிலேயே சந்தோஷமா கிடறா. ஆங், இப்ப நான் எந்த சீட்டைப் போட?"

வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது ஆக்ஸிலேட்டரில் ஆவேசமாய் காலமுக்கி காரை வேகமாய் செலுத்திக் கொண்டிருந்த ஜோன்னா சொன்னாள்: "அந்த பொண்ணுக்காக ரொம்ப வருந்தறேன்."

"மேகன்?"

"யெஸ். அவ அம்மாவுக்கு அவளைப் பிடிக்கல."

"ஓ, ஜோன்னா, கம் ஆன். அந்த அளவுக்கு இல்லை, நிலைமை."

"அந்த அளவுக்குத்தான் போயிருக்கு. பல அம்மாக்களுக்கு தங்கள் குழந்தைகளைப் பிடிப்பதில்லை. எனக்கென்னவோ, அந்த வீட்டுல ஒட்டாத ஒரு ஜீவனா மேகன் இருப்பதா தோணுது. அவ அங்கிருக்கும் செட்-அப்புக்குத் தொந்தரவா இருக்கா - 'ஸிம்மிங்டன் செட்-அப்.' அவளை

சேர்த்துக் கொள்ளாத ஒரு குழு அது அப்படிப்பட்ட ஒதுக்கல்கள்தான் ரொம்பவும் உணர்ச்சிவயப்படக்கூடிய ஜீவன்களால தாளவே முடியாது - அவ, உணர்ச்சிவயப்படக் கூடியவ.''

''யெஸ்'' என்றேன் நான். ''அவ அப்படிப்பட்டவதான்னு நினைக்கிறேன்.''

நான் சற்று அமைதியாயிருந்தேன்.

ஜோன்னா திடீரென்று குறும்பாய் சிரித்தாள். ''என்ன, குழந்தைங்களைக் கவனிச்சிப்பவ, பாவம், வெளியே போயிட்டாளோ...?!''

''நீ என்ன பேசறேனு எனக்கு விளங்கல'' என்றேன் நான்.

''நான்சென்ஸ். வழிஞ்சியே முகம்முழுக்க. துளிவிடாமல் அதை நான் கவனிச்சுக்கிட்டுத்தான் இருந்தேன். ஆனா நீ சொல்வதும் சரிதான் - ஒரு தடவை பார்க்கலாம், அவ்ளோ தான்!''

''நீ எதைப்பற்றிப் பேசறேன்னே எனக்கு தெரியல.''

''தெரியாது! ஆனாலும் எனக்கு நீ புத்துணர்ச்சி அடைவதைப் பார்க்க சந்தோஷமாயிருக்கு. நர்ஸிங் ஹோம்ல நீ இருந்தப்போ நான் ரொம்பவும் சங்கடமா இருந்தேன். உன்னைக் கவனிச்சுக்கிட்ட அந்த குறிப்பிடும்படியான அழகு ததும்பிய நர்ஸைக்கூட நீ தலை நிமிர்ந்து பார்க்கல. ஒரு நோயாளிக்கு இறைவனா பார்த்து அனுப்பின ஒரு வரம், அப்பேரழகி!''

''உன் பேச்சு, ஜோன்னா, அளவுக்கு மீறி அசிங்கமா போகுது.''

என் குறிப்புக்கு துளியும் கவனம் தராமல் என் சகோதரி தொடர்ந்து கொண்டிருந்தாள்:

''ஆகவே, நீ அழகான ஒரு கட்டையைப் பார்த்தால் கிறங்குவே என்பது இப்ப தெரிஞ்சதும் எனக்கு நிம்மதியா யிருக்கு. அவ நல்லாத்தானிருக்கா. இப்படி ஒரு துணையே இல்லாம அவ தனியே விடப்பட்டிருப்பது வேடிக்கையா யிருக்கு. விளங்கல, இது, ஜெர்ரி. சில பெண்களுக்கு மட்டும் இருக்கும், ஆனால் மற்ற பெண்களுக்கு இல்லாத 'அது' என்ன? ஒருசில பெண்கள், வானிலை மோசமாயிருக்குனு ஒரு ஒப்பேறாத காமெண்ட் தந்தால்கூட அதை தலைமேல் கொண்டு அவளருகிலிருக்கும் நாலு ஆம்பிளைகள் அவகிட்டே வந்து வானிலை பற்றி பேசும்படி பண்ண - அந்த சில பெண்களிடம் என்ன இருக்கு? எனக்கென்னவோ படைக்கும் கடவுள் அவ்வப்போது இப்படி சிலரை படைத்து விடுகிறான்னு தோணுது. ஒரு படைப்பு பிரமாதமா... மற்றொரு படைப்பை கண்கொண்டு பார்க்க முடியாமல்! 'அந்தப் பொண்ணுகிட்டே அப்படி என்னத்தைத்தான் இந்த ஆம்பிளைங்க கண்டாங்களோ'னு, பாவம், அந்த மற்ற பெண்ணுங்க பைத்தியம்போல பிதற்றிக்கிட்டே போயிடு வாங்க.''

''நீ எல்லாத்தையும் முடிச்சுட்டியா, ஜோன்னா?''

''முடிச்சாச்சோ முடிக்கலியோ, அத விடு! நீ ஒத்துக்கற, இல்ல?''

''இல்ல!''

''இவளை விட்டால் உனக்கு இங்கே வேற யார் இருக்காங்கனு எனக்குத் தெரியல. நீ அந்த ஐமீ க்ரிஃபித் மேலத்தான் போய் விழணும்.''

*“கடவுளே!”*

*“அவ அழகா இருக்கா, தெரியுமா?” என்றாள் ஜோன்னா. “அவ வாழ்க்கையை கொண்டாடறா. மனசார.”*

*“என்னை விடு. நீ இவ்விஷயத்துல என்ன பண்ணுவதாய் உத்தேசம்?”*

*“நானா?”*

*“பின்னே, வேற யாரைச் சொன்னேன் இப்ப? உனக்கு இங்கே ஒரு சின்ன இளைப்பாறுதல் தேவைப்படுதுனு நினைக்கிறேன்.”*

*“நீ பாலை மறந்துட்டுப் பேசறே.”*

*ஜோன்னா பெருமூச்செறிந்தாள், ஆனால் அது ஏற்றுக் கொள்ளும்படி அமையவில்லை.*

*“உன்னைவிட சீக்கிரமா நான் இன்னும் அவனை மறக்கல. இன்னும் பத்து நாள் போகட்டும், நீ சொல்வே: ‘பாலா? அவன் எவன்? எனக்கு பால்னு யாரையும் தெரியாது.’ ரைட்?”*

*“நான் ஆம்பிளைங்க பின்னாடியே சுற்றுபவள்னு நீ நினைக்கிறே...”*

*“ஆங், உனக்கு ஜீனியஸ்ங்கத்தானே வேணும்? பாலைப் போல! ஐயோ பாவம், இங்கே ஜீனியயே இருக்க மாட்டாங்களே!”*

*இதை சற்று நேரம் சிந்தித்தாள் ஜோன்னா. “ப்ச், ஆமாம்” என்றாள் வருத்தமாய்.*

*“அப்ப நீ ஓவன் க்ரிஃபித்தைத்தான் நம்பியிருந்தாகணும்” நான் சொன்னேன். “இங்கே அவர் ஒருத்தன்தான்*

யாருடனும் தொடர்பில் இல்லாத ஒரே ஆள். ஆங், கலோனல் ஆப்பிள்டன்னை கன்ஸிடர் பண்றியா நீ? முத்தியதினம் முழுக்க அவர் உன்னைக் கழுகா பார்த்துக்கிட்டேயிருந்தார்.''

ஜோன்னா சிரித்து விட்டாள். ''அப்படித்தான் அவர் பார்த்தார், இல்ல? ரொம்ப லஜ்ஜையாப் போச்சுப்பா.''

''நடிக்காதே. நீ ஒண்ணும் லஜ்ஜையா உணரல. அதை என்ஜாய் பண்ணிக்கிட்டிருந்தே.''

ஜோன்னா, கார் கேரேஜ் நுழைந்து போகும்வரை அமைதியாய் ஓட்டினாள். பிறகு அவள் சொன்னாள்: ''உன் கருத்துலயும் ஏதாவது அர்த்தமிருக்கலாம்...''

''என்ன அர்த்தம்?''

''என்னைத் தவிர்க்க ஒருத்தன் எதுக்காக சட்டுனு ரோட்டுக்கு குறுக்கா க்ராஸ் பண்ணிப் போகணும்னு எனக்கு விளங்கல. அது கொழுப்பு வேற ஒண்ணும் கிடையாது.''

''ஐ ஸீ'' என்றேன் நான். ''நீ அந்த ஆளை வீழ்த்தப் போறே, ஆங்?''

''வெல். நான் தவிர்க்கப்படுவது எனக்கு பிடிப்பதில்லை.''

நான் மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும் காரிலிருந்து வெளியே வந்து ஊன்றுக்கோல்களால் சமாளித்து நின்றேன். பிறகு என் சகோதரிக்கு நான் ஒரு சிறு அறிவுரை சொன்னேன்:

''உனக்கு இதை சொல்லிக்கறேன், மை கேர்ள். ஓவன் க்ரிஃபித், உனக்குத் தேவைப்படும் 'கலைநயம்மிக்க அறிவுள்ள இளைஞன்' எனும் வகை கிடையாது. நீ ஜாக்கிரதையா நடந்துக்கலேனா, ஓர் உண்மையான கூட்டை தேவை

யில்லாமல் கலைச்சதா ஆகிடும். அந்த ஆள் ஆபத்தா நடந்துக்கக் கூடியவன்.''

''ஊஊஊ, நீ அப்படியா நினைக்கிறே?'' என்னை எதிர்ப்பதில் அணுஅணுவாய் சந்தோஷம் அடைந்தவளாய், அதிகாரமாய் கேட்டாள் ஜோன்னா.

''அந்த ஆளை தனியா விட்டுடு'' என்றேன் நான் தீர்மானமாய்.

''நான் வருவதைப் பார்த்துட்டு சாலையைக் கடந்து அந்தப் பக்கம் போக அவருக்கு எத்தனை கொழுப்பிருக்கணும்?''

''பெண்கள் நீங்க அத்தனை பேரும் ஒரேமாதிரிதாம்ப்பா இருக்கீங்க. ஒரே விஷயத்தைப் பிடிச்சுக்கிட்டே விடாம குரைக்கிறீங்க. லொள் லொள்னு. கூட, சிஸ்டர் ஐமீ க்ரிஃபித்தும் உன்னை உண்டு இல்லைனு ஆக்கிடுவா, நினைவிருக்கட்டும்.''

''அவ ஏற்கெனவே என்னை வெறுக்கிறா'' என்றாள் ஜோன்னா. அவள் ஏதோ நினைப்பில் இதை சொன்னாள், ஆனால் கொஞ்சம் திருப்தியுடன்.

''நாம இங்கே வந்திருப்பது'' என்ற நான் அழுத்தந்திருத்த மாய் சொன்னேன்: ''அமைதியான ஒரு சூழ்நிலைக்கும் சாந்தமான ஒரு மனோநிலைக்கும்...''

ஆனால் எங்கள் கைகளில் கிடைக்கப் போகிற கடைசி வஸ்துவாய்த்தான் அமைதியும் சாந்தமும் அமையப் போகின்றன.

# அத்தியாயம் - 4

## I

ஒருவாரம் கழித்து இந்தச் சம்பவம் நடந்ததாக ஞாபகம். நான் அனுமதித்தால் மிஸஸ் பேக்கர் வந்து என்னை சந்தித்து ஓரிரு நிமிடங்கள் பேச விரும்புவதாய் என்னிடம் பேட்ரிட்ஜ் சொன்னாள்.

மிஸஸ் பேக்கர் எனும் பெயர் எனக்கு எதையுமே சுட்டிக்காட்டவில்லை. எனவே, சற்றே கலவரமாய் ''யாரது மிஸஸ் பேக்கர்?'' என்றேன். ''அவங்க ஜோன்னாவைப் பார்க்க மாட்டாங்களா?''

ஆனால் என்னை சந்தித்துத்தான் அவள் பேச விரும்பு வதாய் உணர்த்தப்பட்டது. அந்த வேலைக்காரப்பெண் பீட்ரிஸ் இருக்கிறாள் அல்லவா... அவளுடைய அம்மாதான் இவள் என்பதும் எனக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

நான் பீட்ரிஸை முழுக்கவும் மறந்துவிட்டேன். கடந்த பதினைந்து நாட்களாக, தலைநரைக்க ஆரம்பித்திருந்த ஒரு நடுத்தர வயது பெண்மணியைத்தான் தினசரி எங்களுக்கு

உதவவரும் பெண்ணாய் நான் பார்த்துக் கொண்டிருக் கிறேன். பாத்ரூமுக்கும், படிக்கட்டுகளுக்கும், அறைகளுக்கும் மாற்றிமாற்றி நண்டு போல ஊர்ந்தபடியிருக்கும் அப்பெண் மணியால், பீட்ரிஸ் என் நினைவிலிருந்து போயே விட்டாள்.

ஜோன்னா அப்போது வீட்டில் இல்லை எனவே, பீட்ரிஸின் அம்மாவைப் பார்க்க முடியாது என்று என்னால் சொல்ல முடியாமல் ஆயிற்று. கதை இப்படி முன்னேறு வதால் நான் படபடப்பானேன் என்று சொல்லியாக வேண்டும். பீட்ரிஸை நான் பயமுறுத்தியுள்ளேன் என்று என்மேல் குற்றச்சாட்டுக்கள் வந்து விழாது என்று ஆத்மார்த்த மாய் நம்பினேன். மொட்டைக் கடுதாசியால் என்னை இப்படி நரம்பதிர ஆக்கியிருக்கும் அந்தச் சண்டாளனை நான் சபித்தபடி, வந்திருக்கும் அந்த அம்மாளை என்னிடம் அழைத்து வரும்படி ஆணையிட்டேன்.

மிஸஸ், வாழ்க்கையில் நன்கு அடிபட்ட ஒரு குண்டுப் பெண்மணி. அவளுடைய உரையாடலுக்கு முற்றுப்புள்ளிகள் இருப்பதில்லை. குற்றம் சொல்வதோ அல்லது கோபமோ அவளிடம் காணப்படாததால் நார்மலானேன்.

பேட்ரிட்ஜ் வெளியேறி கதவு சாத்தப்பட்ட கையோடு ''உங்களைப் பார்க்க வந்து உங்க பொன்னான நேரத்தை வீணடிப்பதற்கு நீங்க மன்னிப்பீங்கன்னு நினைக்கிறேன் ஸார்'' என்று ஆரம்பித்து விட்டாள் அவள். ''நீங்கதான் நான் வந்து சந்திக்க வேண்டிய ஆள்னு நான் நினைச்சு, ஸார், இந்த சூழ்நிலைல நான் என்ன செய்வது நல்லதுனு நீங்க ஒருத்தர் தான் சொல்ல முடியும் எனும் தீர்மானத்துடன், ஸார், ஏன்னா இப்ப ஏற்பட்டிருக்கும் பயங்கரமான சூழ்நிலைக்கு ஏதாவது பண்ணியே ஆகணும் ஸார்... மேலும் சோம்பேறித் தனமா

காலத்தை விட்டுட்டு நிக்கும் டைப் நான் கிடையாது, அதனால ஸார், ஒன்னு ஒப்பாரி வெப்பதற்கு பதிலா வழி கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்னு ஸார்...''

என் கலவரம் கூடியது. பயந்து போனேன். முடிவற்ற வாக்கியங்களால் இவர் அடுக்கும் ஒவ்வொரு சேதியும் முக்கியமானவை. அவற்றை நான் புரிந்து கொண்டு அர்த்தப் படுத்திக் கொள்ளக்கூட அவகாசம் தராமல் உரையாடல் ரயில் வேகத்தில் பறந்ததால், எதையாவது நான் விட்டுவிடக் கூடாதே என்று கண்களும் வாயும் அகலத் திறந்து நான் பயந்து போனேன்.

''நிச்சயமா'' என்றேன் நான். ''நீ-நீங்க உ-உ-உட்கார லாமே, மிஸஸ் பேக்கர்? உங்களுக்கு உதவுவதில் எனக்கு ம-ம-மகிழ்ச்சியே. எ-எ-என்ன மாதிரி உ-உதவணும்னு---''

நான் பதிலை எதிர்பார்த்து நிறுத்திக் கொண்டேன்.

''தேங்க் யூ ஸார்'' என்று சேரின் நுனியில் உட்கார்ந்துக் கொண்டாள் மிஸஸ் பேக்கர். ''நீங்க ரொம்ப நல்லவர். ஆமாம். பேட்ரிட்ஜ்கிட்டேயே நான் சொன்னேன்: இவரண்டை போவதுதான் நல்லதுனு நானே சொன்னேன், 'அவர் ஒரு லண்டன் ஜென்டில்மேன்... அவருக்குத் தெரியும் என்ன செய்வதுனு' அப்படினு நான் சொன்னேன். தலை தெறிக்கக் கத்தும் இந்த இளைஞர்களுக்கு என்னவாவது செய்யணும். இந்தப் பொண்ணு சொல்லும் ஒரு வார்த்தைக்கு செவி சாய்க்காமல், கண்டதே கோலம்னு லபோலபோனு அவன் கத்திக்கிட்டு... பேட்ரிட்ஜ்கிட்டே சொன்னேன்: அந்தப் பயலை என்கிட்டே விடு, கன்னத்தைத் திருப்பிடறேன்னு...''

என் கலவரமும் பயமும் உச்சமாயின. ‘‘ஐஆம் ஸாரி’’ என்றேன் இறுதியாய். ‘‘எனக்கு ஒண்ணும் விளங்கல. என்ன நடந்தது?’’

‘‘கடுதாசிகள் சார். வஞ்சனை பொதிந்த கடிதங்கள். கண்டகண்ட வார்த்தைகளையெல்லாம் போட்டு அநாகரீகம் வேற! இப்படி கேவலமான வார்த்தைகளை நான் வேற எங்கேயும் படிச்சது கிடையாதுடா, சாமீ.’’

நான் வேறுவழியில்லாமல் கேட்டேன்: ‘‘உங்க பொண்ணுக்கு நிறைய கடுதாசிகள் வந்திருக்கா, என்ன?’’

‘‘அவளுக்கு இல்ல, ஸார். அவளுக்கு ஒண்ணுதான் வந்தது. அதனாலத்தான் அவ இங்கே வேலையை விட்டுட்டு நின்னா.’’

‘‘அப்படிச் செஞ்சிருக்கவே கூடாது---’’ என்று நான் தொடங்க, மிஸஸ் பேக்கர் அதனை உறுதியாகவும் மரியாதை குலையாமலும் நறுக்கினாள்: ‘‘அப்படி நீங்க வேதனைப்படவே வேண்டாம், ஸார். அந்த கடங்காரப்பய கடுதாசிகள்ல இருப்பவை அனைத்தும் பொய். உங்களைப் பற்றி எனக்கு பேட்ரிட்ஜின் சிபாரிசு இருக்கு - தவிர ஆளைப் பார்த்தாலே தெரியாதா என்ன? நீங்க தரம் குறைஞ்ச ஆசாமி கிடையாது ஸார், அது எனக்குத் தெரியும்... அதுவும் இப்படி கால் உடைஞ்சு, கைல கோலோட  நோ! அத்தனையும் கொஞ்சமும் உண்மையே அல்லாத முழுபொய்கள். அப்படியேயிருந்தாலும், உங்ககிட்டேயிருந்து வேலையை விட்டுட்டு வந்திடும்படி நாந்தான் அவகிட்டே சொன்னேன், ஏன்னா, உங்களுக்குத்தான் இந்த நாற்றம் பிடிச்ச சமூகத்தைப் பற்றி தெரியுமே, ஸார்... அதாவது நெருப்பில்லாம புகையாதுனு வாய்கூசாம வம்படிக்க ஆரம்பிச்சுடுவாங்க

என்பது ஒருபுறமிருக்க, பெண் என்பவள் ரெட்டிப்பு முன்ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டியதும் இருக்கே, ஸார்...''

இங்கு வாக்கியத்தை எப்படித் தொடர்வது என்று தெரியாமல் நீண்ட பெருமூச்சு விட்ட மிஸஸ் பேக்கர் உடனேயே ஆரம்பித்து விட்டாள்:

''இதோட எல்லாம் முடிஞ்சாச்சுனு நான் நினைச்சாலும் இப்ப ஜார்ஜ், பீட்ரிஸ் இழுத்துக்கிட்டு சுற்றும் அந்த கேரேஜ் பய, அவனுக்கு ஒரு கடுதாசி வந்திருக்குனு தூக்கிட்டு வந்து இவளண்டை ஒனு கத்தி, அதுல இவளைப் பற்றி தப்புத்தப்பா இருக்குனு குதிகுதினு குதிச்சு, ஃப்ரெட் டாம்கூட இவளுக்கு தொடர்பு இருக்குனு போட்டிருப்பதா கதறி, அப்பப்பா... ஆனா ஒண்ணு நான் சொல்லிக்கிறேன் ஸார்... அந்த பையன் கூட சும்மா பொழுது போக இவ பேசுவா அவ்ளோதான்... அதை இவன் இப்ப சுட்டிக்காட்டி...''

இந்த புது ஃப்ரெட் டாம் சிக்கலால் இப்போது என் தலை 360 டிகிரிக்கும் சுற்றியது. ''நான் கொஞ்சம் விளங்கிக் கறேனே'' என்றேன் நான். ''மிஸ் பீட்ரிஸூக்கு ஒரு கடுதாசி மொட்டை கடுதாசி வந்திருக்கு. அதுல அவளுக்கும் இன்னொரு பையனுக்கும் தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கு.''

''அதான் ஸார். ஆனா இதே சேதி நாகரீகமா எழுதப்படல தாள முடியாத வார்த்தைகளைப் போட்டு, அது யங் ஜார்ஜை வெறி கொண்டு பைத்தியக்காரனாக்கி, அந்தக் கடுதாசி சேதியை அப்படியே விடப்போவதில்லைனு வந்து கத்தறான் அவன்... அவனுக்குத் தெரியாமல் வேற ஒருத்தன் கூட பீட்ரிஸ் போவதை அவனால ஒத்துக்க முடியாதாம். இவ

அதெல்லாம் முழு பொய்னு அழ, அவன் நெருப்பில்லாம புகையாதுனு ஸ்தாபிக்க, அப்புறம் கடுங்கோபத்துடன் வெளியேற, ஒண்ணும் தெரியாத எம்பொண்ணு படுக்கைல குப்புற விழுந்து அழ... இதோ நான் என் தொப்பியைப் போட்டுக்கிட்டு உங்களண்டை வந்திருக்கேன்.''

மிஸஸ் பேக்கர் நிறுத்திக் கொண்டு என்னை எதிர்பார்ப்புடன் பார்த்தாள்.

''இதுக்கு எதுக்கு என்கிட்டே வரணும்?'' - அதட்டலாய் கேட்டேன் நான்.

''உங்களுக்கும் அந்தக் கண்றாவிக் கடுதாசி வந்திருக்குனு நான் கேள்விப்பட்டேன் ஸார்... நீங்க லண்டன் ஜென்டில்மேனாய் இருப்பதால் இதையெல்லாம் உங்களுக்கு எப்படி கையாளுவதுன்னு தெரியும்னு வந்திருக்கேன்.''

''நான் உங்க நிலைமையில இருந்தால்'' என்ற நான், ''போலீஸுக்கு போயிருப்பேன்'' என்றேன். ''இப்படிப் பட்ட சங்கடங்கள் நிறுத்தப்படணும்.''

ஆழமாய் அதிர்ந்தவராய் தோன்றினார் மிஸஸ் பேக்கர்: ''ஓ, நோ ஸார். என்னால போலீஸுக்குப் போக முடியாது.''

''ஏன் கூடாது?''

''நான் ஒருமுறைகூட போலீஸிடம் போனது கிடையாது ஸார். எங்கள்ல யாருமே போனது கிடையாது.''

''இருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட சமாச்சாரங்களை கையாள வல்லவர்கள் போலீஸ்கள் மட்டுந்தான். இது அவங்க பிஸினஸ்.''

''பெர்ட் ரண்டில்கிட்டே போகவா?''

பெர்ட் ரண்டில் கான்ஸ்டபிள் என்பது எனக்குத் தெரியும்.

''போலீஸ் ஸ்டேஷன்ல சார்ஜெண்ட் இருப்பார். இன்ஸ்பெக்டர் இருப்பார்.''

''நான், போலீஸ் ஸ்டேஷனுக்கா?''

நடக்கக் கூடாததை சொல்வதைப் போல குறிப்பிட்டது அவருடைய குரல். நான் எரிச்சலாக ஆரம்பித்தேன்.

''இது ஒரேயொரு ஆலோசனையைதான் இப்போதைக்கு என்னால உங்களுக்குத் தர முடியும்.''

மிஸஸ் பேக்கர் அமைதியானார். அவர் சமாதானமாக வில்லை. அவர் நேர்மையாய் சொன்னார்: ''இக்கடுதாசிகள் நிறுத்தப்படணும், ஸார், இவை உடனடியா நிறுத்தப் படணும். இல்லேனா இப்பவோ அப்புறமோ விபரீதம் நடந்துடும்.''

''இப்பவே விபரீதம் நடந்திருப்பதாத்தான் எனக்கு தோணுது.''

''அதாவது, நான் பயங்கரமா ஏதாவது நடந்துடும்னு சொல்ல வரேன். இந்த சின்னப் பசங்களுக்கு வெறி ஏறிடுச் சுன்னா என்ன பண்றோம்னு தெரியாம எதையாவது பண்ணிடுங்க. இதுக்கு பெரியவங்களும் விதிவிலக்கு கிடையாது.''

நான் கேட்டேன்: ''இப்படிப்பட்ட மொட்டை கடுதாசிகள் நிறைய சுத்திக்கிட்டிருக்கா?''

மிஸஸ் பேக்கர் ஒப்புதலாய் தலையசைத்தார்.

''இது மேலும் மேலும் மோசமாகிக்கிட்டிருக்கு. ப்ளுசி போரிலிருக்கும் மிஸ்டர் அண்ட் மிஸஸ் பீடில் எப்பவும்

சந்தோஷமாகவே இருக்கும் ஜோடியிது இப்ப இப்படிப்பட்ட ஒரு கடுதாசி அவங்களுக்கு வருது - இதனால சிந்திச்சுக்கிட்டே இருக்காங்க அவங்க ஆனா அவங்க சிந்திக்க ஆரம்பிச்சிருப்பதைப் போன்ற எதுவுமே இதில் கிடையாது, ஸார்.''

''மிஸஸ் பேக்கர்...'' என்ற நான் முன்னுக்கு வளைந்து வந்தேன். ''இந்த பாவகரமான கடிதங்களை யார் எழுது வதுன்னு, உங்களுக்கு ஏதாவது ஐடியா - ஒரு சின்ன ஐடியா இருக்கா?''

என்னை ஆச்சரியத்தில் தூக்கிப் போடும் விதமாய் அவள் ஆமோதித்து தலையசைத்தாள்.

''எங்களுக்குனு ஐடியா இருக்கு, ஸார். யெஸ். எங்க எல்லாருக்குமே ஓர் ஊகமிருக்கு.''

''யாரது?''

ஒரு பெயரைக் குறிப்பிடுவதில் அவள் எதிர்ப்பு காட்டு வாள் என்று நான் நினைத்தேன், ஆனால் அவளோ சிரத்தை யோடு பதிலளித்தாள்: ''இந்த மிஸஸ் க்ளீட் இருக்கால்லே, அவ! அவளைத்தான் நாங்க அத்தனை பேரும் சந்தேகிக் கறோம், ஸார். இந்த மிஸஸ் க்ளீட்தான் - நிச்சயமா.''

காலையிலிருந்து வகைவகையாய் பெயர்களை நான் கேள்விப்பட்டுக் கொண்டிருப்பதால், கூடுதலாய் இப் பெயரைக் கேட்டதும் நான் விக்கித்துப் போனேன். நான் கேட்டேன்: ''யாரிந்த மிஸஸ் க்ளீட்?''

ஒரு முதிய தோட்டக்காரனின் மனைவி இவள் என்று கண்டுபிடித்தேன். மில் வரை போகும் சாலையில் ஒரு காட்டேஜில் வசிக்கிறாள் மிஸஸ் க்ளீட். இது சம்பந்தமாய்

நான் கேட்ட மற்ற கேள்விகள், அதிருப்தியான பதில் களையே பெற்றுத் தந்தன. இப்படிப்பட்ட கடிதங்களை யெல்லாம் அவள் எதற்காக எழுத வேண்டும் என்று நான் கேட்டதற்கு, ''அப்படிப்பட்டவதான் அவா!'' என்றதொரு நிச்சயமற்ற பதிலைத்தான் மிஸஸ் பேக்கரால் தரமுடிந்தது.

கடைசியாய், நிச்சயம் அவள் நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்று தெரிந்திருந்தும், நான் கொடுத்திருந்த 'போலீஸுக்குப் போங்க' என்ற ஆலோசனையை மறுபடியும் ஒருமுறை தந்து, அவளை அனுப்பி வைத்தேன். ஏதோ ஓர் எதிர்பார்ப்புடன் வந்தவளை, நான் திருப்திப்படுத்தாமல் ஏமாற்றி அனுப்பி விட்டேன் என்ற தவிப்புடன் தனித்து விடப்பட்டேன்.

அவள் சொன்னவற்றை நான் அசைபோட்டேன். மிஸஸ் பேக்கர் என்னிடம் நிச்சயமற்று ஆலோசித்திருந்தாலும்கூட, மிஸஸ் க்ளீட்தான் குற்றவாளி என்று முழு கிராமமுமே அங்கீகரிக்கும்பட்சத்தில், ஒருவேளை அது உண்மையாக இருக்கலாம். இந்த முழு விஷயம் பற்றியும் க்ரிஃபித்தைப் பார்த்து பேசவேண்டும் என்று நான் முடிவானேன். அவருக்கு மிஸஸ் க்ளீட்டைத் தெரிந்திருக்கலாம். அவர் ஒருவேளை முடிவு செய்தால், நானோ அல்லது அவரோ நேராய் போலீஸிடம் போய், வளர்ந்து வரும் இந்தக் குழப்பத்தின் அடியிலிருக்கும் காரணகர்த்தா மிஸஸ் க்ளீட்தான் என்று ஆலோசிக்கலாம்.

க்ரிஃபித் எந்த நேரத்தில் தனது பணியை முடிப்பார் என்று நான் ஊகித்திருந்தேனோ, அந்தநேரத்தில் சரியாய் அவர் அலுவலகத்துக்குப் போனேன். கடைசி நோயாளி போன பிறகு உள்ளே நான் போனேன்.

''ஹலோ, பார்ட்டன் நீங்களா?''

மிஸஸ் பேக்கருடன் நடந்த சம்பாஷணையை நான் கோடிட்டுக்காட்டினேன். மிஸஸ் க்ளீட்தான் இதற்கான முழு பொறுப்பும் என்கிற குற்றச்சாட்டினை முன்வைத்தேன். என் ஊகத்தை நிராகரிக்கும் விதமாய் அவர் மறுத்து தலையசைத் தார்.

''நீங்க நினைப்பதை போல, இது ஒண்ணும் அத்தனை சுலபமானது கிடையாது'' - அவர் சொன்னார்.

''இந்த க்ளீட் பொம்பிளை மொட்டைக் கடுதாசி விஷயத்தின் அடிநாதமா இருப்பதா நீங்க நினைக்கல?''

''இருக்கலாம். ஆனா இது மோஸ்ட் அன்லைக்லீனுதான் எனக்கு நினைக்கத் தோணுது - வாய்ப்பில்ல.''

''பிறகு ஏன் மற்ற எல்லாரும் அவதான்னு நினைக்கிறாங்க.''

அவர் சிரித்தார். ''ஓ, அதுவா'' என்றார். ''உங்களுக்கு விளங்கல. மிஸஸ் க்ளீட் - ஒரு லோக்கல் மந்திரவாதி.''

''அடக்கடவுளே!'' நான் ஆச்சரியமானேன்.

''ஆமாம். இந்தக் காலத்துல இதெல்லாம் அந்நியமான விஷயங்களா தெரியும். ஆனா உண்மை அதுதான். 'ஒரு சிலர், ஒரு சில குடும்பங்கள், இன்னும் நமக்கிடையில இருக்கு அவங்களை எக்காரணம் கொண்டும் நாம தொந்தரவு பண்ணிடக்கூடாது' எனும் ஓர் எண்ணம் - பயம் - இன்னும் நம்மிடையே இருக்கத்தான் செய்யுது. மிஸஸ் க்ளீட் 'புத்திசாலிப் பெண்கள்' நிறைந்த ஒரு குடும்பத்திலிருந்து வந்தவங்க. அந்த பந்தாவை வளர்த்துக் காக்க அவங்க நிறைய

கஷ்டப்பட்டிருக்காங்கனு நான் நினைக்கிறேன். அவங்க விளங்கிக்க முடியாதவங்க. கசப்பான நகைச்சுவை உணர்வு கொண்டவங்க. ஒரு குழந்தையின் கைல காயம் ஏற்பட்டுட்டாலோ, அல்லது கீழே நல்லா விழுந்து அடிபட்டுக்கிட்டாலோ, அல்லது திடீர்னு சுகவீனம் ஆகிட்டாலோ, 'என்னுடைய ஆப்பிள்களை அது போன வாரம் திருடினதால' அப்படினோ, அல்லது 'என் பூனையின் வாலைப் பிடிச்சு திருகினா இல்ல, அதனால' என்றோ ஒரு காரணத்தை தருவது, அவங்களுக்கு மிக சுலபம். இங்கே அதை நம்புவாங்க. கூடிய சீக்கிரத்துலேயே வீட்டுப் பொம் பிளைங்க அவங்க வீடுகள்ல பண்ணும் பதார்த்தங்களை யெல்லாம் அந்தம்மாவுக்கு கொண்டு போய் கொடுக்க ஆரம்பிச்சாங்க. எப்படியாவது அவங்களை திருப்தி பண்ணி அவங்களோட 'சாபத்தை' வாங்காம இருக்கணும்னு ஆகிட்டாங்க. இதெல்லாம் மூடநம்பிக்கைகள், முட்டாள் தன கொள்கைகள்... ஆனா நடக்குது. அதனால, நேச்சுரலி, அவங்கதான் காரணம்னு சொல்றாங்க.''

''அப்ப அவங்க இல்லையா?''

''ஓ, நோ. அவங்க கிடையாது இதை பண்ண. நீங்க நினைப்பதைப்போல அத்தனை சுலபமானது கிடையாது இந்த மொட்டைக் கடுதாசி சமாச்சாரம்.''

''உங்களுக்கு யாரா இருக்கும்னு ஊகமிருக்கா?'' நான் பரபரப்பாய் அவரையே பார்த்தேன்.

''நோ'' என்றார் அவர். ''எனக்குத் தெரியவே தெரியாது. ஆனா இப்படியே நடந்துக்கிட்டிருப்பது எனக்குப் பிடிக்கல, பர்ட்டன் - இதனால ஏதாவது அசம்பாவிதம் சம்பவிக்கத் தான் போகுது.''

# II

நான் வீட்டுக்குத் திரும்பியபோது, மடக்கி உட்கார்ந்து கால் முட்டிகளில் முகவாயைப் பதித்த நிலையில், வராண்டாவில் மேகனைப் பார்த்தேன்.

அவளுக்கே உரிய வழக்கமான தொனியில் எனக்கு வணக்கம் சொன்னாள். "நானும் லஞ்க்கு வரலாமா?"

"சர்ட்டன்லி" என்றேன் நான்.

மூன்று பேர் இன்றைக்கு லஞ்சுக்கு உள்ளோம் என்று நான் பேட்ரிட்ஜிடம் போய் அறிவித்தேன். அவள் உச்சுக் கொட்டினாள். ஒரு வார்த்தைகூட பயன்படுத்தாமல் இவளுக்கு மேகன்மீது அப்படியொன்றும் அபிப்ராயம் கிடையாது என்பதை இவ்வாறு சொன்னாள் பேட்ரிட்ஜ்.

நான் மீண்டும் வராண்டாவுக்குத் திரும்பினேன். நான் ஒரு சிகரெட்டை உருவி எடுத்துக்கொண்டு அவளுக்காக ஒன்றை எடுத்து நீட்டினேன்.

"எத்தனை அன்பு உங்களுக்கு" என்றாள் அவள்.

"உனக்கு ஒண்ணு வேண்டாமா?"

"நோ. எனக்கு வேணும்போல தோணல. ஆனா எனக்கு ஒண்ணுனு நீங்க நீட்டியது ரொம்ப நல்லாயிருந்தது. ஏதோ நானும் ஒரு நிஜ மனுஷி அப்படினு நினைச்சு."

"நீ ஒரு மனுஷி கிடையாதா என்ன?" என்றேன் நான் சற்றே ஆச்சரியமாய்.

மேகன் மறுத்து தலையசைத்தாள். பிறகு பேச்சை மாற்றி தனது பெரிய கால்களை நான் பரிசோதிப்பதற்காக நீட்டினாள்.

''நான் என்னுடைய பாவாடையை தைச்சுட்டேன்'' என்று பெருமையாய் காட்டினாள். பிறகு ''ஓட்டை யில்லாதது அசௌகரியமாயிருக்கு'' என்றாள்.

நான் ஆமோதித்தேன்.

''உங்க சகோதரி நல்லா தைப்பாங்களா?''

அப்படி அவள் ஏதும் செய்து நான் பார்த்தது கிடையாது ஆகையால் ''தெரியாது'' என்று ஒப்புக் கொண்டேன்.

''வெல்... அவங்க பாவாடைல ஓட்டை விழுந்துட்டா அவங்க என்ன பண்ணுவாங்க.''

''ஐ திங்க்...'' என்ற நான் சற்று மென்று விழுங்கி சொன்னேன்: ''அவற்றை எறிஞ்சுட்டு புதுசு வாங்கிப்பானு நினைக்கிறேன்.''

''புத்திசாலி'' என்றாள் மேகன். ''ஆனா என்னால அப்படி பண்ண முடியாது. இப்ப என் செலவுக்குப் பணம் தராங்க - வருஷத்துக்கு நாற்பது பவுண்ட். அதை வெச்சுக்கிட்டு உங்களால நிறைய பண்ணிட முடியாது.''

நான் ஆமோதித்தேன்.

''கறுப்புப் பாவாடை அணிந்தால்தான் எனக்கு நல்லது, இங்க் பண்ண முடியும்'' என்றாள். விளக்கினாள்: ''என் பாவாடைகள் காலோடு ஒட்டியிருக்கும் வகை. அதனால எங்கே ஓட்டையிருக்கோ அந்த கால் பகுதியில கறுப்பு இங்க தடவிடுவேன். ஓட்டை தெரியாது.'' தொடர்ந்தாள்: ''இப்படித்தான் என் பள்ளிக்கூடத்துல செஞ்சுப்பேன். மிஸ் பேட்ஓர்த்தி, எங்களைக் கவனிச்சுக்கிட்டவ முறைப்பா. பெயருக்கேற்றாற் போன்றவ அவ குருட்டு பேட்... ஔவால்.''

நான் பைப் பிடித்துக் கொண்டிருக்க, இருவரும் அமைதியானோம். பிறகு அவள் சட்டென்று வெறியாய் கேட்டாள்: ''நீங்களும், மற்றவங்களைப் போலவே, நான் ஒரு தாங்க முடியாத படைப்புனு நினைக்கறீங்க, இல்ல?''

சட்டென்று நான் அதிர்ந்துப் போனதில், பிடித்திருந்த பைப் கீழே விழுந்தது. நல்ல பீங்கானில் செய்யப்பட்ட அது உடைந்து விட்டது. நான் கோபமாய் மேகன் பக்கம் திரும்பி ''பார், என்ன பண்ணிட்டே-ன்னு'' என்றேன்.

இதற்கு வருத்தம் கொள்ளாமல், ஜஸ்ட் ஒரு குழந்தை செய்வதைப் போல அகலமாய் சிரித்தாள் அவள். ''உங்களை எனக்கு பிடிக்குது'' என்றாள்.

அது ஒரு கதகதப்பான குறிப்பு. ஒருவருடைய நன்றியுள்ள நாய் பேசத் தெரிந்தால் தன்னுடைய எஜமானனிடம் அவர் கோபித்தாலும் இப்படித்தான் சொல்லும். நிச்சயமாய் இவள் ஒரு மனுஷப்பிறப்பு அல்ல.

உடைந்த பீங்கான் துகள்களை ஜாக்கிரதையாய் எடுத்தபடி, ''என்ன கேட்டே நீ?'' என்றேன் நான்.

''நீங்க என்னை ஒரு பொறுத்துக் கொள்ள முடியாத ஜீவன்னு நினைக்கிறீங்களான்னேன்'' என்றாள் அவள். ஆனால் முன்னர் சொன்ன தொனியில் இப்போது அவள் சொன்னது அமைந்திருக்கவே இல்லை.

''எதுக்காக நான் அப்படி நினைக்கணும்?''

''ஏன்னா, நான் அப்படித்தான்'' என்றாள் மேகன் ஆழ்ந்து.

''முட்டாள்தனமா இருக்காதே'' என்றேன் நான் கறாராய்.

மேகன் மறுத்து தலையசைத்தாள். ''நான் அப்படிக் கிடையாதுதான். முட்டாள் அல்ல. மற்றவங்க நினைக் கிறாங்க நான் முட்டாள்னு. அவங்கள்லாம் எப்படிப்பட்ட வங்கனு எனக்கு உள்ளூர நல்லா தெரியும் என்பதையே அவங்க ஒருத்தரும் புரிஞ்சுக்கிறது இல்ல. ஒவ்வொரு கணமும் நான் அவங்களை வெறுக்கறேன், தெரியுமா?''

''வெறுக்கிறியா?''

''யெஸ்'' என்றாள் மேகன்.

அந்த கண்கள், நேரடியாய் என் கண்களைப் பார்த்துத் துளைத்தன. அது ஒரு நீண்ட சோகமான நோட்டம்.

''என்னை மாதிரியான ஒரு நிலைல நீங்க இருந்தால், நீங்களும் மக்களை வெறுப்பீங்க'' என்றாள் அவள். ''நீங்க தேவைப்படாதவராய் ஒதுக்கப்பட்டால்.''

''நீயே அப்படி நினைச்சுக்கிட்டு உன்னை ஒரு மன நோயாளியா ஆக்கிப்பதா உனக்குத் தோணலியா?'' நான் கேட்டேன்.

''யெஸ். உண்மையைச் சொல்லும்போது எல்லாருமே கேட்கும் கேள்விதான் இது. ஆனா நான் சொல்வது உண்மை. நான் இங்கு தேவைப்படவில்லை. அதற்கான காரணத் தையும் என்னால பார்க்க முடியுது. அம்மாவுக்கு என்னை துளியும் பிடிக்கல. ஏன்? ஏன்னா நான் எங்க அப்பாவை நினைவூட்டறேன், அதனால. நான் கேள்விப்பட்டதிலிருந்து, அவர், அம்மாவை கொடுமைப்படுத்தி பயங்கரமா நடத்தி யிருக்கார்னு தெரியுது. என்ன, வேண்டாத குழந்தைகளைப் பார்த்து 'உன்னை எனக்கு பிடிக்கலேனு' சொல்ல அம்மாக் களால் முடியாது. அப்படி சொல்லிட்டு பிடிக்காத குழந்தை

களை ஒதுக்கிடவோ அல்லது சாப்பிடவோ முடியாது. பூனைகள் தனக்குப் பிடிக்காத குழந்தைகளை சாப்பிட்டுடும். இது புத்திசாலித்தனம்னு நினைக்கிறேன். யாருக்கும் சஞ்சலம் இல்ல, பாருங்க. ஆனா மனித தாய்கள்தான் பிடிக்காத குழந்தையைக் கூட வெச்சுக்க வேண்டியிருக்கு... கவனிக்க வேண்டியிருக்கு. நான் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டு விட்டால் நிலைமை இத்தனை மோசமா போவது கிடையாது. அவங்க, ரெண்டு பசங்க, என்னுடைய வளர்ப்பு அப்பா - இவங்களோட மட்டும் இருந்தால் அது மட்டும் போதும்னு நினைக்கிறாங்க அம்மா.''

நான் மெதுவாய் பேசினேன்:

''நான் இப்பக்கூட நீ மனசஞ்சலத்துல இருக்கேன்னுதான் சொல்வேன், மேகன். அப்படியே நீ சொல்லும் சில விஷயங்கள் உண்மைனே எடுத்துக்கிட்டால், நீ ஏன் வெளியேறி உனக்கான வாழ்க்கையை தனியா அமைச்சுக்கக் கூடாது?''

அவள் இப்போது குழந்தைத் தனமில்லாத ஒரு சிரிப்பினை உதிர்த்தாள். ''ஏதாவது வேலை செய்ய ஆலோசிக்கிறீங்களா? எனக்கு வேண்டியதை நானே சம்பாதிச்சுக்கிட்டு?''

''ஆமாம்.''

''என்ன செஞ்சு?''

''எதிலாவது பயிற்சி எடுத்துக்கலாமே. குறுக்கெழுத்து, அல்லது தட்டச்சு.''

''அதெல்லாம் என்னால முடியும்னு எனக்குத் தோணல. நான் வேலை செய்வதுல சாதுர்யம் இல்லாதவ. மேலும்---''

''வெல்?''

இதுவரை முகத்தை அவள் எதிர்ப்புறம் திருப்பிக் கொண்டிருந்தாள். இப்போது மெதுவாய் மீண்டும் முகத்தை என் பக்கமாய் திருப்பினாள். அது சிவந்திருந்தது. கண்களில் கண்ணீர்த் துளிகளும் இருந்தன. இப்போது அவள், விடுபட்டிருந்த அத்தனை குழந்தைத்தனமும் குரலில் குமுற பேசினாள்.

''நான் எதுக்காக வெளியே போகணும்? எதுக்காக வெளியேறும்படி தள்ளப்படணும்? அவங்களுக்கு நான் வேணாம், ஆனா நான் இருப்பேன். நான் இருந்து, ஒவ்வொருவரையும் வருந்த வெப்பேன். அவங்க அத்தனை பேரையும் நான் வருந்த வெக்கத்தான் போறேன். பன்றிகள் பன்றிக்கூட்டம்! இங்கே லிம்ஸ்டாக்குல நான் அத்தனை பேரையும் வெறுக்கறேன். அவங்க அத்தனை பேருமே என்னை முட்டாள்னும் அழகில்லாதவனும் நினைக்கிறாங்க. நான் யார்னு காட்டறேன். நான் யார்னு காட்டறேன். நான் யார்னு---''

அது, விளக்கவொண்ணா, குழந்தைத்தனமான ஒரு கதறல்.

வீட்டு வாசலில் போட்டிருந்த சரளையில் காலடியோசை உருவாவதை நான் கேட்டேன்.

''முதல்ல எழுந்திரு'' என்றேன் நான் கடுப்பாய். ''டிராயிங் ரூம் வழியா வீட்டுக்குள்ளே போயிடு. அப்படியே முதல் தளத்துல இருக்கும் பாத்ரூமுக்குப் போ. அங்கே கடைசில இருக்கு பாத்ரூம். முகத்தைக் கழுவு. சீக்கரம்கறேன்.''

ஸ்பிரிங்காய் எழுந்து உள்ளே அவள் ஓடிவிட, வீட்டுக்குள் ஜோன்னா வந்துக் கொண்டிருந்தாள்.

''ஏய், நான் கோபமா இருக்கேன்'' என்றாள் அவள். என்னருகில் உட்கார்ந்த அவள், கழுத்தைச் சுற்றிப் போட்டிருந்த ஸ்கார்ஃபை அவிழ்த்து அதனால் விசிறிக் கொண்டாள். வழியில் நடந்த என்னவோ சம்பவம் அவளை கடுப்பேற்றியிருப்பதாய் கதறினாள். ''நாம ஒரு நாயை வளர்த்தாகணும் ஜெர்ரி'' என்று முடித்தாள்.

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன்'' என்றேன் நான். ''பை த வே, மேகன் லஞ்ச் எடுத்துக்க வரா.''

''அவளா? குட்.''

''உனக்கு அவளை பிடிக்குதா?'' நான் கேட்டேன்.

''என்னைப் பொருத்தவரைக்கும், அவ ஒரு பேதை, பாவம்'' என்றாள் அவள். ''எடுப்பார் கைப்பிள்ளை! தேவதைகள் தங்களுக்கு வேண்டிய நற்பொருள்களை யெல்லாம் அள்ளிக்கிட்டுப் போகும்போது ஏதாவது தவறி விழுந்துடுமாம். அப்படிப்பட்ட நற்பொருள் அவ. ஒரு பேதைப்பெண்ணை சந்திப்பதிலும் த்ரில் இருக்கு. ஊஃப்... இப்ப நான் போய் முதல்ல முகம் அலம்பணும்.''

''இப்ப முடியாது'' என்றேன் நான். ''மேகன் கழுவிக் கிட்டிருக்கா.''

''ஓ, வந்தாச்சா அவ?''

தன் பையிலிருந்து கண்ணாடியை எடுத்து அதில் தன் முகத்தை ஆழ்ந்து கூர்மையாய் கவனித்தாள். ''இந்த லிப்ஸ்டிக் எனக்கு பிடிக்கல'' என்று தற்போது அறிவித்தாள்.

மேகன் வந்தாள். சற்று சுத்தமாகி, தனக்குள் அடங்கியிருந்த அவள், சற்றுமுன் நடந்து முடிந்த புயல் பற்றிய

எந்த சமிக்ஞையையும் சுமந்திருக்கவில்லை. ஜோன்னாவை சிறு சந்தேகத்துடன் பார்த்தாள் அவள்.

தன் முகம் பற்றிய சிந்தனையிலேயே இன்னுமிருந்த ஜோன்னா, அப்படியே ''ஹல்லோ'' என்றாள். ''லஞ்சுக்கு நீ வந்திருப்பதுல எனக்கு மிக சந்தோஷம். என் மூக்குல ஒரு தேமல் வந்திருக்கு... அதுக்கு நான் ஏதாவது பண்ணி யாகணும்...''

பேட்ரிட்ஜ் வெளியே வந்து லஞ்ச் ரெடி என்றாள்.

''கம் ஆன்'' என்றாள் ஜோன்னா, எழுந்தபடி. ''நான் இப்ப பட்டினியாயிருக்கேன்!''

மேகனின் கைக்குள் தன் கையிட்டு வளையமிட்டாள் அவள். இருவரும் ஒன்றாய் வீட்டுக்குள் போனார்கள்.

# அத்தியாயம் - 5

## I

என் கதையில் ஒரு நீக்கம் நடந்திருப்பதை இப்போது நான் பார்க்கிறேன். இதுவரை, மிஸஸ் டேனே கேத்ராப் மற்றும் ரெவரெண்ட் கலேப் டேனே கேத்ராப் ஆகிய இருவரைப் பற்றியும் சொல்லிக் கொண்டிருக்கும் கதையில் நான் பேசவில்லை.

ஆயினும், பாதிரியாரும் அவருடைய மனைவியும், தனிப் பட்ட குணாதிசயங்கள் ஆவர். தினசரி உலக வாழ்வியல் எதிலும் பங்கேற்காமல் தள்ளியே இருக்கும் பாதிரியாரைப் போல ஒருத்தரை, இதுவரை சந்தித்த மனிதர்களில் ஒருவரிலும் நான் பார்த்தது கிடையாது. அவர் பூமியில் வாழ்வதே, புத்தகங்களிலும், நூலகங்களிலும், ஆரம்பக் காலத்து சர்ச்சுகள் பற்றிய சேதிகளை ஆழ்ந்து அறிந்து கொள்வதிலுமே அமைந்திருந்தது. மாறாக, மிஸஸ் டேனே கேத்ராப், தானிருக்கும் ஸ்தலத்தில் அக்கணத்திலேயே கடும் பயமுறுத்தலை நிலவவிட்டுக் கொண்டிருக்கவல்ல ஒரு கேரக்டராவார். ஆரம்பத்திலிருந்தே மிஸஸ் டேனே பற்றி

சிறு பயம் என்னிடம் இருந்தது... இதனாலேயே இவரைப் பற்றி என் கதையில் குறிப்பிடுவதை நான் வேண்டுமென்றே தள்ளி வைத்திருக்கக்கூடும். மிஸஸ் டேனே, ஆகாச ஞானம் கொண்டதொரு தனித்துவப் படைப்பு. வழக்கமாய் அமைய வேண்டிய பாதிரியாரின் ஒரு மனைவியாய் அவர் இல்லை - ஆனால், 'உனக்கு என்ன தெரியும் பாதிரியார்களின் மனைவிமார்கள் பற்றி?' என்று எனக்கு நானே கேட்டுக் கொள்ளும்போது - இக்கருத்தைப் புறக்கணித்து விடுகிறேன்.

அமைதியான, விளக்க முடியாத ஒரு படைப்பு - மற்றும், போதிப்பதில் அசாத்தியத் திறமை பெற்ற ஆஜானுபாகுவான தனது சக்திமிகு கணவனுக்கு மிகவும் அர்ப்பணிப்பானவர் - இவை இரண்டுதான் மிஸஸ் டேனே பற்றி எனக்கிருக்கும் ஞாபகம். பொதுவாய் உரையாடுவதில் சொற்பமான வார்த்தைகளே பேசும் இவரிடம், தொடர்ந்து எப்படி தொய்வில்லாமல் சம்பாஷணையை வளர்ப்பது என்பதே ஒரு பெரும் புதிராய் இருக்கும்.

எந்த நேரத்திலும், எந்தவொரு விஷயத்திலும், தனது மூக்கை மிஸஸ் டேனே நுழைக்க மாட்டார்... இருந்த போதிலும் அனைத்து விஷயங்களையும் தெரிந்து வைத்துக் கொள்ளும் ஒருவித அமானுஷ்யத் திறமை அவரிடம் இருந்தது. கிராமத்திலிருக்கும் ஒவ்வொருவருக்கும் மிஸஸ் டேனெயிடம் சிறு பயமிருப்பதை சீக்கிரத்திலேயே நான் கண்டுபிடித்தேன். அறிவுரைகள் அவர் தந்தது கிடையாது. ஒருபோதும் குறுக்கிட்டது கிடையாது. ஆயினும், தெய் வத்தின் தூதுவன் என்ற ஸ்தானத்தில் அவர் நிறுத்தப் பட்டிருந்தார்.

கோடைகாலத்தில் ஸ்வெட்டர் போன்ற உடையணியும் மேலும், கொட்டும் மழையில் வெறும் காட்டன் புடவை

ஒன்றைச் சுற்றிக்கொண்டு சொட்டச்சொட்ட நனைந்து கொண்டு போகும் மிஸஸ் டேனேயைப் போல, சூழ்நிலைக்கு உகந்து இயங்காத ஒரு பெண்ணை நான் என் ஜென்மத்தில் பார்த்தது கிடையாது.

மேகன் லஞ்சுக்கு வந்துபோன மறுநாள் என்னை ஹை ஸ்ட்ரீட்டில் நிறுத்தினார் மிஸஸ் டேனே. என்னை நெருங்கிய அவருடைய நடை, சாதாரண நடையாய் அமையாது ஓர் ஓட்டமாய் இருந்தது. மேலும், ஏதோ அவருடைய நிஜ இலக்கு ஒன்றரை மைல்களுக்கு அப்பால் இருப்பதைப் போல அவரது பார்வை எப்போதும் அடிவானத்திலேயேதான் நிலைகுத்தியிருக்கும். இவையிரண்டையும் இப்போது மறுபடியும் கவனித்த எனக்கு வழக்கமான ஆச்சரியம் வந்தது.

''ஓ'' என்ற அவர் ''மிஸ்டர் பர்ட்டன்!'' என்றார்.

தீர்க்க முடியாத பிரச்சினையைத் தீர்த்துக் கொடுத்த ஒருவரை திடுமென்று பார்க்கும்போது பொங்கும் முழக்க மான ஆவலோடு இப்படிச் சொன்னார் அவர்.

நான்தான் மிஸ்டர் பர்ட்டன் என்று ஒப்புக்கொண்டதும், தனது கவனத்தை ஒன்றரை மைல்களுக்கு அப்பால் குவித்திருப்பதை நிறுத்திக் கொண்டு அதனை என்மீது குவிக்க முயற்சிப்பவராய் திரும்பினார் அவர்.

''ஆங், இப்ப நான் எதுக்காக உங்களைச் சந்திக்க நினைச்சேன்?''

இதற்கு என்னால் அவருக்கு உதவி தர முடியவில்லை. முகம் சுளித்த நிலையில் ரொம்பவும் குழம்பிப் போய் நின்றார் அவர்.

''ஏதோவொரு கீழ்த்தரமான விஷயமாத்தான்'' என்றார் அவர்.

முழித்த நான், ''அப்படி ஏதாவது உங்களுக்கு நடந்திருந்தால், வருந்தறேன்'' என்றேன்.

''ஆஹ்'' என்று சட்டென்று கூவினார் மிஸஸ் டேனே. ''அ என்பவருடனான காதலை நான் வெறுக்கறேன். இப்படித் தான் இருந்தது. மொட்டைக் கடுதாசிகள்! உங்களுக்கே நல்லாயிருக்கா - மொட்டைக் கடுதாசி எனும் ஒரு கட்டுக் கதையை நீங்க இங்கே வந்து இப்படி அவுத்து விடலாமா?''

''நான் ஒண்ணும் அவுத்து விடல'' என்றேன் நான் உடனடியாய். ''அத இங்கே ஏற்கெனவே இருந்த ஒரு சமாச்சாரம்.''

''நீங்க இங்கே வரும் வரைக்கும் ஒருத்தருக்கும் ஒரு மொட்டைக் கடுதாசி வரலே, ஆமாம்'' என்றார் அவர் குற்றஞ்சுமத்தும் விதமாய்.

''வந்திருக்கு மிஸஸ் டேனே. குழப்பம், ஏற்கெனவே ஆரம்பிச்சிருக்கு.''

''ஓ டியர், அப்படியா?'' என்ற அவர், ''எனக்கு இது பிடிக்கல'' என்றார்.

கண்கள் தன்னிலை இழந்து மீண்டும் நெடுந்தொலைவில் நிலைகுத்திய நிலையில் அங்கு நின்றார் அவர்.

''இதெல்லாம் ரொம்பத் தப்புனு என்னால நினைக்காம இருக்க முடியல, மிஸ்டர் பர்ட்டன். இப்படியொரு நிலைமைல நாங்க இங்கே இருந்தது கிடையாது. பொறாமை, வயிற்றெரிச்சல் - இப்படிப்பட்ட பாவங்கள்தான் இதுக்கான

தூண்டுகோல். இங்கே, எங்களுடைய கிராமத்துல, இப்படியெல்லாம் பண்ண ஒருத்தன் இருக்கான்னு என்னால நம்பக்கூட முடியல. நோ, ரியலி, என்னால நம்ப முடியல. இது என்னை மனக்கிலேசத்துக்குள்ளாக்குது. ஏன்? ஏன்னா, இதுக்கான காரணம் யார்னு எனக்குத் தெரியல ஆனா தெரிஞ்சாகணும்.''

அவருடைய அழகு நயனங்கள் தொடுவானத்திலிருந்து விலகி என்னுடையவற்றை ஊடுருவின. அவை கவலைக் குள்ளாகியிருந்தன. சிறு குழந்தையின் பயக்கலவரம் அவற்றில் கொட்டியது.

''எப்படி உங்களுக்குத் தெரிய முடியும்?''

''வழக்கமா நான் தெரிஞ்சுப்பேன். அது என் வேலைன்னு நான் நினைப்பதுண்டு. கலேப் நல்லா சொற்பொழிவுகள் தருவார்... பாவமன்னிப்பு கொடுப்பார். இதெல்லாம் பாதிரி யாரின் கடமைகள். ஆனா ஒரு பாதிரியாரின் மனைவின்னு ஆகிவிட்டால், பிறகு மக்களுடைய உணர்வு களையும் சிந்தனைகளையும் தெரிந்து வைத்துக் கொள்வது அந்த மனைவியின் கடமையாகின்றது - அவளால எந்த உதவியும் தர முடியாவிட்டாலும்! இப்ப, இதுக்குப் பின்னாடி இருக்கும் மூளை யார் மூளைனு என்னால---''

இங்கு உடைந்த அவர், திடுதிப்பென்று சொன்னார்: ''அவை அத்தனையும் அத்தனை ஸில்லி கடிதங்கள்.''

''உங்-உங்களுக்கு அப்படி ஏ-ஏதாவது கடிதங்கள்?''

இப்படிக் கேட்பதில் நான் சற்று தடுமாறினேன்... ஆனால் அவரோ ''ஓ யெஸ்'' என்று மிகவும் சாதாரணமாய் எடுத்துக் கொண்டு விட்டு, கண்ணகல விடை தந்தார்.

''ரெண்டு, இல்லயில்ல... மூணு. அவை என்ன சொல்லி எழுதப்பட்டிருந்ததுனு துல்லியமா சொல்ல முடியல மறந்துட்டேன். கலேப் டேனே மற்றும் அந்த ஸ்கூல் டீச்சர் பற்றி ஏதோ கீழ்த்தரமா எழுதியிருந்தது. முட்டாள்தனமான குற்றச்சாட்டு ஏன்னா அவருக்கு 'அந்த மாதிரி' திருட்டு ருசிகளே வந்தது கிடையாது. அக்கம்பக்கத்து சீலைகளுக்க அவர் கண்கள் திரும்பவே திரும்பாது. ஒரு பாதிரியாராயிருப் பதால், அதிர்ஷ்டமான குணமிது.''

''ஆமாம்'' என்றேன் நான். ''ஓ, ஆமாம்.''

''கலேபுக்கு மட்டும் கொஞ்சம் சாதுர்யமும் புத்திசாலித் தனமும் இல்லாமல் ஆகியிருந்தால்'' என்ற அவர் சொன்னார்: ''நிச்சயமா ஒரு சந்நியாசியா போயிருப்பார்.''

இந்த விமர்சனத்துக்கு பதில் தரும் தகுதி இருப்பதாய் எனக்கு தோன்றவில்லை. எப்படியோ, தனது கணவரிட மிருந்து, கடிதங்களுக்குத் தாவியபடி பேச்சினை அவரே தொடர் தார்.

''அக்கடிதங்களால பல சமாச்சாரங்களை சொல்ல முடியும்... ஆனா அப்படி எதையும் அவை சொல்லல. இதுதான் இதுல விசித்திரம்.''

நான் கேள்விக்குறியாய் கவனித்தேன்.

''அவற்றுக்கு - கடிதங்களை சொல்றேன் அவற்றுக்கு, ஏதாவது தெரியுமானே எனக்கு சந்தேகமா இருக்கு. உண்மை யான எதுவுமே அவற்றுக்குத் தெரியாது.''

''எதைச் சொல்றீங்க, நீங்க?''

அந்த அழகிய குழப்பக் கண்கள் இப்போது என்னுடைய கண்களைச் சந்தித்தன.

''வெல். இங்கே நிறைய காம சூத்திரங்கள் இடம்பெறுது. இன்னும் பற்பல! வெட்கப்பட வேண்டிய ரகசியங்கள் பலப்பல. அந்த உண்மைகளையெல்லாம் ஏன் கடுதாசிகளை எழுதியவன் பயன்படுத்திக்கல?'' இங்கு நிறுத்திய அவர் பிறகு திடீரென்று கேட்டார்: ''உங்க கடிதங்கள்ல என்ன சொல்லி யிருந்தது?''

''என் சகோதரி, எனக்கு சகோதரி கிடையாதுனு.''

''வேற?''

லஜ்ஜையற்று, ஒரு நண்பனின் ஈடுபாட்டோடு இக்கேள்வியைக் கேட்டார் மிஸஸ் டேனே.

''நிச்சயமா ஜோன்னா என் தங்கைதாம்மா.''

மிஸஸ் டேனே கேத்ராப் ஒப்புதலாய் தலையசைத்தார். ''நான் இப்ப என்ன சொல்லிக்கிட்டிருந்தேனோ அதை உங்க கடிதம் விளக்குது புரியுதா? இங்கே என்னவெல்லாமோ சமாச்சாரங்கள் நடக்குதுனு நான் அடிச்சு சொல்வேன்---''

அவருடைய களங்கமில்லாத விழிகள் என்னை சிந்தனை யுடன் பார்த்தன... நான் உடனே, எதற்காக மிஸஸ் டேனே என்றாலே இந்த லிம்ஸ்டாக் கிராமமே நடுங்குகின்றது என்பதை சட்டென்று விளங்கிக் கொண்டேன்.

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் மறைக்கப்பட்ட பக்கங்கள் உண்டு. அவை, பிறர் அறிந்திருக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் பொத்தி வைக்கப்பட்டிருக்கும். மிஸஸ் டேனே கேத்ராப்புக்கு அப்பக்கங்கள் தெரியும் என்று தோன்றியது எனக்கு.

வாழ்க்கையின் ஒருசில தருணங்களில் அப்பாடா... என்ற விடுதலையுணர்வை அனுபவிக்க நேரிடும். அப்படியொரு

ஆனந்தத்தை ஐமீ க்ரிஃபித்தின் குரலைக் கேட்டதும் நானடைந்தேன்.

"ஹலோ மேடம்... உங்களைப் பிடிச்சுட்டதுல எனக்கு சந்தோஷம். நம்ம விற்பனைக்கு மற்றொரு நாளை ஆலோசிக்கணும்னு நான் நினைச்சிருக்கேன். குட் மார்னிங், மிஸ்டர் பர்ட்டன்."

அவர் தொடர்ந்தார்:

"ஜஸ்ட் சில ஆர்டர்கள் தரவேண்டியிருக்கு. பிறகு, உங்க கூட இன்ஸ்டிட்யூட் வரைக்கும் வரலாம்னு நினைக்கிறேன், ஆட்சேபணையில்லைனா."

"யெஸ், யெஸ். இதுல ஆட்சேபணை என்ன வேண்டிக் கிடக்கு?" சொன்னார் மிஸஸ் டேனே.

ஐமீ க்ரிஃபித் இண்டர்நேஷனல் ஸ்டோர்சுக்குள் சென்றாள்.

மிஸஸ் டேனே சொன்னார்: "பரிதாபமான பிறவி."

நான் புதிர்போட்டவனானேன். நிச்சயமாய் ஐமீயைப் பார்த்து இவர் பரிதாப்பட்டிருக்க மாட்டார்...

அவர் மேற்கொண்டு தொடர்ந்தார்:

"உங்களுக்குத் தெரியுமா, மிஸ்டர் பர்ட்டன். நான் பயத்திலிருக்கேன்---"

"இந்த கடுதாசி விஷயமாகவா?"

"யெஸ். இது விளக்குவது என்னன்னா - அதாவது, இதுக்கு அர்த்தம்---" நிறுத்தி விட்டார். சிந்தனைக்குள் விழுந்து விட்ட அவரின் கண்கள் திருகிப் போயிருந்தன. பிறகு, ஒரு

பிரச்சினையைத் தீர்த்து விட்ட ஒருவரின் தொனியோடு, மெதுவாய் சொன்னார்: "குருட்டுத்தனமான வெறுப்பு... யெஸ், ப்ளைண்ட் ஹேட்ரட். ஆனால், ஒரு குருடன்கூட, சரியா நெஞ்சுல குறி தவறாமல் குத்திவிடும் வாய்ப்புகள் இருக்கு. அப்படி குறி தவறாமல் குத்தி விட்டால், மிஸ்டர் பார்ட்டன், அப்புறம் என்ன ஆகும்?"

அடுத்த ஒரு நாள் கடப்பதற்குள் எங்களுக்கு அது தெரிந்தாக வேண்டும்...

## II

அந்த சோகச்செய்தியை சுமந்து வந்தது, பேட்ரிட்ஜ்தான். கலவரங்கள் பேட்ரிட்ஜைக் குஷிப்படுத்துகின்றன. ஏதாவது ஒரு சோகச்செய்தியை நாலு பேர் முன்னிலையில் போட்டு உடைக்கும்போது பேட்ரிட்ஜின் நுனிமூக்கு ஒரு பக்கமாய் சுழித்துக் கொண்டு துடியாய் துடிக்க ஆரம்பித்து விடும்.

ஓய்வில்லாமல் அவளுடைய நுனிமூக்கு துடித்த நிலையில், கண்கள் பளபளக்க ஜோன்னாவின் அறைக்குள் வந்தாள் அவள். திரைச்சீலைகளை அகட்டவிடும்போது, "இன்னிக்குக் காலைலயே, ஒரு படுபயங்கரமான சேதி, மேடம்" என்றாள்.

காலையில் எழுந்ததும் முழுவதுமாய் ஸ்திரமாக ஜோன்னாவுக்கு கொஞ்சம் நேரம் பிடிக்கும்... இது லண்டன் வழக்கம். "ஆங், ஆங்" என்று ஈடுபாடின்றி சொல்லிவிட்டு ஒருமுறை புரண்டு படுத்தாள் அவள்.

அவளருகில் டீயை வைத்து விட்டு மறுபடியும் ஆரம்பித்தாள் பேட்ரிட்ஜ். "படுபயங்கரம் அது. ஷாக்கிங்! சேதி காதுல விழுந்தபோது என்னால அதை துளியும் நம்ப முடியல."

கண்விழிக்க சிரமப்பட்டபடி ‘‘என்னது அது பயங்கரம்?’’ என்றாள் ஜோன்னா.

‘‘பரிதாபத்துக்குரிய மிஸஸ் ஸிம்மிங்டன்.’’ ஒரு எஃபெக்ட் கிடைக்க நாடகப்பாணியில் சற்று நிறுத்தினாள் அவள். ‘‘டெட்.’’

‘‘டெட்? இறந்துட்டாங்களா?’’ - ஜோன்னா படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள், இப்போது அகலமாய் விழித்தபடி.

‘‘ஆமாம், மேடம். நேற்று மதியம் நடந்திருக்கு. இதுல சோகம் என்னன்னா, அவங்க தன் உயிரைத் தானே மாய்ச்சுக்கிட்டிருக்காங்க.’’

‘‘ஓ, நோ, பேட்ரிட்ஜ்...’’

ஜோன்னா நிஜமாகவே அதிர்ந்து போனாள் அப்படிப்பட்ட துயர முடிவுகளில், நீங்கள் பொருத்திப் பார்க்கவல்ல நபர் கிடையாது மிஸஸ் ஸிம்மிங்டன்.

‘‘யெஸ் மேடம். உண்மையாத்தான் சொல்றேன். தெரிஞ்சே செஞ்சிருக்காங்க. பாவம், பரிதாபம்... அப்படியொரு முடிவு எடுக்குமளவுக்கு அவங்க விரட்டப் பட்டிருக்காங்க.’’

‘‘விரட்டப்பட்டிருக்காங்க?’’ - ஜோன்னாவுக்கு அதற்கான காரணம் என்னவென்பது விளங்கியிருக்க வேண்டும். ‘‘அப்போ---?’’

அவளுடைய கண்கள் பேட்ரிட்ஜைக் கேள்விக்குறியாய் பார்க்க, அதற்கு பேட்ரிட்ஜ் ஆமோதிப்பாய் தலையசைத் தாள். ‘‘சரியா கணிச்சுட்டீங்க மேடம். அந்த பழிகாரக் கடிதங்கள்ல ஒண்ணு!’’

‘‘என்னனு சொல்லிச்சு அக்கடிதம்?’’

ஆனால், அது என்ன என்பதை அறிந்து விடுவதில், பரிதாபமாய் அவள் தோற்றிருந்தாள்.

''கொடுமையான கடிதங்கள் அவை'' என்றாள் ஜோன்னா. ''ஆனா எதுக்காக ஒருத்தர் தற்கொலை பண்ணிக்குமளவுக்கு அவை அமையணும்னுதான் எனக்கு தெரியல.''

மூக்கை உறிஞ்சிய பேட்ரிட்ஜ், அர்த்தம் பொதிந்து சொன்னாள்: ''அதுல உண்மையிருக்கணும், மேடம்.''

''ஓ'' என்றாள் ஜோன்னா.

பேட்ரிட்ஜ் அறையை விட்டகன்றதும் டீ குடித்தாள் ஜோன்னா. பிறகு தனது இரவு உடையைக் களைந்து மாற்றிக்கொண்டு என்னிடம் சேதியைச் சொல்ல வந்தாள்.

ஓவன் க்ரிஃபித் சொன்னவற்றை அப்போது நான் நினைத்துக் கொண்டேன். வெச்சகுறி தப்பாமல் சுட்டு விட்டது. மிஸஸ் ஸிம்மிங்டன்னிடம் அது பலித்து விட்டது. 'மிஸஸ் ஸிம்மிங்டன் வாழ்ந்த வாழ்க்கையின் பின்னால் ரகசியங்கள் இருக்கின்றன' என்று ஒருவரும் நினைக்க மாட்டார்கள். வெளிப்படையாய் தெரிந்த அவருடைய கூர்மையான ஆற்றலைப் பற்றி சிந்தித்த நான், ''ம்ம்'' என்று அதை நிராகரித்தேன். அதிக சாதுர்யமும் புத்திசாலித்தனமும் நிறைந்ததொரு விவேகமான பெண்மணியாய் தோன்றியவர் கிடையாது மிஸஸ் ஸிம்மிங்டன். நிஜத்தில் அவர் ஒரு சோகை. உள்ளத்தில் அவர் சீக்கிரத்தில் உடையவல்ல ஒரு கோழை.

என்னை ஒருவிரலால் குத்திய ஜோன்னா என்னத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என கேட்டாள்.

ஓவன் சொன்னவற்றை அவளிடம் நான் மறுபடியும் சொன்னேன்.

"அப்படித்தான் சொல்வார் அவர்" என்றாள், வெடு வெடுப்பாய். "மனுஷனுக்கு தனக்குத்தான் எல்லாம் தெரியும்னு ஒரு நினைப்பு."

"அவர் புத்திசாலி" என்றேன் நான்.

"எல்லாம் அகந்தை" என்றாள் ஜோன்னா. "அப்பழுக்கற்ற மமதை!"

சில நிமிடங்களுக்கு அப்புறம் அவள் கேட்டாள்:

"அவங்க கணவருக்கு எத்தனை பேரிழப்பா இது இருக்கும் - அவங்க பொண்ணுக்கும்தான். இதைப் பற்றி மேகன் என்ன நினைப்பானு நினைக்கிறே நீ?"

எனக்கு இது பற்றித் துளியும் ஊகம் இல்லை. அதை அப்படியே சொன்னேன். மேகன் என்ன நினைப்பாள் அல்லது உணர்வாள் என்பதைப் பற்றி ஒருவரும் எடை போட முடியாதது, ஒரு விசித்திரம்தான்.

ஆமோதிப்பாய் தலையசைத்த ஜோன்னா சொன்னாள்: "எடுப்பார் கைப்பிள்ளைங்களைப் பற்றி எதுவும் சொல்ல முடியாதுதான்."

சற்று தாமதித்து விட்டு அவள் கேட்டாள்:

"இங்கே வந்து ஓரிரு நாட்கள் தங்கிட்டுப் போக அவ விரும்புவாளா? உனக்கு விருப்பமா ஆட்சேபணை யில்லையே? இந்த சின்ன வயசுல பாவம் ஒரு பொண்ணுக்கு இது பெரிய அதிர்ச்சியா இருக்கும்."

“நாம போகும்போது இதை சொல்லிப் பார்ப்போம்.”

“குழந்தைங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்” என்றாள் ஜோன்னா. “அவங்களைக் கவனிச்சுக்க ஒரு பொம்பிளை இருக்கா. ஆனா, மேகன் போன்றவங்களை, அந்தப் பொம்பிளை மாதிரியான படைப்புகள் பைத்திய மாக்கிடும்னு நினைக்கிறேன்.”

அது சாத்தியம்தான் என்று நானும் நினைத்தேன். மாற்றி மாற்றி ஆறுதல் சொல்லிக்கொண்டு, கூடவே கப் மாற்றி கப் டீ கொண்டு வந்து கொடுக்கும் எல்ஸீ ஹாலண்டை என்னால் கற்பனை பண்ணிக் கொள்ள முடிந்தது. கனிவான வள்தான், ஆனால், மேகன் போன்ற உணர்ச்சிவயப்படும் வகைக்கு உகந்தவள் கிடையாது.

அங்கிருந்து மேகனை விலக்கி இங்கு கொண்டு வந்து விடுவதைப் பற்றி நானே நினைத்திருந்தேன்... அது என்னிட மிருந்து முன்மொழியப்படுவதற்கு முன்னால் ஜோன்னாவே லகுவாய் சொல்லி விட்டதில் எனக்கு மகிழ்ச்சி.

காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு நாங்கள் ஸிம்மிங்டன்னின் வீட்டுக்குப் போயிருந்தோம்.

நாங்களிருவருமே சிறு நரம்பதிர்வில் இருந்தோம். எங்களுடைய வருகை, விஷயத்தைத் தெரிந்து கொள்ள வந்திருக்கும் வம்பர்களைப் போல அங்கு ஆகிவிடலாம். அதிர்ஷ்டவசமாக வெளியே வந்துக் கொண்டிருந்த ஓவன் க்ரிஃபித்தை நாங்கள் கேட்டில் சந்தித்தோம். அவர் கவலைப் படுபவராகவும், ஏதோ சிந்தனையில் தன்னை இழந்திருப்ப வராகவும் தோன்றினார்.

ஆயினும், என்னை அவர் சற்று கதகதப்பாய் கைகுலுக் கினார்.

''ஓ, ஹலோ, பர்ட்டன். உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. இப்பவோ இல்ல சீக்கிரமாவோ எது நடக்கும்னு நான் பயந்துக்கிட்டிருந்தேனோ அது நடந்துடுச்சு! ஒரு கொடூரம்.''

''குட் மார்னிஸ் டாக்டர் க்ரிஃபித்'' என்றாள் ஜோன்னா, எங்களுடைய காது கோளாத ஓர் ஆன்ட்டியை அழைக்க அவள் பயன்படுத்தும் குரலெடுத்து.

க்ரிஃபித் துணுக்குற்றார். பிறகு வெட்கப்பட்டார்.

''ஓ - ஓ, கு-குட் மார்னிங், மிஸ் பர்ட்டன்.''

''ஒருவேளை நீங்க என்னைப் பார்க்கலையோனு நினைச்சேன் நான்'' என்றாள் ஜோன்னா.

ஓவன் க்ரிஃபித் மேலும் கூச்சப்பட்டார். அவரது கூச்சம், அவரை ஒரு கவசமாய் மூடியது.

''என்னை என்னை மன்னிக்கணும். எதையோ சி-சிந்திச்சுக்கிட்டிருந்தேன். கவனிக்கல.''

இரக்கமின்றி சொன்னாள் ஜோன்னா: ''நான் ஒரு எருமைமாடு அளவுக்கு இங்கே நின்க்கிட்டிருக்கேன்.''

''ப்ச்'' என்றேன் நான் கண்டிக்கும் தொனியில். பிறகு நான் தொடர்ந்தேன்:

''அந்தப் பெண்பிள்ளை எங்களுடன் வந்து ஓரிரு நாட்கள் தங்கிட்டுப் போனால் சுகமா இருக்கலாம்னு நானும் என் சகோதரியும் நினைக்கிறோம், க்ரிஃபித். நீங்க என்ன நினைக்கிறீங்க? நான் மூக்கை நுழைக்க விரும்பல - ஆனா, இது, அந்தப் புவர் சைல்டுக்கு ஓர் இளைப்பாறலா இருக்கும்.

இதைப் பற்றி மிஸ்டர் ஸிம்மிங்டன் என்ன நினைப்பார்னு நீங்க நினைக்கிறீங்க?''

சில கணங்கள் நான் சொன்னவற்றை தன் மண்டைக்குள் ஓட்டினார் க்ரிஃபித்.

''எனக்கென்னவோ நீங்க சொல்வது மிக பிரமாதமான ஒண்ணுனே படுது'' என்றார் கடைசியாய். ''அவ ஒரு விளங்கிக்க முடியாத நரம்பதிர்வுக் குழந்தை. நடந்திருக்கும் களேபரத்திலிருந்து விலகியிருப்பது அவளுக்கு நல்லதா அமையும். மிஸ் ஹாலண்ட் பிரமாதமா பண்றாங்க... தோள் தராங்க. ஆனா மிஸ்டர் ஸிம்மிங்டன் மற்றும் அந்த ரெண்டு குழந்தைங்களைக் கவனிப்பதே அவளுக்குப் போதும் போதும்னு ஆகிடும். அவர், - மிஸ்டர் ஸிம்மிங்டன் - முழுக்க உடைஞ்சுப் போயிட்டார். கிலி பிடிச்சுக் கிடக்கார்.''

''அது---'' என்று நான் கேட்டேன்: ''தற்கொலை?''

''ஓ, யெஸ். விபத்தா நடந்திருக்க வாய்ப்பே கிடையாது. அவங்க ஒரு துண்டுச் சீட்டுல எழுதி வெச்சிருக்காங்க: 'என்னால இனிமே முடியாது...' நேற்று மதியத் தபால்ல கடுதாசி வந்திருக்கணும். அவங்க நாற்காலிக்குக் கீழே அது வந்த உறை இருந்தது. அக்கடுதாசி சுருட்டப்பட்டு கணப்புல வீசப்பட்டிருக்கு.''

''அதுல என்ன---''

கேட்க முனைந்தது தவறோ என்றெண்ணி நான் நிறுத்திக் கொண்டேன். ''மன்னிக்கணும்.''

க்ரிஃபித், சந்தோஷமற்ற சிரிப்பினை உடனே உதிர்த்தார்.

''கேட்பதற்கு நீங்க தயங்கத் தேவையில்ல. அக்கடுதாசி மரண விசாரணையின்போது படித்துக் காட்டப்படணும்.

அதை மறைக்க முடியாது என்பதுதான் இதுல பரிதாபம். வழக்கமான கடுதாசிதான் அது - கீழ்த்தரமான ஒரு குறிப்பு. குறிப்பிட்டுச் சொல்லணும்னா, ரெண்டாவது பையன் காலின், ஸிம்மிங்டன்னின் பையன் கிடையாது.''

தடுக்க முடியாமல் கேட்டுவிட்டேன்: ''அது உண்மைனா நீங்க நினைக்கிறீங்க?''

க்ரிஃபித் தோள்களைக் குலுக்கிக் காட்டினார்.

''தீர்ப்பு சொல்ல எனக்கு எவ்வித முகாந்திரமும் இல்ல. ஐந்து வருஷங்களாத்தான் நான் இங்கே இருக்கேன். நான் பார்த்தவரைக்கும், ஸிம்மிங்டன் தம்பதிகள், தங்களுக் குள்ளும் தங்களுடைய குழந்தைகள் மீதும் மிகுந்த அர்ப் பணிப்புடன் வாழ்ந்தவர்கள். சந்தோஷமான குடும்பமது. அந்தப் பையன் பெற்றவர்களைப் போல இல்லை என்பது நிஜந்தான் உதாரணத்துக்கு அவனுடைய சிகப்பு கேசம். ஆனா குழந்தைகள் முந்தைய தலைமுறையை சேர்ந்தவர் களை - தாத்தா, பாட்டி - பிரதிபலிப்பதுண்டு.''

''பெற்றவர்களைப் போல இல்லாத இந்தக் குறைதான், கடுதாசியை எழுத ஒரு தூண்டுகோலா அமைஞ்சிருக்கு.''

''வாய்ப்பிருக்கு. சொல்லப்போனால், யெஸ்... இருக்கலாம்.''

''போலியான, கீழ்த்தரமான, ஒரு கொடூர அம்பு அந்த மொட்டைக் கடுதாசி.''

''இந்த விஷக்கடுதாசிகள் கூறும் குற்றச்சாட்டுகளுக்குப் பின்னாடி சிறப்பான ஓர் அறிதல் இருப்பதைப் போல தோணல. வெறும் பொறாமை - அவதூறு - வன்மம். தட்ஸ் ஆல்.''

‘‘ஆனா, கடுதாசி சுட்டிருக்கே’’ என்றாள் ஜோன்னா. ‘‘வெறும் அவதூறு மட்டும்தான் என்றால், அவங்க தற்கொலை வரைக்கும் போயிருக்க மாட்டாங்களே?’’

க்ரிஃபித் சந்தேகம் தொனிக்க ‘‘எனக்குத் தெரியல. யெஸ், ஆறீம் நாட் ஷுர்’’ என்றார். ‘‘அவங்க கொஞ்ச நாளாவே உடல்நலமில்லாம இருந்தாங்க. நரம்பு ப்ராப்ளம். ஹிஸ்டீரியா கத்துவாங்க. அப்படிப்பட்ட ஒரு நரம்பு கோளாறுக்கு நான் சிகிச்சை தந்துக்கிட்டிருந்தேன். அபாண்ட மான குற்றச்சாட்டைத் தாங்கி ஒரு மொட்டைக் கடுதாசி வந்ததும், அவங்க ஷாக் ஆகியிருக்க வாய்ப்புகள் நிறையவே இருக்கு... என்ன பண்ணுவதுனு தெரியாததொரு நிர்க்கதி யான நிலைக்கு தள்ளப்பட்டு, தன்னைத்தானே மாய்ச்சுக்க முடிவெடுத்திருப்பாங்க. கடுதாசி சொல்பவற்றை அவர் மறுத்தாலும் அதை அவங்க கணவன் நம்பமாட்டார்னு அவங்களே ஒரு தீர்ப்பை எழுதிக்குமளவுக்கு துடிச்சுப் போயிருக்கணும். சமுதாயத்துல உருவாகவல்ல அவமரி யாதை, தூற்றல் இவையெல்லாம், நிலைதடுமாறி சமநிலையை அவங்க இழந்து விடுமளவுக்கு மிகவும் சக்தியோடு அவங் களுக்குள்ளே ஆடியிருக்கணும்.’’

‘‘மூளை ஸ்தம்பித்துவிட்ட ஒரு தருணத்தில் நிகழ்ந்துள்ள தற்கொலை’’ என்றாள் ஜோன்னா.

‘‘எக்ஸாக்ட்லி. இப்படியொரு தீர்ப்பை முன்மொழிந்தால் அது மரணவிசாணையின்போது சிறப்பா பொருந்தும்னு நினைக்கிறேன்.’’

‘‘ஐ ஸீ’’ என்றாள் ஜோன்னா.

அவள் சொன்ன விதத்தில் என்னவோ இருக்க, அது க்ரிஃபித்தைப் பின்வருமாறு சொல்லச் செய்தது:

''அற்புதமா பொருந்தும்!'' என்றார் அவர் கோபமாய். பிறகு கேட்டார்: ''நீங்க இதை ஏத்துக்கலியா, மிஸ் பர்ட்டன்?''

''ஓ யெஸ், நான் ஏத்துக்கறேன்'' என்றாள் ஜோன்னா. ''உங்க நிலைமைல நானிருந்தால் நீங்க பண்ணும் இதையே தான் நானும் செய்வேன்.''

ஜோன்னாவை சந்தேகமாய் பார்த்த ஓவன், பிறகு மெதுவாய் தெருவுக்குள் இறங்கி நடந்து போனார். நானும் ஜோன்னாவும் வீட்டுக்குள் சென்றோம்.

முன்கதவு திறந்திருந்தபடியால் அழைப்புமணியை அடிக்க வேண்டிய அவசியம் எழவில்லை. அதிலும், உள்ளேயிருந்து ஒலித்த எல்ஸி ஹாலண்டின் குரல் எங்களுக்கு ஸ்பஷ்டமாய் கேட்டபோது, கதவைத் தட்டும் அவசியமும் தேவைப்பட வில்லை. ஹாலில் வந்து நின்றோம்.

ஒரு சேரில் சுருட்டிய மூட்டையாய் தன்னைத் திணித்துக் கொண்டு முழுதும் நொறுங்கிப்போயிருந்த மிஸ்டர் ஸிம்மிங்டன்னுடன் அவள் பேசிக்கொண்டிருந்தாள்.

''சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க, மிஸ்டர் ஸிம்மிங்டன். நீங்க ஏதாவது சாப்பிட்டுத்தான் ஆகணும். ப்ரேக்-ஃபாஸ்ட்டும் நீங்க சாப்பிடல. அள்ளியள்ளி நீங்க சாப்பிட்டிருக்கணும்னு நான் சொல்ல வரல. ஆனா நீங்க ஒரு விள்ளல்கூட சாப்பிடல. நேத்து ராத்திரியும் நீங்க பச்சைத் தண்ணீகூட குடிக்கல. அடிச்சிருக்கும் புயல்ல நீங்க உலுத்துப் போயிருக்கீங்க. தாங்க சக்தி வேணாமா? இல்லேனா மயங்கிக் கியங்கி விழுந்துட்டா என்ன செய்வது? கிளம்புவதற்கு முன்னாடி டாக்டர் சொல்லிட்டுப் போனது இது.''

ஜீவனற்ற குரலில் ஸிம்மிங்டன் சொன்னார்: ‘‘நீங்க ரொம்ப கனிவானவங்க, மிஸ் ஹாலண்ட். ஆனா---’’

‘‘முதல்ல இந்த நல்ல டீ’’ - தேநீரை அவர் கையில் வைத்து திணித்தாள் அவள்.

என்னைக்கேட்டால், பாவப்பட்ட அந்த மனிதருக்கு விஸ்கியும் சோடாவும் நான் தந்திருப்பேன். அவருக்கு இவைதான் தேவை என்பதுபோல தோன்றியது. ஆயினும் டீயை ஏற்றுக் கொண்டார். அப்படியே நிமிர்ந்து மிஸ் எல்ஸீயைப் பார்த்தார்: ‘‘நீங்க செய்த, செய்துக்கிட்டிருக்கிற அனைத்துக்கும், எத்தனை நன்றிகள் சொன்னாலும் பத்தாது. நீங்க அற்புதமா நடந்துக்கிறீங்க!’’

அப்பெண், வெட்கப்பட்டாள், திருப்தியடைந்தவளாய் தோன்றினாள்.

‘‘இப்படி நீங்க சொல்வதே போதும், மிஸ்டர் ஸிம்மிங்டன். என்னால என்ன உதவி பண்ண முடியுமோ அதையெல்லாம் நான் பண்ணித்தர நீங்க அனுமதிக்கணும். குழந்தைகளைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம் நான் அவங்களைக் கவனிச்சுக்கறேன். குமுறியிருந்த வேலைக்காரங்களையும் நான் அமைதியாக்கிட்டேன். மேற்கொண்டு நான் ஏதாவது பண்ணணும்னா கடிதம் எழுதுவது, குறிப்புகள் பதிவது சொல்லுங்க. தயங்காம.’’

‘‘நீங்க ரொம்ப கனிவான பெண்மணி’’ என்றார் அவர் மறுபடியும்.

திரும்பும்போது எங்களைக் கவனித்துவிட்ட எல்ஸீ, ஹாலுக்கு வேகமாய் வந்தாள்.

முணுமுணுப்பான குரலில் மெதுவாய் கேட்டார்: "என்ன ஒரு கொடுமை நடந்திருக்கு பார்த்தீங்களா?"

அவளை நான் இப்போது பார்த்தபோது, மிகவும் நல்ல பெண்மணியாய் தோன்றினாள் எல்ஸீ. கனிவு, பாரத்தைத் தாங்கும் திறன், எமர்ஜென்ஸியில் கடும் நிலைமையை சமாளிக்கும் சாதுர்யம். அவளுடைய அகண்ட நீல நயனங்கள் அவற்றின் விளிம்பு நெடுகிலும் பிங்க் நிறமாகி யிருந்தன. அழுதிருக்கிறாள். தனது முதலாளியம்மாவின் மீது அவள் வைத்திருந்த நல்மதிப்பினை இது காட்டியது.

"உங்ககூட ஒரு நிமிஷம் பேசலாமா?" என்றாள் ஜோன்னா. "மிஸ்டர் ஸிம்மிங்டனுக்கு தொந்தரவு தர நாங்க விரும்பல."

விளங்கிக் கொண்டவராய் தலையசைத்த எல்ஸீ, ஹாலின் மறுபக்கத்திலிருந்த டைனிங் பகுதிக்கு எங்களை அழைத்துப் போனாள்.

"அவருக்கு இது தாளமுடியாத கொடுமை" என்றாள் அவள். "அப்படியொரு ஷாக். இப்படி ஒரு சம்பவம் சம்பவிக்கும்னு யாராவது நினைச்சுப் பார்த்திருப்பாங்களா? அவங்க கொஞ்ச நாளாவே விளங்கிக்க முடியாம இருந்தாங்க என்பதை இப்ப என்னால உணர முடியுது. தாள முடியாத நரம்பதிர்வு. அழுகை. அவங்க உடம்புல எந்தப் பிரச்சினையும் இல்லேனு டாக்டர் க்ரிஃபித் இப்பவும் சொல்வார்... ஆனாலும்கூட, இதுக்கெல்லாம் அவங்களோட ஆரோக்கியக் கோளாறுதான் காரணம்னு நான் நம்பினேன். பட்பட்டுனு பேசுவாங்க. எரிச்சலாயிடுவாங்க. சில சமயங்கள்ல அவங் களை எப்படி எடுத்துப்பதுன்னு தெரியாம நான் அல்லாடிப் போயிடுவேன்."

''நாங்க எதுக்கு இப்ப வந்திருக்கோம்னா'' என்று விஷயத்துக்குள் போனாள் ஜோன்னா. ''சில நாட்களுக்கு மேகனை எங்களுடன் வெச்சுக்கலாமானு கேட்க வந்தோம் - அதாவது, இதுக்கு அவ சம்மதிச்சா.''

எல்ஸீ ஆச்சரியப்பட்டவளாய் தோன்றினாள்.

''மேகன்?'' என்றாள் சந்தேகமாய். ''எனக்கு நிச்சயப் படுத்தி சொல்ல முடியலியே. அதாவது நீங்க எப்பவும் கனிவாத்தான் இருக்கீங்க ஆனா, அவ ஒரு விளங்கிக்க முடியாத படைப்பாச்சே. அவ என்ன பேசுவா என்ன பண்ணுவானு ஒருத்தரால சொல்ல முடியாது.''

ஜோன்னா, நிச்சயமற்று சொன்னாள்: ''ஒருவேளை இது உங்களுக்கு உபகாரமா இருக்குமோனு நாங்க நினைச்சோம்...''

''ஓ, வெல், நிச்சயமா உதவியாத்தான் இருக்கும். நான் கவனிக்க அந்த ரெண்டு பசங்க ஒரு பக்கம் இருக்காங்க. இப்போதைக்கு அவங்களை சமையக்காரன் பார்த்துக்கறான். இன்னொரு பக்கம் மிஸ்டர் ஸிமிங்டன் இருக்கார். இப்ப அவரை எத்தனை முடியுமோ அத்தனை அளவுக்கு கவனிச்சாக வேண்டியிருக்கு. இவை தவிர ஏகப்பட்ட சமாச்சாரங்கள். மேகனைக் கவனிக்க எனக்கு நேரமே அமையல. வீட்டு மாடில இருக்கும் பழைய அறைல அவ இருக்கானு நினைக்கிறேன். எல்லார்கிட்டேயிருந்தும் விலகிடணும்னு அவ நினைப்பதைப் போல தோணுது. உங்களுக்கு அவ என்ன சொல்வான்னு---''

ஜோன்னா என்னை சட்டென்று திரும்பிப் பார்த்தாள். நான் விரைவாய் அங்கிருந்து அகன்று படிகளிலிருந்தேன்.

வீட்டின் மாடியில் அந்த பழைய அறையிருந்தது. நான் கதவைத் திறந்து உள்ளே போனேன். கீழே, பின்னாலிருந்த தோட்டத்தைப் பார்த்தாற் போலிருந்த அறையின் திரைச் சீலைகள் இழுத்து விடப்படவில்லை. ஆனால் சாலையைப் பார்த்திருந்த இவ்வறையின் சீலைகள் இழுத்து மூடப் பட்டிருந்தன.

இருண்ட அறையின் மங்கிய வெளிச்சத்தில் நான் மேகனைப் பார்த்தேன். ஒரு தலையணையைத் தன்னோடு இறுக்கிக்கொண்டு எதிர்மூலையின் சுவரோடு சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள் அவள். ஆபத்தான ஒரு விலங்கு பதுங்கிக் கொண்டிருப்பதை எனக்கு நினைவூட்டி னாள் அவள். கிலியால் அறையப்பட்டவருக்கு சிறந்த உதாரணமாய் அவள் தோன்றினாள்.

“மேகன்” நான் சொன்னேன்.

நான் முன்னால் சென்றேன். பயந்துப் போன ஒரு விலங்குக்கு ஆதரவாய் ஒருவர் அமைத்துக் கொள்ளும் குரலினை, நான் அப்போது என்னையும் அறியாமல் கடைபிடித்தேன். அப்போது கையில் ஒரு கேரட்டையோ பிஸ்கெட்டையோ நான் பிடித்திருக்காதது ஒன்றுதான் குறை!

என்னைப் பார்த்து அவள் முறைத்தாள். ஆனால் நகர வில்லை... அவளுடைய முகபாவங்களும் மாற்றங்கொள்ள வில்லை.

“மேகன்” என்றேன் நான் மீண்டும். “நீ எங்ககூட வந்து கொஞ்ச நாள் தங்கியிருக்க விரும்புறியானு கேட்பதற்காக, நானும் ஜோன்னாவும் இப்ப வந்திருக்கோம்.”

அந்திப்பொழுது போன்ற மங்கிய வெளிச்சத்துக் குள்ளிருந்து அவளுடைய குரல், தண்ணீருக்குள்ளிருந்து பேசும் ஒருவருடைய குரலைப்போல வந்தது. ''உங்ககூட தங்கவா? உங்க வீட்டிலேயா?''

''யெஸ்.''

''அதாவது, என்னை இங்கிருந்து எடுத்துக்கிட்டுப் போயிடப் போறீங்களா, ஆங்? அப்படியா சொல்றீங்க?''

''யெஸ், மை டியர்.''

திடீரென்று அவள் உடல் முழுதும் நடுங்கத் தொடங் கினாள். அதைப் பார்க்கவே பயமாயிருந்தது... நெஞ்சைப் பிசைந்தது.

''ஓ, என்னைத் தூக்கிட்டுப் போயிடுங்க! ப்ளீஸ், ப்ளீஸ். ப்ளீஸ் செய்ங்க. இங்கே இருப்பது நரக வேதனையா இருக்கு.'' முகத்தில் அறையப்பட்டவளைப் போல இங்கு சில நொடிகள் நிறுத்தினாள், மலங்க மலங்க விழித்தபடி. பின் தொடர்ந்தாள்: ''என்னை இங்கிருந்து கூட்டிட்டுப் போயிடுங்க... இங்கே இருப்பது ஒரு நரக வேதனை... இது ஒரு நரகமே... நயவஞ்சகக் கூட்டம்...''

நான் அவளருகில் சென்றேன். மளமளவென்று அவள் விரல்கள் என் கோட்டினைக் கவ்விக் கொண்டன.

''நான் ஒரு கோழை. நான் எப்படியாப்பட்ட ஒரு கோழைன்னு இதுவரைக்கும் எனக்கே தெரியாம இருந்திருக்கு.''

''இட்ஸ் ஆல் ரைட்மா'' நான் சொன்னேன். ''நடந் திருக்கும் சம்பவம், அடிவரை உலுக்கக்கூடிய சம்பவந்தான். வா என்கூட.''

''நாம உடனே கிளம்பிட முடியுமா? ஒரு நிமிஷங்கூட காத்திருக்காம?''

''வெல், நீ சில சமாச்சாரங்களை எடுத்துக்கிட்டு வர வேண்டியிருக்கு.''

''என்ன அவை? ஏன்?''

''மை டியர் கேர்ள்'' என்ற நான், ''உனக்கு எங்களால படுக்கை தர முடியும். சாப்பாடு போட முடியும். துணிமணி கூட ஏற்பாடு பண்ண முடியும். ஆனா என்னுடைய டூத் ப்ரஷ்ஷை நான் உனக்குத் தர முடியாதே என்றேன்...''

அவள் மிக நுண்ணிய சிறிதான சத்தற்ற சிரிப்பை உதிர்த்தாள்.

''ஐ ஸீ. விளங்குது. இன்னிக்கு நான் ரொம்ப முட்டாளா நடந்துக்கிட்டிருக்கேன். நீங்க பொருட்படுத்தாதீங்க. நான் போய் தேவையானவற்றை பேக் செய்துக்கறேன். நீங்க நீங்க போயிட மாட்டீங்களே? வெயிட் பண்ணுவீங்கல்ல?''

''நான் கீழே இருப்பேன்.''

''நன்றி. ரொம்ப நன்றி. நான் குழப்படியா நடந்துக் கிட்டதுக்கு ஸாரி. ஆனா பாருங்க... ஒருத்தருடைய தாயார் மரணமடைவதைப் போன்றதொரு கொடுமை வேற இருக்காது.''

''எனக்குத் தெரியும்'' - நான் சொன்னேன்.

நான் அவளுடைய தோளில் நட்பாய் ஒரு தட்டு தட்டிய போது, அவள் நன்றிப்பெருக்கோடு ஒரு பார்வையை என்மீது வீசினாள். அங்கிருந்த ஓர் அறைக்குள் விரைந்து விட்டாள். நான் கீழே போனேன்.

''நான் மேகனைப் பார்த்தேன்'' என்றேன் நான். ''அவ வரா.''

''ஓ, இந்த நிலைமைல, இது ஒரு நல்ல சேதி'' ஆச்சரியமானாள் எல்ஸீ. ''தனக்குள்ளேயே புதைந்து போவதிலிருந்து அவ விடுபடுவா. அவ ஒருவகையான நரம்பதிர்வுப் பேர்வழி, தெரியுமா? ரொம்பக் கஷ்டம், அவ. மற்ற அனைத்து விஷயங்களையும் மண்டைல நான் போட்டுக்கிட்டு திண்டாடும் போது இவளையும் கவனிக்க வேண்டிய அவசியமில்லாதது எனக்கொரு பெரிய நிவாரணம். ரொம்ப நன்றிம்மா, மிஸ் பர்ட்டன். அவ ஓர் இடைஞ்சலா இருக்க மாட்டான்னு நம்பறேன். ஓ, டெலிபோன் அடிக்குது. நாந்தான் போய் பேசணும். மிஸ்டர் ஸிம்மிங்டன் இன்னும் நார்மலாகல.''

அவள் அறையை விட்டு வேகமாய் போனாள்.

ஜோன்னா சொன்னாள்: ''நிர்வகிப்பதுல, நம்பர் ஒன் தேவதை!''

''அதென்ன கீழ்த்தரமான சுவைல சொல்றே நீ?'' என்று சுட்டிக்காட்டினேன் நான். ''அவ நல்ல பொண்ணு. கனிவானவ. அஃப்கொர்ஸ், திறமையானவ.''

''ரொம்பவுமே. அது அவளுக்கேகூட தெரியும்.''

''தப்பர்த்தத்துல பேசற நீ, ஜோன்னா.''

''என்ன சொல்ல வரே நீ? 'ஏன்... அந்தப் பொண்ணு இந்த அளவுக்கு வேலை பண்ணக்கூடாதாறீனு கேட்க வரியா?''

''எக்ஸாக்ட்லி.''

''தங்கள் வேலைகளில் தாங்களே மிகவும் மகிழ்ந்துப் போகும் ஆட்களைக் கண்டால் என்னால தாங்கிக்கவே முடியாது'' என்றாள் ஜோன்னா. ''அது, என்னை அப்படி கடுப்பாக்கிடும். ஆங், மேகனை நீ எப்படிக் கண்டுபிடிச்சே?''

''இருட்டறையில தன்னைப் போட்டு அவ புதைச்சுக்கிட்டிருந்த நிலைல.''

''பரிதாபமான குழந்தை. அவகூட வர சம்மதிக்கிறாளா?''

''துள்ளிக் குதிச்சுட்டா - உடனே கிளம்ப.''

தொடர்ச்சியாய் ஒலித்த கனமான காலடிகள், மேகன் சூட்கேஸுடன் படியிறங்கி வருவதை சொல்லின. நான் வெளியே போய் பெட்டியை வாங்கிக் கொண்டேன். ஜோன்னா, என் பின்னாலேயே துரிதமாய் வந்து, அவசரமாய் சொன்னாள்:

''கம் ஆன். நான் ஏற்கெனவே நல்ல கமகம டீயை ரெண்டு முறை நிராகரிச்சாச்சு.''

நாங்கள் வெளியேறி காரை அடைந்தோம்.

''உள்ளே ஏறு'' நான் மேகனிடம் சொன்னேன்.

அவள் உள்ளே ஏறினாள். நான் தொடர்ந்து ஏறினேன். ஜோன்னா காரைக் கிளப்ப, நாங்கள் பிரயாணமானோம்.

லிட்டில் ஃபர்ஸ் சென்றடைந்த நாங்கள் வரவேற்பறைக்கு போனோம்.

மேகன் ஓர் இருக்கையில் உட்கார்ந்து வெடியென அழ ஆரம்பித்தாள். ஒரு சிறு குழந்தையைப் போல அவள் சப்தமாய் அழுதாள். இதற்கு ஒரு தீர்வு தேடி நான் அறையை

விட்டு வந்தேன். ஜோன்னா நின்று கொண்டிருந்தாள் என்ன செய்வதென்று தெரியாமல் என்று நினைக்கிறேன்.

தற்சமயம் தொண்டையடைத்த நிலையில் ''இப்படி நான் நடந்துக்கிட்டதுக்கு, மன்னிச்சுக்கங்க'' என்றாள் மேகன். ''முட்டாள்தனமா பண்றேன்.''

''அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாது'' என்றாள் ஜோன்னா கனிவாய். ''இந்தா, இன்னொரு கைக்குட்டை.''

சரியான பொருளைத்தான் என் சகோதரி கொடுத்திருக் கிறாள் என எண்ணிய நான் மீண்டும் அறைக்குள் வந்தேன், கையில் ஒரு கோப்பையோடு.

''என்னது இது?''

''மது ரஸம்.''

''அப்படியா? உண்மையா?'' மேகனின் கண்ணீர் சட்டென்று நின்று போனது. ''நான் இதுவரை மது ரஸம் குடிச்சது கிடையாது.''

''எல்லாத்துக்கும் ஒரு துவக்கம் நேரிடும்'' என்றேன் நான்.

அவளுக்குக் கொடுக்கப்பட்டதை கொஞ்சமாய் சப்பினாள் அவள். பிறகு பிரகாசமான ஒரு சிரிப்பு அவளது முகத்தில் டாலடித்தது. ஒரே மடக்கில் கோப்பையை அவள் வறட்சியாக்கினாள்.

''இட் ஈஸ் லவ்லீ'' என்றாள் அவள். ''இன்னொரு கோப்பை கிடைக்குமா?''

''நோ'' என்றேன் நான்.

''ஏன் கூடாது?''

''இன்னும் பத்து நிமிஷத்துல உனக்கே தெரிய வரும்.''

''ஓ!''

மேகன் அவளது கவனத்தை ஜோன்னா பக்கமாய் திருப்பினாள்.

''இப்படிக் கத்திக்கதறி நான் உணர்ச்சிவயப்பட்டதற்கு, ப்ளீஸ்... என்னை நீங்க மன்னிக்கணும். ஏன் அப்படி செஞ்சேன்னு தெரியல. இங்கே இருப்பதுல நான் கொள்ளை சந்தோஷமடையும்போது அப்படி நடந்துக்கிட்டிருக்கக் கூடாது.''

''அது பரவாயில்ல'' என்றாள் ஜோன்னா. ''உன்னை இங்கே இருக்க வெப்பதுல எங்களுக்கு சந்தோஷம்.''

''நிஜமான சந்தோஷமா அது இருக்க முடியாது. யெஸ். உங்க பக்கத்திலிருந்து காட்டப்படும் கனிவு, இது. ஆனாலும், மிக்க நன்றி.''

''நன்றின்னெல்லாம் சொல்லாதே'' என்றாள் ஜோன்னா. ''அது என்னை தர்மசங்கடமாக்கும். உன்னை இங்கே வெச்சிருப்பதுல எங்களுக்கு சந்தோஷம்னு நான் சொன்னது, சர்வ நிஜம். நானும் ஜெர்ரியும் பேசி முடிவெடுத்தது இது. ரெண்டு பேரும் ஒரே முடிவை ஒண்ணா சொன்னோம்.''

''ஆனா இப்ப'' என்ற நான், ''பல ருசிகரமான விஷயங் களை பேசி என்ஜாய் பண்ணப் போறோம். இலக்கியம், கொனெரில், ரீகன், ஷேக்ஸ்பியர்...'' என ஆரம்பித்தேன்.

மேகனின் முகம் பிரகாசமானது. துள்ளியெழுந்தவளா னாள் அவள். உரையாடலில் குஷியாய் அதிகம் பேசியது அவள்தான்.

நான் கேட்டேன்: ''எப்படியிருக்கு மது ரஸம்?''

''நல்லாவே. தேங்க் யூ.''

''மயக்கமே இல்லையா? ரெண்டு ஜோன்னா தெரியல?''

''ம்ம். இன்னும் ரொம்ப நேரம் நிறைய விஷயங்களையெல்லாம் உங்ககூட பேசணும் போல இருக்கேன் நான்.''

''அற்புதம்'' என்றேன் நான். ''இனி நீ எங்களுடைய வாடிக்கையான மது ரஸ கூட்டாளி! அதாவது இது உன்னுடைய முதல் மது ரஸ அனுபவமாயிருக்கும் பட்சத்தில்!''

''ஓ, இது முதல் தடவையே.''

''தலைசுற்றாத குணாதிசயம், வாவ்... ஒரு பெரிய சொத்தாக்கும்'' என்றேன் நான்.

ஜோன்னா, மேகனை அழைத்துக் கொண்டு மாடிக்குப் போனாள்.

பேட்ரிட்ஜ் உள்ளே வந்தாள். அவள் அசதியாய் இருந்தாள். லஞ்சுக்கு இரண்டு கப் கஸ்டார்டுகள் செய்திருப்பதாய் சொன்ன அவள், அதை என்ன செய்யலாம் என்று கேட்டாள்.

# அத்தியாயம் 6

## I

மரண விசாரணை மூன்று நாட்களுக்கு பிறகு நடத்தப் பட்டது. வழக்கமான முறையில் அனுசரிக்கப்பட்ட இதில் நிறைய நபர்கள் வந்து கூடியிருந்தார்கள்.

மிஸஸ் ஸிம்மிங்டன்னின் மரணம் மூன்று மணிக்கும் நான்கு மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நடந்ததாய் முடிவாகியது. அவர் மட்டுந்தான் வீட்டில் தனியாய் இருந்திருக்கிறார். பணியாட்களுக்கு அன்று ஓய்வு தினம். ஸிம்மிங்டன் அவரது அலுவலகத்தில். எல்ஸீ ஹாலண்ட்டும் பிள்ளைகளும் வெளியே பொடிநடையில். மேகன், சைக்கிள் ஓட்டத்தில்.

மதிய தபாலில் கடுதாசி வந்திருக்க வேண்டும். மிஸஸ் ஸிம்மிங்டன் அதனைத் தபால் பெட்டியிலிருந்து எடுத்திருக்க வேண்டும், படித்திருக்க வேண்டும் பிறகு ஒருவித கலவரத்தில் அவர் தொட்டிகள் கொண்ட தோட்டத்துக்குப் போயிருக்கிறார், பூச்சிகளுக்காக அங்கு வைக்கப்பட்டிருந்த ஸயனைடினை கொஞ்சம் எடுத்திருக்கிறார், தண்ணீரில்

அதனைக் கரைத்து எடுத்துக்கொண்டு, 'என்னால இனிமே முடியாது...' எனும் களேபர வார்த்தைகளை எழுதி வைத்துவிட்டு, குடிக்கிறார்.

ஓவன் க்ரிஃபித் மருத்துவ சாட்சியங்களைத் தந்தார். மிஸஸ் ஸிம்மிங்டன் நரம்பதிர்விலும் சத்தற்றும் இருந்ததாய் எங்களிடம் சொன்னதையே அங்கும் சொன்னார். நீதிபதி நாகரிகாகவும் இங்கிதம் தெரிந்த இனிமையானவராகவும் நடந்து கொண்டார். யார் அந்த பொய்மையும் வஞ்சகமும் நிறைந்த மொட்டைக் கடுதாசியினை எழுதினாரோ அவர் நீதிதேவதைக்கு முன்னால் ஒரு கொலைகாரனாகவே நிற்கின்றார் என்றார் அவர். அந்தக் களவன் யாரென்பதை கூடிய சீக்கிரத்திலேயே கண்டுபிடித்து அவன் அல்லது அவள் மீது கடும்நடவடிக்கையை போலீஸ் எடுக்கும் என்று அந்த இலாகா மீது நம்பிக்கை தெரிவித்தார். இத்தனை துவேஷமும் வஞ்சகமும் நிறைந்து நடத்தப்பட்டிருக்கும் குரூரச் செயலுக்கு சட்டத்தின் இறுக்கமான கிடுக்கிப்பிடி போடப் பட வேண்டும் என்றார். அவரது வழிகாட்டுதவின் பேரில், மரண விசாரணை குழு தீர்ப்பினை எழுதியது. தாற்காலிகமாக புத்தி செயலிழந்த நிலையில் நடந்துள்ள தற்கொலை.

நீதிபதி அவரால் இயன்ற அருமையான பணியை ஆற்றினார். ஓவன் க்ரிஃபித்தும் சிறப்பாய் தன் பங்கினைச் செய்தார். ஆனால், இதற்குப் பிறகு, பரபரப்பாய் கூடியிருந்த கிராமத்துப் பெண்களின் கூட்டத்தில் நான் அகப்பட்டுக் கொண்டபோது, எனக்கு இப்போது வெகுவாய் பரீட்சயமாகி விட்ட அதே பல்லவியை, அந்த ஒப்பேறாத பெண்கள் பாடுவதைக் கேட்க வேண்டியதாயிற்று: 'நெருப்பில்லாம புகையாது அவ்ளோதான் நான் சொல்வேன்!' மற்றும்,

'ஏதாவது இருக்கணும்கிறேன். இல்லேனா மளமளனு தன்னையேவா ஒருத்தி கொன்னுப்பா...''

அக்கணத்தில் நான் லிம்ஸ்டாக்கை வெறுத்தேன். அதன் குறுகிய எல்லைகள், அதிகரிக்கும் கிசுகிசு, பெண் கொண்டைகள், என அனைத்தையும் வெறுத்தேன்.

## II

விஷயங்களை வரிசைக்கிரமாக ஞாபகத்தில் வைத்துக் கொள்வது சிரமம். அடுத்து இடம்பெற்ற முக்கியமான மற்றும் குறிப்பிட வேண்டிய நிகழ்வு, அஃப்கொர்ஸ் சூப்பரின்டெண்டெண்ட் நாஷின் வருகையாகும். ஆனால் இதற்கு முன்னாலேயே சமூகத்தின் பலதரப்பட்ட மக்கள் எங்களை வந்து சந்தித்ததாய் ஞாபகம். ஒவ்வொன்றும் அவற்றின் வழியில் இன்ட்ரஸ்டிங்காக இருந்தது. மேலும் இந்த சமாச்சாரத்தில் இடம்பெற்றுள்ள மக்களின் குணாதிசயங்கள் மற்றும் நடத்தைகளில் கொஞ்சம் ஒளிகூட்டும் விதமாயும் அமைந்தது.

மரணவிசாரணை முடிந்த மறுநாள் காலையில் ஐமீ க்ரிஃபித் வந்தார். வழக்கம்போல் ஆரோக்கியம் களை கட்டும் வீச்சுடனும், இளமை வேகத்துடனும் ததும்பினார் அவர். வந்த கணத்தில் உடனடியாய் என்னை நிமிர வைத்து விடுவதிலும் வழக்கம்போலவே ஜெயித்தார். ஜோன்னாவும் மேகனும் வெளியே போயிருந்ததால் நான்தான் அவரை வரச்சொல்ல வேண்டியிருந்தது.

''குட் மார்னிங்'' சொன்னார், மிஸ் க்ரிஃபித். ''மேகன் ஹண்ட்டரை நீங்க இங்கே கூட்டி வந்து வெச்சிருப்பதா கேள்விப்பட்டேன்.''

''நாங்க கூட்டி வந்திருக்கோம்.''

''நிச்சயமா நீங்க ரொம்ப நல்லவரே. ஆனா அவ உங்களுக்கு ஓர் இடைஞ்சலா இருக்கணுமே. நீங்க விரும்பினால் அவ வந்து எங்ககூட இருக்கட்டும் இதைச் சொல்லத்தான் நான் இங்கே வந்தேன். அவளை நான் சிறந்த முறைல வீட்டுல பயன்படுத்திப்பேன் - யெஸ்.''

முழு வெறுப்புடன் நான் மிஸ் க்ரிஃபித்தை பார்த்தேன்.

''என்ன கனிவு உங்களுக்கு'' என்றேன். ''ஆனா அவளை இங்கே வெச்சுக்க நாங்க விரும்பறோம். அவ அசட்டையா ஜாலியா வலம் வந்துக்கிட்டிருக்கா.''

''அவளுக்கு அலட்சியமா சுத்தறது ஒண்ணுதான் தெரியும். பாவம், அவளை மாதிரி அரைக் கிறுக்கால வேற என்ன பண்ண முடியும், சொல்லுங்க...?''

''எனக்கென்னவோ அவ ஒரு புத்திசாலிப் பொண்ணாத் தெரியறா'' நான் சொன்னேன்.

ஐமீ க்ரிஃபித் என்னைக் கடுமையாய் முறைத்தார். ''அவளைப் பற்றி இப்படி வர்ணிப்பதை என் வாழ்க்கையிலேயே முதன்முறையா நான் இங்கேதான் கேக்கிறேன். அவகிட்டே பேசியிருக்கீங்களா? என்னவோ நீங்க பேசுவதையே அவ புரிஞ்சுக்க முடியாத மாதிரியில்ல உங்களை முறைச்சுப் பார்ப்பா!''

''ஒருவேளை அவளுக்கு இண்ட்ரஸ்ட் இல்லாம இருக்கலாம்'' நான் சொன்னேன்.

''அப்படினா, அவ தலைக்கனம் பிடிச்சவ'' - ஐமீ க்ரிஃபித் சொன்னார்.

"அப்படி இருக்கலாம். ஆனா அரைக் கிறுக்கு கிடையாது."

மிஸ் க்ரிஃபித் கூர்மையாய் பிரகடனம் பண்ண ஆரம்பித்தார்:

"கவனிங்க. மேகனுக்கு இப்ப உடனடித் தேவை - கடின உழைப்பு. வாழ்க்கைல அவளுக்கு ஈடுபாட்டை உண்டாக்க, ஏதாவது ஒண்ணு. இது ஒரு பெண்ணுக்குள்ள எத்தனை வேறுபாட்டை உண்டாக்கித் தரும்னு உங்களுக்கு தெரியாது. எனக்கு பெண்களைப் பற்றி நிறைய தெரியும். சாரணியரா சேர்வதாலேயே ஒரு பெண்ணுக்குள்ளே எத்தனை மாற்றங்கள் உண்டாகும்னு கேட்டால் நீங்க ஆச்சரியப் பட்டுப் போயிடுவீங்க. ஒண்ணும் பண்ணாமல் சும்மா சுற்றிச்சுற்றி வரும் வயசை கடந்தவ, மேகன்."

"அதைத் தவிர வேற எதையும் செய்வது, அவளுக்கு இதுவரைக்கும் கஷ்டமாவே இருந்திருக்கு" என்றேன் நான். "ஏதோ இவளுக்கு வயசு 12 என்பதைப் போலவே வளர்த்திருக்கார் மிஸஸ் ஸிம்மிங்டன்."

மிஸ் க்ரிஃபித் பொருமினார்.

"எனக்கும் தெரியும். இப்படிப்பட்ட அவங்களுடைய மனோநிலையை என்னால தாங்கிக்க முடியாது. பாவப்பட்ட அவங்க இப்ப இறந்தாச்சு. அதனால விமர்சிப்பது தப்பு. ஆனா, அவங்களை, ஒரு பத்தாம்பசலின்னுதான் நான் வகைப்படுத்துவேன். வீட்டுக்குள்ளேயே கிடக்கும் முட்டாள். ப்ரிட்ஜ் சீட்டாட்டம், அவங்களுடைய கிசுகிசுக்கள், மற்றும் குழந்தைகள் - இதுலகூட அந்த ஹாலண்ட் பொம்பிளைத் தான் புள்ளைங்க ரெண்டு பேரையும் கவனிச்சுக்கிட்டது. மன்னிக்கணும், எனக்கு அவங்களைப் பற்றி எப்பவுமே

பெரிய அபிப்ராயம் கிடையாது. ஆயினும், உண்மையை நான் சந்தேகிக்கல.''

''உண்மை?'' - நான் கூர்மையாய் சொன்னேன்.

மிஸ் க்ரிஃபித் முகம் சிவந்தார்.

''நான் மிஸ்டர் ஸிம்மிங்டன்னுக்காக ரொம்பவுமே வருந்தறேன். மரணவிசாரணை போன்ற மன்றங்கள்ல எல்லா கண்றாவியும் வெளியே வந்துதானே ஆக வேண்டியிருக்கு'' என்றார் அவர். ''பாவம், இதெல்லாம் அவருக்கு கொடுமையா இருக்கும்.''

''அந்தக் கடுதாசியில சொல்லப்பட்டவற்றில் ஒரு துளி நிஜம் கிடையாதுனு அவரே சொன்னதை நீங்களே கேட்டீங் களே அவர் நிச்சயம் நம்பிக்கையா இருக்கார்னுதானே சொன்னார்?''

''நிச்சயமா! அவர் அப்படித்தான் சொன்னார். ஒத்துக்கறேன். நம்பாமல்? தனது மனைவிக்காக ஒரு கணவன் பரிஞ்சு பேசத்தானே செய்வான். டிக்கும் அப்படித்தான் செய்வார்.'' சற்று நிறுத்திவிட்டு அவர் விளக்கினார்: ''கவனிங்க. எனக்கு மிஸ்டர் டிக் ஸிம்மிங்டன்னைப் பல வருடங்களா தெரியும்.''

நான் சற்று ஆச்சரியமானேன்.

''ரியலி?'' என்றேன். ''சில வருடங்களுக்கு முன்னாலதான் இங்கே ப்ராக்டிஸ் பண்ண வந்ததா உங்க சகோதரர் சொன்னார்.''

''ஓ யெஸ்... ஆனா நாங்க இருந்த வடக்குப் பகுதியில வந்து டிக் தங்குவதுண்டு. அவரை பல வருடங்களா எனக்குத் தெரியும்.''

சுலபமாய் ஆண்கள் எடுக்க முன்வராத முடிவுகளுக்குள் பெண்கள் சட்டென்று குதித்து விடுகின்றார்கள். இந்நிலையில், சட்டென்று மிருதுவாகிப் போன ஐமீ க்ரிஃபித்தின் குரல், என் மூளைக்குள் சில எண்ணங்களை போட்டது.

நான் ஐமீயை ஆர்வமாய் பார்த்தேன். அவர் தொடர்ந்து கொண்டிருந்தார் இன்னமும் அதே மிருதுவான தொனியில்:

''எனக்கு டிக்கை ரொம்ப நல்லாத் தெரியும்... அதிகம் பெருமைப்பட்டுக் கொள்ளும் ஒரு மனிதர் அவர். யாருடனும் பேசாத வகை. ஆனால் அதிக பொறாமை கொள்ளும் ஆண்களை சேர்ந்தவர் அவர்.''

''மிஸஸ் ஸிம்மிங்டன் அந்த மொட்டைக் கடுதாசியை இவரிடம் படித்துக்காட்ட ஏன் பயந்திருக்காங்க என்பதை இது விளக்கிடுதே'' என்றேன் நான். ''அவங்க என்னதான் மறுத்துப் பேசிக் கெஞ்சினாலும், ஒரு பொறாமை குணமுள்ள ஆளாக இருப்பதால், இவர் அதையெல்லாம் நம்பவே மாட்டார்னு அவங்க நினைச்சிருக்கலாம்.''

மிஸ் க்ரிஃபித் என்னைக் கோபமாயும் கடுப்பாயும் பார்த்தார்.

''அடக்கடவுளே'' என்றார். ''உண்மையேயில்லாமல் கூறப்படும் ஒரு குற்றச்சாட்டுக்காக ஒரு பொம்பிளை ஓடிப் போய் பொட்டாஷியம் ஸயனைடினை ஆன்னு வாய்திறந்து மளமளனு சாப்பிடுவாள்னா நீங்க நினைக்கிறீங்க?''

''இது சாத்தியம்னு நீதிபதியே நினைச்சதைப் போல இருந்ததே. உங்க ப்ரதர்கூட---''

ஐமீ இங்கு இடைபுகுந்தார்:

‘‘ஆண்கள் எல்லாரும் ஒரே வகைதான். மட்டு மதிப்பினை எப்படியாவது காப்பாத்திடணும். ஆனா அதுல கூறப்பட்டிருப்பதை நான் நம்பறேன் என்பதை மட்டும் நீங்க கவனிக்க மாட்டேங்கறீங்க. உண்மையில்லாத காரணங் களைக் கூறி மொட்டைக் கடுதாசியொன்னு ஒரு பொம் பிளைக்கு வந்தால், அதைப் பார்த்து அவ சிரிப்பா. அப்புறமா குப்பைக் கூடைல போட்டுடுவா. அப்படித்தான் நான்---’’ திடீரென்று இங்கு நிறுத்திய அவர், பிறகு முடித்தார்: ‘‘செஞ்சிருப்பேன்.’’

ஆனால் நான் அந்த ‘நிறுத்தலை’ கவனித்து விட்டேன். அவர், ‘அப்படித்தான் நான் செஞ்சேன்றீ என்றுதான் சொல்ல வந்தார் என்பதில் நான் உறுதியாய் இருந்தேன்.’’

நானும் விடுவதாயில்லை. ‘‘அப்படியா விஷயம்’’ என்றேன் நான் உல்லாசமாய். ‘‘ஆக உங்களுக்கு ஒண்ணு வந்திருக்கு.’’

பொய் சொல்ல விரும்பாத வகை பெண், ஐமீ. ஒரு நிமிடம் மவுனமான அவர், பிறகு சொன்னார்: ‘‘வெல், யெஸ். ஆனா இது என்னை கவலைப்பட்டு அரிக்குமளவுக்கு நான் விடல!’’

அவதிப்படும் சகநோயாளியாய் கேட்டேன்: ‘‘கீழ்த் தரமான கடிதம்?’’

‘‘நேச்சுரலி. இக்கடிதங்கள் அப்படித்தானிருக்கும். கிரகணம் பிடிச்ச அந்த மண்டையுடைய தாகங்கள். அதிலிருந்த சில வாசகங்களை நான் படித்தேன். என்னன்னு புரிஞ்சுக்கிட்டேன். அதை உடனடியா குப்பைத் தொட் டிக்கு அனுப்பிட்டேன்.’’

‘‘அதை ஏன் நீங்க போலீஸுக்கு எடுத்துக்கிட்டுப் போகலாம்னு நினைக்கல?’’

"அப்ப நினைக்கல."

'நெருப்பில்லாம புகையாது!' என்று சொல்லிவிட வேண்டும் என்றொரு உத்வேகம் எனக்குள் உந்தியது. ஆனால் என்னை நானே கட்டுப்படுத்திக் கொண்டேன். நிலைமையைக் கட்டுக்குள் வைக்க, பேச்சினை நான் மேகன் பக்கம் திசைதிருப்பினேன்.

"மேகனுடைய நிதி நிலைமை பற்றி உங்களுக்கு ஏதாவது ஐடியா இருக்கா?" - நான் கேட்டேன். "வம்புன்னு நினைக்காதீங்க. அவ வாழ அவளே உழைக்கும் தேவையிருக்கான்னு நான் ஆச்சரியப்பட்டதுண்டு."

"அப்படியோர் அத்தியாவசியத் தேவையிருப்பதா எனக்குத் தெரியல. அவ அப்பா வழி அம்மா பாட்டி இவளுக்கு ஒரு சின்ன வரும்படி வருமாறு வசதி செய்து வைத்திருப்பதாய் நினைக்கிறேன். எப்படியிருந்தாலும், இவளுக்கு விட்டுவைக்க இவளோட அம்மாவுக்கு எதுவும் இல்லாவிட்டாலும், நிச்சயமா இவளுக்கு இருக்க இடமும் வசதிகளும், மிஸ்டர் ஸிம்மிங்டன் செய்து கொடுப்பார். நோ இது கொள்கை சம்பந்தப்பட்டது."

"என்ன கொள்கை?"

"உழைப்பு, மிஸ்டர் பர்ட்டன். ஆணாகட்டும், பெண்ணாகட்டும்... உழைப்புக்கு இணையாய் வேறு ஒன்றும் கிடையாது. மன்னிக்க முடியாத ஒரு குற்றம் வெறுமனே கிடப்பது. அதாவது, தெண்டச்சோறு."

"சர் எட்வர்ட் க்ரே" என நான் ஆரம்பித்தேன். "பின்னாளில் நம்முடைய வெளியுறவு அமைச்சரா வந்தவர். இவரை, எதுக்கும் பிரயோஜனமில்லாத ஒரு வீண் அப்படின்னு

பட்டம் கட்டி ஆரம்பத்துல ஆக்ஸ்போர்டிலிருந்து துரத்தி யிருக்காங்க, தெரியுமா? வெலிங்டனின் சீமாட்டி... இவரும் பாடப்புத்தகங்களில் கொஞ்சமும் ஈடுபாடு காட்டாமல் டல்லா இருந்த ஒரு மாணவர்னு கேள்விப்பட்டிருக்கேன். அம்மாவுடன் கிச்சனிலிருக்கும்போது அங்கு இயங்கிய கெட்டிலைப் பார்த்து ஸ்டீபன்ஸன் ரயிலைக் கண்டுபிடிச் சிருக்கார்... அப்படி அவர் ஒண்ணும் படிக்காம அம்மா முந்தானையைப் பிடிச்சுக்கிட்டு சுத்திக்கிட்டு அலையலைனா, இப்ப நாம வசதியா போகும் ரயில் வண்டி கிடைச் சிருக்காது.''

ஐமீ முகஞ்சுளித்தார். பொருமினார்.

''நம்முடைய மிகப்பெரிய கண்டுபிடிப்புகள் மற்றும் மிகச்சீரிய வெற்றிகள் எல்லாம், அந்தந்த வித்தகர்கள் வெறுமனே திரிந்து சிந்தித்ததால் விளைந்தவையே என்பது என்னுடைய அசைக்க முடியாத தியரி'' என்றேன் நான். ''மனித மூளை மற்றவர்களின் சிந்தனைகளால் ஊட்டப்படும் போது, வசதியாய் பேசாமல் இருந்து விடுகின்றது. ஆனால், அதே சமயம், அத்தகைய ஊட்டச்சத்து அதற்கு மறுக்கப்படும் போது, வேறு வழியின்றி அது தானாய் சிந்திக்கத் துவங்கும். நினைவிருக்கட்டும், அந்த சிந்தனைதான் ஒரு நிஜமான சிந்தனை. அது தரும் முடிவுகள் விலைமதிப்பற்றவைகளாக அமையலாம்.

''மேலும்'' என்று நான் தொடர்ந்தேன், இன்னொரு முறை முகஞ்சுளிக்க ஐமீக்கு வாய்ப்பளிக்காமல். ''இதுல கலைநயம் மிக்கதொரு முக்கியமான பக்கமும் இருக்கு.''

என் டெஸ்க்கில் எனக்கு மிகவும் பிடித்த ஒரு சைனா ஓவியம் இருக்கும். அதனை நான் எடுத்து வந்தேன். அது ஒரு

முதியவரின் ஓவியம். சும்மா உட்கார்ந்திருப்பார் அவர். வேலை ஒன்றும் அவருக்கு கிடையாது. கையிலும் காலிலும் அவர் கட்டியிருக்கும் கயிற்றினால் அருகிலிருக்கும் ஒரு தொட்டிலை அவர் ஆட்டிக் கொண்டிருப்பார்.

"சைனா பொருட்காட்சியில கிடைச்சது இது" என்றேன் நான். "இது என்னை ஆச்சரியப்படுத்திச்சு. இதை நான் உங்களுக்கு இப்ப அறிமுகப்படுத்தறேன். 'ஒரு முதியவர் தனிமையின் ஆனந்தத்தைக் கொண்டாடுகின்றார்'-இதுதான் இதன் தலைப்பு."

என்னுடைய லவ்லீ ஓவியத்தால் ஐமீ கவரப்படவில்லை. "ஓ, நமக்கு சைனாக்காரங்கள்லாம் எப்படிப்பட்டவங்கனு நல்லாவே தெரியும்!" என்றார் அவர்.

"இது உங்களைக் கவரல?" - நான் கேட்டேன்.

"வெளிப்படையா சொல்றேனே... நோ. எனக்கு கலைல எல்லாம் பெருசா ஈடுபாடு கிடையாது. சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க மிஸ்டர் பர்ட்டன்... ஒரு சராசரி ஆடவனின் போக்குத்தான் உங்க போக்கும். பெண்கள் வேலை செய்தால் எனும் எண்ணத்தையே நீங்க விரும்பல - அவங்க ஆண்களுடன் போட்டிக்கு வருவதை உங்களால அனுமதிக்க முடியல---"

நான் பின்வாங்கினேன். நான் ஒரு பெண்ணாதிக்கப் பெண்மணியை எதிர்கொண்டிருக்கிறேன். ஐமீ தன்னிலை இழந்திருந்தார். அவரது முகம் வெகுண்டது - சிவந்தது.

"பெண்களுக்கென்று ஒரு பணி இருப்பதை உங்களால ஜீரணிக்க முடியல. என் பெற்றவர்களுக்கும் அப்படித்தான் இருந்தது. நான் டாக்டருக்கு படிக்கணும்னு இருந்தேன். என்

குறிக்கோளே அதுதான். ஆனா அவங்களால என் படிப்புக்கு ஃபீஸ் கட்ட முடியாதுன்னுட்டாங்க. ஆனா ஓவனுக்கு உடனடியா கட்டினாங்க. நான் நிச்சயமா என் சகோதரனை விட ஒரு சிறந்த டாக்டரா விளங்கியிருக்க முடியும்.''

''இதுக்காக நான் வருந்தறேன்'' என்றேன் நான். ''இதை உங்களால எதிர்கொண்டிருக்கவே முடியாது. ஒருத்தர், ஒரு சமாச்சாரத்தை பண்ணணும்னு நினைத்தால்---''

அவர் வேகமாய் தொடர்ந்தார்:

''ஓ, இப்ப அதையெல்லாம் நான் மீறி வந்துட்டேன். எனக்கு கட்டுக்கடங்கா மனோபலமுண்டு. என் வாழ்க்கை பரபரன்னு ஓட்டத்தோட இருக்கு - அதாவது, உயிரோட்டத் தோட. லிம்ஸ்டாக்கின் மிகுந்த சந்தோஷமான பிரஜை நான். ஏகப்பட்டது இருக்கு, செய்ய. ஆனா பெண்களுக்கு வீடுதான் ஒரே கதினு யாராவது சொன்னால் அப்ப மட்டும் நான் ஆயுதந்தாங்கியப் போராளியா ஆகிடுவேன்.''

''நான் உங்களைக் காயப்படுத்தியிருந்தால், மன்னிக்கற என்றேன் நான். ''இது கிடையாது என்னுடைய முக்கியமான பாயிண்ட். என்னால மேகனை வீட்டு வேலைகள் எதிலும் பொருத்திப் பார்க்கவே முடியல.''

''பாவப்பட்ட குழந்தை. எதிலும் அவ பொருந்த மாட்டா.'' ஐமீ குளிர ஆரம்பித்திருந்தாள். அவள் மறுபடியும் சாதாரணமாய் பேச ஆரம்பித்திருந்தாள். ''அவர் அப்பா இருந்தார் இல்ல---''

அவர் இங்கு நிதானிக்க நான் முகத்தில் அறைந்தாற்போல் சொன்னேன்:

“எனக்கு எதுவும் தெரியாது. எல்லாரும் உங்களைப் போலத்தான், ‘அவர் அப்பா இருந்தார் இல்ல---’னு ஆரம்பிப் பாங்க... உடனே குரலை நிறுத்திப்பாங்க. அவ்ளோதான். அப்படி அந்த மனுஷன் என்னதான் பண்ணினான்? இன்னும் இருக்காரா அவர் உயிரோட?”

“எனக்குத் தெரியாதுப்பா. இந்த விஷயத்துல நானும் அரைகுறை ஞானத்தோடத்தான் இருக்கேன். ஆனா, அவர் நிச்சயமா ஒரு கெட்ட மூட்டைதான். சிறை போயிருக்கார்னு நினைக்கிறேன். அசாதாரணமா நடந்துகொள்வதில் முதன்மையானவர். இதனாலத்தான் மேகனும் ஒரு ‘தேடலுடனேயே’ அலைவது என்னை ஆச்சரியப்படுத்தல.”

“மேகன்” என ஸ்ட்ராங்காய் ஆரம்பித்த நான் “தன்னுடைய முழுக்கட்டுப்பாட்டில்தான் இருக்கா. நான் ஏற்கெனவே சொன்னதைப் போல அவளை நான் ஒரு புத்திசாலிப் பெண்ணாத்தான் கருதறேன். என் சகோதரியும் இப்படியேதான் நினைக்கிறா. அவளை ஜோன்னாவுக்கு ரொம்ப பிடிக்குது” என்றேன்.

“இங்கே இருப்பது உங்க சகோதரிக்கு பெரிய ‘போரான’ ஒரு விஷயமா இருக்கணும்” என்றாள் ஐமீ.

இப்படி அவர் சொல்லும்போதே நான் வேறொன்றையும் உணரலானேன். ஐமீ க்ரிஃபித் என் சகோதரியை விரும்ப வில்லை. அவளுடைய மிருதுவான குரலின் தொனியில் அது தெறித்தது.

“உலகத்தோட ஒத்தே வராத இந்த இடத்தை நீங்க ரெண்டு பேரும் எப்படி சகிச்சுக்கிட்டு இருக்கப் போறீங் கன்னு நாங்கள்லாம் வியந்திருக்கோம்...”

இது ஒருவகையில் ஒரு கேள்வி. நான் பதில் தந்தேன்.

"டாக்டரின் கட்டளை. மிகவும் அமைதியா, வில்லங்கமா எதுவும் நடக்காத ஒரு பகுதில போய் நான் இருக்கணும்." நான் சற்று நிறுத்தி விட்டு கூடுதலாய் சொன்னேன்: "இப்பப் பார்த்தால் லிம்ஸ்டாக் விஷயத்துல இது உண்மையில்லைனு தெரியுது."

"நோ. நோ. அப்படி நினைக்காதீங்க."

சற்று கவலையாய் தெரிந்த அவர், கிளம்புவதற்காக எழுந்துக் கொண்டார்.

"இதுக்கு ஒரு முற்றுப்புள்ளி வெச்சாகணும். இந்த வகைவகையான மொட்டைக் கடுதாசிகளுக்கு! இதை இப்படியே வளர நாம அனுமதிச்சுக்கிட்டிருக்க முடியாது."

"இதுல போலீஸ் ஒண்ணும் பண்ணலியா?"

"என்னவோ பண்ணுதுன்னு நினைக்கிறேன். ஆனா, இதை நாமளே நம்ம கைல எடுத்துக்கிட்டு ஒரு கை பார்த்துடணும்."

"போலீஸைப் போல நமக்கு பலங்கள் கிடையாது."

"முட்டாள்தனமான பேச்சு இது! நமக்கு அளவுக்கதிக மாகவே சாதுர்யமும் புத்திசாலித்தனமும் இருக்கு. கொஞ்சமா வைராக்கியம் வேணும், அவ்ளோதான்."

பட்டென்று குட்-பை சொல்லிவிட்டு அவர் போய் விட்டார்.

ஜோன்னாவும் மேகனும் பொடிநடை போய்விட்டுத் திரும்பியபோது மேகனிடம் நான் எனது விருப்பமான சைனா ஓவியத்தைக் காட்டினேன். அவளது முகம் பிரகாச மானது. "தெய்வீகமானது இது, இல்ல?" என்று கேட்டாள்.

''என் கருத்தும் அஃதே'' என்றேன் நான் சந்தோஷமாய்.

எனக்கு மிகவும் பரிச்சயமான வகையில் அவளது நெற்றியில் சுருக்கங்கள் விளைந்தன.

''ஆனா இது ரொம்ப கஷ்டமான சமாச்சரம், இல்லியா?''

''வெறுமனே இருப்பது?''

''நோ, வெறுமனே இருப்பது அல்ல - அப்படி இருப்பதின் ஆனந்தத்தை அனுபவிப்பது. அதுக்கு ரொம்ப ஓல்டாகியிருக்கணும்---''

அவள் நிறுத்தினாள்.

நான் சொன்னேன்: ''அவர் ஒரு முதியவர்.''

''அப்படிப்பட்ட ஓல்டை நான் சொல்லல. வயசு கிடையாது நான் குறித்தது. அதாவது, ஓல்ட், ஓல்ட்---''

''அதாவது, அந்த ஆனந்தத்தை அடைய, ஒருத்தன் உயர்ந்தபட்ச நாகரீக குணாதிசயத்தை அடைஞ்சிருக் கணும்னு சொல்ல வரியா? அனைத்தும் அனுபவித்து விட்ட தொரு ஆனந்தம்? பாரேன், சீன மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு வந்திருக்கும் அவங்களுடைய ஒரு நூறு கவிதைகளை உனக்கு போதிச்சு நான் உன்னை உயர்த்தப் போறேன்.''

## III

அன்று நான் ஸிம்மிங்டன்னை டவுனில் சந்தித்தேன்.

''மேகன் எங்ககூட இன்னும் கொஞ்சம் இருக்கலா மில்ல?'' நான் கேட்டேன். ''ஜோன்னாவுக்கும் பேச்சுத்

துணையா இருக்கு. அவளுடைய தோழிகள் யாருமே இல்லாததால் அவ தனிமையை ரொம்பவுமே உணர்றா.''

''ஓ அதா-அதாவது மேகன்? ஓ, யெஸ்... ரொம்ப நல்லவர் நீங்க.''

அப்போது அவர்மீது நான் கொண்ட வெறுப்பினை பிறகு என்னால் எக்கட்டத்திலும் விலக்க முடியவில்லை. மேகன் பற்றிய அனைத்தையும் அவர் மறந்திருக்கிறார். இதற்குப் பதிலாக நேரடியாக அவர் அச்சிறுமியை விரும்பாமல் காட்டிக்கொண்டிருந்தால்கூட நான் வெறுத்திருக்க மாட்டேன். முதல் கணவனின் குழந்தைமீது ஓர் ஆடவனுக்கு பொறாமையும் காழ்ப்பும் உருவாவதுண்டு ஆனால் ஸிம்மிங்டன் அவளை விரும்பாமலில்லை, மாறாக, ஜஸ்ட் அவளைக் கவனிக்கத் தவறிவிட்டார். ஒரு நாய் வீட்டிலிருந் தால், எப்படி அதனை அதன்மீது அதிகம் ஆர்வமில்லாத ஒருவன் கவனிக்காமலே இருப்பானோ, அப்படியிருந்து விட்டார் ஸிம்மிங்டன். அதைத் தவறி மிதித்து விட்டாலோ அல்லது அது வேண்டுமென்றே முன்னால்வந்துநின்று வாலாட்டி ஒரு ஷொட்டுக்காக ஆடும்போதோதான் அதை அவன் கவனிப்பான். தனது வளர்ப்புமகள் மீது இந்த அளவுக்கு அவர் காட்டும் வித்தியாசம் என்னை எரிச்சலுக்குள்ளாக்கியது.

நான் கேட்டேன்: ''அவளுக்கு நீங்க என்ன பண்ணலாம்னு இருக்கீங்க?''

''மேகனுக்கா?'' ஏதோ அதிர்ந்தவரைப் போலானார் அவர். ''வெல், அவ வீட்டுலதான் இருப்பா. நேச்சுரலி, அது, அவ வீடு.''

*நான் மிகவும் விரும்பிய என் பாட்டி, அவருடைய கிதாரில் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுவார். அப்படிப்பட்ட பாடல்களில் ஒன்று, இப்படி முடிவதாய் எனக்கு நினைவு:*

ஓ, கண்ணே, என்னருமையே, நான் இங்கு இல்லை,
எனக்கு இடமில்லை, பங்கில்லை,
எனவே இனி இங்கு சுற்றிக் கொண்டிருப்பது ஆகாது,
எங்கும் இனி நானிருப்பது தகாது,
ஆனால் உன் இதயத்தில் மட்டும்.

*நான் இப்பாடலை ஹம் பண்ணிக்கொண்டு வீட்டுக்குப் போனேன்.*

## IV

*டீ குடித்து முடித்த நேரத்தில் வந்தார் எமிலி பார்ட்டன்.*

*தோட்டம் பற்றி அவர் பேச வந்திருந்தார். அரை மணி நேரம் போல நாங்கள் தோட்டம் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். பிறகு நாங்கள் வீட்டுக்குள் வந்தோம்.*

*அப்போதுதான் அவர் தனது குரலைத் தணித்துக் கொண்டு முணுமுணுத்தது:*

*"அந்தப் பொண்ணு இருக்கே அது, நடந்துள்ள கொடூரமான சமாச்சாரத்தால அப்படியொண்ணும் மனசொடிஞ்சுப் போயிருப்பதா தெரியலியே?"*

*"அவ தாயார் மரணத்தைக் குறிப்பிடறீங்களா நீங்க?"*

*"அதான், பின்னே! ஆனா நான் குறிப்பிட்டது, அதுக்குப் பின்னாலிருக்கும், அந்த - அந்தக் குற்றச்சாட்டை!"*

விளங்கிக் கொள்ள முடியவில்லை. இதில் மிஸ் பார்ட்டனின் ரியாக்ஷன் எனக்குத் தேவை.

“அதைப் பற்றி நீங்க என்ன நினைக்கறீங்க? உண்மையா அது?”

“ஓ, நோ, நோ, நிச்சயமா கிடையாது. இதுல நான் நிச்சயமா இருக்கேன். மிஸஸ் ஸிம்மிங்டன், ஒருபோதும் - அதாவது அவர்-” லிட்டில் எமிலி பார்ட்டன் சிவந்தார், குழம்பிப் போனார். “அது உண்மைக்குப் புறம்பானது. யெஸ். இருந்தாலும், அஃப்கொர்ஸ் அது ஒரு தீர்ப்பா இருக்கலாம்.”

“தீர்ப்பு?” - நான் முறைத்தபடி கேட்டேன்.

எமிலி பார்ட்டனின் முகம் மேலும் கலவரச்சிகப்புக் கொண்டது. “இந்த அத்தனை கடிதங்களும், அவை ஏற்படுத்திய துயரங்களும் வலிகளும், ஒரு காரணத்தின் அடிப்படையிலதான் அனுப்பப்பட்டிருக்கணும் மெஸ்.”

“அவை நிச்சயமா ஒரு காரணத்துக்காகத்தான் அனுப்பப்பட்டிருக்கின்றன” என்றேன் நான் இறுக்கமாய்.

“நோ, நோ, மிஸ்டர் பார்ட்டன். நீங்க நான் சொன்னதை தப்பா புரிஞ்சுக்கிட்டிருக்கீங்க. நான், அக்கடிதங்களை எழுதி யிருக்கும் அந்த திசை தெரியாதவனைப் பற்றிச் சொல்லல - எவனோ ஒரு ஒப்பேறாத ஆளாத்தான் அவன் இருக்கணும். நான் என்ன சொல்ல வரேன்னா, அந்த மொட்டைக் கடுதாசிகள், ஒரு தீர்க்கதரிசன முறைல அனுப்பப் பட்டிருக்குன்னு சொல்ல வரேன். அதாவது, கடவுளே செய்திருக்கும் ஓர் ஏற்பாடு. ஆங், இப்படிச் சொல்லலாம்: நம்முடைய குறைகளைப் பற்றி நாமே உணர்ந்தெழ!”

பிறகு கடவுள் மர்மமான முறையில் நடக்கிறார் என்பதைப்போல எதையோ முணுமுணுத்தார் எமிலி.

“நோ” என்றேன் நான். “மனுஷன் அவன் மனம்போன போக்குல செய்யும் அனைத்துக் கொடூரங்களுக்கும் கடவுளை துணைக்கழைத்துக் கொள்வது அதிகமாகிடுச்சு. கடவுளே நிஜத்துல நம்மைத் தண்டிக்கணும் என்பது கிடையாது, மிஸ் பார்ட்டன். நம்மை நாமே தண்டித்துக் கொண்டுவிடுவதில் இப்பல்லாம் ரொம்பவுமே பிஸியாயிருக்கோம்.”

“இப்படிப்பட்ட ஒரு விஷயத்தை ஒருத்தன் எதுக்காக பண்ணணும்? ஏன்? இதுதான் எனக்கு பிடிபடல.”

நான் என் தோள்களைக் குலுக்கினேன். “ஒரு துருப்பிடிச்ச குணம்.”

“ரொம்ப வருத்தத்தைத் தருது இது.”

“எனக்கு இது ஒண்ணும் வருத்தமா படல. இது ஒரு மாபெரும் குற்றம். யெஸ் - கொலைக்குற்றம்.”

மிஸ் பார்ட்டனின் முகத்திலிருந்த சிகப்பு விலகியது. இப்போது அது வெளிறிப் போனது.

“ஆனா ஏன், மிஸ்டர் பர்ட்டன், ஏன்? இதுல என்ன இன்பம் அவனுக்கு கிடைச்சுடப் போகுது?”

“அதை நீங்களும் நானும் விளங்கிக்க முடியாது. தேங்க் காட்...”

எமிலி பார்ட்டன் அவருடைய குரலைத் தணித்துக் கொண்டார். “எல்லாரும் மிஸஸ் க்ளீட்டுனு சொல்லிக் கிறாங்க - ஆனா என்னால சத்தியமா நம்ப முடியல.”

நான் மறுப்பாய் தலையசைத்தேன். அவர் கலவரமானவராய் தொடரலானார்: "இப்படிப்பட்ட எதுவுமே இங்கே முன்னெல்லாம் நடந்தது கிடையாது  என் நினைவுக்கு உட்பட்ட ஒரு சம்பவம்கூட கிடையாது. இது அப்படிப்பட்ட சந்தோஷமான ஒரு சின்ன சமூகம். என் டியர் அம்மா இருந்திருந்தால் என்ன சொல்லியிருப்பாங்க? வெல், இதெல்லாம் பார்க்க இல்லாம அவங்க கண்ணை மூடினதே நல்லது."

நான் கேள்விப்பட்டவரையில், எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்தான் ஓல்ட் மிஸஸ் பார்ட்டன் ஆவார். ஆகவே அவர் நடப்பதையெல்லாம் பார்த்து ஒருவேளை என்ஜாய் பண்ணியிருக்கலாம்...

எமிலி தொடர்ந்தார்: "இது என்னை ரொம்பவும் கவலையாக்குது."

"உங்களுக்கு - இ-இது போல ஒ-ஒண்ணும் வரலியோ?"

அவர் சிவந்தார். "ஓ, நோ  ஓ, நோ. ஓ! அப்படி நடந்திருந்தால் சிதைஞ்சிருப்பேன்."

நான் அவசரமாய் மன்னிப்பு கேட்க, ஆனால் அவரோ அப்-செட் ஆனநிலையில் எழுந்துப் போனார்.

நான் வீட்டுக்குள் போனேன். ஜோன்னா, மாலை குளிர் அதிகமாயிருந்ததால் அங்கு வரவேற்பறையில் மூட்டப் பட்டிருந்த கணப்புக்கு அருகே நின்று கொண்டிருந்தாள்.

அவள் கையில் திறக்கப்பட்டிருந்த ஒரு கடிதத்தை வைத்துக் கொண்டிருந்தாள்.

நான் நுழைந்ததும் உடனடியாய் தலையை திருப்பினாள் அவள்.

''ஜெர்ரி! இதை நான் லெட்டர் பாக்ஸ்ல பார்த்தேன். 'ஏய் துப்புக்கெட்டவளே...' அப்படினு துவங்குது இது.''

''வேற என்ன சொல்லுது அது?''

ஜோன்னா ஒரு நீண்ட பெருமூச்சினை வெளியிட்டாள். ''அதே பழைய பல்லவி.''

அவள் அதை கணப்புக்குள் போட்டாள். ஆனால் அது பற்றிக் கொள்வதற்குள் ஒரு தாவுத்தாவிப் போய் அதனை அப்படியே நான் அபகரித்து விட்டேன். இதில் என் காலுக்கு காயம்கூட உண்டானது.

''இப்படிப் பண்ணாதே'' நான் சொன்னேன். ''இது நமக்குத் தேவைப்படலாம்.''

''தேவைப்படலாம்?''

''போலீஸுக்காக.''

## V

தொடர்ந்த மறுநாள் காலையில் சூப்பரின்டெண்டெண்ட் நாஷ் என்னைப் பார்க்க வந்தார். அவரை நான் பார்த்த முதல் நொடியிலிருந்தே அவர்மீது எனக்கு பெரும் விருப்பம் உண்டாகியது. அவர் F I Y சூப்பரின்டெண்டெண்ட்டாக அற்புதமாய் விளங்க வல்லவர் விளங்குபவர். நெட்டை, ராணுவத்தான் உடலமைப்பு, கதிர்வீசும் கண்கள்... மேலும் சகஜமாய் பழகவல்ல ஒருவித நேரடியானவர்.

அவர் சொன்னார்: ''குட் மார்னிங், மிஸ்டர் பார்ட்டன். நான் எதுக்காக உங்களைப் பார்க்க வந்திருக்கேன்னு நீங்க ஊகிப்பீங்கன்னு நினைக்கிறேன்.''

''யெஸ். இந்த கடுதாசி பிஸினெஸ்.''

அவர் ஒப்புதலாய் தலையசைத்தார்.

''உங்ககிட்டே அப்படிப்பட்ட மொட்டைக் கடுதாசிகள்ல ஒண்ணு இருக்குன்னு நினைக்கிறேன்.''

''யெஸ்... நாங்க இங்கே வந்து இறங்கினவுடனேயே!''

''அதுல எக்ஸாக்டா என்ன இருந்தது?''

நான் ஒரு நிமிடம் யோசித்தேன் . பிறகு பிறழாது எத்தனை துல்லியமாய் தரமுடியுமோ அந்த அளவுக்கு அக்கடிதத்தின் வார்த்தைகளை நான் சொன்னேன்.

எவ்விதமான உணர்ச்சிபாவங்களும் இன்றி, துளியும் ஆட்டங்காணாமல் கவனித்தார் சூப்பரின்டெண்டெண்ட். நான் முடித்ததும் அவர் கேட்டார்:

''விளங்குது. நீங்க அந்தக் கடிதத்தை உங்க கைலேயே வெச்சுக்கலியா, மிஸ்டர் பர்ட்டன்?''

''ஐ'ம் ஸாரி. நான் வெச்சுக்கல. புது இடத்துக்கு வந்திருக்கும் அந்நியர்களின் மீதான ஜஸ்ட் ஒரு கசப்புணர்ச்சி தான் அதுன்னு நான் எடுத்துக்கிட்டேன்.''

புரிகிறது என்பதைப்போல ஒரு பக்கமாய் தலையை சாய்த்தார் சூப்பரின்டெண்டெண்ட். ''பரிதாபம்'' என்று மட்டும் சுருக்கமாய் சொன்னார்.

''இருந்தாலும்'' என்ற நான், ''என் சகோதரிக்கு நேற்று ஒண்ணு வந்தது. அதை அவ நெருப்புல போடுவதிலிருந்து நான் தடுத்துட்டேன் என்றேன்.''

''தேங்க் யூ மிஸ்டர் பர்ட்டன். இது உங்க சமயோஜிதம்.''

நான் என் டெஸ்க் வரை போனேன். அதை வைத்திருந்த டிராயரின் பூட்டைத் திறந்தேன். எனக்கென்னவோ அது பேட்ரிட்ஜின் கண்களில்பட உகந்ததல்ல என்று அப்போது தோன்றியது. அதனை நாஷிடம் தந்தேன்.

அதை அவர் முழுவதும் படித்தார். பிறகு அவர் நிமிர்ந்து என்னைப் பார்த்தார். கேட்டார்:

“கடைசி முறை வந்த கடிதம் போலவே இதன் தோற்றமும் இருக்கா?”

“என் ஞாபகத்தக்கு உட்பட்டது வரை அப்படித்தான் எனக்குத் தோணுது.”

“உறை? உள்ளிருக்கும் மேட்டர்?”

“யெஸ்” என்றேன் நான். “உறை, தட்டச்சு செய்யப் பட்டிருந்தது. ப்ரிண்ட் செய்யப்பட்ட வார்த்தைகள் ஒரு நீளமான தாளில் ஒட்டப்பட்ட விதம்தான், கடிதமாய் உள்ளே இருந்தது.”

ஆமோதிப்பாய் தலையசைத்த நாஷ் அதனைத் தனது பாக்கெட்டில் போட்டுக் கொண்டார். பிறகு அவர் சொன்னார்:

“என்கூட ஸ்டேஷன் வரை வர நீங்க மறுக்க மாட்டீங் கன்னு நினைக்கிறேன், மிஸ்டர் பார்ட்டன். நாம அங்கே ஒரு மீட்டிங் வெச்சுக்கலாம். இது, காலவிரயத்தையும், பேசியதையே திருப்பித்திருப்பிப் பேசுவதையும், பெருவாரியா குறைக்கும்.”

“நிச்சயமா” என்றேன் நான். “இப்பவே நான் வரணும்னு எதிர்பார்க்கிறீங்களா நீங்க?”

“உங்களுக்கு ஆட்சேபணை இல்லைனா.”

வாசலில் ஒரு போலீஸ் கார் இருந்தது. அதில் நாங்கள் போனோம்.

நான் கேட்டேன்:

''இதனடியில் யார் இருக்காங்க என்பதை உங்களால கண்டுபிடிச்சுட முடியும்னு நீங்க நினைக்கிறீங்களா?''

சுலபமான நம்பிக்கையுடன் ஆமோதிப்பாய் தலையசைத்தார் நாஷ்.

''ஓ யெஸ். தடுமாற்றமில்லாமல் எங்களால இதன் அடி ஆழம் வரை போய்விட முடியும். வழக்கமான போலீஸ் சடங்குகளால், எத்தனை காலம் பிடிக்கும் என்பது மட்டுந்தான் இப்போதைய கேள்வி. இந்த வகை கேஸ்கள் நத்தையா நகரும் ஆனா நிச்சயம், வெற்றி. எத்தனை புத்திசாலித்தனமா இந்த கேசுடைய மையப்புள்ளிக்கு நாம சுருங்கறோம் என்பதுதான் இதுல அவசியம்.''

''எலிமினேஷன் - அதாவது ஒவ்வொண்ணா விலக்குதல். ரைட்?''

''யெஸ். கூடவே வழக்கமான பரிசோதனைகள்.''

''போஸ்ட் பாக்ஸ்களைக் கண்காணித்தல், தட்டச்சு இயந்திரங்களை பரிசோதித்தல், கைரேகைகள், இதெல்லாமா?''

அவர் புன்னகைத்தார். ''நீங்க சொல்வதைப் போலவே.''

போலீஸ் ஸ்டேஷனில் ஏற்கெனவே ஸிம்மிங்டன்னும் க்ரிஃபித்தும் வந்திருப்பதை நான் கவனித்தேன். நான், நெட்டையாய் சாதாரண உடையணிந்திருந்த ஒருவரிடம் அறிமுகம் செய்யப்பட்டேன். அவர், இன்ஸ்பெக்டர் க்ரேவ்ஸ்.

‘‘இன்ஸ்பெக்டர் க்ரேவ்ஸ் நமக்கு உதவுவதற்காக லண்டனிலிருந்து வந்திருக்கார்’’ என்று விளக்கினார் நாஷ். ‘‘மொட்டைக் கடுதாசி வழக்குகளில் இவர் ஒரு நிபுணர்.’’

சோகையாய் சிரித்தார் இன்ஸ்பெக்டர் க்ரேவ்ஸ். மொட்டைக் கடுதாசி எழுதும் நபர்களுடன் ஒரு ஜென்மத்தையே செலவழிப்பது, மிகுந்த மனஅழுத்தத்தை தருவதாய் இருக்க வேண்டும் என்று சொன்னேன் நான். ஆனால் இன்ஸ்பெக்டரோ ஆரவார உற்சாகத்தைத்தான் காட்டினார்.

‘‘இந்த கேஸ்கள் எல்லாம் அடிப்படைல ஒரேமாதிரி யானவைதான்’’ என்றார் அவர், ஆழ்ந்த குரலில். ‘‘இவ்வகைக் கடிதங்களின் வார்த்தைகள், இவை சொல்லும் விஷயங்கள் இதையெல்லாம் நீங்க கேட்டால், ஆச்சரியப்பட்டுப் போவீங்க.’’

‘‘ரெண்டு வருஷங்களுக்கு முன்னால இப்படிப்பட்ட ஒரு கேஸை நாங்க கையாண்டிருக்கோம்’’ என்றார் நாஷ். ‘‘இன்ஸ்பெக்டர் க்ரேவ்ஸ் எனக்கு உதவி பண்ணினார்.’’

க்ரேவ்ஸுக்கு முன்னால் சில கடுதாசிகள் பரப்பிப் போடப்பட்டிருந்ததை நான் பார்த்தேன். அவற்றை அவர் பரீட்சித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

‘‘இவற்றை, அதாவது இக்கடுதாசிகளை, நாம கைவசப் படுத்துவதில்தான் சிக்கலே இருக்கு’’ என்றார் நாஷ். ‘‘நெருப்புல போட்டுடறாங்க. அல்லது இப்படிப்பட்ட ஒரு கடுதாசி வந்திருப்பதையே வெளில காட்டிக்க மாட்டாங்க. போலீஸ் கேஸ் அதுஇதுனு அலையக்கூடாது என்பது எண்ணம். முட்டாள் ஜனங்க. இப்படி பிற்போக்கு சிந்தனைல இங்கே நிறைய இருக்குங்க.’’

''ஆயினும் மேற்கொண்டு கேஸ்களை நகர்த்த எங்களுக்கு நிறையவே கிடைச்சிருக்கு'' என்றார் க்ரேவ்ஸ். நான் நாஷிடம் கொடுத்திருந்த கடுதாசியைத் தனது பாக்கெட்டிலிருந்து எடுத்த அவர் அதை அப்படியே க்ரேவ்ஸிடம் நகர்த்தினார்.

இன்ஸ்பெக்டர் அதனைப் பார்த்தார். பரப்பியிருந்த மற்றவற்றோடு அதனையும் சேர்ப்பித்தார். ஆமோதிக்கும் விதமாய் சொன்னார்: ''ரொம்ப நல்லாயிருக்கு - யெஸ், இது ரொம்ப நல்லாவேயிருக்கு.''

இப்படியொரு சந்தோஷத்தைத் தெரிவிக்க, அவதிப்படும் நான் நிச்சயம் முன்வந்திருக்கப் போவதில்லை. ஆனால் நிபுணர்களுக்கு அவர்களுக்கே உரிய ஓர் அணுகுமுறை இருக்கிறது என்று நினைக்கிறேன். கொடூரமான இந்தக் கேஸ், அட்லீஸ்ட் யாரோ ஒருத்தருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறதே என்று நான் எண்ணிக்கொண்டேன்.

''இவ்வழக்கை தொடர்ந்து நடத்த, ஐ திங்க், நமக்கு போதுமான அளவு கடுதாசிகள் கிடைச்சிருக்குன்னு நினைக் கிறேன்'' என்றார் க்ரேவ்ஸ். ''உங்க எல்லாருக்கும் மேலும் ஒரு வேண்டுகோள். இவ்வகை மொட்டைக் கடுதாசிகள் இனிமேல் உங்களுக்கு வந்தால் கையோட அவற்றைக் கொண்டு வந்துடணும். வேற யாருக்காவது வந்திருப்பதா நீங்க கேள்விப்பட்டால் குறிப்பா நீங்க டாக்டர்... உங்க நோயாளிகள் பர்ஸனலா உங்ககிட்டே மனம்விட்டுச் சொன்னால் அவங்களை, அக்கடிதங்களை எடுத்துக்கிட்டு இங்கே வரவைக்க என்னவெல்லாம் பண்ண முடியுமோ அவையனைத்தையும் செஞ்சுடுங்க.'' முன்னால் இருந்த கடுதாசிகளில் விரல்விட்டு ஒருமுறை களைத்த அவர் தொடர்ந்தார்: ''என்கிட்டே இப்ப மிஸ்டர் ஸிம்மிங்டன்னுக்கு வந்த ஒரு கடிதம், டாக்டர் க்ரிஃபித்துக்கு

வந்தது, மிஸ் கிஞ்ச்சுக்கு வந்தது, கசாப்புக் கடைக்காரன் மனைவி மிஸஸ் மட்ஜுக்கு வந்தது, த்ரீ க்ரெளன்ஸ் பணிப் பெண் ஜெனிஃபர் க்ளர்க்குக்கு வந்தது, மிஸஸ் ஸீம்மிங் ன்னுக்கு வந்தது மற்றும் இதோ இப்ப மிஸ் பார்ட்டனுக்கு வந்தது இதெல்லாம் இருக்கு. ஆங், இன்னொன்னு பேங்க் மானேஜருக்கு எழுதப்பட்டது.''

''பாராட்ட வேண்டிய கலெக்ஷன்'' நான் குறிப்பிட்டேன்.

''ஆனா இதுல ஒரேயொரு கடுதாசியைக்கூட என்னால மற்ற கேஸ்களுடன் ஒப்பிட முடியல! ஜென்டில்மென்... நான் எப்பவுமே கேஸ்களில் ஏதாவது ஒரு புதுமையை தேடுவேன்.''

ஸிம்மிங்டன் கேட்டார்: ''இதையெல்லாம் எழுதியவனைப் பற்றிய ஏதாவதொரு முடிவுக்கு நீங்க வந்திருக்கீங்களா?''

க்ரேவ்ஸ் ஒரு சிறு உரையாற்ற தனது தொண்டையை செருமிக் கொண்டார்:

''இந்த அனைத்து கடிதங்களும் தங்களுக்குள் சில ஒற்றுமைகளைப் பகிர்ந்து கொள்கின்றன. அவற்றை நான் உங்களுக்கு இப்ப சொல்றேன், ஜென்டில்மென். ஒருவேளை அவை உங்க மூளைகளுக்கு ஏதாவது வெளிச்சம் போட்டுக் காட்டி உதவுதான்னு பாப்பம். ஒரு ப்ரிண்டட் புத்தகத் திலிருந்து ஒவ்வோர் அட்சரங்களும் நறுக்கி எடுக்கப் பட்டிருக்கு... அந்த அட்சரங்களால் இக்கடிதங்களின் சாராம் சத்தினை ஆக்கும் வார்த்தைகள் அமைக்கப்பட்டிருக்கு. அது ஒரு பழைய புத்தகம். அது, 1830ஆம் வருடத்தையொட்டி அச்சடிக்கப்பட்டிருக்கணும் என்பது என் கணிப்பு. இப்பல்லாம் கையெழுத்தினை வெச்சுக்கிட்டு எழுதியது யார் என்பதை மிக சுலபமா கண்டுபிடிச்சுட முடியுது... இதனைத்

தவிர்க்கவே இத்தகையதோர் அணுகுமுறை கடைபிடிக்கப் பட்டிருக்குனு சொல்வேன். நிபுணர்களின் முன்னால், கையெழுத்து தப்பாது. தனித்துவம் கொண்டதாய் உள்ள உறையிலும் கடிதத்திலும் கைரேகைகள் இல்லை. போஸ்ட் மேன் கைபட்டிருக்கும், அதேபோல கடிதத்தை வாங்கிய வரின் ரேகையிருக்கும், இன்னும் சில முகந்தெரியாதோரின் கைரேகைகள் இருக்கும். நான் என்ன சொல்ல வரேன்னா, ஒரேமாதிரியான காமனான கைரேகை அனைத்துக் கடிதங் களிலும் காணப்படலேன்னு சொல்ல வரேன். ஆக, இதை யெல்லாம் செய்யும் ஆள் கையுறை போட்டுக்கிட்டுதான் செய்றான். வின்ட்ஸர் 7 தட்டச்சு மெஷினால் உறை டைப் பண்ணப்பட்டிருக்கு. அரதப்பழசா இருக்கணும்... அதன் மற்றும் அட்சரங்கள் தேய்ந்துப் போயிருக்கு. ஏறத்தாழ அனைத்து கடுதாசிகளும் லோக்கலாத்தான் போஸ்ட் பண்ணப் பட்டிருக்கு. அல்லது நேரடியா வீட்டின் தபால் பெட்டில கொண்டு வந்து போடப்பட்டிருக்கு. இதை வெச்சுக் கிட்டு பார்த்தால், எல்லாம் உள்ளேயே, இப்பகுதியிலேயேதான் நடக்குதுனு தெளிவாகுது. இவையனைத்தும் ஒரு பெண்ணால் எழுதப்பட்டிருக்கு. என் கருத்துப்படி ஒரு நடுத்தர அல்லது முதிர்ந்த ஒரு பெண்ணால். ஓல்ட் வுமன். நிச்சயப்படுத்தி சொல்லல ஊகிக்கிறேன்: அந்தம்மா திருமணமாகாத பொம்பிளையா இருக்கணும்.''

நாங்கள் மதிப்பான மவுனத்தை ஓரிரு நிமிடங்கள் காத்தோம். பிறகு நான் கேட்டேன்: ''டைப்-ரைட்டர், உங்களுக்கு கிடைச்சிருக்கும் செமத்தியான துப்பு, இல்லையா? அதை வெச்சு முன்னேறிக் கண்டுபிடிப்பது, இதைப்போன்ற சின்ன பகுதியில பெரிய சிரமமா இருக்கக்கூடாதே?''

வருத்தமாய் மறுத்து தலையசைத்த இன்ஸ்பெக்டர் சொன்னார்:

''இங்கேதான் நீங்க தப்பு பண்ணிடறீங்க, ஸார்.''

''தட்டச்சு எந்திரம்'' என்று ஆரம்பித்த நாஷ், ''இந்த மழக்குல துரதிர்ஷ்டவசமா ரொம்ப ஈஸியா கிடைச்சுடுது. அது ஒரு பழைய மெஷின். மிஸ்டர் ஸிம்மிங்டன்னின் அலுவலகத்திலிருந்து பெண்கள் இன்ஸ்டிட்யூட்டுக்கு தரப் பட்டிருக்கு. அங்கே இதை சுலபமா யார் வேணும்னாலும் பயன்படுத்திடலாமே... இங்கிருக்கும் பெண்கள் எல்லாருமே இன்ஸ்டிட்யூட்டுக்கு அடிக்கடி போறாங்க.''

''ஆங், வந்து - யெஸ்... டச் வைத்து, அதாவது அடிக்கும் ஸ்பரிஸத்தை வெச்சு, உங்களால சொல்ல முடியாதோ?''

இங்கு க்ரேவ்ஸ் ஆமோதிப்பாய் தலையசைத்தார்.

''யெஸ் அது செய்யலாம். ஆனா இந்த உறைகள் அனைத்துமே ஒரே விரலால தட்டச்சு செய்யும் யாரோ ஒருத்தரால அடிக்கப்பட்டிருக்கு.''

''அப்படினா, யாரோ ஒருவர், டைப் இயந்திரத்தை பயன்படுத்த தெரியாத ஒருத்தர், ஆங்?''

''நோ. அப்படி நான் சொல்ல மாட்டேன். யாரோ ஒருத்தர், டைப் அடிக்கத் தெரிஞ்ச ஒருத்தர்... ஆனா அந்த உண்மை நமக்கு தெரிஞ்சுடக்கூடாதுன்னும் நினைக்கும் ஒருத்தர்!''

நான் மெதுவாய் சொன்னேன்: ''இதையெல்லாம் யார் செய்றாங்களோ, அவங்க நிச்சயம் நயவஞ்சக நரிதான்.''

''அவ அப்படித்தான் ஸார், அவ அப்படித்தான். நரிதான்'' என்றார் க்ரேவ்ஸ். ''இந்த மொட்டைக் கடுதாசி சமாச் சாரத்தின் அத்தனை வஞ்சக ட்ரிக்குகளும் தெரிஞ்சவ.''

‘‘இங்கிருக்கும் நாட்டுப்புறப் பொம்பிளைங்களுக்குப் போய் இத்தனை நரித்தன மூளை இருக்கும்னு நஎன்னால நினைச்சே பார்க்க முடியல, ஸார்’’ நான் சொன்னேன்.

க்ரேவ்ஸ் இறுமினார்: ‘‘நான் முழுசா சொல்லலையோனு நினைக்கிறேன். ‘ஐ’ம் ஸாரி. கடுதாசிகள், மெத்தப் படிச்ச ஒரு பொம்பிளையாலத்தான் எழுதப்பட்டிருக்கு. எஜுகேடட் வுமன்.’’

‘‘என்ன, ஒரு லேடி?’’

நான் எதிர்பார்க்காமலே, என்னை அறியாமலே, நாகரீக பெண்ணைக் குறிக்கும் லேடி எனும் வார்த்தை என் வாயிலிருந்து தெறித்தது. ‘லேடி’ எனும் வார்த்தையை நான் உபயோகப்படுத்தி வருஷங்கள் ஆகின்றன. என் பாட்டி ஆணவமாய் குறிப்பிடும் ‘அவ லேடி கிடையாது டியர்’ எனும் வார்த்தையை எதிரொலிக்கும் விதமாய், இவ்வார்த்தை தன்னிச்சையாய் வந்து விழுந்தது.

நாஷ் உடனடியாய் விளங்கிக் கொண்டார். ‘லேடி’ எனும் இந்த வார்த்தை அவருக்கு இன்னும் ஏதோ அர்த்தத்தை நினைவூட்டியது.

‘‘லேடியாய் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை’’ என விளக்கினார் அவர். படித்த, நாகரீக, சகஜமான பெண் என்ற அர்த்தத்தை அவர் குறிப்பிட்டார். ‘‘ஆனா நிச்சயமா கிராமத்து கட்டுப்பெட்டி பொம்பிளைக் கிடையாது. இங்கிருக்கும் பொம்பிளைகள் அனைவரும் படிப்பு வாசனையே அற்றவர்கள். எழுத்துகள்கூட தெரியாது. மேலும், சொல்ல வந்ததை அவங்களால நிச்சயமா சரளமா எழுதிட முடியாது.’’

நான் அமைதியானேன் ஷாக்கானதால். அதிர்ச்சி. இங்கிருக்கும் சமூகம் மிகவும் குறைந்ததாகும். என்

சுயகட்டுப்பாடின்றி, கடிதங்களை எழுதுவது, மிஸஸ் க்ளீட் அல்லது அவரைப் போன்றதொரு நரிப்பெண் என்று நான் எண்ணிப் பார்த்தேன்.

என் சிந்தனையை வார்த்தைகளாய் போட்டு விட்டார் மிஸ்டர் ஸிம்மிங்டன். அவர் கூர்மையாய் சொன்னார்: ''அப்படின்னா, இந்த க்னூர, இங்கிருக்கும் ஜனத்தொகைல பத்து பனிரெண்டு நபர்களை நோக்கி சுலபமா குவிஞ் சுடுதே.''

''தட்ஸ் ரைட்.''

''என்னால இதை நம்பவே முடியல.''

சொன்னவர், பிறகு சற்று பிரயத்தனப்பட்டு, அவர் சொல்வதே அவருக்கு பிடிக்காமல் இருப்பதைப் போல வெறுமையாய் பார்த்தபடி, குறிப்பிட்டார்: ''நான் மரண விசாரணைல சொன்னதையெல்லாம் நீங்களும் கேட்டீங்க. தனது மனைவியைப் பாதுகாக்க, மறைந்த ஒருத்திக்கு களங்கம் வராமல் பார்த்துக் கொள்வதற்காக நான் அப்படியெல்லாம் சாட்சி சொல்லியிருக்கலாம்னு நீங்க நினைக்கலாம். அப்படின்னா இப்ப நான் ஸ்திரமா சொல்லிக்க விரும்பறேன்: என் மனைவி பற்றிக் குறிப்பிட்டு வந்த அந்த மொட்டைக் கடுதாசியின் சாராம்சம் முழுக்கவும் தப்பு, தப்பு. அது தப்புன்னு எனக்குத் தெரியும். என் மனைவி உணர்ச்சிவயப்படுபவ. தவிர, அவ இருந்த மோசமான உடல்நிலைல, அக்கடிதம் அவளுக்கு பெருத்த அதிர்ச்சியா அமைஞ்சிருக்கும்.''

உடனடியாய் இதற்குப் பதில் தந்தார் க்ரேவ்ஸ்:

''நீங்க இப்ப சொன்னது, சரியா இருக்கலாம் ஸார். இக்கடிதங்கள் எதுவுமே, இவை சொல்லும் குற்றச்சாட்டு களுக்கு ஸ்தூலமான ஒரு சாட்சி இருப்பதா காட்டிக்கல.

எல்லாமே குருட்டாம்போக்குல எழுதப்பட்டவை. ப்ளாக்-மெயில் பண்ணுவதற்கு எந்த அறிகுறியும் இவற்றில் இல்ல. இதுல சமய சம்பந்தப்பட்ட வெறியும் தென்படல சில சமயங்கள்ல சமயவெறி தலைதூக்கும்போது இப்படி நடப்பதுண்டு. இவையெல்லாமே ஜஸ்ட் செக்ஸ் மற்றும் வெறுப்பு! இது, யார் எழுதினது எனும் கேள்விக்கான விடையை நோக்கி, சுலபமா சுட்டிக்காட்டப் போகுது.''

ஸிம்மிங்டன் எழுந்து கொண்டார். மரக்கட்டையாய் வறண்டு நின்றார். அவரது உதடுகள் மட்டும் நடுங்கின.

''இவற்றை எழுதும் ராட்சஸியை நீங்க உடனடியா கண்டுபிடிச்சுடுவீங்கன்னு நினைக்கிறேன். என் மனைவியின் வயித்துல கத்தி செருகிக் கொல்வதற்கு இணையா கொன்னிருக்கா அவ.'' இங்கு சற்று நிறுத்தியவர், பின்னர் பொதுவாய் கேட்டார்: ''இப்ப அவ எப்படி உணர்ந்துக் கிட்டிருப்பா, ஆங்?''

இக்கேள்விக்கு விடை தராமலே அவர் வெளியேறிப் போனார்.

''அவ எப்படி உணர்வா, க்ரிஃபித்?'' - நான் கேட்டேன். இதற்கான விடை, ஒரு டாக்டராய் விளங்கும் அவரது கட்டுக்குள் இருப்பதாய் நான் எண்ணினேன்.

''கடவுளுக்கே வெளிச்சம். பச்சாதாபமாய் உணரலாம். இன்னொரு பக்கம் பார்த்தால், தன்னுடைய சக்தியை எண்ணி அவ மகிழ்ந்துக்கிட்டிருக்கலாம். அவளுடைய வெறியை மிஸஸ் ஸிம்மிங்டன்னின் மரணம் தணிச்சிருக்கலாம்.''

நான் சற்று நடுங்கிக் கொண்டே ''அப்படி நான் நினைக்கல'' என்றேன் நான். ''ஏன்னா, அப்படி அவ நினைச்சா, அவ---''

நான் தயங்க, எனக்காக வாக்கியத்தை நாஷ் முடித்தார்: ‘‘அவ இதையே மறுபடியும் முயற்சிப்பானு சொல்ல வந்தீங்களா? அப்படி நடந்தால், மிஸ்டர் பார்ட்டன், அதை எங்களுக்கு கிடைக்கவல்ல ஒரு ஜாக்பாட்டாத்தான் நாங்க கருதுவோம். இரையை நாடி, பசித்திருப்பது அடிக்கடி போகும், யெஸ்.’’

‘‘அப்படிச் செய்தால் அவ ஒரு பைத்தியமாத் தானிருக் கணும்’’ என்றேன் நான்.

‘‘அவ செய்துக்கிட்டே இருப்பா, அவ’’ என்றார் க்ரேவ்ஸ். ‘‘அப்படித்தான் அவங்கள்லாம் எப்பவும் நடந்துப்பாங்க. இது ஒரு பெருமையான வெற்றி, யூ நோ... இதை அப்படியே விட்டுட துணிய மாட்டாங்க.’’

நான் என் தலையை ஒரு நிலநடுக்கமாய் உலுக்கிக் கொண்டேன். உடனடியாய் வெளிக்காற்றை சுவாசிக்க வேண்டும் என்று ஆன நான், என் இருப்பு மேலும் தேவையா என கேட்டேன். பேய் சூழ்ந்துள்ள ஒரு சூழலாய் ஆனது அறை.

‘‘மேற்கொண்டு எதுவும் இல்ல, மிஸ்டர் பார்ட்டன்’’ என்றார் நாஷ். ‘‘கண்களை திறந்து வெச்சுக்கங்க. எவ்வளவு விளம்பரம் தர முடியுமோ அவ்வளவு கொடுங்க  இனியும் ஏதாவது மொட்டைக் கடுதாசி வந்தால் அதை உடனடியா எங்களிடம் ஒப்படைத்து விடும்படி.’’

நான் ஆமோதித்தேன்.

‘‘இந்நேரத்துல, இங்கிருக்கும் இந்த சின்ன டவுன்வாசிகள் ஒவ்வொருத்தருக்கும் ஒரு கடிதம் வந்திருக்கும்னுதான் என்னால நினைக்கத் தோணுது’’ என்றேன் நான்.

‘‘எனக்கொரு வியப்பு’’ என்றார் க்ரேவ்ஸ். தனது தலையை சின்னதாய் ஒருபக்கம் சாய்த்து அவர் கேட்டார்: ‘‘இக்கடிதம் வராத யாராவது ஒருத்தரை, உங்களுக்குத் தெரியாதா?’’

‘‘இது ஓர் அசாதாரண கேள்வி. என்னை, தங்களது நம்பிக்கைக்கு உரியவரா, இங்கிருக்கும் அத்தனை பேருமா கருதுவாங்க? நான் நேற்று வந்தவன்...’’

‘‘நோ, நோ, மிஸ்டர் பர்ட்டன். நான் அப்படி சொல்ல வரல. அதாவது நீங்க நிச்சயமா நம்பும்படியா, இப்படிப்பட்ட ஒரு மொட்டைக் கடுதாசி வராத ஒருத்தரை உங்களுக்குத் தெரியுமானு கேட்க வந்தேன்.’’

‘‘வெல், அப்படின்னா’’ என தயங்கிய நான், ‘‘எனக்கு ஒருத்தரைத் தெரியும்’’ என்றேன் நான்.

எமிலி பார்ட்டனுடன் நடந்த சம்பாஷணையையும் அதில் அவர் சொன்னவற்றையும் நான் மறுபடியும் அப்படியே சொன்னேன்.

மரமாய் முகத்தை வைத்துக் கொண்டு இந்தத் தகவலைக் கேட்ட க்ரேவ்ஸ் சொன்னார்: ‘‘வெல், இது உபயோகப் படலாம். இதை நான் குறிச்சுக்கறேன்.’’

நான் மதியநேரத்து சூரியவொளிக்குள் ஓவன் க்ரிஃபித்துடன் இறங்கினேன்.

‘‘பேசாமல் வந்து படுத்து ஓய்வெடுத்து காயங்களை ஆற்றிக் கொள்ள நினைத்தவனுக்கு, எப்படிப்பட்ட ஓரிடம் கிடைச்சிருக்கு? இது முழுக்கமுழுக்க ஒரு விஷப்பிரதேசம் இந்த ஊர்தான். ஆனா, பார்த்தால், அமைதியும் சாந்தமும் தவழும் சொர்க்கபுரியா தெரியுது...’’

''ம், சொர்க்கத்திலும், அசுரர்கள் உண்டு'' என்றார் வேன் வறட்சியாய்.

''லுக் ஹியர் க்ரிஃபித்... இவனுங்களுக்கு ஏதாவது தெரிஞ் சிருக்குமா? ஏதாவது ஐடியா - துப்பு - கிடைச்சிருக்குமா?''

''எனக்குத் தெரியலியே. இந்த போலீஸஒங்களுக்கு அதியற்புத டெக்னிக்குகள்லாம் தெரியும். பார்த்தால் ரொம்ப வெளிப்படையா, தெரிஞ்ச எல்லாத்தையும் நம்மகிட்டே சொல்வதைப் போலத்தான் தெரியும் - ஆனா ஒரு கடுகளவு தகவலைக்கூட கசிய விட மாட்டானுங்க.''

''யெஸ்'' என்று சிந்தனையாய் ஆமோதித்த நான், ''நாஷ் ஒரு நல்ல மனுஷன்'' என்றேன்.

''மேலும், சிறந்த திறமைசாலியும்கூட.''

''இந்த டவுன்ல எவனாவது அல்லது எவளாவது வஞ்சகத்தனம் பண்ணிக்கிட்டு திரிந்தால், இதை நாம கண்டுபிடிச்சே தீரணும்'' என்றேன் நான் கறாராய்.

க்ரிஃபித் மறுப்பாய் தலையசைத்தார். அவர் நம்பிக்கை அற்றவராய் தோன்றினார். ஆனால் அதையும் தாண்டி அவர் - அவர் கவலையுற்றவராய் தோன்றினார். அவருக்கு ஏதாவது ஒருவகை தகவல் கிடைத்திருக்குமோ என்றுகூட நான் நினைத்துக் கொண்டேன்.

நாங்கள் ஹை-ஸ்ட்ரீட் வழியாக நடந்து கொண்டிருந்தோம். நான் வீட்டுத் தரகனின் இல்லத்து வாசலில் போய் நின்றேன்.

''நான் கொடுத்த அட்வான்ஸ்ல ரெண்டாவது மாசத்து வாடகையும் சேர்ந்திருக்குன்னு நினைக்கிறேன். அதை எடுத்துக்கச் சொல்லிட்டு, ஜோன்னாவுடன் கிளம்பிடலாம்னு முடிவு பண்ணிட்டேன்.''

இப்போது ''டோண்ட் கோ'' என்றார் ஓவன். ''ப்ளீஸ்... போகாதீங்க.''

''ஏன் கூடாது?''

அவர் பதில் தரவில்லை. சில நிமிடங்கள் கழித்து அவர் மெல்லமாய் சொன்னார்: ''யெஸ். நீங்க செய்வதும் சரிதான். ஸிம்ஸ்டாக் நல்லா இல்ல - ஆனா அது இப்ப. ஆபத்தாகிடுச்சு. இந்நிலைமை உங்களையோ அல்லது உங்க சகோதரியையோ பாதிச்சுடலாம்.''

''ஜோன்னாவை எதுவும் பாதிப்பது கியைடாது'' நான் சொன்னேன். ''அவ பாறை. நாந்தான் சத்தற்றவன். ஏனோ, இந்த சமாச்சாரம் என்னை கிலேசமாக்கிடுது.''

''இது என்னை கிலேசமாக்குது'' என்றார் ஓவன்.

வீட்டுத் தரகனுடைய கதவினை நான் பாதி தள்ளித் திறந்தேன்.

''ஆனா நான் கிளம்பப் போறதில்ல'' என்றேன் நான் அப்போது. ''எனக்கு இதன் முடிவு தெரிஞ்சாகணும்.''

நான் உள்ளே போனேன்.

அங்கு டைப் பண்ணிக்கொண்டிருந்த பெண்ணொருத்தி எழுந்து என் முன்னால் வந்தாள். இங்கு முன்னாலிருந்த கண்ணாடியணிந்திருந்த இளையவளைவிட இவள் எனக்கு புத்திசாலியாய் தெரிந்தாள்.

ஓரிரு நிமிடங்கள் கழித்து இவள் பற்றிய பரிச்சயம் என் நினைவுக்குள் ஊடுருவியது. இது, மிஸ் கிஞ்ச். மிஸ்டர் ஸிம்மிங்டன்னிடம் இருந்தவள். இதை அப்படியே நான் குறிப்பிட்டேன்.

"நீங்க கால்ப்ரைத் அண்ட் ஸிம்மிங்டன்ல இருந்தவங்க தானே?"

"யெஸ், யெஸ். ஆனா அதை விட்டுவிடுவதே சிறந்ததுனு நான் நினைச்சேன். இது ஒரு நல்ல போஸ்ட். சம்பளமும் அதிகம். ஆனா, பணத்தைவிட மதிப்புமிக்க விஷயங்கள் இருக்கு, என்ன சொல்றீங்க?"

"சந்தேகத்துக்கிடமில்லாமல்" என்றேன் நான்.

"அந்த பயங்கரக் கடுதாசிகள்" என்று முணுமுணுத்தார் கிஞ்ச். "எனக்கு ஒண்ணு வந்தது. என்னையும் மிஸ்டர் ஸிம்மிங்டன்னையும் சேர்த்துப்போட்டு. ஓ பயங்கரம் அது! சொல்லக்கூடாத கண்றாவிகளையெல்லாம் சொல்லிச்சு அது. என் கடமை எனக்கு தெரியும் அதனால அதை போலீஸுக்கு எடுத்துட் டுப் போயிட்டேன் நான். இப்படி எடுத்துப்போவது பர்ஸனலா நல்லதில்லன்னு தெரிஞ்சும் கொண்டுபோய் கொடுத்தேன்."

"நிச்சயம் ஒரு பெண்ணின் தனிப்பட்ட வாழ்க்கைக்கு நல்லதில்லதான்."

"ஆனா அவங்க பாராட்டினாங்க. இதுக்கப்புறம் ஒருவேளை ஊர்ல இதைபற்றி பேசியிருந்தால்? நிச்சயம் பேசியிருப்பாங்க, அதுதானே உலகம்? எனக்கும் அவருக்கும் நடுவுல, ச்சேச்சே... எந்தவிதமான தப்பும் கிடையாது. இருந்தாலும், ஊர் வாய்க்கு தீனி போடுவானேன்னு விலகிட்டேன்."

எனக்கு எரிச்சலாகியது. "நோ, நோ. நீங்க ஏன் அப்படி நினைக்கணும்?"

''ஆனா ஊர் மக்களுக்கு பேய் புத்திதானே! ஆமாம், பேய்கள், ஒவ்வொண்ணும்!''

எனக்கு மனம் கிலேசமாயிற்று. நரம்பதிர்ந்தேன் நான். பேச்சினை மாற்ற நினைத்தேன். அப்போது அவளை நிமிர்ந்து கண்ணுக்குக் கண்ணாய் பார்த்தபோது, இனிமையற்றதொரு கண்டுபிடிப்பினை நான் செய்தேன்.

மிஸ் கிஞ்ச் தனக்குள் முழுவதுமாய் கொண்டாட்டத்தில் இருந்தாள்.

இந்த மொட்டைக் கடுதாசிகள் குறித்து ஏற்கெனவே இன்று ஒருவர் மகிழ்ந்ததை நான் பார்த்திருக்கிறேன். இன்ஸ்பெக்டர் க்ரேவின் துள்ளல், பணி சம்பந்தப்பட்டது. மிஸ் கிஞ்ச்சின் கொண்டாட்டம் என்னை நிலைகுலைய வைத்தது.

ஆடிப்போயிருந்த என் மூளைக்குள் ஒரு சிந்தனை வெட்டியது.

மிஸ் கிஞ்ச்சே இத்தனை கடிதங்களையும் எழுதியிருப் பாளோ?

# அத்தியாயம் - 7

## I

நான் வீடு சேர்ந்தபோது, அங்கு உட்கார்ந்து கொண்டு ஜோன்னாவுடன் திருமதி டேனே கேத்ராப் பேசிக் கொண்டிருந்தார். மிகவும் களைத்தும் அசந்தும் அவர் தோன்றுவதாய் எனக்கு பட்டது.

''இது எனக்கு ஒரு டெரிபிள் ஷாக், மிஸ்டர் பார்ட்டன்'' - அவர் சொன்னார். ''பாவம், பாவம்.''

''ஆமாம்'' என்றேன் நான். ''தனது இன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் அளவுக்கு ஒருத்தரை விரட்டியடித்திருப்பதை நினைச்சா, குலைநடுங்குது.''

''ஓ, நீங்க மிஸஸ் ஸிம்மிங்டன்னை சொல்றீங்களா?''

''அவங்களைத்தானே நீங்க குறிப்பிட்டீங்க?''

மிஸஸ் கேத்ராப் மறுப்பாய் தலையசைத்தார்.

''அஃப்கொர்ஸ், அவங்க கதையை கேட்கும் யாரும் வருந்தத்தான் செய்வாங்க. ஆனா இப்படி ஒரு சம்பவம் எப்படியும் நடந்துதானே ஆகணும், இல்லையா?''

''நடந்துதான் ஆகணுமா?'' என்று வறட்சியாய் கேட்டாள் ஜோன்னா.

மிஸஸ் டேனே கேத்ராப் அவள் பக்கமாய் திரும்பினார்.

''ஓ, எனக்கு அப்படித்தான் தோணுது, டியர். சிக்கல்களிலிருந்து தப்பிக்க தற்கொலை ஒண்ணுதான் வழின்னு ஒருத்தர் நினைச்சுட்டா, அது என்ன சிக்கல் என்பது ஒரு பெரிய பொருட்டே கிடையாது. ஒரு தாளமுடியாத பயங்கர அதிர்ச்சியை மிஸஸ் ஸிம்மிங்டன் எப்ப சந்திச்சிருந்தாலும், இப்படித்தான் அவங்க பண்ணிக்கிட்டிருப்பாங்க. இவ்வகையான பொம்பிளைத்தான் அவங்க என்பதுதான் இதிலிருந்து கடைசியா நமக்கு கிடைக்கும் தகவல். வாழ்க்கைல நல்ல பிடிப்புள்ள, தன் குடும்பத்தை மாத்திரம் சுயநலமா கவனிச்சுக்கிற ஒரு சராசரி பொம்பிளையாத்தான் எனக்கு அவங்க எப்பவுமே தெரிஞ்சிருக்காங்க. இப்படி அதிர்ந்து அலறி ஒடுங்கும் வகையா அவங்களை நான் நினைக்கவே இல்ல ஆனா, மற்றவர்களைப் பற்றி எனக்கு எவ்வளவு கம்மியா தெரிஞ்சிருக்கு என்பதை இப்பத்தான் நானே உணர ஆரம்பிக்கிறேன்.''

''பாவம்னு நீங்க முதல்ல சொன்னீங்களே... அப்படி யாரை நீங்க குறிப்பிட்டீங்கன்னு தெரிஞ்சுக்க எனக்கு ஆர்வமா இருக்கு'' என்று நான் குறிப்பிட்டேன்.

அவர் என்னைப் பார்த்து முழித்தார். ''இதென்ன கேள்வி... கடுதாசிகளை எழுதின பொம்பிளையைத்தான். வேற யாரை?''

''கருணை எனும் நல்லுணர்வை'' என ஆரம்பித்த நான் ''அந்த பொம்பிளைக்கு செலவழிக்க நான் விரும்பல'' என முடித்தேன்.

மிஸஸ் டேனே கேத்ராப் முன்னுக்கு வளைந்து வந்தார். அவள் எனது கால்முட்டியொன்றில் கரம் பதித்தார்.

"ஆனா உங்களால பிரித்தறிய முடியல - உணர முடியல? ங்க கற்பனையை கொஞ்சம் பயன்படுத்துங்க. இப்படிப் பட்ட பாதகக் கடிதங்களை உட்கார்ந்து யோசிச்சு எழுதும் அளவுக்கு, என்ன மாதிரியான ஒரு படுபயங்கர துக்கத்துல, நப்பிப்பற்ற நினைப்புல அவ இருக்கணும்?! தனிமைல, விலக்கப்பட்ட நிலைல, மனிதம் எனும் உயரிய குடும்பத் நிலிருந்து அறுக்கப்பட்ட நிலைல அவ வாழணும்?! இப்படி யொரு வடிகாலைத் தெரிந்தெடுக்கும்படியாய் முழுக்க முழுக்க, அங்குலம் அங்குலமா விஷமாகிவிட்ட மனசு. இதனாலத்தான் இப்படி நான் பச்சாதாபப்படறேன். இந்த வுன்ல யாரோ, தீரா துக்கத்தாலும் சோகத்தாலும் சேர்த்துக் கட்டப்பட்டிருக்காங்க. அது யார்? இதுதான் எனக்குத் தெரியல. எனக்குத் தெரிஞ்சிருக்கணும், யெஸ். மற்றவங்க வேலைல நாம தலையிடக்கூடாது - நான் எப்பவுமே அப்படி செய்ததில்ல. ஆனா, உள்ளார்ந்துள்ள இந்த விஷம், உள்ளூர ஸெப்டிக் ஆகி அழுகிவிட்டாற்போன்ற இந்த துர்நாற்ற மூளை, இதைப் பற்றி எனக்கு தெரிஞ்சிருக்கணும். தெரிஞ்சிருந் தால், அதை அப்படியே வெட்டி அகற்றியிருந்தால், இப்படி யெல்லாம் கெடுதலை அது செஞ்சிருக்காது. ஆமாம், நிச்சயமா - பாவம், பாவப்பட்ட ஜென்மம்."

அவர் கிளம்ப எழுந்துகொண்டார்.

அவர் சொன்னவற்றோடு ஒத்துப்போக என்னால் முடிய வில்லை. என்ன காரணம் சொல்லப்பட்டாலும், மொட்டைக் கடுதாசிகளை எழுதும் அந்த அடையாளம் தெரியாத நபருக்காக நான் இரக்கப்படப் போவதில்லை. ஆனால் நான் ஓர் ஆர்வ உந்துதலால் கேட்டேன்:

''அந்தப் பொம்பிளை யார்னு, மிஸஸ் டேனே... உங்களுக்கு ஐடியாவே இல்லையா?''

அவருடைய குழம்பிய கண்களை என்மேல் பதித்தார். ''வெல், என்னால ஊகிக்க முடியும்'' என்றார். ''ஆனா அதுல தப்பு பண்ணிடலாம், இல்லையா?''

திறந்திருந்த கதவு வழியாய் துரிதமாய் வெளியேறிய அவர், பின்வரும் கேள்வியைக் கேட்க மட்டும் தலையைத் திருப்பிக் கொண்டார்:

''என்கிட்டே சொல்லுங்க மிஸ்டர் பர்ட்டன்... ஏன் நீங்க கலியாணம் கட்டிக்கல?''

வேறு யார் இக்கேள்வியைக் கேட்டிருந்தாலும், என் தனிப்பட்ட விஷயத்தில் தேவையற்று நுழைவதாய் இது ஆகியிருக்கும். ஆனால் மிஸஸ் டேனே கேத்ராப் விஷயத்தில் மட்டும், இப்படியொரு கேள்வி அவர் மூளைக்குள் திடீரென வந்திருக்க வேண்டும் என்றும் அது ஏன் என்று அவர் உண்மையாகவே தெரிந்து கொள்ள விரும்புகிறார் என்றுமே எண்ணத்தோன்றியது.

பின்னாலேயே துரத்திய நான், ''எனக்குப் பொருத்தமான பெண்ணை நான் இதுவரை பார்க்கலேன்னு சொல்லலாமா?'' என்றேன்.

''சொல்லிக்கலாம்'' என்ற அவர், ''ஆனா அது ஒரு சிறந்த விடையா அமையாது'' என்றார். ''ஏன்னா, பற்பல ஆண்கள், பொருந்தாத பொம்பளைங்களைத்தான் கலியாணம் கட்டியிருக்காங்க.''

இம்முறை அவர் வெளியேறி விட்டிருந்தார்.

ஜோன்னா சொன்னாள்:

"இது சரியான ஒரு பைத்தியக் கேஸ்னு நான் நினைப்பதுண்டு, தெரியுமா? இங்கு கிராமத்திலிருக்கும் மக்கள் இவரைப் பார்த்தாலே பயப்படறாங்க."

"நானும், கொஞ்சம்."

"அடுத்து இந்தம்மாகிட்டேயிருந்து என்ன வரும்னு தெரியாததாலா?"

"ஆமாம். மேலும், அவங்க ஊகங்கள்ல, முன்னேற் பாடெல்லாம் ஏதுமில்லாத ஒரு புத்திசாலித்தனம் இருக்கு யெஸ்."

ஜோன்னா மெதுவாய் கேட்டாள்: "இக்கடுதாசிகளை யார் எழுதியிருந்தாலும், அவங்க இப்ப சந்தோஷமற்று இருப்பாங்கன்னு நீ நினைக்கிறியா?"

"அந்த ராட்சஸி என்னத்தை உணர்றாளோ அல்லது எப்படி இருக்காளோ எனக்கு ஒண்ணும் தெரியாது. கவலையும் கிடையாது. அவளால பாதிக்கப்பட்டு விட்டவர்களை பற்றித்தான் என் கவலையெல்லாம்."

இப்போது எனக்கு ஒருவிஷயம் விசித்திரமாய் பட்டது. விஷப்பேனாவை வைத்துக்கொண்டு கொடூரமாய் எழுதித் தள்ளும் அவளுடைய மனோநிலை பற்றிய ஒரு முக்கியமான ஊகத்தை நாங்கள் விட்டிருக்கிறோம் என்பதே அது. அவள் இப்போது பூரித்துப் போயிருக்கலாம் என்றார் க்ரிஃபித். அவள் வருந்திக் கொண்டிருக்கலாம் என்றொரு எண்ணமும் என்னிடம் இருந்தது. மிஸஸ் டேனே கேத்ராப் அவள் கிலேசமுற்றிருக்க வேண்டும் என்று பார்த்தார்.

யெஸ், யெஸ் தவிர்க்க முடியாத ரியாக்ஷனை, கண்ணுக்கு முன்னால் தெரியும் அவ்விளைவினை நாங்கள்

கருத்தில் கொள்ளவே இல்லை நானும் கருத்தில் கொள்ள வில்லை என்றுதான் சொல்லிக் கொள்ள வேண்டும். அவ்விளைவு பயம்.

மிஸஸ் ஸிம்மிங்டன்னின் மரணத்தினால், அக்கடிதங்கள், ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடமிருந்து மற்றொரு முக்கிய பிரிவினரின் கைகளுக்கு இப்போது மாறியுள்ளது. இதிலுள்ள சட்ட நிலைப்பாடு என்ன என்றெல்லாம் எனக்கு தெரியாது - ஒருவேளை ஸிம்மிங்டன் இதனை விளக்கலாம். ஆனால், மரணம் நிகழ்ந்துவிட்ட நிலையில், மொட்டைக் கடுதாசி களை எழுதியவரின் நிலைமை மிகவும் மோசமாக ஆகியுள்ளது நிதர்சனம். யார் அது என்று கண்டுபிடிக்கப்பட்டு விட்டால், சும்மா விளையாட்டுக்கு எழுதினேன் போன்ற அணுகுமுறை யெல்லாம் எடுபடாது. போலீஸ் சுதாரித்துக் கொண்டு எழுந்துள்ளது. ஸ்காட்லாண்டு யார்ட் நிபுணர் கேஸூக்குள் புகுத்தப்பட்டு விட்டார். கடுதாசிகளை எழுதும் அந்த அடையாளம் தெரியாத நபர், அப்படியே அடையாளம் தெரியாமலே இருக்க வேண்டியது இப்போது அத்தியாவசிய மாய் ஆகியுள்ளது.

பயம்தான் உடனடி ரியாக்சன் என்பது ஒப்புக் கொள்ளப் படும்பட்சத்தில், மற்றவை தானாய் அடுத்தடுத்து வருகின்றன. அவை குறித்தும் நான் ஒரு குருடனாய் இருந்துள்ளேன். அவைகளும் எனக்கு வெளிப்படையாகவே தெரிந்திருக்க வேண்டும்.

## II

மறுநாள் காலை நானும் ஜோன்னாவும் காலை சிற்றுண்டிக்கு காலந்தாழ்த்தி வந்தோம். அதாவது,

வழக்கமான லிம்ஸ்டாக் இயல்பின்படி, நாங்கள் லேட்! அப்போது மணி ஒன்பதரை. லண்டனில், இந்நேரத்தில்தான் ஜோன்னா கண்ணிமைகளை மெல்லத் திறக்க முயற்சிப் பாள்... என்னுடையவை இறுக்கமாய் பூட்டியே இருக்கும். ''எட்டரைக்கும் ஒன்பதுக்குமா வந்து ப்ரேக்-ஃபாஸ்ட் சாப்பிடுவது?'' என்று பேட்ரிட்ஜ் எங்களைக் கேட்டபோது, வழக்கமாய் இந்நேரங்களைக் கடந்துதான் நாங்கள் சாப்பிடுவோம் என்று சொல்ல எனக்கோ ஜோன்னாவுக்கோ தைரியம் வரவில்லை!

என்னைக் கோப்படுத்தும் விதமாய் வாசல்நிலையில் நின்றுகொண்டு மேகனுடன் பேசிக்கொண்டிருந்தார் ஐமீ.

எங்களைக் கண்டதும் அவருக்கே உரிய பளீர் ஹல்லோவை தந்தார். ''நான் எப்பவோ எழுந்தாச்சு!''

இது அவர் சமாச்சாரம். ஒரு டாக்டருக்கு நிச்சயமா காலை சிற்றுண்டி சீக்கிரமாகவே தேவைப்படும்... கடமை யுணர்வு பொங்கும் தங்கை அதற்கு ஏற்றாற்போல சீக்கிர மாகவே எழுந்து டீயோ காபியோ ஊற்றித் தரவேண்டும். அதற்காக அக்கம்பக்கத்தில் வந்து சீக்கிரமாகவே மூக்கை நுழைப்பது தகாது. ஒன்பதரை மணி என்பது, ஒருத்தரை காலையில் வந்து சந்திக்கவல்ல நேரம் கிடையாது!

மேகன் வீட்டுக்குள் நழுவிவிட்டு அப்படியே டைனிங் அறைக்குப் போனாள். அவள் பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அழைக்கப்பட்டிருப்பதை அப்போது நான் கவனித்தேன்.

''நான்தான் உள்ளே வரலேனு சொன்னேன்'' என்றார் ஐமீ. தெருப்படியிலேயே நின்று பேசிவிட்டுக் கிளம்புவதை விட உள்ளே வந்து என்ன பேச வேண்டுமோ அதைப்

பேசுவதுதானே கவுரவம் என்றெண்ணிக் கொண்டேன் நான். “மெயின் ரோட்ல ரெட் க்ராஸ் ஸ்டால் போட்டிருக்கோம். அதுக்குத் தர ஏதாவது காய்கறி இருக்கான்னு கேட்டேன் மேகனிடம். இருக்குன்னா, ஓவன் காரை வரவெச்சு அதையெல்லாம் எடுத்துப்பேன்.”

“ரொம்ப சீக்கிரமாகவே நீங்க எழுந்து கிளம்பி வந்திருக்கீங்க” - நான் சொன்னேன்.

“சீக்கரம் துயிலெழும் பறவைக்கு, புழுக்கள் சுலபமா கிடைக்கும்” என்றார் ஐமீ. “இந்த நேரத்துலதான் நீங்க யாரை பார்க்கப் போறீங்களோ அவங்களை நிச்சயமா பிடிக்க முடியும். அடுத்து நான் மிஸ்டர் பைக்கிட்டே போகப் போறேன். மதியம் ப்ரென்டனிடம்.”

“உங்க சக்தியைப் பார்த்தால் எனக்கு அசதி வருது” என்று நான் சொன்ன கணத்தில் டெலிபோன் மணியடித்தது. அதற்கு நான் பதில்தர உள்ளே போனபோது, பிரெஞ்சு பீன்ஸ் அதுஇது என்று தோட்டவேலையில் தனக்கிருக்கும் மிகக் குறைந்த அனுபவங்களை முணு முணுப்பாய் வெளிப் படுத்திக் கொண்டிருந்தாள் ஜோன்னா.

“யார்?” என்றேன் ரிஸீவரில்.

ஆழமான மூச்சிழுப்புடன் குழப்பமான ஒரு குரல் மறுமுனையிலிருந்து வந்தது. பிறகு சந்தேகமான ஒரு பெண்குரல் “ஓ!” என்றது.

“யெஸ்?” என்றேன் நான் மறுபடியும் ஊக்கப்படுத்தும் விதமாய்.

“ஓ” குரல் மறுபடியும் சொன்னது. பிறகு, “அது அதாவது - அது, அது - லிட்டில் ஃபர்ஸ்தானே?”

"இது லிட்டில் ஃபார்ஸ்தான்."

"ஓ!" ஆக ஒவ்வொரு வாக்கியத்தை தொடங்கும் முன்னும் போடப்படும் 'ஓ' இவருக்கு ஒரு வழக்கம் என்பது விளங்கியது. அக்குரல் எச்சரிக்கையாய் கேட்டது: "ஒரு நிமிஷம் நான் மிஸ் பேட்ரிட்ஜுடன் பேசலாமா?"

"நிச்சயமா" என்றேன் நான். "யார்னு நான் சொல்வது?"

"ஓ. இது ஏக்னஸ்னு சொல்லுங்க. முடியுமா? ஏக்னஸ் வட்டில்."

"ஏக்னஸ் வட்டில்?"

"ஆங், அதே."

ரிஸீவரை வைத்துவிட்டு, மாடியில் பேட்ரிட்ஜின் அரவம் கேட்டதால், முதல் படிக்கட்டு வரை போய் நின்றேன்.

"பேட்ரிட்ஜ். பேட்ரிட்ஜ்."

நீளமான மாப் ஒரு கையிலும், 'என்ன?' என்ற கேள்வி விழிகளிலும் தாங்கி, மேலே வந்து நின்றாள் பேட்ரிட்ஜ். "யெஸ், ஸார்?"

"ஏக்னஸ் வட்டில் உங்கூட பேச டெலிபோன்ல இருக்கா."

"என்னன்னு சொல்றீங்க, ஸார்?"

நான் என் குரலை உயர்த்தினேன். "ஏக்னஸ் வட்டில்."

என் மூளைக்குள் எப்படித் தோன்றியதோ அப்படியே உச்சரித்தேன் நான். ஆனால் மறுபடியும் அட்சரம் அட்சரமாக நிறுத்தி சொன்னேன்.

''ஏக்னஸ் உட்டல் என்ன வேணுமாம் அவளுக்கு இப்ப?''

மாப்பினை வைத்துவிட்டு, சற்றே வேண்டாவெறுப்பாய் படிகளிறங்கினாள் அவள். அவளது காட்டன் உடை கலவரமாய் சரசரத்தது.

நான் ஓசைப்படாமல் டைனிங் ரூமுக்குள் போனேன். அங்கு மேகன் தட்டில் போடப்பட்டிருந்ததை அவசர அவசரமாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். ஐமீ க்ரிஃபித்தைப் போல 'பிரகாசமான முகபாவம்' மேகனிடம் காணப்பட வில்லை. நான் சொன்ன காலை வணக்கத்துக்குக் கூட, சன்ன மான குரலில் உரசலாய்த்தான் அவள் வணக்கம் வைத்தாள். உடனேயே குனிந்து கொண்டு சாப்பிட ஆரம்பித்து விட்டாள்.

நான் காலை செய்தித்தாளைப் பிரித்துக் கொண்டு உட்கார, சில நிமிடங்களிலேயே வெறுப்பானவளாய் உள்ளே வந்தாள் ஜோன்னா.

''ஊஃப்'' என்றாள் அவள். ''அசதியாயிட்டேன். எப்பப்ப என்னென்ன காய்கறி விளையும் என்பதுல எனக்கு ஞானமே இல்லைன்னு இப்பத்தான் தெரியுது. ஆமாம், இந்த ஸீஸன்ல பச்சைப்பட்டாணி கிடைக்காதா?''

''அது ஆகஸ்ட் பயிர்'' என பதிலளித்தாள் மேகன்.

''கஷ்டம். இது லண்டன்ல எல்லாப் பருவத்திலும் கிடைக்கும்'' என்று தடாலடியாய் சொன்னாள் ஜோன்னா.

பிறகு ஓர் ஆரஞ்சினை உறித்தபடி ஏதோ சிந்தனையில் ஜோன்னா பேசினாள்:

“எப்படி இப்படி சக்தியுடனும், வீச்சுடனும், குதூகலமான வேகத்துடனும் ஐமீயால நடந்துக்க முடியுதுனு எனக்கு வியப்பா இருக்கு. அவளுக்கு எப்பவாவது அசதி வராதா? மனஅழுத்தம் வந்திருக்காதா? அல்லது ஒருவித ஏக்கம்? விசாரம்?”

ஐமீ க்ரிஃபித் எக்காலத்திலும் விசாரம் கொள்பவள் கிடையாது என்பதில் நிச்சயமாய் இருப்பதாய் நான் குறிப்பிட்டேன். பிறகு அறையை விட்டுக் கிளம்பிய மேகனைப் பின்தொடர்ந்து நானும் போனேன். வராண்டாவை அடைந்தேன்.

அங்கு அப்படியே நின்றபடி எனது பைப்பினை நான் நிரப்பிக் கொண்டிருந்தபோது, அறையிலிருந்து டைனிங் ஹாலுக்குள் பேட்ரிட்ஜ் நுழைந்த ஓசையை நான் கேட்டேன். அங்கு ஜோன்னாவிடம் அவள் “உங்ககிட்டே ஒரு நிமிஷம் நான் பேசலாமா, மிஸ்?” என்று அவள் இறுக்கமாய் சொன்னதையும் நான் கேட்டேன்.

‘கடவுளே...’ வேண்டிக்கொண்டேன் நான். பேட்ரிட்ஜ், கிளம்புவதற்கான நோட்டீஸ் தரமாட்டாள் என்றெண்ணிக் கொண்டேன் நான். அப்படி அவள் செய்து விட்டால், எங்கள் மீது எமிலி பார்ட்டனுக்கு கடுங்கோபம் உண்டாகிவிடும்.

பேட்ரிட்ஜ் தொடர்ந்து கொண்டிருந்தாள்:

“டெலிபோனை நான் பயன்படுத்திக்கிட்டதுக்கு, நான் மன்னிப்பு கேட்டே ஆகணும், மிஸ். போன் பண்ணின அவளுக்கு தெரிஞ்சிருக்கணும், இப்படியெல்லாம் பண்ணக் கூடாதுன்னு. டெலிபோனைப் பயன்படுத்தும் பழக்கமே எனக்குக் கிடையாது... என் நண்பர்கள் என்கூட பேச

போனைப் பயன்படுத்தவும் நான் எப்பவுமே அனுமதி தந்தது கிடையாது. ஆனா இப்படி நடந்துடுச்சு. அதுக்கு மன்னிக்கணும். நம்ம ஐயா போய் அந்த போனை எடுக்கிறாப்போல ஆகி, ப்ச்... ஸாரி மிஸ்.''

''என்னாச்சு பேட்ரிட்ஜ் உனக்கு? அதெல்லாம் ஒண்ணுமே யில்ல...'' என்று ஆதரவாய் சொன்னாள் ஜோன்னா. ''உன் கூட பேசணும்னு விரும்பினால், அதுக்காக உன் நண்பர்கள் தொலைபேசியில உன்னை ஏன் அழைக்கக்கூடாது? எனக்கு விளங்கல...!''

எனக்கு இங்கிருந்து தெரியாவிட்டாலும், பேட்ரிட்ஜின் முகம் இப்போது கடுமையாய் மாறியிருக்கும் என்பதை, பின்வருமாறு அவள் கண்டிப்பாய் சொன்ன பதிலிலிருந்து உணர்ந்து கொள்ள முடிந்தது:

''இந்த வீட்டுல அப்படியொரு வழக்கம் எப்பவுமே இருந்தது கிடையாது, மிஸ். மிஸ் எமிலி அப்படியெல்லாம் அனுமதிக்கவே மாட்டாங்க. ஆக, ஏற்கெனவே நான் சொன்னதைப்போல, ப்ளீஸ் என்னை மன்னிச்சுடுங்க! அந்த ஏக்னஸ் பொண்ணு அதான் போன் பண்ணினவ அவ எதை குறித்தோ அப்செட் ஆகியிருக்கா. சின்னவ. ஒரு ஜென்டில்மேன் வீட்டுல வேற வேலை பண்றா. எப்படி நடந்துப்பதுன்னு தெரியாம அவ ஆகியிருக்கலாம்.''

''ஆக உன் வம்புக்கு ஒண்ணு கிடைச்சாச்சு, பேட்ரிட்ஜ்'' என்றாள் ஜோன்னா சிறு குதூகலத்துடன்.

''எனக்கு போன் பண்ணியிருந்தாளே ஏக்னஸ், அவ'' என்று தொடரலானாள் பேட்ரிட்ஜ்: ''இங்கே அவ எனக்குக் கீழே வேலை பண்ணிக்கிட்டிருந்தா. அப்ப அவளுக்கு வயசு பதினாறு. நேரே அனாதை இல்லத்திலிருந்து இங்கே

வேலைக்குச் சேர்ந்தவ. அம்மாவோ உறவோ அல்லது நண்பர்களோ அவளுக்கு கிடையாது, அதனால, ஏதாவது ஆலோசனை பெறணும்னா நேரா என்கிட்டே வந்துடுவா. என்னென்ன எப்படியெப்படி பண்ணணும்னு நான் அவளுக்கு சொல்வேன், யூ நோ.''

''ம்'' என்ற ஜோன்னா காத்திருக்கலானாள். இன்னும் அதிகமாய் விஷயங்கள் தொடர்ந்து வரவிருப்பது விளங்கியது.

''அதனால உங்ககிட்டே ஓர் அனுமதி கேட்கப்போறேன், மிஸ். இன்னிக்கு மத்தியானம் அவ என்கூட வந்து கிச்சன்ல டீ எடுத்துக்க நீங்க பெரிய மனசு பண்ணி அனுமதிக்கணும். இன்னிக்கு அவளுக்கு ஆஃப் விடுப்பு நாள். என்கிட்டே வந்து ஆலோசனை பெறணும்னு ஏதோ ஒரு விஷயம் அவ மண்டைக்குள்ளே இருக்கு. வழக்கம்போல அவளுக்கு நான் உதவணும்.''

''அட, உன்கூட வந்து என் ஃப்ரண்ட்ஸ் இங்கே ஒரு கப் டீ குடிக்க வேணாம்னு யாரும்மா தடுத்தது?'' என்று சற்று அதிர்ந்தே கேட்டாள் ஜோன்னா.

இப்படி சொன்னதும் பேட்ரிட்ஜ் விறுவிறுவென்று ஆகிவிட்டதாய் பிறகு என்னிடம் சொன்னாள் ஜோன்னா. அதனால், என்னவோ தாங்கக்கூடாததை ஜோன்னா சொல்லி விட் டாற்போல் அவள் பேசியிருக்கிறாள்:

''இந்த வீட்டுப் பழக்கம் இது மிஸ். ஓல்ட் மிஸஸ் பார்ட்டன் கிச்சனுக்குள்ளே எந்த பார்வையாளர்களையும் அனுமதிச்சதே கிடையாது - எங்களுக்கு அன்று விடுப்பு நாளா இருந்தாலே ஒழிய. எங்களுடைய விடுப்பு நாளன்று, நாங்க வெளியிலே போவதற்குப் பதிலாக, வேண்டியவர்களை

இங்கே வரச்சொல்லலாம். ஆனா, மற்ற பணி நாட்கள்ல, நோ. நோ,னா நோதான். மிஸ் எமிலியும் அதே பழைய வகைலேயே நடந்துட்டு வராங்க.''

ஜோன்னா வேலைக்காரர்களிடம் அம்சமாய் நடந்து கொள்வாள். அவர்களில் அநேகமாய் அனைவருக்கும் இவளை பிடிக்கும்.

பேட்ரிட்ஜ் போனபிறகு என்னுடன் வெளியே வந்து இணைந்துகொண்ட ஜோன்னாவிடம் ''இது வேலைக்கா காது ஜோன்னா'' என்றேன் நான். ''நீ காட்டமில்லாம நடந்துப்பதும் நீ காட்டும் இரக்கமும் இங்கே எடுபடல. விட்டுடு. அந்தக்காலத்திலிருந்து எப்படி கெடுபிடியா நடத்தப் பட்டாளோ அதையேதான் சரின்னு நினைக்குது பேட்ரிட்ஜ் கூட்டம்.''

''தன் சொந்த நண்பர்கள்கூட வரக்கூடாதுன்னு சொல்லும் அடக்குமுறையை நான் இதுவரை கேள்விப்பட்டதுகூட கிடையாது ஜெர்ரி'' என்றாள் ஜோன்னா. ''இப்படி அடிமை களைப்போல இவங்க நடத்தப்படக்கூடாது, ஆமாம். கொடுங்கோலாட்சி இது.''

''அப்படித்தான் நடத்தப்படறாங்க என்பதுதான் வெளிப் படையா தெரியுதே ஜோன்னா'' நான் குறிப்பிட்டேன். ''இங்கிருக்கும் பேட்ரிட்ஜூகளின் உலகம் அப்படித்தான்.''

''என்னை எல்லாருக்கும் பிடிக்கும்போது, இவளுக்கு மட்டும் ஏன் பிடிக்க மாட்டேங்குதுன்னு தெரியல.''

''ஒருவேளை உன்னை அவ வீட்டை நிர்வகிக்கவே லாயக் கில்லாதவனு நினைக்கிறாளோ என்னவோ! ஷெல்ஃபுக்கு நடுவில விரலைத் தடவி அதுல அழுக்கு இருக்கா

இல்லையானு நீ பரீட்சிப்பதில்ல. தரைவிரிப்பை தூக்கிப் பார்த்து நீ குப்பைகளை சுட்டிக்காட்டி கத்துவதில்ல. 'பருப்பு, சர்க்கரை மீதியிருந்ததே... என்னாச்சு?' அப்படினு நீ கேட்பதுமில்ல. சாப்பிட இப்ப இது வேணும்னு நீ தடாலடியா கட்டளையிடுவதில்ல.''

''ஊஂஃப்!'' என்றாள் ஜோன்னா. சந்தோஷமற்று பேசினாள் அவள்:

''இன்னிக்கு நான் முழிச்சதே நல்ல முகம் கிடையாதுனு நினைக்கிறேன். காய்கறி எப்ப விளையுதுனு தெரியாததால ஐமீ வந்தபோது விமர்சிக்கப்பட்டேன். நல்ல மனுஷியா நடந்துப்பதால பேட்ரிட்ஜால நிந்திக்கப்பட்டேன். சே, இன்னிக்கு நேரமே சரியில்ல. நான் தோட்டம் வரை போய்ட்டு வரேம்ப்பா.''

''ஏற்கெனவே அங்கே மேகன் போயிருக்கா.''

சற்றுநேரம் தோட்டத்தில் உலவிவிட்ட காரணத்தினால், தற்சமயம் அங்கிருந்த மைய நடைபாதையில் இலக்கேது மின்றி நின்று கொண்டிருந்தாள் மேகன். ஆயினும், அவள் எங்களை நோக்கி விரைவாய் வந்தாள். எதிர்பாராதவிதமாய் சொன்னாள்: ''நான் இன்னிக்கு வீட்டுக்குப் போகணும்.''

''என்ன?'' - உற்சாகமிழந்த நான் கேட்டேன்.

மளமளவென்று சிவந்துப்போனாள் அவள். ஆனாலும், படபடப்பான தீர்மானத்தோடு அவள் சொன்னாள்: ''என்னை கூட்டிட்டு வந்து இவ்ளோ துசிரத்துக்கு ஆதரவு தந்ததற்கு நன்றி. நான் நிச்சயமா உங்களுக்கு தொந்தரவுகள் தந்திருக்கணும் - கோபம் உண்டாக்குவதைப்போல உபத்திர வங்கள் தந்திருக்கணும். ஆனா இங்கிருந்த பொழுதுகளை

நான் மிச்சம் வைக்காம கொண்டாடினேன். இப்ப நான் கிளம்பியாகணும். ஆஃப்ட்டர் ஆல், அது என்னுடைய வீடு. அதிலிருந்து விலகி நான் ரொம்ப நாட்கள் இருப்பது ஆகாது. அதனால இன்னிக்கு காலைல கிளம்பிடலாம்னு முடிவு பண்ணிட்டேன்.''

நானும் ஜோன்னாவும் அவளுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்ளும்படி நிறையவே முயற்சித்தோம். ஆனால் அவள் அவளுடைய தீர்மானத்தில் விடாப்பிடியாய் இருந்து விட்டாள். கடைசியாய் ஜோன்னா காரை எடுத்து வரச்செல்ல, மேகன் மாடிக்குப்போய் சில நிமிடங்களில் அவளுடைய பெட்டியுடன் திரும்பியிருந்தாள்.

இதில் சந்தோஷமடைந்த ஒரே ஆள், பேட்ரிட்ஜ்தான். எப்போதும் இருகியிருக்கும் அம்முகத்தில் சிரிப்பு விளைந்திருந்தது. மேகனை எப்போதுமே அவள் அதிகம் நேசித்தவள் அல்ல.

ஜோன்னா திரும்பி வந்தபோது நான் நடைபாதையின் மையத்தில் நின்று கொண்டிருந்தேன். ''மணிக்கடிகைனு நினைப்பா உனக்கு?'' என்றாள் அவள் என்னிடம்.

''ஏன்?''

''சூரியனின் போக்குல விழும் நிழலை வெச்சு மணி காட்டும் மணிக்கடிகையை தோட்டத்துக்கு நடுவுலதானே வெப்பாங்க... அப்படித்தான் நீ நின்னுக்கிட்ருக்கே!''

''நான் இப்ப ஹாஸ்யத்தை ரசிக்கும் மூடுல இல்ல ஜோன்னா. நான் மேகனைக் கூட்டிட்டு லெக்கி டார் பகுதி வரை போய் வரலாம்னு இருந்தேன்.''

''நாய்ச்சங்கிலியுடனா?'' - அவள் கேட்டாள்.

''என்ன, இன்னிக்கு நீயும் குழப்பமாவே பண்ணிக் கிட்டிருக்கே... அப்படின்னா?''

அவள் வீட்டின் வளைவுக்குப் போனபோது சப்தமாகவும் துல்லியமாகவும் சொன்னாள்: ''நான், 'நாய்ச்சங்கிலி யுடனா?'னு கேட்டேன். அதாவது Collar and lead நாய்களைப் பழக்க. மாஸ்டருடைய நாய் தொலைஞ்சுப் போயிடுச்சு - அப்படிப்பட்ட நிலைலதான் நீ இருக்கே!''

# III

திடுதிப்பென்று எங்களை விட்டுவிட்டு மேகன் கிளம்பிய தால் நான் எரிச்சலாகியிருந்தேன் என்பதை ஒப்புக் கொள் கிறேன். ஒருவேளை அவளுக்கு இவ்விடம் திடீரென்று போரடித்திருக்க வேண்டும்.

ஒரு சின்னப் பெண்ணுக்கு இது ஒன்றும் அப்படி வியக்க வைக்கும் வீடு கிடையாது. அவள் வீட்டிலென்றால் பசங்கள் இருக்கிறார்கள், எல்ஸீ ஹாலண்ட் இருக்கிறாள்...

ஜோன்னா திரும்பும் ஓசை கேட்க, மணிக்கடிகை அதுஇது என்று அவள் ஏதாவது காமெண்ட் அடித்து வெறுப்பேற்றக் கூடும் என்று நான் அவசரமாய் நகர்ந்து விட்டேன்.

லஞ்சுக்கு சற்று முன்னால் ஓவன் க்ரிஃபித் காரில் வந்தார். தோட்டத்தில் விளைந்தவற்றோடு தோட்டக்காரன் காத்துக் கொண்டிருந்தான்.

அவற்றை ஒல்ட் ஆடம்ஸ் காருக்குள் திணித்துக் கொண்டிருந்தபோது நான் ஓவனை ஏதாவது குடிப்பதற்காக உள்ளே அழைத்து வந்தேன். லஞ்சுக்கு இருக்க முடியாது என்று சொல்லி விட்டார் அவர்.

நான் ஷெர்ரி ஒயினுடன் வந்தபோது அங்கு ஜோன்னா அவளுடைய கைவரிசையை காட்ட ஆரம்பித்திருப்பதைக் கவனித்தேன்.

கசப்பான உணர்வுக்கான எவ்விதமான அறிகுறியும் இப்போது அங்கு இல்லை. சோபாவுக்குள் தன்னை அமுக்கிக் கொண்டிருந்த அவள் ஓவனை கேள்விகளால் துளைத் தெடுக்க ஆரம்பித்திருந்தாள். அவருடைய வேலை என்ன மாதிரியானது? ஒரு ஜெனரல் டாக்டராக பயிற்சியில் இருப்பதை அவர் விரும்புகின்றாரா? இதற்கு பதிலாக ஏதாவது ஒரு மருத்துவத்தில் அவர் நிபுணத்துவம் பெற்றிருக்கலாமே? டாக்டருக்குப் படித்துப் பணியாற்றுவது அவளுக்கு உலகிலேயே மிகவும் ஆச்சரியமான ஒன்றாய் இருந்தது.

ஜோன்னாவைப் பற்றி நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்... எதிராளி பேசுவதை உளமாரக் கேட்பதில் அவள் ஒரு லவ்லீ. இதனால், நாங்கள் மூன்றாவது கோப்பை ஒயினை முடித்தபோது, சில கடினமான திசுக்கள் பற்றி யெல்லாம், மருத்துவர்களால் மட்டுமே விளங்கிக் கொள்ளத் தக்க பதங்களைப் போட்டு விளாசிக் கொண்டிருந்தார் டாக்டர் ஓவன். நிச்சயமாய் அவற்றை சாமானியர்களால் விளங்கிக் கொள்ளவே இயலாது.

ஜோன்னா, அவையெல்லாம் புரிந்த ஒரு புத்திசாலியைப் போலவும், சொல்பவற்றில் முழுதும் மூழ்கிவிட்டவளைப் போலவும் தோன்றினாள்.

நான் சற்றுத் தடுமாற்றமடைந்தேன். தயங்கினேன். ஜோன்னா அடிக்கும் கூத்தைப் பார்த்துத்தான். அவள் செய்வது தப்பு. இப்படி பந்தாடத்தக்கவர் கிடையாது ஓவன்! பெண்கள் நிச்சயமாய் அரக்கிகள்தான்.

அப்போதுதான் பக்கவாட்டில் க்ரிஃபித்தைப் பார்க்கும் வாய்ப்பினை நான் பெற்றேன். தான் இப்பொது கையில் எடுத்திருக்கும் 'பேசுதல்' எனும் இலக்கினை நோக்கியிருந்த அவருடைய நீண்ட முகவாய், கடும் தீர்மானத்திலிருந்த அவரது உதடுகள், கண்கொட்டாத முன்னேற்றம்... ஜோன்னா நினைப்பதைப்போல இவரை அத்தனை சுலபமாய் அவள் வீழ்த்திவிட முடியுமா என்பதில் எனக்கு சந்தேகமே. ஓஹ், ஆனாலும், ஒரு பெண்ணுக்கு முன்னால் ஆண் பேச ஆரம்பித்நால், அவன் முட்டாளாய் ஆவதைவிட வேறு ஒன்றும் நடப்பதற்கில்லை! எப்படியோ போகட்டும் அவர்...

அப்போது ஜோன்னா சொன்னாள்: ''உங்க மனசை மாத்திக்கிட்டு எங்களோட லஞ்சுக்கு இருங்களேன், டாக்டர் க்ரிஃபித்.'' இதற்குப் போய் சிவந்துபோனார் அவர். இருப் பதை பற்றி ஒன்றும் பாதகமில்லை என்ற அவர், தன்னுடைய சகோதரிதான் அங்கு ---

''நாம போன் பண்ணி நிலைமையைச் சொல்லிடுவோம்'' என்று சொன்ன ஜோன்னா, விருட்டென எழுந்து ஹாலுக்குப்போய், இங்கு சொன்னதை அங்கு செய்தாள்.

இங்கு கொஞ்சம் க்ரிஃபித் இருப்புக் கொள்ளாமல் ஆவதைப்போல இருந்தது எனக்கு... ஒருவேளை அவர் தனது சகோதரிக்குச் சற்று பயந்தவராய் இருக்கலாம் என எண்ணிக் கொண்டேன் நான்.

புன்னகையுடன் திரும்பி வந்த ஜோன்னா ஏதும் பிரச்சினை இல்லை என்றாள்.

ஆக, லஞ்சுக்கு தங்கினார் ஓவன். மிகவும் கொண்டாட்ட மாய் ஆனார். புத்தகங்கள், நாடகங்கள், உலக அரசியல்,

இசை, பெயிண்டிங், நவீன கட்டுமானம் என பலவற்றை நாங்கள் பேசினோம்.

லிம்ஸ்டாக் பற்றி நாங்கள் பேசவில்லை. அல்லது மொட்டைக் கடுதாசிகள் பற்றியோ, மிஸஸ் ஸிம்மிங்டன்னின் தற்கொலை பற்றியோ நாங்கள் பேசிக்கொள்ளவேயில்லை.

இவற்றிலிருந்தெல்லாம் நாங்கள் முழுவதும் அகற்றப் பட்டிருந்தோம். இதனால் ஓவன் க்ரிஃபித் மிகவும் ஆனந்தம் அடைந்ததாய் எனக்கு தோன்றியது. அவரது இருண்ட முகம் பிரகாசமாகியிருந்தது. அவருள் இருக்கும் கலகலப்பான பக்கத்தை அவர் காட்டினார்.

அவர் போனதும் நான் ஜோன்னாவிடம் சொன்னேன்: ‘‘உன்னுடைய ட்ரிக்குக்கெல்லாம் அவரை மசிய வெச்சுட முடியாதுன்னு நினைக்கிறேன்.’’

‘‘அப்படித்தான் நீ சொல்வே! உங்க ஆம்பிளைங்க எல்லாருக்குமுள்ள நோய் அல்லவா இது!’’

‘‘அவர் தலைமறைஞ்சதுமே நீ வாடிட்டியே, ஜோன்னா... ஏன்? உன் வீண் ஜம்பம் அடிவாங்கிடுச்சோ?’’

‘‘இருக்கலாம்’’ - என் சகோதரி சொன்னாள்.

## IV

அன்று மத்தியானம், கிராமத்திலிருக்கும் எமிலி பார்ட்டனின் வீட்டுக்கு நாங்கள் தேநீர் சமயத்தில் போக வேண்டியிருந்தது.

மேடுகளை ஏறும் அளவுக்கு எனக்கு நம்பிக்கை பிறந்திருந்ததால், அவ்விடம் வரை நாங்கள் நடந்தே போனோம்.

சீக்கிரமே கிளம்பி விட்டோம் போல... குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னமேயே நாங்கள் அங்கு போய்ச் சேர்ந்து விட்டோம். நெட்டையாகவும், முகத்தில் எலும்புகள் துருத்திக் கொண்டு அமிலத்தன்மையாகவும் இருந்த ஒருத்தியால் கதவு திறக்கப்பட்டது. எமிலி பார்ட்டன் வீட்டில் இல்லை என்று அவள் கூறினாள்.

''ஆனா அவங்க உங்களை எதிர்பார்த்துக்கிட்டிருந்தாங்க, அது எனக்குத் தெரியும். ஸோ, உள்ளே வந்து வெயிட் பண்ணுங்களேன்.''

ஓ, இது நிச்சயமாய் 'உங்கள் அடக்கத்துக்குரிய, ஃபளாரன்ஸ்.'

நாங்கள் அவளைப் பின்தொடர்ந்து படிக்கட்டுகள் ஏறி மேலே போனோம். அங்கிருந்த அறையின் கதவினைத் தள்ளித் திறந்தாள் அவள். அது ஒரு வசதியான வரவேற்பறை. அங்கிருந்த சில பொருட்கள் லிட்டில் ஃபர்ஸிலிருந்து வந்திருக்க வேண்டும் என ஊகித்தேன் நான்.

அந்த அறையைப் பற்றி மிகவும் பெருமை கொண்டவளாய் இருந்தாள் அவள்.

''இது நல்லா இருக்கு, இல்லையா?'' என்றாள் அவள்.

''வெரி நைஸ்'' என்றாள் ஜோன்னா கதகதப்பாய்.

''எவ்ளோ வசதியா வைக்க முடியுமோ அவ்ளோ வசதியா நான் அவங்களை வைக்கிறேன். சொல்லப்போனால் அவங்க அவங்களுடைய வீட்டுல வசதியா இருக்கணும். இப்படி ரூமெடுத்து இருக்க வேண்டிய தேவையே கிடையாது.''

ஏமாற்றி விட்டவர்களைப் பார்ப்பதைப்போல என்னையும் ஜோன்னாவையும் அவள் மாற்றிமாற்றிப்

பார்த்தாள். நான் எண்ணிக் கொண்டேன்: 'நிச்சயமாய் இது எங்களுக்கு ஒரு நல்ல நாள் கிடையாது.' ஐமீ க்ரிஃபித் மற்றும் பேட்ரிட்ஜால் தள்ளப்பட்டாள் ஜோன்னா. இப்போது நாங்களிருவருமே ஃபாளாரன்ஸால் நிராகரிக்கப்படுகிறோம்.

''நான் இங்கே வீட்டுவேலைகளைக் கவனிச்சுக்கிட்டு பதினைந்து வருஷமா இருக்கேன்.''

எரிச்சலான ஜோன்னா, எதிர்வினை தந்தாள்: ''வெல், மிஸ் பார்ட்டன்தான் வீட்டை வாடகைக்குவிட முயற்சி பண்ணினாங்க. அப்படித்தான் தரகன்கிட்டே விட்டு ஆள் பிடிக்கவும் செஞ்சாங்க.''

''அப்படிப் பண்ணுமளவுக்கு தள்ளப்பட்டாங்க'' - சொன்னாள் ஃப்ளாரன்ஸ். ''ஒவ்வொரு காசுக்கும் கணக்கு வெச்சுக்கிட்டு, ஜாக்கிரதையாகவும் சிக்கனமாகவும் வாழ்ந்துக்கிட்டிருக்காங்க, தெரியுமா? பாவம்... அப்படியிருந்தும் இந்த பாழாப்போற கவர்ன்மெண்ட் அவங்களை விட்றதா இல்ல! ஒவ்வொரு பவுண்டா கறந்துடுது.''

நான் வருத்தம் தெரிவித்து மறுப்பாய் தலையசைத்தேன்.

''பாட்டி இருந்தபோது ஏகப்பட்ட சொத்து, பணம்'' என்றாள் ஃப்ளாரன்ஸ். ''அப்புறம் அந்த ஒவ்வொரு டியர்களும் ஒவ்வொருத்தரா காலமானாங்க. அவங்களுக்கு ஒருத்தர் மாற்றி ஒருத்தரா நர்ஸ் வேலை செஞ்சது மிஸ் எமிலிதான். தேஞ்சுப் போனாங்க மேடம். பொறுமையிழந்து ஒரு வார்த்தை கத்தணுமே - ம்ம், நோ. இப்ப பணமில்லாத கவலை அவங்க தலைக்கு மேல! வரவேண்டிய அளவுக்கு பங்குகளிலிருந்து பணங்கள் வருவதில்லைனு அவங்க சொல்றாங்க - நான் கேக்கறேன், ஏன் அப்படி? இப்படி ஒரு வயசானவங்களுக்கு வேதனை தருவதை நினைச்சு அவங்க

தலைகுனியணும். பணம் சம்பாதிக்க முடியாம தனிமைல வாழும் ஒரு பொம்பிளைகிட்டேயா அவங்களுடைய தந்திரங்களைக் காட்டுவது? சே.''

''ஷேர்ல போனாலே யாராயிருந்தாலும் இப்படி அடிவாங்கத்தானே வேண்டியிருக்கு?'' - நான் சொன்னேன், ஆனால் ஃப்ளாரன்ஸ் அதே கடுமையிலேயே இருந்தாள்.

''நீங்க சொல்வதெல்லாம் எப்படியாவது சுயமா சம்பாதிச்சுக்க சத்துள்ளவங்களுக்குப் பொருந்தும் ஆனா இவங்களுக்கு எப்படி? அவங்களை யாராவது கவனிச்சுக்கிட்டே இருக்கணும். அப்படியாகிட்டாங்க. நான் இருக்கும் வரை அவங்க மேல ஒரு துரும்பு விழாம பொத்திப்பொத்திப் பார்த்துப்பேன். யெஸ் மிஸ் எமிலிக்காக நான் என்ன வேணும்னாலும் செய்வேன்.''

அவர் சொன்ன இறுதி வாக்கியத்தை எங்களுக்குள் முழுமையாய் ஏற்றுவதற்காக எங்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அந்த தாளவொண்ணா ஃப்ளாரன்ஸ், பிறகு அறையை விட்டு அகன்றாள். ஜாக்கிரதையாய் அறைக் கதவினை மூடிவிட்டுப் போனாள் அவள்.

''ரத்தமெல்லாம் உறிஞ்சப்பட்டதா உணர்றியா, ஜெர்ரி?'' என்று கேட்டாள் ஜோன்னா. ''ஏன்னா, நான் அப்படி உணர்றேன்! பார்க்கிறவங்கள்லாம் நம்மகிட்டே வம்புக்கு வராங்களே ஆமாம், நாம ஒழுங்காத்தானே நடந்துக்கிறோம், இல்லையா?''

''இதுங்களுக்கு ஏற்றாற்போல நாம அமையலேன்னு நினைக்கிறேன்'' நான் சொன்னேன். ''மேகனுக்கு நாம அலுத்துப் போயிட்டோம். வீட்டு வேலைக்காரங்க மீதான உன் அணுகுமுறையையே நிராகரிச்சுட்டா பேட்ரிட்ஜ்.

'உங்கள் அடக்கத்துக்குரிய, ஃபளாரன்ஸ்' பொம்பிளையோ நம்ம ரெண்டு பேருக்குமே சீட்டுக் கிழிச்சுட்டா.''

ஜோன்னா முணுமுணுத்தாள்: ''எதுக்காக மேகன் கிளம்பணும்? எனக்கு வியப்பா இருக்கு இது...''

''அவளுக்கு நம்மயிடம் அலுத்துடுச்சு.''

''அவளுக்கு நாம அலுக்கல. யெஸ். ஐமீ க்ரிஃபித் சொன்ன எதனாலேயோதான் அவ கிளம்பிட்டான்னு உனக்குத் தோணலியா, ஜெர்ரி?''

''அதாவது, இன்னிக்கு காலைல, வாசல்ல நின்னுக்கிட்டு ரெண்டுபேரும் பேசும்போதா?''

''யெஸ். அப்ப ரெண்டு பெரும் பேசிக்க அதிக அவகாசம் கிடைக்கல. ஆனா ---''

நான் வாக்கியத்தை முடித்துக் கொடுத்தேன்:

''ஆனா அந்தப் பொம்பிளையால எதுவும் முடியும். ஒருவேளை அவ---''

கதவு திறந்தது. மிஸ் எமிலி உள்ளே வந்தார். அவர் மூச்சிரைக்க நுழைந்தார். சற்று பரபரப்பிலுமிருந்தார். அவரது கண்கள் அகண்டு பளபளத்துக் கொண்டிருந்தன.

''ஓ, ஐ'ம் ஸார், டியர் ஸாரி'' என்று கவனச்சிதைவோடு சொன்னார் அவர். ''டவுனுக்கு சின்ன ஷாப்பிங்குக்காக போயிருந்தேன். ப்ளூ ரோஸ் பேக்கரியில இருந்த கேக்குகள் புதுசா இல்ல. ஸோ, மிஸஸ் லிகன் கடைக்குப் போனேன். நான் எப்பவுமே கடைசி பொருளாத்தான் கேக்கை வாங்குவேன். அப்பத்தான் ஓவன்லேந்து எடுக்கப்பட்ட புது மற்றும் சூடான கேக்கா அது வீடு வரும்! ஆனா, ஐயோ,

மன்னிக்கணும்... உங்களை நான் காக்க வெச்சுட்டேன். ரொம்ப நேரமாகவா? மன்னிக்க முடியாத குற்றமிது---''

ஜோன்னா பேச்சினை அறுத்தாள்.

''எங்க குற்றமிது, மிஸ் பார்ட்டன். நாங்கதான் ஊருக்கு முன்னாலேயே வந்துட்டோம். நடந்து வந்தோம். ஜெர்ரியோ எப்பவுமே தப்படி வெச்சே நடந்துடுவார். எந்தயிடத்துக்கு நாங்க நடந்து போனாலும் இப்படித்தான் சீக்கிரமாகவே போயிடறோம்.''

''அப்படி ஒண்ணும் ரொம்ப சீக்கிரமால்லாம் நீங்க வந்துடல, டியர். அப்படி சொல்லாதீங்க.''

அந்த ஓல்ட் லேடி, ஜோன்னாவை வாஞ்சையுடன் தோளில் தட்டிக் கொடுத்தார். புன்னகைத்தார்.

ஜோன்னா பிரகாசமானாள். கடைசியில், இது வெளிப் படையாகவே தெரிந்தது, அவள் வென்றிருக்கிறாள்! தனது புன்னகையை எமிலி என்னை நோக்கியும் நீட்டிப்பு செய்தார் ஆனால் அதில் சின்னதாய் பயங்கலந்த தயக்கமிருந்தது: மனிதனைச் சாப்பிடும் புலியை இப்போதைக்கு அது பசியிலில்லை என்ற உத்திரவாதத்தோடு ஒருவன் நெருங்குவதைப்போல.

''டீ பார்ட்டியெல்லாம் பெண்கள் சம்பந்தப்பட்டது. அதுக்கு மதிப்பு கொடுத்து நீங்க வந்திருப்பது, உங்க நல்ல மனசைக் காட்டுது, மிஸ்டர் பர்ட்டன்.''

ஆண்களைப் பற்றி, அவர்கள் விஸ்கி சோடா குடிப்பவர்கள் என்றும், சிகரெட் பிடிப்பவர்கள் என்றும், கிடைக்கும் நேரத்தில் கிராமத்து வேலைக்காரிகளைத் தேடிச்

செல்பவர்கள் என்றுமொரு நினைப்பு மிஸ் பார்ட்டனின் மூளைக்குள் இருப்பதாய் உணர்ந்தேன் நான்.

இதனை நான் பிறகு ஜோன்னாவிடம் சொன்னேன். இதற்கு அவள், ஒருவேளை மிஸ் எமிலிக்கு இப்படிப்பட்ட ஓர் ஆடவனை தனது வாழ்நாளில் சந்திக்க வேண்டும் என்றொரு விருப்பம் இருந்திருக்கும் என்றும், ஆனால் அப்படி நடக்காமலே ஆகியிருக்கலாம் என்றும் சொன்னாள்.

இதனிடையில் அறைக்குள் இப்படியும் அப்படியும் போய்வந்த எமிலி, ஒரு சின்ன டேபிளை எங்களிருவருக்கு மாக நேர்செய்து வைத்து, அதில் தவறிவிடாமல் ஆஷ்-ட்ரேயையும் நிறுவி, சாப்பிட தயாராக்கி முடித்தார். அதேகணத்தில் உள்ளே வந்த ஃப்ளாரன்ஸ், தேநீர் மற்றும் கேக்குகள் வைக்கப்பட்டிருந்த ஒரு ட்ரேயைக் கையில் கொண்டு வந்தாள். அந்த கேக்குகளைத்தான் இப்போது மிஸ் எமிலி வாங்கி வந்திருக்க வேண்டும்.

டீ பிரமாதமாய் இருந்தது. கேக்குடன் பரிமாறப்பட்ட வெண்ணெய் தடவப்பட்ட ஒல்லியான ரொட்டிகள் மேலும் பிரமாதத்தைக் கூட்டின.

ஃப்ளாரன்ஸ் குதூகலமாய் இருந்தார். ஒரு தாயின் தயையுடன் அவர் மிஸ் எமிலியைப் பார்த்துக் கொண்டார். பார்ட்டியில் ஒரு புது பொம்மை கையில் கிடைத்து விட்டால் குழந்தையொன்று அடையவல்ல ஆனந்தத்தை அவளிடம் பார்க்க முடிந்தது.

எங்களுக்குத் தேவைப்பட்டதைவிடவும் அதிகமாக நானும் ஜோன்னாவும் சாப்பிட்டோம். அப்படியொரு நேர்மையான உபசரணையை அளித்தார் அவர். மாயஉலகமான லண்டனி

லிருந்து இரண்டு நபர்களை அழைத்துவந்து உட்கார வைத்து உணவளிப்பதை ஒரு பெரிய வெற்றியாக அங்கு கொண்டாடிக் கொண்டிருந்தார்கள் முதலாளியும் அவருடைய தொழிலாளியும்.

எங்களது சம்பாஷணை ஒரு கட்டத்தில் லோக்கல் சமாச்சாரங்களில் தானாய் வழுக்கி விழுந்தது. டாக்டர் க்ரிஃபித்தைப் பற்றி கனிவாய் பேசினார் மிஸ் பார்ட்டன். அவரது இரக்க சுபாவம் மற்றும் ஒரு டாக்டராய் அவரது கூர்மை போன்றவை அவரைக் கவர்ந்திருந்தன. மிஸ்டர் ஸிம்மிங்டன்னும் புத்திசாலித்தனமான வக்கீலாக நடந்து கொண்டிருக்கிறார். வருமான வரியிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை திரும்பப்பெற அவர் மிஸ் பார்ட்டனுக்கு உதவி யிருக்கிறார். அவ்வுதவி மட்டும் கிடைக்காமல் போயிருந்தால் தனது பணத்தை திரும்பப் பெறவும் ஒரு வழியிருப்பதே மிஸ் பார்ட்டனுக்கு தெரியாமல் போயிருக்கும். அவர் தனது குழந்தைகளுடன் மிகுந்த பாசம் கொண்டவர் என்றார். தனது மனைவியுடனும் அவர் கனிவோடே இருந்தார் என்று குறிப்பிடும்போது மிஸ் பார்ட்டனுக்கு பற்றிக்கொண்டு விட்டது! ''பாவப்பட்ட ஜென்மம் அவ. நெஞ்சை உடைக்கும் துக்கம். அந்தப் பிஞ்சுக்குழந்தைங்க இப்ப அம்மா இல்லாம. ஆவ எப்பவுமே ஒரு ஸ்ட்ராங்கான பொம்பிளை கிடையாது இதுல சமீபகாலமா அவ உடம்பு வேற சரியில்லாம ஆகியிருந்தது. மூளைல புயல் - அப்படித்தான் சொல்லிக்கிறாங்க. இப்படிப்பட்ட கேஸ்களைப்பற்றி நான் பேப்பர்கள்ல படிச்சிருக்கேன். அவங்களுக்கு, ஆபத்தான சூழ்நிலைகள்ல என்ன பண்றோம்னே தெரியாம ஆகிடுமாம். அப்படித்தான் ஆகியிருக்கணும் என்ன செய்யறோம்னே

விளங்காத ஒரு நிலைக்கு அவ தள்ளப்பட்டிருக்கணும் இல்லேன்னா மிஸ்டர் ஸிம்மிங்டன்னையும் அந்த ரெண்டு குழந்தைகளும் அவ நினைச்சுப் பார்க்காம போயிருப்பாளா?''

''அந்த மொட்டைக் கடுதாசி அவங்களை பயங்கரமா உலுக்கியிருக்கணும்'' என்றாள் ஜோன்னா.

மிஸ் பார்ட்டனின் முகம் சிவந்தது. குரலில் கொஞ்சம் சகிப்புத்தன்மை குறைந்திருக்க பேசினார்: ''அந்த சமாச்சாரங் களெல்லாம் உக்காந்து விவாதிக்க ஏற்றவை கிடையாது, இல்லையா? கடிதங்கள் சுற்றிக்கிட்டிருக்குனு எங்களுக்கு தெரியும் ஆனா, நா-நாங்க அதை பற்றியெல்லாம் பே-பேசிப்பது கிடையாது. அந்தரங்கமான கண்றாவிகள். அவற்றை ஜஸ்ட் ஒதுக்கிவிடுவதுதான் நல்லது.''

வெல், மிஸ் பார்ட்டன் வேண்டுமென்றால் அவற்றை ஒதுக்கிவிடக்கூடும். ஆனால் வேறு சிலரால் அப்படி செய்வது இயலாது. ஆயினும், நான் மரியாதையாக பேச்சை மாற்றினேன். நாங்கள் ஐமீ க்ரிஃபித் பற்றிப் பேசலானோம்.

''அற்புதம், நிச்சயமா ஒண்டர்ஃபுல்'' என்றார் எமிலி பார்ட்டன். ''அவ சக்தியும், விஷயங்களை அழகா வழி நடத்தும் அவளுடைய தலைமைப் பண்பும், பிரமாதமானவை. அவ பெண்களுடனும் ரொம்ப நல்லா இருப்பா. எல்லா வகையிலும் அவ ப்ராக்டிகல்... மற்றும் நாட்டு நடப்புகளை விரல் நுனியில் வைத்திருக்கும் சாதுர்யம் மிக்கவள். இந்தப் பகுதியை நிர்வகிச்சுக்கிட்டிருப்பதே அவதாம்பேன் நான். அவ சகோதரனுக்கு அப்படி பணிவிடை செய்வா. சகோதரனுக்கும் சகோதரிக்கும் நடுவுல இப்படியொரு அர்ப்பணிப்பைப் பார்ப்பதே அலாதிதான்.''

''தேவைக்கு அதிகமா இவங்க நடந்துப்பதா, அவர் என்னிக்குமே உணர்ந்ததில்லையா?'' கேட்டாள் ஜோன்னா.

துணுக்குற்றவராய் ஜோன்னாவை முறைத்தார் மிஸ் பார்ட்டன்.

''அவருக்காக அநேக தியாகங்கள் பண்ணியிருக்கா இவ'' என்றார், மரியதை கலந்த சிறு வருத்தத்துடன்.

உடனே அப்போது ஜோன்னாவின் கண்களில் ஓ யெஸ் என்றொரு மின்னல் வெட்டியதை நான் கவனித்தேன். பேச்சு, மிஸ்டர் பை பக்கம் போனது.

மிஸ்டர் பை பற்றி சற்றே தெளிவற்று இருந்தார் மிஸ் பார்ட்டன்.

அவரைப் பற்றிய எதைக் குறிப்பிட்டாலும் அதனை சந்தேகம் தொனிக்க இரண்டு முறை பேசினார். ரொம்ப கனிவானவர் யெஸ், ரொ-ம்ப கனி-வானவர். நல்ல வசதியானவர் - ஆங், தயாள குணமும் உள்ளவர். அவருக்கு நிறைய அந்நிய பார்வையாளர்கள் உண்டு - ஆனா, அஃப் கொர்ஸ் அவர் நிறைய இடங்களுக்கு பிரயாணிச்சிருக்கார். இப்படி போனது அவருடைய விவரணைகள்.

பிரயாணம், ஒருவருடைய சிந்தனையை நன்கு விசாலப் படுத்துவதுடன், சில விளங்காத அறிமுகங்களையும் உண்டு பண்ணித் தரும் என்பதை நாங்கள் ஏற்றுக் கொண்டோம்.

''நான் கப்பல் பிரயாணம் போகணும்னு ரொம்ப நினைச் சுப்பதுண்டு'' என்றார் மிஸ் எமிலி. ''பேப்பர்கள்ல படிக் கிறோம். அதெல்லாம் ரொம்பவுமே கவர்ச்சிகரமா இருக்கு.''

''அப்ப நீங்க போகக்கூடாதா?'' என்றாள் ஜோன்னா.

அக்கனவினை நிஜமாக்கிக் கொள்வது என்பதே மிஸ் எமிலிக்கு கலவரமாய் பட்டது. ''ஓ, நோ, நோ. அது அசாத்திய மான ஒன்று.''

''எது, கப்பல்ல போய்வருவதா? ஏன்! இப்பல்லாம் பயங்கர சீப்பா ஆகிடுச்சு.''

''ஓ, செலவை மட்டும் நான் சொல்லல. நுபன் தனியா போவதை தெரிந்தெடுக்கக் கூடாது. தனியா பிரயாணம் பண்ணுவது பார்ப்பவர்களுக்கு விசித்திரமா தெரியும்... உங்களுக்கு அப்படி தெரியலியா?''

''நோ'' என்றாள் ஜோன்னா.

மிஸ் எமிலி, சொன்னவளை சந்தேகமாய் பார்த்தார்.

''நான் என் லக்கேஜையெல்லாம் எப்படி சமாளிப் பேன்னும் எனக்கு விளங்கல - அயல்நாட்டுக் கடற்கரைல இறங்குவது - வேறுபட்ட செலாவணிகள் ---''

கலவரப்பட்ட அம்மையாரின் கண்களுக்கு முன்னால் பற்பல தடங்கல்கள் உருப்பெறுவது தெரிந்தது. அவரை அமைதிப்படுத்த, நெருங்கும் தோட்டக் கண்காட்சி மற்றும் அதன் விற்பனைபற்றி பேச்சைக் கொண்டுபோனாள் ஜோன்னா. இது, தவிர்க்க முடியாமல், மிஸஸ் டேனே கேத்ராப் பற்றி பேச வேண்டிய நிலைக்கு எங்களை கொண்டு சென்றுவிட்டது.

ஒரு சிறு வலி மிஸ் பர்ட்டனின் முகத்தில் வந்துநின்று பின் அடங்கியது.

''தெரியுமா டியர்'' என்றவர் தெரியவைத்தார்: ''அவ ஒரு விளங்கிக்க முடியாத பொம்பிளை. அவ சில சமயங்கள்ல சொல்லும் விஷயங்கள் இருக்குப் பாருங்க...''

அவை என்ன விஷயங்கள் என்று நான் கேட்டேன்.

“ஒ, எனக்கு ஒண்ணும் தெரியாதுப்பா. அப்படி ஒரு எதிர்பாராத விஷயங்களா இருக்கும் அவை. அவ உங்களைப் பார்ப்பது இருக்கு பாருங்க - ஏதோ அங்கே நீங்க இல்லாமல் வேற யாரோ இருப்பதைப் போல! இதை விளக்குவதில் நான் சுமாராயிருக்கலாம்... அந்தப் பதிப்பை விளக்குவது அப்படியொண்ணும் சுலபம் கிடையாது. இந்த அழகுல ஒண்ணு கவனிக்கணும் அவளா வந்து எதிலும் மூக்கை நுழைக்க மாட்டா. ஒரு பாதிரியாரின் மனைவி வந்து ஆலோசனை தரவல்ல பல கேஸ்கள் இருக்கு. மக்களை இழுத்து அருகில் வைத்து அவங்க வாழ்க்கைப் பாதையை சீர்படுத்துவது. ஏன்னா மக்கள் அவ சொல்வதைக் கேட்பாங்க. இதுல நான் நிச்சயமா இருக்கேன். அவங்கள்லாம் அவளை பார்த்து அப்படி பிரமிக்கிறாங்க. ஆனா அவ தனியா, ரொம்ப தூரதேசத்து சிந்தனையில இருக்கவே விரும்பறா. மேலும், ஒரு விளக்கமுடியாத வழக்கம் இருக்கு அவகிட்டே: யாருக்காக இரக்கமோ வருத்தமோ கொள்ளக்கூடாதோ அவங்களுக்காக விசனப்படுவா.”

“இது இண்ட்ரஸ்டிங்” என்றேன் நான், ஒரு அவசரப் பார்வையை ஜோன்னாவிடம் பரிமாறிக் கொண்டே.

“இத்தனையிருந்தாலும், அவ ஒரு நல்ல சத்தான குடும்பத்துல பிறந்தவ. அவ, பெல்பாத் குடும்பத்துல மிஸ் ஃப்ரரோவே என்ற பெயரில் பிறந்தா. ரொம்ப நல்ல குடும்பமது. ஆனா, இப்படிப்பட்ட ஒல்ட் குடும்பங்கள் சில சமயங்கள்ல விளங்கிக்க முடியாம நடந்துக்கும். நல்ல புத்தி சாலித்தனமும் சாதுர்யமும் கொண்ட தனது கணவனுக்கு அர்ப்பணிப்பா இருக்கா. இப்படிப்பட்ட கிராமத்துல

இருப்பதால் அவருடைய புத்திக்கூர்மையெல்லாம் வீணாப் போவதா நான் நினைப்பதுண்டு. நல்ல மனுஷன். படு நேர்மை. ஆனா அவர் மேற்குறிப்பா சொல்லும் லத்தீன்தான் எனக்கு சில சமயங்கள்ல குழப்பத்தை தரும்.''

லத்தீன் மொழியினை நான் பள்ளிக்கூடத்திலேயே படித்திருக்கிறேன் என்று பேச்சு சென்றபோது, இங்கிருக்கும் பள்ளிக்கூடத்து ஆசிரியை பற்றி பேச்சு நீண்டது.

''இங்கிருக்கும் டீச்சர் ஒரு ஒப்பேறாத பொம்பிளை'' என்றார் எமிலி. ''சிகப்பு பொம்பிளை'' என்றார்பி அவர். 'சிகப்பு' என்ற வார்த்தையைச் சொல்லும்போது மட்டும் குரலைத் தாழ்த்திக் கொண்டார்.

பிறகு, சிறு குன்றுகள் வழியாய் நடந்து நாங்கள் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது ஜோன்னா சொன்னாது:

''அவங்க ரொம்ப ஸ்வீட்.''

## V

அன்றிரவு சாப்பிடும்போது, பேட்ரிட்ஜின் தேநீர் விருந்து மத்தியானம் நல்லபடியாய் போயிருக்க வேண்டுமே என்று அவளிடம் குறிப்பிட்டாள் ஜோன்னா.

முகம் சிவந்துபோன பேட்ரிட்ஜ் வழக்கத்தைவிடவும் இறுக்கமாய் தனது 'பாவத்தை' ஆக்கிக்கொண்டாள்.

''தேங்க் யூ, மிஸ். ஆனா ஏக்னஸ் வரல.''

''ஓ அப்படியா... ஐறீம் ஸாரி.''

இதனால் குமுறிக்கொண்டிருந்த அவளால் மேற்கொண்டு கட்டுப்படுத்த முடியாமல் ஆனது... கொட்டினாள்:

''அவளை நான் ஒண்ணும் வரச்சொல்லல! அவளா போன் பண்ணினா... என்னவோ மண்டைக்குள்ளே குடையுதுன்னா... இன்னிக்கு அவளுக்கு விடுப்பு நாளா இருப்பதால வரேன்னா. உங்களிடம் அனுமதி வாங்கணும்னு மனசுல வெச்சுக்கிட்டு வரச்சொன்னேன் அந்த அனுமதியையும் வாங்கினேன். இத்தனை ஆனதுக்கப்புறம் அவகிட்டேயிருந்து, மூச்! துளி அரவம் இல்ல. காக்க வெச்சதுக்கு ஒரு மன்னிப்பு - ம்ம். ஒரு கடுதாசி போட்டிருக்கலாம் - காலை தபால்ல வரும்பாருங்க. இந்தக் காலத்துப் பொம்பிளைங்க எங்கே இருக்கோம்னும் தெரிவதில்ல... எப்படி நடப்பதுன்னும் தெரிவதில்ல.''

ஜோன்னா, காயப்பட்ட பேட்ரிட்ஜை சமாதானமாக்க முயன்றாள்.

''விடு. திடீர்னு உடம்பு முடியாம ஆகியிருக்கும் அவளுக்கு. நீ போன் பண்ணி என் வரலேனு தெரிஞ்சுக்கலியா?''

மறுபடியும் விறுவிறுவென்று ஆனாள் பேட்ரிட்ஜ்.

''இல்லை. நான் பண்ணல, மிஸ். ஏன் பண்ணணும்? ஏக்னஸ் ரௌடித்தனமா நடந்துக்க விரும்பினால் போகட்டும்... அது அவபாடு. ஆனா நாங்க மறுபடியும் சந்திக்கும்போது விடமாட்டேன் நான் இதை, பார்த்துக் கிட்டே இருங்க.''

இன்னமும் தணல் குறையாமல் அறையை விட்டு இறுகிய முகத்துடன் வெளியேறினாள் அவள். நானும் ஜோன்னாவும் சிரித்துக் கொண்டோம்.

நாங்களிருவரும் மொட்டைக் கடுதாசிகள் பற்றிப் பேச ஆரம்பித்தோம். நாஷும் அந்த உம்மணாமூஞ்சி க்ரேவ்ஸும்

எப்படி நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்று இருவரும் வியந்து கொண்டிருந்தோம்.

''மிஸஸ் ஸிம்மிங்டன்னின் தற்கொலை நடந்து சரியா ஒருவாரம் ஆகிடுச்சு'' என்றாள் ஜோன்னா. ''இன்னிக்கு தேதில நிச்சயமா அவங்க எதையாவது நிச்சயமா கண்டு பிடிச்சிருக்கணும்னு நான் நினைக்கிறேன். கைரேகைகள், அல்லது கையெழுத்து, இப்படி ஏதாவது.''

நான் என் நினைவின்றி இதற்கு பதிலளித்தேன். என் சுயநினைவில், ஒரு மூலையில், ஏதோவொரு இருப்புக் கொள்ளாமை வளரத் தொடங்கியிருந்தது. இது, ஜோன்னா பயன்படுத்திய 'சரியா ஒருவாரம் ஆகிடுச்சு' என்ற பதத்துடன் தொடர்பு கொண்டதொரு படபடப்பு.

ஆஹ்... சேர வேண்டிய விஷயங்களை நான் முன்னமேயே சரியாய் சேர்த்திருக்க வேண்டும், ஐ ஸே. ஒருவேளை, நானறியாமலேயே, என் நினைவு ஏற்கெனவே சந்தேகத்தில் இருந்துள்ளது.

அப்படி விடுபட்டது இப்போது எழுந்துவிட்டது. இருப்புக் கொள்ளாமை வளர்ந்தது. தலை வரை எழுந்தது.

சிரத்தையோடு கிராமத்து நிகழ்வுகளை தான் பேசிக் கொண்டிருக்க அதில் என் கவனம் இல்லாமல் நழுவி விட்டதை திடீரென்று ஜோன்னா கவனித்தாள்.

''என்ன சமாச்சாரம், ஜெர்ரி?''

சிதறியிருந்தவற்றை என் சிந்தனை ஒழுங்கான ஒன்றாய் ஆக்கிக் கொண்டிருந்தபடியால் நான் உடனே பதில் பேசவில்லை.

மிஸஸ் ஸிம்மிங்டன்னின் தற்கொலை... அந்த மத்தியானப் பொழுதில் அவர் மட்டும் வீட்டில் தனித்திருந்திருக்கிறார்... வேலைக்காரர்களுக்கு அன்று விடுப்பு நாள் என்ற காரணத்தால் அவர் தனியாய் இருந்திருக்கிறார்... சரியாய் ஒருவாரத்துக்கு முன்னால்...

''ஜெர்ரி என்ன---''

நான் குறுக்கிட்டேன்.

''ஜோன்னா பணியாளர்களுக்கு வாரம் ஒருமுறை விடுப்பு உண்டு, அப்படித்தானே?''

''ஒன்றுவிட்டு ஒரு ஞாயிற்றுக் கிழமையும்'' என்றாள் அவள். ''எதுக்காக இப்ப இது---''

''ஞாயிற்றுக்கிழமைகளை விட்டுடுவோம். அதே நாள்லதான் ஒவ்வொரு வாரமும் வெளில போவாங்களா அவங்க?''

''யெஸ். வழக்கமா அப்படித்தான்.''

ஜோன்னா என்னை ஆர்வமாய் பார்த்தாள். என் மூளை தெரிந்தெடுத்துப் போயிருந்த பாதையை அவளது மூளை இன்னும் பிடிக்கவில்லை.

நான் அறைக்குக் குறுக்காய் போய் அழைப்புமணியை அடித்தேன். பேட்ரிட்ஜ் வந்தாள்.

''இந்த ஏக்னஸ் வட்டில் பற்றி சொல்லு'' என்றேன் நான். ''அவ இன்னும் பணியில இருக்காளா?''

''யெஸ் ஸார். மிஸஸ் ஸிம்மிங்டன்கிட்டே. ஓ, இப்ப, மிஸ்டர் ஸிம்மிங்டன்கிட்டேன்னு நான் சொல்லணும்.''

நான் ஓர் ஆழமான உள்மூச்சு வாங்கினேன். கடியாரத்தைப் பார்த்தேன். மணி பத்தரை.

"அவ இப்ப வேலைக்கு வந்திருப்பான்னு நீ நினைக்கிறியா?"

"யெஸ் ஸார். அந்த வீட்டுல வேலைக்கு வர்றவங்க பத்துக்கெல்லாம் சரியா வந்துடணும்."

நான் சொன்னேன்: "இப்ப போன் பண்ணிப் பார்க்கப் போறேன்."

நான் அறைக்குப் போனேன். ஜோன்னாவும் பேட்ரிட்ஜூம் என்னை தொடர்ந்து வந்தார்கள். ஜோன்னா புதிர்போடப் பட்டவளைப் போலத் தோன்றினாள். நான் எண்களைச் சுழற்றும்போது அவள் சொன்னாள்:

"என்ன பண்ணப்போறே, ஜெர்ரி?"

"அந்தப் பொண்ணு சரியா வந்துட்டா என்பதை நான் ஊர்ஜிதப்படுத்திக்கப் போறேன்."

பேட்ரிட்ஜ் மூக்கை உறிஞ்சினாள். ஜஸ்ட் உறிஞ்சினாள், வேறொன்றும் கிடையாது. ஆனால் அவளுடைய மூக்குறிஞ் சுதல்களையெல்லாம் நான் கண்டுகொள்வது கிடையாது.

மறுமுனையில் எல்ஸீ ஹாலண்ட் பேசினார்.

"தொந்தரவுக்கு மன்னிக்கணும்" என்றேன் நான். "இது ஜெர்ரி பர்ட்டன். அ-அதாவது, உங்க வேலைக்காரி ஏ-ஏக்னஸ் வந்துட்டாங்களா?"

இப்படிச் சொல்லிய பிறகுதான் எத்தனை முட்டாளாய் நான் நடந்துக் கொண்டிருக்கிறேன் என்பதையே நான் உணர்ந்தேன். ஒருவேளை அந்தப் பெண் வேலைக்கு வந்து

எல்லாம் சுமூகமாய் இருந்தால், எதற்காக நான் போன் பண்ணினேன் என்பதை நான் எப்படி விளக்கப் போகிறேன்? ஜோன்னாவைவிட்டு இக்கேள்வியை நான் கேட்க வைத்திருக்க வேண்டும். இதே விளக்கத்தை அவளும் தர நேர்ந்திருந்தாலும் பெரிதாய் பாதகம் ஒன்றும் அதில் இருக்காது. ஆனால் ஒரு புதுவித கிசுகிசு லிம்ஸ்டாக்கில் உலவ ஆரம்பிப்பதை நான் இப்போதே கணித்தேன். எனக்கு அறிமுகமே இல்லாத அந்த ஏக்னஸ் வட்டில்லையும் மையத்தில் வைத்து!

''ஏக்னஸா? ஓ, அவ இந்த நேரத்துல நிச்சயமா வந்திருக்கணுமே?''

நான் விடாமல் முன்னேறினேன்.

''அவங்க வந்துட்டாங்களானு ஜஸ்ட் கொஞ்சம் பார்த்து எனக்குச் சொல்ல முடியுமா, மிஸ் ஹாலண்ட்?''

குழந்தைகளைக் கவனித்துக் கொள்பவர்களைப் பற்றிய ஒரு பொதுநியதியை சொல்லியாக வேண்டும். என்ன செய்யச் சொல்கிறோமோ அதை அப்படியே செய்துவிடுவார்கள் அவர்கள். ஏன் என்று கேட்கக்கூடாது என்பது ரூல்! எல்ஸீ ஹாலண்ட் ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு மரியாதையாய் உள்ளே போனார்.

இரண்டு நிமிடங்கள் கழித்து நான் அவருடைய குரலைக் கேட்டேன்:

''மிஸ்டர் பர்ட்டன்?''

''யெஸ்.''

''ஏக்னஸ், இன்னும் வரல.''

அப்போது என் சந்தேகம் சரியே என்று விளங்கியது.

மறுமுனையில் கலவையாய் குரல்கள் ஒலிப்பது எனக்கு பட்டும்படாமல் கேட்டது. பிறகு மிஸ்டர் ஸிம்மிங்டன்னே பேசினார்:

''ஹல்லோ பர்ட்டன்... என்ன சங்கதி?''

''உங்க பணிப்பெண் ஏக்னஸ் இன்னும் வரலியா?''

''வரல. மிஸ் ஹாலண்ட் இப்பத்தான் பார்த்துட்டு வந்தாங்க. என்னங்க சங்கதி? ஏதாவது விபத்து நடந்திருக்கா, என்ன?''

''விபத்து கிடையாது'' என்றேன் நான்.

''அப்போ - அந்தப் பொண்ணுக்கு ஏதாவது நடந்திருக் கும்னு நீங்க நம்பறீங்களா?''

நான் இறுக்கமாய் சொன்னேன்: ''அப்படி நடந்திருந்தால், நான் ஆச்சரியப்பட மாட்டேன்.''

# அத்தியாயம் - 8

## I

அன்று இரவு நான் அடித்துப் போட்டாற்போல தூங்கினேன். அப்படியே ஆனாலும், என் சிந்தனைக்குள் புதிர்களின் துண்டுகள் மிதந்து கொண்டிருந்ததாய் எனக்கு ஞாபகம். நான் இப்பிரச்சினையில் ஒழுங்காக என் மூளையை செலுத்தியிருந்தேனென்றால், இது முழுவதையும் நான் அங்கங்கேயே தீர்த்திருக்கலாம் என்று இப்போது ஸ்திரமாய் நம்பினேன். இல்லையென்றால், எதற்காக அந்தத் துண்டுகள் விடாப்பிடியாய் என்னுள் தொங்கிக் கொண்டிருக்க வேண்டும்?

ஒரு குறிப்பிட்ட நொடியில், நமக்கு எத்தனை விஷயங்கள் தெரிந்திருக்கும்? நமக்கு எத்தனை தெரியும் என்று நாம் எண்ணியுள்ளோமோ அதையெல்லாம்விட நிறைய! ஆனால் அந்த அடியாழத்து அறிதல் பிரதேசத்துக்குள் நம்மால் தடைகளை உடைத்துக்கொண்டு நுழைய முடியாது. நாமறிந்துள்ள அந்த 'நிறைய' சமாச்சாரங்கள் அனைத்தும் அங்குள்ளன, ஆனால் நம்மால் அப்பிரதேசத்தினை அடைய முடியாது.

நான் படுக்கையில் சுண்டிவிட்ட நாணயமாய் சுற்றிக்கொண்டு அப்படியே கிடந்தேன். புரிந்தும் புரியாத துண்டுதுண்டுப் புதிர்கள் என்னை சித்ரவதை செய்தன.

யெஸ், இவ்விஷயத்தில் ஒரு 'மாதிரி' இருக்கிறது அதாவது பேட்டர்ன். அது மட்டும் என் கைகளுக்கு கிடைத்துவிடக் கூடாதா? அந்தப் பழிகாரக் கடுதாசிகளை எழுதியது யார் என்பது எனக்கு தெரிந்தாக வேண்டும். ஒரு துருப்பு, ஒரு நுனிவால், இருக்கிறது... அது மட்டும் என் கைகளுக்குக் கிடைத்து விட்டால்...

நான் தூக்கத்துக்குள் விழுந்த பிறகு, எனது மயக்க மூளைக்குள் எரிச்சலூட்டும் வார்த்தைகள் நடனமாடின...

நெருப்பில்லாமல் புகையாது. புகையில்லாமல் நெருப் பில்லை. புகை... புகை? புகைப்படலம்... நோ, அது ஒரு போர்... போருக்கான பதம். போர். ஒரு துண்டுக்காகிதம்... வெறும் துண்டுக்காகிதம்... பெல்ஜியம் ஜெர்மனி...

நான் தூங்கிப்போனேன். நரைத்துப்போயிருந்த மிஸஸ் டேனே கேத்ராவைக் கூட்டிக்கொண்டு

நாய்ச் சங்கிலியான Collar and lead-வுடன் நான் ஒரு சிறுநடை போவதைப் போல கனா கண்டேன்.

## II

தொலைபேசியின் மணியோசைதான் என்னை எழுப்பியது. விடாது அடித்த மணி.

நான் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து மணிபார்த்தேன். ஏழரை. இதுவரை என்னை யாரும் வந்து எழுப்பவில்லை.

தொலைபேசி கீழேயிருந்த ஹாலில் அடித்துக் கொண்டிருந்தது. விடாமல்.

படுக்கையிலிருந்து குதித்தெழுந்தேன் நான். கிடைத்த உடையால் என்னை மறைத்துக் கொண்டேன். மளமள வென்று கீழே போனேன். கிச்சனிலிருந்து பின்கதவு வழியாய் வந்துக் கொண்டிருந்த பேட்ரிட்ஜுக்கு முன்னால் நான் சென்று விட்டேன். ரிஸீவரை நானெடுத்தேன்.

''ஹல்லோ?''

''ஓ---'' அந்தப்பக்கத்தில் ஒரு பெரிய ஆறுதல் தெறித்த ஓ இது. ''நீங்களா!'' மேகனின் குரல். மேகனின் குரல் சந்தேகத் துக்கிடமின்றி அலறலிலும் கிலியிலும் சிக்கிக் கிடந்தது. ''ஓ, ப்ளீஸ் வாங்க - வாங்க. ஓ, ப்ளீஸ். செய்வீங்களா?''

''நான் உடனே வரேன்'' என்றேன். ''கேட்குதா. உடனே.''

இரு படிகளாய் தாண்டிக் கடந்த நான் ஜோன்னாவின் அறைக்குள் வெடியாய் நுழைந்தேன்.

''கவனி ஜோ. நான் ஸிம்மிங்டன் வீடு வரைக்கும் போறேன்.''

அவளுடைய சுருண்ட கேசம் நிறைந்த தலையை தலையணையிலிருந்து துசிக்கிய ஜோன்னா, சின்னக்குழந்தை போல கண்களைக் கசக்கினாள்.

''ஏன் - என்ன ஆச்சு?''

''ஐ டோண்ட் நோ. குழந்தை மேகன் பேசினா. சமுத்திரத் துக்குள்ளே மூழ்கிட்டவளைப் போல பேசினா அவ.''

''என்னவாயிருக்கும்னு நீ நினைக்கிறே?''

''நான் தவறா ஊகிக்காதபட்சத்தில், அந்தப் பெண் ஏக்னஸ் சம்பந்தப்பட்டது.''

நான் கதவுவரை விரைந்திருந்தபோது ஜோன்னா கத்தினாள்:

''நில்லு. நான் வந்து கார் ஓட்டறேன்.''

''தேவையில்ல. நானே ஓட்டிக்கறேன்.''

''உன்னால கார் ஓட்ட முடியாதுடா...''

''யெஸ், என்னால முடியும்.''

ஓட்டவும் செய்தேன். சற்று வலி கொடுத்தது, ஆனால் தாளமுடியாதபடி அதிகமாய் இல்லை. நான் ஷேவ் செய்து குளிந்து, உடைமாற்றி, காரெடுத்து ஓட்டி, அரைமணி நேரத்துக்குள் ஸிம்மிங்டன் இடத்துக்கு வந்து விட்டேன்.

மேகன் எனக்காக காத்துக் கொண்டேயிருந்திருக்க வேண்டும். வீட்டிலிருந்து ஓடிவந்த அவள் என்னைக் கவ்விக் கொண்டாள். அவளது பரிதாபமான சின்னமுகம் வெளிறிப் போய் திருகிக்கொண்டிருந்தது.

''ஓ, நீங்க வந்துட்டீங்க - நீங்க வந்துட்டீங்க!''

''பொறு, பொறு'' என்றேன் நான். ''யெஸ், நான் வந்தாச்சு. இப்ப சொல்லு, என்ன விஷயம்?''

அவள் நடுங்க ஆரம்பித்தாள். நான் கரவளையமிட்டு நம்பிக்கை ஊட்டினேன்.

''நான் - நாந்தான் அவளைப் பார்த்தேன்.''

''நீ ஏக்னஸைப் பார்த்தியா? எங்கே?''

நடுநடுக்கம் கூடியது.

"மாடிப்படி வளைவுல. அங்கே ஒரு கப்போர்டு இருக்கு. தூண்டில், கோல்ஃப் கம்புகள், மற்றதெல்லாம் அங்கிருக்கும். தெரியுமில்ல?"

நான் ஒப்புதலாய் தலையசைத்தேன். எல்லா வீடுகளிலும் இருக்கும் வழக்கமான ஒரு அலமாரி.

மேகன் தொடரலானாள்:

"அங்கே இருந்தா அவ - உடம்பு முழுக்க சுருட்டப்பட்டு - அப்புறம் - அப்புறம் - ஐஸ்கட்டியா. வெறும் ஐஸ்கட்டியா இருந்தா. அவ - அவ - இறந்துட்டா, தெரியுமா?"

ஓர் ஆர்வ உந்துதலில் கேட்டேன். "எதுக்காக நீ அதுக்குள்ளே போய் எட்டிப்பார்த்தே?"

"எ-எ-எனக்கு தெரியல. நீங்க நேத்து ராத்திரி போன் பண்ணியிருந்தீங்க. அதுக்கப்புறம் நாங்கள்லாம் ஏக்னஸ் எங்கேனு கேட்டுக்கிட்டோம். கொஞ்ச நேரம் காத்திருந் தோம், ஆனா அவ வரல. கடைசில நாங்க தூங்கப் போயிட்டோம். நான் நல்லா தூங்கல. சீக்கிரத்திலேயே எழுந்துட்டேன். குக் இருக்காளே ரோஸ்... அவ மட்டு மிருந்தா. ஏக்னஸ் திரும்பி வராததால அவ கடுகடுனு இருந்தா. இதேபோல அவ முன்னாடி வேலை செஞ்ச ஏதோவோர் இடத்திலேயும் வெளியே போன வேலைக்காரி ஒருத்தி திரும்பி வரவேயில்லைனு என்கிட்டே ஒரு கதையை சொன்னா அவ. எனக்கு, கொஞ்சம் பால், ரொட்டி, வெண்ணெய் கிச்சன்ல இருந்தது. அதுல நான் இறங்கிய போதுதான், விளங்கிக்கவே முடியாத ஒரு தினுசுல திடீர்னு கிச்சனுக்குள்ளே ரோஸ் வந்தா. ஏக்னஸ் வெளில போகும் போது போட்டுக் கொள்ளும் பொருட்களெல்லாம் அப்படியே அவ ரூம்லேயே இருக்குன்னு சொன்னா இவ. அவ வெளியே

போகும்போது தவறாமல் விரும்பிப் போட்டுக் கொள்ளும் பொருட்கள் அவை. அப்ப நான் சிந்திக்க ஆரம்பிச்சேன்: ஒருவேளை அவ அவ வீட்டை விட்டு வெளியே போகாமலே இருந்திருந்தால்?! வீட்டுக்குள்ளே போய் பார்க்க ஆரம்பிச்சேன் - அப்பத்தான், மாடிப்படி வளைவுக் குள்ளே இருக்கும் கப்போர்டைத் திறந்தேன் அதுல அவ இருந்தா...''

''போலீசுக்கு யாராவது இங்கே போன்பண்ணித் தெரிவிச்சிருப்பாங்கன்னு நினைக்கிறேன்...''

''யெஸ். அவங்க இப்ப இங்கே இருக்காங்க. என் வளர்ப்புத் தந்தை உடனே அவங்களுக்கு போன் போட்டுட்டார். இதுக்கப்புறம்தான் எ-எ-என்னால இதை தாங்கிக் முடியா துன்னு நினைச்சேன்... உங்களுக்கு போன் போட்டேன். ஒண்ணும் தொந்தரவு இல்லையே?''

''நோ'' என்றேன் நான். ''தொந்தரவெல்லாம் கிடையாது.''

நான் அவளை பரபரப்பாய் பார்த்தேன். ''நீ ஏக்னஸைப் பார்த்தபிறகு - உனக்கு யாராவது பிராண்டியோ, காபியோ, டீயோ தந்தாங்களா?''

மறுத்துத் தலையசைத்தாள் மேகன்.

நான் இந்த ஸிம்மிங்டன் கூட்டத்தையே சபித்தேன். அந்த புத்திசிகாமணி ஸிம்மிங்டன் வேறெதைப் பற்றியும் சிந்திக்கவேயில்லை, போலீஸைத் தவிர. தாளவொண்ணா ஒரு கண்டுபிடிப்பினை செய்திருக்கிறாள் இந்த உணர்ச்சி வசப்படவல்ல சிறுமி. இது, அவளுக்குள் ஏற்படுத்தியிருக்க வல்ல பாதிப்பினை எல்ஸீயோ அல்லது குக்கோ அல்லது வேறெவருமோ கொஞ்சமாவது சிந்தித்தார்களா என்பது சந்தேகமே.

“இப்ப நீ என்கூட வா” என்றேன் நான். “கிச்சனுக்குப் போவோம்.”

நாங்கள் வீட்டைச் சுற்றி பின்கதவு வழியே சென்று, பிறகு அதன்வழியாய் கிச்சனுக்குள் நுழைந்தோம். குண்டுமுகம் கொண்ட ரோஸுக்கு வயது 40. கிச்சன் கனப்புக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு அவள் ஒரு ஸ்ட்ராங் டீ குடித்துக் கொண்டிருந்தாள். மளமளவென்ற பேச்சினால் அவள் எங்களை வரவேற்றாள். நெஞ்சில் அழுந்த கை வைத்துக் கொண்டிருந்தாள் அவள்.

கேள்விப்பட்டதும் அவளால் நம்பவே முடியாமல் ஆகிவிட்டதாம் நெஞ்சின் படபடப்பு எகிறிவிட்டதாம் சொன்னாள் அவள்!

“மிஸ் மேகனுக்கு முதல்ல ஒரு ஸ்ட்ராங் டீயை தயார் செய்ங்க” என்றேன் நான், மேற்கொண்டு அவளைப் பேச விடாமல். “ஷாக் ஆகியிருக்கா இவ, தெரியுமில்ல உங்களுக்கு? நினைவிருக்கட்டும், உடலைக் கண்டுபிடிச்சது இவதான்.”

‘உடலை’ என்ற ஒரு வார்த்தையை ஜஸ்ட் சொன்னதே ரோஸை மீண்டும் ஆஃப் ஆக்கியது. ஆனால் நான் கண்களாலேயே அவளை கண்டிப்பாய் விரட்ட, அவள் மளமள வென்று ஒரு கோப்பை கரும் தேநீரைத் தயாராக்கினாள்.

“குடிம்மா நீ” என்றேன் மேகனிடம். “இப்பவே அதைக் குடிச்சுமுடி. உங்ககிட்டே ப்ராண்டி கிடையாதா, ரோஸ்?”

கேக் தயாரிக்க பயன்படுத்தும் ப்ராண்டி கொஞ்சம் பாக்கியிருப்பதாய் ஞாபகம் என்றாள் அவள்.

“அதுபோதும்” என்றேன் நான். அதிலிருந்து சிறு துளியை மேகனின் கோப்பைக்குள் நான் விட்டேன். நான் செய்வது

ஒரு நல்ல ஐடியா என்று ரோஸ் உணர்வதை அவள் விழிகளில் நான் படித்தேன்.

ரோஸுடன் இருக்குமாறு நான் மேகனுக்கு சொன்னேன்.

''மிஸ் மேகனை நீங்க கவனிச்சிப்பீங்கன்னு நம்பலாமா?'' நான் கேட்க, மரியாதையாய் ''ஓ நிச்சயமா'' என்றாள் அவள் பதிலுக்கு.

நான் வீட்டுக்குள் நுழைந்தேன். ச்சே... என்ன மனிதர்கள் இவர்கள்? சிறுமியைக் கவனித்திருக்க வேண்டாமா?

உள்ளூர எரிந்துகொண்டே நான் ஹாலிலிருந்த எல்ஸீ ஹாலண்ட் நோக்கிப் போனேன். என்னைப் பார்த்ததில் ஆச்சரியம் அடைந்தவராய் அவர் தோன்றவில்லை. ஒரு தாங்க முடியாத சமாச்சாரம் வீட்டில் நடந்துள்ளதாய் தெரிய வரும்போது, யார் வருகிறார்கள் யார் போகிறார்கள் என்பதொன்றும் பெரிதாய் இருக்காது போல. முன்கதவருகே கான்ஸ்டபிள் பெர்ட் ரண்டில் இருந்தார்.

எல்ஸீ ஹாலண்ட், பெருமூச்சினூடே பேசினார்: ''ஓ, மிஸ்டர், பர்ட்டன், எத்தனை கொடூரம் பாருங்க, ஆங்? யார் இப்படிப்பட்ட பயங்கரமான கொலையை செய்திருப் பாங்க?''

''அப்ப இது கொலையா?''

''ஓ, யெஸ். பின்னந்தலைல அவ அடிக்கப்பட்டிருக்கா. முழுக்கவும் ரத்தமும் கேசமும்தான். ஓ, இது பயங்கரம் மேலும் கப்போர்டுக்குள்ளே போட்டு திணிச்சு. யார் இப்படிப்பட்ட ஒரு வஞ்சகக் கொடுமையை செஞ்சிருப் பாங்க? அப்புறம், எதுக்காக? பரிதாபமான ஏக்னஸ்... அவ

ஒருத்தருக்கும் ஒரு தீங்கும் செஞ்சது கிடையாதுன்னு நான் நிச்சயமா சொல்வேன்.''

''நோ'' என்றேன் நான். ''ஆனா யாரோ அப்படி நடந்திருப்பதைக் கவனிச்சிருக்காங்களே...''

அவர் என்னைப் பார்த்து முழித்தார். சொல்வதைச் சட்டென்று புரிந்து கொள்ளும் திறமை மிக்கவர் கிடையாது இவர்... ஆனால், நல்ல தைரியம் உள்ளது. அவரது முகநிறம் அப்படியே மாற்றங்கொள்ளாமல் இருந்தது. ஆனாலும் உள்ளார்ந்த கிளர்ச்சியில் கொஞ்சமாய் அதன் வண்ணம் கூடியது... அவர் இரக்கம்கொண்ட இதயமுள்ளவராய் இருந்தாலும்கூட, நடப்பவற்றைப் பார்த்து அவர் மகிழ்வதாய் எனக்குள் சிறு எண்ணம் உதித்தது.

''நான் இப்ப பசங்களைக் கவனிக்கணும்'' என்றார் அவர், விடைபெறும் விதமாய். ''அவங்களுக்கு அதிர்ச்சி வந்துடக் கூடாது என்பதுல ஸிம்மிங்டன் குறியா இருக்கார். இதிலிருந்து அவங்களைத் தள்ளியே வைக்கணும்னு என்கிட்டே சொல்லி யிருக்கார் அவர்.''

''மேகன் பாடியைக் கண்டுபிடிச்சதா நான் கேள்விப் பட்டேன்'' நான் சொன்னேன். ''அவளை யாராவது கவனிக்கிறாங்கன்னு நான் நினைக்கிறேன்?''

சட்டென்று மனச்சாட்சியால் அறையப்பட்டவராய் ஆனார் எல்ஸீ.

''ஓ டியர்'' என்றார் என்னிடம். ''அவளைப் பற்றி நான் முழுசா மறந்திருக்கேன். அவ அதிர்ச்சியாகியிருக்க மாட்டாள்னு நினைக்கிறேன். என்ன செய்வதுன்னு தெரியாம இப்படியும் அப்படியுமா ஓடிக்கிட்டிருக்கேன் நான். போலீஸ், அது

இதுன்னு. ஆனா இது என்னுடைய தப்புத்தான். பாவம் அவ அப்செட்டாகியிருப்பா. நான் உடனே போய் அவளைக் கவனிக்கறேன்.''

நான் தடுத்தேன்.

''அவ நல்லாத்தான் இருக்கா'' என்றேன். ''ரோஸ் அவளைக் கவனிச்சுக்கிட்டிருக்காங்க. நீங்க பசங்களைப் போய் பாருங்க.''

சுண்ணாம்புக்கல் வெள்ளைப் பற்களைக் காட்டி தேங்க்ஸ் வைத்தார் அவர். பிறகு மாடிப்படிகளில் விரைந்தார். ம், அந்தப் பசங்களைக் கவனிப்பதுதான் அவளுடைய வேலை - மேகனைக் கவனிப்பது அவளுடைய வேலை கிடையாது அது, யாருடைய வேலையும் கிடையாது. எல்ஸீ, ஸிம்மிங்டன் சம்பந்தப்பட்டவற்றைக் கவனிக்க மட்டுமே சம்பளம் வாங்குபவள். ஆகவே அவளைக் குற்றம் சொல்லக்கூடாது.

அவர் படிகளின் வளைவில் மறைந்தபோது, என் மூச்சே நின்றுவிடும் போலானது. அக்கணத்தில், அங்கு நான் குழந்தைகளைக் கவனிக்க அவசரமாய் ஓடும் ஒரு பெண் மணியை பார்க்கவில்லை... வெற்றியால் இறக்கை கட்டிப் பறக்கும் ஒரு தேவதையைப் பார்த்தேன் நான்...

பிறகு இங்கு ஒரு கதவு திறந்தது. சூப்பரின்டெண்டெண்ட் நாஷ் உள்ளே வந்தார். அவர் பின்னால் ஸிம்மிங்டன்.

''ஓ, மிஸ்டர் பர்ட்டனா?'' என்றார் அவர். ''நான் ஜஸ்ட் உங்களுக்கு போன் போடத்தான் வந்தேன். உங்களையே இங்கே பார்த்ததுல எனக்கு சந்தோஷம்.''

அந்த நேரத்தில், அவர் என்னை, நான் எதற்காக இங்கே வந்திருக்கிறேன் என்று கேட்கவில்லை.

அவர் ஸிம்மிங்டன் பக்கமாய் திரும்பினார். சொன்னார்: ''அனுமதிச்சா, இந்த அறையை நான் பயன்படுத்திக்கறேன்.''

அது ஒரு சிறிய வரவேற்பறை - அதன் ஜன்னல் வாசலைப் பார்த்து.

''நிச்சயமா, நிச்சயமா.''

ஸிம்மிங்டன்னின் நிலைமை நன்றாகவே தோன்றினாலும், அவர் தளர்ந்து அயர்ந்தவராய் தெரிந்தார். சூப்பரின்டெண்டெண்ட் நாஷ் மெல்லமாய் சொன்னார்:

''உங்க நிலைமைல நான் இருந்தால், கொஞ்சமா ப்ரேக்ஃபாஸ்ட் சாப்பிட்டிருப்பேன், மிஸ்டர் ஸிம்மிங்டன். நீங்க, மிஸ் ஹாலண்ட், மிஸ் மேகன் எல்லாரும் முட்டை சாப்பிட்டு டீ குடித்தால் தேவலாம்னு உணர்வீங்க. கொலை என்பது, வெறும் வயிற்றில் தாங்கிக்க முடியாத ஒரு விஷயம்.''

உரிமையுள்ள ஒரு குடும்ப டாக்டராய் பேசினார் அவர்.

''தேங்க் யூ, சூப்பரின்டெண்டெண்ட். நான் உங்க அட்வைஸை ஏத்துக்கறேன்''

நான் நாஷைத் தொடர்ந்து அந்த சின்ன அறைக்குள் சென்றேன். அவர் கதவை மூடினார். பிறகு சொன்னார்:

''நீங்க இங்கே சீக்கிரமாகவே வந்துட்டீங்களோ? விஷயத்தை எப்படி கேள்விப்பட்டீங்க?''

மேகன் எனக்குப் போன் பண்ணியிருந்தாள் என்று சொன்னேன் நான். சூப்பரின்டெண்டெண்ட் நாஷிடம் நான் முழுவதுமாய் விடப்பட்டிருந்தேன். மேகனுக்கும்

காலைச் சிற்றுண்டியின் அவசியம் உள்ளது என்பதை அவரும் மறக்கவில்லை...

“அந்தப் பெண்ணைப் பற்றி விசாரிச்சு நீங்க நேற்றிரவு போன் பண்ணினதா நான் கேள்விப்படறேன், மிஸ்டர் பார்ட்டன்... ஏன் அது?”

இந்தக் காட்சி ஒட்டியும் ஒட்டாமலும் தவிப்பதை நானும் உணர்ந்தேன். பேட்ரிட்ஜுக்கு ஏக்னஸ் செய்திருந்த போன் கால் பற்றியும் அவள் காணாமல் போன விஷயம் குறித்தும் நான் சொன்னேன். அவர், “யெஸ்... எனக்கு விளங்குது” என்றார்.

இதனை அவர் மெதுவாகவும், சிந்தனையோடும், முகவாயைத் தடவியபடி சொன்னார் அவர்.

பிறகு அவர் பெருமூச்செறிந்தார்:

“இது கொலையே. நேரடியான தாக்குதல். இப்ப கேள்வி: இந்தப் பொண்ணுக்கு என்ன தெரிஞ்சிருக்கும்? பேட்ரிட்ஜிடம் இவ ஏதாவது சொன்னாளா? ஏதாவது நிச்சயப்படுத்தி?”

“அப்படியேதும் எனக்குத் தோணல. ஆனா அதை நீங்க அவகிட்டேயே கேட்கலாம்.”

“யெஸ், இங்கே முடிஞ்சதும் நான் வந்து அவளை பார்க்கறேன்.”

“எக்ஸாக்டா என்ன நடந்திருக்கு?” நான் கேட்டேன். “இல்ல, இன்னும் உங்களுக்குத் தெரிய வரலியா?”

“போதுமான அளவு தெரிஞ்சிருக்கு. அது, அந்தப் பெண்ணுடைய விடுப்பு நாள்---”

“ரெண்டு பேருக்குமா?”

''யெஸ். இங்கே ரெண்டு ஸிஸ்டர்கள் இருந்திருக்காங்கன்னு கேள்விப்பட்டேன். அவங்க ரெண்டு பேரும் ஒண்ணாத்தான் வெளியே போக விரும்புவாங்களாம். அதனால அவங்க ரெண்டு பேருக்கும் ஒரேநாள்லதான் விடுப்பு தந்திருக்காங்க, மிஸஸ் ஸிம்மிங்டன். அப்புறமா இவங்க ரெண்டு பேரும் வந்திருக்காங்க... அதே ஏற்பாட்டையே தொடர்ந்திருக்காங்க அவங்க. டைனிங் ரூம்ல எல்லாத்தையும் தயார் பண்ணிட்டு அவங்க போயிடுவாங்களாம். மிஸ் ஹாலண்ட் டீயைக் கவனிச்சுப்பாங்க போல.''

''ஐ ஸீ.''

''ஒரு விஷயம் தெளிவாத் தெரியுது. சமையக்காரி ரோஸ், நெதர் மிக்பார்ட் பகுதியிலிருந்து வரா. அவளுடைய விடுப்பு நாளன்று அங்கே இருக்கணும்னா, அவ ரெண்டரை மணி பஸ்ஸைப் பிடிச்சாத்தான் முடியும். ஆகவே, லஞ்ச் சமாச்சாரங்களை க்ளியர் பண்ற வேலை எப்பவுமே ஏக்னஸ் கிட்டேதான் விழுது. இதைச் சரிக் கட்ட ராத்திரி சாப்பாட்டுக்குத் தேவையானவற்றை ரோஸ் கழுவிவெச்சுட்டுப் போவா.

''நேற்றும் இதுதான் நடந்திருக்கு. பஸ்ஸைப் பிடிக்க ரோஸ் ரெண்டு இருபத்தைந்துக்கு கிளம்பியிருக்கா. ஸிம்மிங்டன் அவருடைய ஆபிஸுக்கு 2.35க்கு போயிருக்கார். மூணேகாலுக்கு எல்ஸீயும் பசங்களும் வெளியே போயிருக்காங்க. இதுக்கு ஐந்து நிமிடம் கழிச்சு மேகன் ஹண்ட்டர் சைக்கிளை எடுத்துக்கிட்டு போயிருக்கா. இப்படினா, ஏக்னஸ் வீட்டுல தனியாத்தான் இருந்திருக்கணும். எனக்குத் தெரிஞ்சு, வழக்கமா அவ வீட்டை விட்டு மூணுக்கும் மூணரைக்கும் இடைப்பட்ட நேரத்துலதான் போறா.''

"அப்ப, வீடு காலியா இருக்குமா?"

"ஓ, அதைப்பற்றி யாரும் இங்கே கவலைப்படுவது கிடையாது. இப்படிப்பட்ட இடங்களில பூட்டுவதெல்லாம் கிடையாது. மூணடிக்க பத்து நிமிடங்கள் இருக்கும்போது ஏக்னஸ் வீட்டுல தனியாத்தான் இருந்திருக்கா. பாடி கண்டெடுக்கப்பட்டபோது அவ சமையல் கவுன்ல இருந்ததால், அவ வீட்டை விட்டு வெளியே கிளம்பல என்பதும் ஊர்ஜிதமாகுது."

"உங்களால மரணம் சம்பவிச்ச நேரத்தை தோராயமா சொல்ல முடியும்னு நினைக்கிறேன்..."

"டாக்டர் க்ரிஃபித் அவரா சொல்ல மாட்டார். அவருடைய தொழில்ரீதியான ரிப்போர்ட்டுல, ரெண்டுக்கும் நாலரைக்கும் இடைப்பட்ட நேரம்னு சொல்றார்."

"அவங்க எப்படி கொல்லப்பட்டிருக்காங்க?"

"முதல்ல பின்னந்தலைல ஓர் அடி அடிக்கப்பட்டு அவங்க நிலைகுலைய ஆக்கப்பட்டிருக்காங்க. அப்புறம், ஒரு சாதாரண கிச்சன் கத்தி, அதிகூர்மையான முனையாக்கப் பட்ட கத்தி, அது முகுளத்தின் அடியில் மிகச்சரியா இறக்கப் பட்டிருக்கு. உடனடி மரணம்."

ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டேன். ம்ம், கேட்கவே நாராசமான சேதியிது. "ஈவிரக்கமற்ற நடவடிக்கை" என்றேன் நான்.

"ஓ, யெஸ் யெஸ்... அதுல சந்தேகமில்ல."

நான் ஆழ்ந்து சுவாசித்தேன். "யார் செஞ்சது இதை?" கேட்டேன் நான். "மேலும், எதுக்கு?"

''ஏன் என்ற காரணம் நமக்குத் தெரியாமலே போயிடாது'' என்று மெதுவாய் குறிப்பிட்டார் நாஷ். ''ஆனா நம்மால இப்போதைக்கு ஊகிக்க முடியும்.''

''அவளுக்கு ஏதாவது தெரிஞ்சிடுச்சா?''

''அவளுக்கு ஏதோ தெரிஞ்சுடுச்சு.''

''அது என்னனு அவ ஒருவருக்குமா குறிப்பு குடுக்கல?''

''எனக்குத் தெரிஞ்சு, நோ. மிஸஸ் ஸிம்மிங்டன்னின் மரணம் சம்பவித்த தினத்திலிருந்து அவ அப்செட் ஆகியிருந் திருக்கா - இப்படி குக் சொல்றா. இந்த ரோஸின் வார்த்தை களின்படி, அவ எது குறித்தோ மேலும் மேலும் வருத்தப் பட்டிருக்கா. தான் இப்ப இதுக்கு என்ன பண்ணுவதுன்னு தெரியலியேனு சொல்லிக்கிட்டே இருந்திருக்கா அவ.''

அவர் ஒரு சிறு பெருமூச்சினை வெளியிட்டார்.

''ஒவ்வொண்ணும் இப்படித்தான் போகும். வழக்கு களைச் சொல்றேன். அவங்க போலீஸ்கிட்டே வரவே மாட்டாங்க. 'போலீஸ் கேஸ்னு ஆகிடக்கூடாது'னு அவங்களுக்குள்ளேயே ஒரு பயவட்டத்தைப் போட்டுப் பாங்க. அவ நேரா எங்ககிட்டே வந்து அவளை எது கவலைப் படுத்திக்கிட்டு இருக்குனு சொல்லியிருந்தால், இன்னிக்கு அவ உயிரோட இருந்திருப்பா.''

''அந்த இன்னொரு பொம்பிளைகிட்டே அவ எந்த குறிப்புமா கொடுக்கல?''

''இல்ல. அல்லது இப்படி ரோஸ் சொல்றா! அவ சொல்வதை நான் நம்பத் தயாராயிருக்கேன். அப்படி அவ ஏதாவது சின்ன குறிப்பையாவது இந்த ரோஸ்கிட்டே கொடுத்திருந்தால், இவ, அதுக்கு சூப்பரா தலை கால்

எல்லாம் வெச்சு இந்நேரத்துக்கு அற்புதமான ஓர் உடலா ஆக்கியிருப்பா!''

''அது என்னன்னு தெரியாததால'' என்று நான் சொன்னேன்: ''விஷயம் என்னைப் பைத்தியமாக்குது.''

''இப்பவும் நம்மால சிறப்பா, சரியா, ஊகிக்க முடியும், மிஸ்டர் பர்ட்டன். ரொம்பவும் துல்லியமான ஒரு விஷயமா அது இருக்க வாய்ப்பில்லை இதை முதல்ல தெரிஞ்சுக்கணும். நீங்க அதைப்பற்றி ஊகிப்பீங்க... அப்புறம் ஆழமா சிந்திப்பீங்க... சிந்திக்கச் சிந்திக்க உங்களுடைய இருப்புக் கொள்ளாமை கூடிக்கிட்டே போகும்: இப்படிப்பட்ட ஒரு விஷயமாத்தான் அது இருக்கணும். வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுனு உடனே விளங்கிடாது. நான் என்ன சொல்ல வரேன்னு விளங்குதா உங்களுக்கு?''

''யெஸ்.''

''எனக்கென்னவோ, அது என்ன என்பது தெரியும்னே தோணுது.''

நான் அவரை மரியாதை கலந்து பவ்யமாய் பார்த்தேன். ''அப்படின்னா, அது பிரமாதம் சூப்பரின்டெண்டெண்ட்.''

''வெல், கவனிங்க மிஸ்டர் பர்ட்டன். எனக்கு, உங்களுக்குத் தெரியாத ஒரு சமாச்சாரம் தெரியும். மிஸ்டர் ஸிம்மிங்டன் தற்கொலை செய்துக்கிட்ட மத்தியானம், ரெண்டு வேலைக்காரிகளுமே விடுப்பெடுத்துக்கிட்டுப் போயிருக்கணும். அது அவங்களுடைய விடுப்பு நாள். ஆனா ஏக்னஸ் திரும்பி வீட்டுக்கே வந்திருக்கா.''

''அது உங்களுக்குத் தெரியுமா?''

''யெஸ். ஏக்னஸுக்கு ஒரு பாய் ஃப்ரண்ட் இருக்கான். மீன்கடை வெச்சிருக்கும் யங் ரெண்டல். புதன்கிழமை சீக்கிரமா மூடிடுவாங்க. அதனால ஏக்னஸைப் பார்க்க வருவான் அவன். ரெண்டுபேரும் நடப்பாங்க. இல்ல, மழையாயிருந்தால் சினிமாவுக்கு. அந்த புதன்கிழமையன்று ரெண்டு பேரும் சந்திச்சுக்கிட்டவுடனேயே சண்டை உருவாகியிருக்கு. ஏக்னஸுக்கு இன்னொரு மீன் வியாபாரி இருக்கான்னு தகராறு. இந்த சிந்தனையால தன்னையே துளைச்சுக்கிட்டிருக்கான் யங் ஃப்ரட் ரெண்டல். ரெண்டு பேரும் கடுமையா கத்தியிருக்காங்க. வீட்டுக்குத் திரும்பித் தாளிட்டுக்கிட்ட இவ, ரெண்டல் மன்னிப்புக் கேட்கும்வரை வெளியே வரப்போவதில்லைன்னு அறிவிச்சுடறா.''

''அப்புறம்?''

''மிஸ்டர் பர்ட்டன்... கிச்சன், வீட்டின் பின்பக்கம் பார்த் திருக்கு. ஆனா சமையல் சாமான்களெல்லாம் இருக்கும் அறையோ, இப்ப நாம எதை பார்த்துக்கிட்டு இருக்கோமோ அதே பக்கத்தையே பார்த்துக்கிட்டு அமைஞ்சிருக்கு. வாசலை.''

அவர் நிறுத்தினார்.

''இப்ப நான் இன்னொரு விஷயத்தை உங்களுக்கு சொல்லப் போறேன். அன்னிக்கு மத்தியானம் மிஸஸ் ஸிம்மிங்டன்னுக்கு வந்ததே ஒரு மொட்டைக் கடுதாசி - அது போஸ்ட்ல வரல. அதுல ஒட்டப்பட்டிருந்தது ஏற்கெனவே உபயோகப்படுத்தப்பட்ட ஒரு ஸ்டாம்ப். அதில் விடுபட்ட மைப்பகுதிகள், கறுப்பு மையால் இட்டுக்கட்டப் பட்டிருந்தன. இதனால, அது போஸ்ட்மேனால் கொண்டு வந்து போடப்பட்ட ஒரு மாயையை உருவாக்கிடும். ஆனா

நிஜத்துல அது போஸ்ட்ல வரல. இது என்ன விளக்குது என்பது உங்களுக்குத் தெரியுதா?''

நான் மெதுவாய் பேச ஆரம்பித்தேன்: ''அது கையால கொண்டு வந்து போடப்பட்டிருக்குன்னு தெரியுது. மதிய தபால் வந்து சேர்வதற்கு சற்று நேரம் முன்பு, அதுவும் மற்ற கடிதங்களுடன் ஒரு கடிதமா வந்ததைப் போல தெரியும்படி, வீட்டின் போஸ்ட் பாக்ஸுக்குள் போடப்பட்டிருக்கு.''

''எக்ஸாக்ட்லி, எக்ஸாக்ட்லி. மூணே முக்காலை யொட்டித்தான் மதிய தபால் வரும். என் தியரி இதுதான்: அந்தப் பொண்ணு சாமான்கள் போட்டு வைக்கும் அறையி லிருந்து வெளியே வாசலைப் பார்த்துக்கிட்டு இருந்திருக்கா. அறைக்கு முன்னால நிறைய புதர்கள் இருந்தாலும் வந்துட்டுப் போறவங்க தெரிவாங்க. அவளுடைய இளைய காதலன் திரும்பி வந்து மன்னிப்பு கேட்பான் என்ற எதிர் பார்ப்புல பார்த்துக்கிட்டே இருந்திருக்கா.''

நான் சொன்னேன்: ''அப்ப அவ அந்த கடுதாசியைக் கொண்டு வந்து போட்டது யாரோ அவரைப் பார்த்திருக்கா, ஆங்?''

''இது என் ஊகம், மிஸ்டர் பர்ட்டன். என் ஊகம் தப்பாக்கூட இருக்கலாம், அஃப்கொர்ஸ்.''

''அப்படித் தோணல எனக்கு... இது சிம்பிள் ஒப்புக் கொள்ளும்படியா சாட்சியங்களோட இருக்கு - அப்படினா, யாரந்த மொட்டைக் கடுதாசி எழுத்தாளர் என்பது ஏக்னஸுக்குத் தெரிஞ்சிருக்கு என்பதுதான் இதன் அர்த்தம்.''

''யெஸ்.''

''அப்படின்னா ஏன் அவ---''

நான் முகஞ்சுளித்தபடி நிறுத்தினேன். நாஷ் சீக்கிரமாய் பதிலளிக்கலானார்:

"என்னைப் பொறுத்தவரைக்கும்: தான் பார்த்ததன் முக்கியத்துவத்தை அந்தப் பொண்ணு உணரலே. அதாவது, முதல்ல. யாரோ வந்து வீட்டுல கடிதம் ஒன்றைப் போட்டுட்டுப் போறாங்க, யெஸ் அவ்ளோதான். ஆனா அந்த யாரோவை இந்த மொட்டைக் கடுதாசி நபரோட அவ நிச்சயமா கனவுலகூட இணைச்சுப் பார்க்க மாட்டா. அது யாரோ. இக்கோணத்துல, அந்த நபர் சந்தேகத்துக்கு அப்பாற் பட்டவரா நின்னுடறார்."

"ப்ரில்லியண்ட்."

"ஆனா அதைப் பற்றி அவ அதிகமா நினைக்கநினைக்க, அவளுடைய இருப்புக்கொள்ளாமை வளருது. இதைப்பற்றி உடனடியா அவ யாரிடமாவது சொல்லணுமா? அவளுடைய தாளாத படபடப்புல மிஸ் பார்ட்டனின் பணியாளான பேட்ரிட்ஜை அவ நினைக்கிறா. எனக்குத் தெரிஞ்சவரைக்கும் இந்த பேட்ரிட்ஜ் ஓர் ஆளுமையான பர்ஸனாலிட்டி... மேலும் இவ சொல்லும் ஆலோசனையைத் தயங்காமல் ஏக்னஸும் எடுத்துப்பா. தான் என்ன பண்ணணும் என்பதைப் பற்றிக் கேட்க பேட்ரிட்ஜ்தான் உகந்த ஆள்னு அவ முடிவெடுக்கிறா."

"யெஸ்" என்றேன் நான் சிந்தனையுடன். "இது நல்லா பொருந்துது. எப்படியோ, அந்த விஷப்பேனாவின் சொந்த விரல்கள் கண்டுபிடிக்கப்பட்டாச்சு. எப்படி அவ கண்டு பிடிச்சா, சூப்பரின்டெண்டெண்ட்?"

"கிராமத்துல வாழ்ந்து உங்களுக்கு பழக்கம் கிடையாது, மிஸ்டர் பர்ட்டன். விஷயங்கள் இங்கே எப்படிப் பரவுது என்பதே ஒரு மாயம் யெஸ், மிராக்கிள். முதல்ல

இடம்பெறுவது ஒரு டெலிபோன் உரையாடல். ஓ கே, இதை உங்க முனைல யாரெல்லாம் கேட்டது?''

நான் சிந்தித்தேன். ''நான்தான் ஒரிஜினலா டெலி போனுக்கு பதில் தந்தேன். பிறகு மாடியிலிருந்த பேட்ரிட்ஜைக் கூப்பிட்டேன்.''

''அழைத்த பொண்ணோட பேரைக் குறிப்பிட்டு?''

''யெஸ் - யெஸ் நான் சொன்னேன்.''

''யாராவது நீங்க உரக்கச் சொன்னதைக் கேட்டாங் களா?''

''என் சகோதரி இல்லேனா மிஸ் க்ரிஃபித் கேட்டிருக் கலாம்.''

''ஆஹ், மிஸ் க்ரிஃபித். அவங்க அங்கே என்ன பண்ணிக்கிட்டிருந்தாங்க?''

நான் விளக்கினேன்.

''அவங்க திரும்பி கிராமத்துக்கே போனாங்களா, என்ன?''

''முதல்ல மிஸ்டர் பை வீட்டுக்குப் போனாங்க.''

சூப்பரின்டெண்டெண்ட் நாஷ் பெருமூச்செறிந்தார்.

''அப்ப இரு வழிகள்ல விஷயம் ஊர்முழுக்கப் பரவியிருக்க வாய்ப்பிருக்கு.''

நான் துளைத்தேன்: ''அர்த்தமேயில்லாத ரெண்டு துண்டு சமாச்சாரத்தைக் கொண்டு போய் இந்த மிஸ் க்ரிஃபித்தும் மிஸ்டர் பையும் ஊர் முழுக்க பரப்பியிருக்காங்கன்னா சொல்ல வரீங்க?''

''இதுபோன்ற பகுதிகள்ல, எதுவுமே ஒரு செய்திதான்! கேட்டா ஆச்சரியப்படுவீங்க - தையக்காரன் அம்மா கால்ல ஆணி வந்துட்டா அது அத்தனை பேருக்கும் தெரிஞ்சுடும்! அப்புறம், டெலிபோனின் இந்தப்பக்கம் மிஸ் ஹாலண்ட், ரோஸ் - ஏக்னஸ் என்ன சொன்னாளோ அதையெல்லாம் இவங்க ரெண்டு பேரும் கேட்டிருக்கலாம். அப்புறம் இந்த ஃப்ரட் ரெண்டல் பய. ஏக்னஸ் அன்னிக்கு மத்தியானம் வீட்டுக்கே திரும்பிப் போயிருந்தா எனும் சேதி இவன் மூலமா பரவியிருக்கும்.''

நான் சற்றே நடுங்கினேன். நான் ஜன்னல் வழியாய் வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் புற்கள் கொண்ட ஒரு சதுர நிலம்... மற்றும் சிறிய கேட்டுக்கு வழிபண்ணித்தரும் பாதை ஒன்று.

யாரோ அந்தக் கேட்டினைத் திறந்திருக்கிறார்கள், சரியாகவும் ஓசையெழுப்பாமலும் வீடுவரை நடந்திருக்கிறார்கள், லெட்டர் பாக்ஸில் ஒரு கடிதத்தைத் தள்ளி விட்டிருக்கிறார்கள். நான், துல்லியமற்று, என் மனக் கண்ணில், அப்பெண்ணின் அமைப்பினை நான் பார்த்தேன். முகம் வெறுமையாய்... ஆனால் அம்முகம் எனக்குத் தெரிந்த ஒருமுகமாய்த்தான் இருக்க வேண்டும்...

சூப்பரின்டெண்டெண்ட் நாஷ் சொல்லிக் கொண்டிருந் தார்:

''இது, விஷயத்தை நல்லாவே சுருக்கித் தருது. இப்படி சுருக்கிச் சுருக்கித்தான் கடைசியியல நாங்க ஆசாமியைப் பிடிப்போம். நேர்க்கோடாய் பொறுமையோடு ஒவ்வொருத் தராய் அகற்றி முன்னேறும் அணுகுமுறை. நிறைய பேர் இப்ப நம்மகிட்டேயிருந்து அகற்றப்படுவாங்க.''

''அதாவது---''

''இதன்படி: நேற்று மத்தியானம் முழுக்க பணியிலிருந்த பெண் குமாஸ்தாக்கள் அனைவரையும் அகற்றுவது. பள்ளிக் கூடத்துல குழந்தைகளை கவனிச்சுக்கும் பெண்மணியையும் இந்த அணுகுமுறை அகற்றுவது. அவங்க பாடஞ்சொல்லிக் கொடுத்துக்கிட்டு இருந்திருப்பாங்க. மாவட்ட நர்ஸையும் இது விலக்கிடுது. அவங்க நேற்று எங்கிருந்தாங்கன்னு எனக்குத் தெரியும். இவங்களையெல்லாம் நான் கணக்குல வெச்சுக்கலேனு சொல்ல மாட்டேன் - ஆனா இப்ப நிச்சயமா நம்மால விலக்கிட முடியும். கவனிங்க பர்ட்டன்... நம் கவனத்தை பதிக்க, நம்மிடம் இப்ப ரெண்டு நிச்சயப்படுத்தப் பட்ட நேரங்கள் உள்ளது. நேற்று மத்தியானம், அப்புறம் முந்தைய வாரத்தின் இதேநேரம். ஏக்னஸ் சண்டை போட்டுக்கிட்டு வந்திருக்கவல்ல குறைந்தபட்ச நேரம் மதியம் - மூணே கால். தபால் வந்திருக்கக்கூடிய அதிகபட்ச நேரம் நாலு. இதை நான் போஸ்ட்மேனைக் கேட்டு இன்னும் துல்லியமாக்குவேன். மிஸஸ் ஸிம்மிங்டன் மரண மடைந்த அன்று, மூணே காலிலிருந்து நாலுக்குள். நேற்றைய தினத்தைக் கணக்கில் எடுத்துக்கும்போது மிஸ் மேகன் வெளி யேறிய ரெண்டு ஐம்பதிலிருந்து மூணரை வரைக்கும்... இன்னும் குறிப்பா சொல்லணும்னா மூணே கால் வரைக்கும்.''

''நேற்று என்ன நடந்ததுன்னு நீங்க நினைக்கிறீங்க?''

நாஷ் சிரித்தார். ''நான் என்னத்தை நினைக்கிறது? ஒரு குறிப்பிட்ட பொம்பிளை வாசற்கதவு வரை வந்து அழைப்பு மணியை அடிச்சிருக்கான்னு நினைக்கிறேன். சாந்தமாகவும் புன்னகையுடனும் வழக்கமாய் மதியத்தில் ஒரு பெண் மணியைப் போல வந்திருப்பா அவ. மிஸ் மேகனைக் கேட்டிருக்கலாம், அல்லது மிஸ் ஹாலண்ட்டைக் கேட்டிருக்

கலாம், அல்லது கூடவே ஒரு பார்ஸலைக் கொண்டு வந்திருக்கலாம். எதுவாயிருந்தாலும், வந்தவள் கேட்ட நபரை அழைக்கவோ அல்லது பார்ஸலை உள்ளே கொண்டு போகவோ ஏக்னஸ் திரும்பியிருக்கலாம். சந்தேகப்படாத ஏக்னஸின் தலையை, உள்ளே வந்த நமது பெண்மணி தாக்கியிருப்பாள்...''

''எதை வெச்சு?''

''இங்கிருக்கும் நம் பெண்மணிகள் பெரிய சைஸ் கைப்பைகளைத்தான் எடுத்துக்கிட்டுப் போகுங்க. உள்ளே என்ன இருக்கும்னு யாராலும் சொல்ல முடியாது.''

''அப்படியே அவளை பின்பக்கமா தாக்கிட்டு அவளை கப்போர்டுக்குள்ளே திணிச்சுடறாளா? இதை செய்வது ஒரு பெண்ணுக்கு மிகவும் கடினமான ஒண்ணா இருக்காதா?''

சூப்பரின்டெண்டெண்ட் நாஷ் என்னை ஒரு தினுசான வனைப் பார்ப்பதைப் போல பார்த்தார்.

''நாம் தேடிக்கிட்டிருக்கும் பெண் ஒரு சாதாரண பெண் கிடையாது இவளுக்கு இருப்பதைப் போன்ற மூளை பிசகின கேஸின் தடுமாற்றப் புத்திக்கு அளப்பரிய பலம் இருக்கும். ஏக்னஸும் அப்படியொன்றும் குண்டுப் பெண் அல்ல.''

அவர் நிறுத்தினார். பின் கேட்டார்: ''கப்போர்டுக்குள்ளே போய் பார்க்கும்படி மிஸ் மேகனுக்கு ஏன் தோணியிருக்கு?''

''ஒரு உள் உந்துதால்தான்'' - நான் சொன்னேன்.

பிறகு நான் கேட்டேன்: ''எதுக்காக ஏக்னஸை கப்போர்டுக்குள்ளே இழுத்துப் போட்டிருக்கணும்? இதுல என்ன காரணமிருக்கு?''

“எத்தனை நேரம் கழிச்சு பாடி கண்டுபிடிக்கப்படுதோ நல்லது  இது, மரணத்தின் நேரத்தை அடைவது ரொம்ப கஷ்டமாக்கிடும். வந்ததும் வராததுமா மிஸ் ஹாலண்ட் பாடியைப் பார்த்திருந்தால், பத்துப் பதினைந்து நிமிடங்களுக்கு முன்னாடிதான் மரணம் சம்பவிச்சதுன்னு துல்லியமா சொல்லிடுவாங்க. இது நம் பெண்தோழிக்கு ஆகாது.”

நான் சற்று முகம்கோணி யோசித்தபடி கேட்டேன்:

“இந்தப் பெண்மணி மேல ஏக்னஸ் சந்தேகத்தில் இருக்கும்பட்சத்தில் போய்---”

நாஷ் குறுக்கிட்டார்:

“ஏக்னஸுக்கு இவ மேல சந்தேகம் கிடையாது. அதை முதல்ல தெரிஞ்சுக்கங்க! உறுதி செய்யப்பட்ட சந்தேகம் கிடையாது! ‘வித்தியாசமாயிருக்கே’ எனும் அளவுக்குத்தான் அவ நினைச்சிருக்கா. அவ புத்திக்கூர்மை அதிகம் இல்லாத ஒரு பொண்ணு. ‘இதுல என்னவோ தப்பு இருக்கு’ எனும் அளவுக்கு அவளுக்கு பட்டும்படாத ஒரு சந்தேகத்தொனி மட்டும் இருந்திருக்கணும்  இதுதான் என் கணிப்பு. ஒரு கொலையை பண்ணும் அளவுக்கான ஒரு பெண்ணை எதிர்த்துக்கிட்டு நாம நிக்கறோம்னு நிச்சயமா அவளுக்கு சந்தேகம் கிடையாது.”

“நீங்க அப்படி சந்தேகப்பட்டீங்களா?”

நாஷ் மறுப்பாய் தலையசைத்தார். காயப்பட்டு அவர் சொன்னார்:

“ஆனா, எனக்கு தெரிஞ்சிருக்கணும். அந்த தற்கொலை இருக்கே, அது, விஷப்பேனாவை பயமுறுத்தியிருக்கணும். அவ நடுங்கிப் போயிருக்கணும். பயம் இருக்கே அது மிஸ்டர் பார்ட்டன், ஒரு கணக்கிட முடியாத புயல்.”

‘‘ஆமாம். பயம். இதைத்தான் நாம முதல்லேயே எதிர்பார்த்திருக்கணும். கிரகணம் பிடித்த ஒரு மூளைக்குள் விளையும், பயம்...’’

‘‘கவனிங்க’’ என்ற சூப்பரின்டெண்டெண்ட் சொன்ன வார்த்தைகள், ஏனோ இந்த முழு சமாச்சாரத்தையும் ஒரு அதிபயங்கர அபாயமாய் படம்பிடித்துக் காட்டியது. ‘‘மட்டு மரியாதை நிரம்பிய ஒரு நபரை எதிர்த்துக்கிட்டு ஓர் உயர்வான நிலைமையில வாழ்கிற நபருக்கு எதிராக நாம இப்ப நிக்கறோம். சுருக்கமா சொல்லணும்னா, சமூகத்துல நல்ல நிலைல உள்ள ஒருத்தரை எதிர்த்துக்கிட்டு!’’

# III

ரோஸை மீண்டுமொருமுறை சந்திக்க இருப்பதாக தற்சமயம் சொன்னார் சூப்பரின்டெண்டெண்ட் நாஷ். நானும் உடன் வரலாமா என்று சற்று தயக்கமாய் கேட்டேன். என்னை ஆச்சரியத்தில் தூக்கிப்போடும்படி உற்சாகமாய் ஒப்புக்கொண்டார் அவர்.

‘‘உங்க ஒத்துழைப்பைப் பார்த்து நான் ரொம்ப மகிழ்ச்சி அடையறேன், மிஸ்டர் பர்ட்டன்.’’

‘‘இப்படி ரொம்ப முகஸ்துதி செஞ்சீங்கன்னா எனக்கு சந்தேகம்ல வருது!’’ என்றேன் நான். ‘‘துப்பறியும் புத்தகங்கள்ல யாரோ ஒருத்தருடைய உதவியை டிடெக்டிவ் நாடினார்னா, அந்த யாரோ ஒருத்தர்தான் வழக்கமா கொலையாளியா இருப்பார்...’’

நாஷ் சுருக்கமாய் சிரித்தார். ‘‘நீங்க மொட்டைக் கடுதாசிகளை எழுதும் வகை கிடையாது, மிஸ்டர் பர்ட்டன்.’’

பிறகு அவர் சொன்னார்: ''வெளிப்படையா சொல்றேனே... நீங்க எங்களுக்கு உதவிகரமா இருக்கலாம்.''

''எனக்குப் பெருமையா இருக்கு. ஆனா எந்த வகைலனுதான் விளங்கல.''

''இப்பகுதிக்கு நீங்க ஓர் அந்நியர் அந்த வகைல. இங்கிருக்கும் மக்களைப் பற்றி உங்களுக்கு முன்கூட்டியே எவ்விதமான ஊகங்களும் இருக்க வழிகிடையாது. ஆனா, அதே சமயத்துல, இங்கிருப்பவற்றை பற்றி சமூக தொடர்புகள் மூலமா தெரிந்து கொள்ள உங்களுக்கு வாய்ப்புகள் நிறைய இருக்கு.''

''கொலைகாரன், நல்ல சமூக அந்தஸ்துள்ள ஒருத்தன்'' நான் முணுமுணுத்தேன்.

''எக்ஸாக்ட்லி.''

''ஆக, இங்கு நான் ஒரு உளவாளியா உலாவணும்?''

''இதுக்கு உங்களுக்கு ஏதாவது தடங்கல் இருக்கா?''

நான் யோசித்துப் பார்த்தேன்.

''நோ'' என்றேன். ''அப்படியொண்ணும் இல்ல. அபாயமற்ற ஒரு பெண்மணியைத் தற்கொலை பண்ணிக் கொள்ளும்படி தூண்டும் அளவுக்கும் பாவப்பட்ட ஒரு வீட்டு வேலைக்காரியைப் போய் பின்னந்தலைல வெட்டிச் சாய்க்குமளவுக்கும் இங்கே ஒரு கொடூரன் திரிஞ்சுக் கிட்டிருக்கான்னா, இவற்றுக்கு இணையா எதையாவது நானும் செஞ்சு அவனை அல்லது அவளை நிலைகுலைய வைக்கத் தயங்க மாட்டேன்.''

"இது வீரம், ஸார். ஆங், ஒண்ணு சொல்லிக்க விரும்பறேன்: நாம இப்ப தேடிக்கிட்டிருக்கும் நபர், பயங்கரமானவ. அவ ஒரு நல்லபாம்பு, சாரைப்பாம்பு மற்றும் சுற்றியமுக்கும் மலைப்பாம்பு ஆகிய மூன்றும் சேர்ந்து சுருட்டியவொரு, விஷப்பாம்பு."

நான் சின்னதாய் நடுங்கினேன். "அப்ப நாம துரிதமா இயங்க வேண்டியிருக்கும், இல்லையா?"

"அப்படித்தான். எங்களுடைய போலீஸ்படை இங்கே ஏதோ ஒண்ணுமே பண்ணாமல் இருப்பதா மட்டும் நீங்க நினைச்சுட வேணாம். நாங்க பல கோணங்கள்ல ஒழைச்சுக் கிட்டிருக்கோம்." இதனை அவர் சிறு சிரிப்பினூடே சொன்னார்.

வெகுதொலைவில், உச்சியில், அமர்க்களமாய் உருவாகிக் கொண்டிருக்கும் ஒரு சிலந்திவலையை நான் என்னுள் பார்த்தேன்...

ரோஸ் சொல்லும் கதையை மீண்டுமொரு கேட்க விரும்புவதாக என்னிடம் சொன்னார் நாஷ். ஏற்கெனவே இரண்டு தினுசான கதைகளை அவள் நாஷிடம் சொல்லி யிருக்கிறாளாம்... எத்தனைக்கெத்தனை விதம்விதமாய் இவர் கேள்விப்படுகின்றாரோ, அவற்றிலிருந்து உண்மையின் சிறுசிறுதுளிகள் சிதறித் தெறிக்க வாய்ப்புகள் அதிகம் விளையும் என நம்பினார் இவர்.

காலை சிற்றுண்டி சாமான்களை கழுவிக் கொண்டிருந்த நிலையில் நாங்கள் ரோஸைப் பிடித்தோம். எங்களைப் பார்த்ததும் அவள் உடனே வேலையை நிறுத்தினாள்... கண்களை வட்டமாய் உருட்டினாள்... தனது நெஞ்சைப்

பிடித்துக் கொண்டாள்... காலையிலிருந்தே அவள் விளக்க வொண்ணா உணர்வால் பீடிக்கப்பட்டிருப்பதாய் சொன்னாள்.

நாஷ் அவளிடம் பொறுமையாய் இருந்தார், ஆனால் வந்த இலக்கில் விடாப்பிடியாய் இறுக்கினார். முதல் சந்திப்பின் போது மிருதுவான ஆதரவோடு தான் இருந்ததாய் சொன்னார் நாஷ். மறுப்புகளை அதிகம் அனுமதிக்காமல் உடனடி கீழ்ப்படிதலை நிலைநாட்டிய அணுகுமுறையை இரண்டாம் முறை பிரயோகித்திருக்கிறார். இப்போது இவ்விரண்டும் சேர்த்த கலவையைக் கையாண்டார்.

கடந்த வார நடவடிக்கைகளை உற்சாகமாய் பெரிது படுத்திக் காட்டினாள் ரோஸ். மயக்கமுறும் அளவுக்கு கிலியில் இருந்திருக்கிறாள் ஏக்னஸ். 'அப்படி என்னதான்டீ உன் பயம்?' என்று ரோஸ் கெஞ்சிக் கேட்டபோது 'என்னை கேட்காதே' என்று அவள் நடுங்கிப் போயிருக்கிறாள். இவளிடம் சொல்லிவிட்டால் அவள் உயிருக்கே ஆபத்து வந்துவிடும் என்று சொன்னாளாம் அவள். ரோஸ் முடித்துக் கொண்டு கண்களை உற்சாகமாய் உருட்டலானாள்.

ஏக்னஸை என்ன விஷயம் உறுத்திக்கொண்டிருக்கிறது என்பது பற்றி அவள் ஒரு சிறு ஹிண்ட் கூடவா கொடுக்க வில்லை?

தனது உயிரே பறிபோவதைப் போன்றதொரு அச்சத்தில் அவள் வீழ்ந்ததை தவிர, நோ... வேறொன்றும் இல்லை.

சூப்பரின்டெண்டெண்ட் பெருமூச்செறிந்துவிட்டு, இவ்விஷயத்தை மூட்டைகட்டி விட்டார். முந்தைய மத்தி யானப் பொழுதில் ரோஸ் என்ன பண்ணிக் கொண்டிருந் தாள் என்பதைப் பற்றிய சேதியை உருவுவதில் இறங்கிப் போனார் அவர்.

இதற்கான விடையும் சிறப்பாய் வரவில்லை... கசாமுசா வென்று நீளமாய் வந்தது. 2.30 மணி பஸ்ஸை இவள் பிடித்திருக்கிறாள். மதியம் மற்றும் மாலைப்பொழுதுகளை தனது குடும்பத்தாருடன் கழித்திருக்கிறாள். நெதர் ரிக்பார்ட்டிலிருந்து 8.40 பஸ்ஸில் திரும்பியிருக்கிறாள். அங்கு நடந்த ஒவ்வொன்றையும் இழுத்துப்போட்டு விளக்கியதால் இந்த சிறு சேதியை தர ஏகப்பட்ட நேரம் எடுத்துக் கொண்டாள் அவள்.

கிச்சனிலிருந்து, எல்ஸீ ஹாலண்டுக்காக நாங்கள் வெளியேறினோம். குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார் அவர். வழக்கம்போலவே, எல்ஸீ திறமையாகவும் மரியாதையாகவும் நடந்துக் கொண்டார்.

எழுந்துகொண்ட அவர் சொன்னார்:

''குழந்தைகளா... நான் கொடுத்த மூன்று கணக்கு களையும் நீங்க முடிச்சிருக்கணும். நான் திரும்பி வரும்போது விடைகள் தயாராயிருக்கணும்.''

பிறகு அவர் எங்களை அருகிலிருக்கும் மற்றோர் அறைக்கு அழைத்துச் சென்றாள். ''இந்த இடம் போதுமானதா? குழந்தை களுக்கு முன்னால பேச வேண்டாமேன்னு நினைச்சேன்...''

''தேங் க் யூ, மிஸ் ஹாலண்ட். ப்ளீஸ் இன்னொரு முறை சிந்திச்சுப் பார்த்து சொல்லுங்க... தன்னை எது கவலைப் படுத்திக்கிட்டு இருந்ததுனு ஏக்னஸ் உங்ககிட்டே சொல்லவே இல்லையா? அதாவது மிஸஸ் ஸிம்மிங்டன் மறைவுக்கு அப்புறமா சொல்றேன். இதுல நீங்க நிச்சயமாத்தான் இருக்கீங்களா, ஆங்?''

''நோ. அவ எதையும் சொல்லல. அவ ஓர் அமைதியான பொண்ணு, தெரியுமா. பேசவே மாட்டா.''

''இன்னொருத்திக்கு ஜஸ்ட் எதிர்ப்பதமா!''

''நல்லா சொன்னீங்க. ரோஸ் ரொம்பவுமே அதிகமா பேசறா. இப்படி விடாம பேசற குணத்தை விடுன்னு நான் அவகிட்டே சொல்லணும்.''

''இப்ப நீங்க, நேற்று மத்தியானம் எக்ஸாக்டா என்னவெல்லாம் நடந்ததுனு சொல்ல முடியுமா? உங்க நினைவுக்கு வரும் எல்லாவற்றையும்.''

''வெல், நாங்க வழக்கம்போல லஞ்ச் சாப்பிட்டோம். ஒரு மணிக்கு. பசங்க சாப்பிட நான் துரிதப்படுத்தினேன்... சாப்பிடாம சும்மா தட்டை அளைஞ்சுக்கிட்டிப்பது எனக்கு பிடிக்காது. ஆங், இருங்க கொஞ்சம் யோசிச்சுக்கறேன். மிஸ்டர் ஸிம்மிங்டன் ஆபீஸுக்கே திரும்பி போயிட்டார். டேபிளை சரிசெய்ய நான் ஏக்னஸுக்கு உதவினேன். பசங்க தோட்டத்துக்கு ஓடிட்டானுங்க. நான் அவங்களைக் கூட்டிட்டுப் போகும்வரை அங்கேதான் இருந்தாங்க.''

''இதெல்லாம் எத்தனை மணிக்கு?''

''இருங்க. ஆங்... ஆங்... நாங்க ரெண்டு நாற்பதுக்கு கிளம்பினோம். இல்லே, இன்னும் கொஞ்சம் காலந்தாழ்த்தி இருக்கலாம். தன் மனசை மாத்திக்கிட்டு வந்தா மேகன். அவளோட சைக்கிள்ல வெளியே போகப்போவதா அவ சொன்னா. சைக்கிள் ஓட்டுவதுல அவளுக்கு ஏகப் பைத்தியம்.''

''நான் கேட்டது, நீங்க எத்தனை மணிக்கு தூண்டிலை எடுக்கப் போனீங்கன்னு? நீங்க வீட்டுக்குள்ளே போனீங்களா?''

"நோ. நான் வேண்டியதையெல்லலாம் வீட்டுப் பின்னா லிருக்கும் தோட்டப் பகுதில வெச்சிருந்தேன். அப்ப மணி என்னன்னு எனக்குத் தெரியாது - மூணடிக்க பத்து நிமிஷம் இருக்கலாம்."

"மேகன் அல்லது ஏக்னஸை நீங்க பார்த்தீங்களா?"

"மேகன் கிளம்பியிருக்கணும்னு நினைக்கிறேன். நோ, நான் ஏக்னஸைப் பார்க்கல. நான் யாரையும் பார்க்கல."

"அப்புறமா நீங்க மீன்பிடிக்கப் போனீங்க?"

"யெஸ். ஓடைக்கு. நாங்க மீன் எதையும் பிடிக்கல. எப்பவுமே இப்படித்தான். பசங்க என்ஜாய் பண்ணுவாங்க - அவ்ளோதான் இதுல. ப்ரையான் நனைஞ்சுட்டான். திரும்பினதும் அவன் உடைகளை மாற்ற வேண்டியிருந்தது."

"புதன்கிழமைகள்ல நீங்க டீ தயார் செய்வதுண்டா?"

"யெஸ். அது எப்பவுமே மிஸ்டர் ஸிம்மிங்டன்னுக்காக ஹால்லேயே தயாராயிருக்கும். அவர் ஜஸ்ட் உள்ளே வந்ததும் நான் டீ போடுவேன். நானும் குழந்தைகளும் படிக்கும் அறைலேயே குடிச்சுடுவோம். மேகனும்தான். எனக்கான டீ சாமான்கள் என்னிடமே இருக்கும். மற்ற தெல்லாம் அங்கிருக்கும் கப்போர்டிலேயே இருக்கு."

"எத்தனை மணிக்கு நீங்க உள்ளே வந்தீங்க?"

"நாலு ஐம்பதுக்கு. நான் பசங்களை மேலே கூட்டிட்டுப் போய் டீயை ஊற்ற ஆரம்பித்தேன். அப்புறம் ஐந்து மணிக்கு மிஸ்டர் ஸிம்மிங்டன் வந்தார் அவருக்காக கீழே போனேன் நான். ஆனா அவரோ குழந்தைங்க படிக்கும் அறைல மாடி யிலேயே தானும் எடுத்துப்பதா சொன்னார். குழந்தைகளுக்கு சந்தோஷம் தாளல. கொஞ்சநேரம் நாங்க ஓடிப்பிடிச்சு

விளையாடினோம். ஓ, இத்தனை நடக்கும்போதும் அந்தப் பரிதாபப் பொண்ணு, பாவம் கப்போர்டுக்குள்ளேயே மடிஞ்சுக்கிடந்திருக்கானு நினைக்கும்போது ஓஃப், குலைநடுங்குது.''

''வழக்கமா யாராவது அந்த கப்போர்டை பயன்படுத்தவதுண்டா?''

''ம்ம். கிடையாது. வேண்டாத சாமான்களைப் போட்டு வைக்கத்தான் அது பயன்படுது. தினசரி உடைகள், ரைன்கோட்டுகள், தொப்பிகள் இதெல்லாம் நுழைஞ்சதும் வரும் அந்த சின்ன அறைல மாட்டப்பட்டுவிடும். இந்த கப்போர்ட் பக்கம் மாசக்கணக்கா யாரும் நெருங்கியிருக்க மாட்டாங்க.''

''ஐ ஸீ. நீங்க திரும்பி வந்தபோது இங்கே எதையும் அசாதாரணமா, வழக்கத்துக்கு மாறுபட்டு கவனிக்கலையா?''

அந்த நீலநயனங்கள் மிகவும் அகலமாய் விரிந்தன.

''ஓ நோ, இன்ஸ்பெக்டர். அப்படி அசாதாரணமா எதையுமே நான் கவனிக்கல. எல்லாமும் ஜஸ்ட் வழக்கமா எப்படியிருக்குமோ அப்படியேதான் இருந்தன. இதுதான் ஆச்சரியமே...''

''போன வாரம்?''

''அதாவது மிஸஸ் ஸிம்மிங்டன் மரணமடைந்த நாள்லேயா?''

''யெஸ்.''

''ஓ, அது பயங்கரம் - பயங்கரம்!''

''அது தெரியும், தெரியும். அந்த மத்தியானம் முழுக்க நீங்க வெளியிலேதான் இருந்தீங்களா?''

''ஓ யெஸ். மத்தியானம் வானிலை நல்லாயிருந்தால் நான் பசங்களை அழைச்சுக்கிட்டு வெளில போயிடுவேன். காலைல நாங்க படிப்போம். புதர் நிறைந்த தரிசுநிலம் வழியா போய்க்கிட்டேயிருந்தோம் நெடுந்தூரமது நல்லா நினைவிருக்கு. ரொம்ப நேரமா வெளியிலேயே இருந்துட்டோமோனு பயந்தடிச்சுக்கிட்டு நான் திரும்பினேன். கேட்டை அடைஞ்சதும் தெருவின் எதிர்மூலைல மிஸ்டர் ஸிம்மிங்டன் ஆபிஸிலிருந்து வந்து கொண்டிருப்பதை கவனிச்சேன். ப்ச், அப்ப நான் கெட்டிலைக்கூட அடுப்புல ஏத்தல. மணி சரியா நாலு ஐம்பது.''

''மிஸஸ் ஸிம்மிங்டன்னைத் தேடிக்கிட்டு நீங்க போகலியோ?''

''ஓ நோ. நான் போகவே இல்ல. லஞ்சுக்கு அப்புறம் அவங்க எப்பவுமே படுத்துடுவாங்க. நரம்புத் தளர்ச்சியால அவங்க பாதிக்கப்பட்டிருந்தாங்க. அது சாப்பிட்டு முடிச்சதுமே வந்துடும். டாக்டர் க்ரிஃபித் அவங்க எடுத்துக்க சில மருந்துகள் தந்திருந்தார். படுப்பாங்க. தூங்க முயற்சிப்பாங்க.''

நாஷ் சாதாரண தொனியில் கேட்டார்: ''ஆக யாரும் அவங்களுக்கு தபால்களைக் கொண்டுபோய் தரமாட்டாங்க?''

''மதியத் தபாலா? நோ. நாந்தான் திரும்பி வந்ததும் தபால் பெட்டில பார்ப்பேன். ஏதாவது இருந்தால் அதைக் கொண்டு போய் ஹால் டேபிள்ல வெச்சிடுவேன். ஆனா பல சமயங்கள்ல மிஸஸ் ஸிம்மிங்டன்னே இறங்கி வந்து திறந்து எடுத்துப்பாங்க. மத்தியானம் முழுக்க அவங்க தூங்கிட

மாட்டாங்க. வழக்கமா அவங்க மறுபடியும் நாலு மணிக்கெல்லாம் எழுந்திடுவாங்க.''

''அன்னிக்கு மத்தியானம் அவங்க வழக்கப்படி எழுந்திருக்காததால, ஏதாவது தப்பா இருக்குமோனு உங்களுக்கு தோணலியா?''

''ஓ, நோ. ஏன் தோணணும்? அதுவும் இப்படியொரு பயங்கரத்தை நான் நினைச்சுக்கூட பார்த்ததில்ல. கீழறையல மிஸ்டர் ஸிம்மிங்டன் தனது கோட்டை மாட்டிக்கிட்டிருந்தார். அவரண்டை டீ இன்னும் ரெடியாகலேனு சொல்லிட்டு, ஆனா கெட்டில் கொதிச்சாச்சுனு சொன்னேன். இதுக்கு தலையாட்டிய அவர், 'மோனா! மோனா!'னு கூப்பிட்டார். மிஸஸ் ஸிம்மிங்டன் பதில் தராததால் அவர் மாடிக்குப் போனார். அங்கேதான் அவருக்கு வாழ்க்கையின் பயங்கர ஷாக் நேர்ந்திருக்கணும். என்னை அழைச்சார். நான் போனேன். 'குழந்தைகளை தள்ளியே வை'னு சொன்னார். அவர் டாக்டர் க்ரிஃபித்துக்கு போன் போட்டார். இதுக்கு நடுவுல கெட்டில் தண்ணீயெல்லாம் வற்றிப்போய் அடிப்பிடிச்சுடுச்சு! ஓ, டியர் ஸார்... அதெல்லாம் படுபயங்கரமான கணங்கள். லஞ்ச் சமயத்துல அவங்க அத்தனை சந்தோஷமா, குதூகலமா இருந்தாங்க.''

நாஷ் திடுதிப்பென்று கேட்டார்: ''வந்த அக்கடிதத்துல என்ன இருந்திருக்கும்னு நீங்க நினைக்கிறீங்க, மிஸ் ஹாலண்ட்?''

எல்ஸீ ஹாலண்ட், கோபமும் வெறுப்புமாய் சொன்னார்:

''வேறென்ன இருக்க முடியும் - அதே கண்றாவிகள்தான். பேசக் கூச வைக்கும் ஸ்டஃப்.''

''யெஸ், யெஸ். அதை நான் கேட்கல. அதிலிருந்ததை நீங்க உண்மைன்னு நினைக்கிறீங்களா?''

எல்ஸீ ஹாலண்ட் கண்டிப்பாய் பேசினார்:

''இல்ல. நான் அதெல்லாம் உண்மைனு நம்பல. மிஸஸ் ஸிம்மிங்டன் உணர்ச்சிவசப்படக்கூடிய ஓர் ஆசாமி. ரொம்பவும்னுகூட சொல்லிக்கலாம். எது நடந்தாலும் அதை தனது நரம்புகள் வரை கொண்டுபோய் விட்டுக்கிட்டு அதிர்வாங்க. அதுல சொல்லியிருப்பதைப் போன்ற விஷயங்கள் நிச்சயமா அவங்களை அதிர்வின் உச்சத்துக்கே கொண்டுட்டுப் போயிருக்கும்.''

நாஷ் சற்றுநேரம் அமைதியாக இருந்தார். பின்னர் கேட்டார்:

''உங்களுக்கு இப்படிப்பட்ட கடுதாசிகள் வந்திருக்கா, மிஸ் ஹாலண்ட்?''

''கிடையாது, கிடையாது. எனக்கெல்லாம் வரல.''

''நிச்சயமாத்தான் சொல்றீங்களா? ப்ளீஸ்...'' அவர் தனது ஒரு கையை தூக்கி ''அவசரத்துல பதில் சொல்லாதீங்க'' என்றார். ''மொட்டைக் கடுதாசிகள்ல எழுதப்பட்டிருப்பவை நிச்சயமா சங்கோஜப்பட வைப்பவைதான். யெஸ், ஒத்துக் கறேன். இதனால தனக்கும் கடிதம் வந்ததுனு மக்கள் ஒத்துக்க மாட்டாங்க. ஆனா இந்த கேஸ்ல அப்படி வந்துள்ள கடிதங்கள் பற்றி முழுக்கத் தெரிந்து கொள்வது ரொம்பவுமே அவசியமாயிருக்கு. மொட்டைக் கடுதாசிகள்ல சொல்லப் பட்டிருக்கும் ஒவ்வொண்ணும் அப்பழுக்கற்ற பொய்கள்னு எங்களுக்கு நல்லாவே தெரியும். ஆகவே நீங்க சங்கோஜப் படவே வேண்டாம்.''

“ஆனா எனக்கு வந்ததில்ல, சூப்பரின்டெண்டெண்ட். நிஜமா சொல்றேன், எனக்கு வரல. இப்படிப்பட்ட கண்றாவி யெல்லாம் எழுதி வரல.”

அவர் கோபமானார். கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது. அவரின் மறுப்பில் போதுமான அளவுக்கு நியாயம் இருப்பதாகவே பட்டது.

அவர் மீண்டும் குழந்தைகளுடன் போய் இணைந்து கொண்ட பிறகு நாஷ் எழுந்து ஜன்னலின் வழியே வெளியே பார்த்தபடி நின்றார்.

“வெல்” என்றார் அவர். “அவ்ளோதான்! இப்படிப்பட்ட மொட்டைக் கடுதாசிகள் எதுவும் தனக்கு வரலேனு சொல் றாங்க மிஸஸ் ஹாலண்ட். ஏதோ அவங்க உண்மையைத்தான் பேசுவதைப் போல வேற காட்டிக்கிறாங்க.”

“உண்மையைத்தானே சொல்றாங்க. நான் நிச்சயமா இருக்கேன்.”

“ஹ்ம்” என்றார் நாஷ். “அப்படினா, ஏன் இவங்களுக்கு மட்டும் வரலேனு நான் தெரிஞ்சுக்க விரும்பறேன், மிஸ்டர்.”

நான் அவரைப் பார்த்து முழித்துக் கொண்டிருந்தபோதே அவர் பொறுமையற்றுத் தொடர ஆரம்பித்து விட்டார்:

“இவங்க ஒரு அழகான பெண் - இல்லையா?”

“உண்மையைச் சொல்லணும்னா, அழகையும்விட உயர்ந்தவர் - பேரழகு.”

“ஆஹ், எக்ஸாக்ட்லி. சொல்லப்போனா, இவங்க ஓர் அசாதாரண அழகு. சாதாரணமா கிடைக்கப் பெறாத பேரழகு. மேலும், யங். ஆக இவரைக் குறிவெச்சுத் தாக்கத்

தான் நம்முடைய மொட்டைக் கடுதாசி எழுத்தாளருக்கு ரொம்ப பிடிக்கும். அப்ப ஏன் இவங்க மட்டும் விட்டு வைக்கப்பட்டிருக்காங்க?''

நான் மறுப்பாய் தலையசைத்தேன்.

''இது இண்ட்ரஸ்டிங்கான ஒரு பாயிண்ட், யூ நோ. இதை நான் க்ரேவ்ஸிடம் சொல்லணும். யாருக்காவது கடுதாசி வரலே என்பது நிச்சயமா தெரிந்தால், அவங்களைப் பற்றி அவர் சொல்ல தகவல் தரச் சொல்லியிருந்தார்.''

''இவங்க ரெண்டாவது'' என்றேன் நான். ''எமிலி பார்ட்டன் இருக்காங்க, நினைவிருக்கட்டும்.''

நாக்கால் சொடுக்குப் போட்டார் அவர்.

''உங்களிடம் சொல்லப்படும் அத்தனையும் நீங்க நம்பிடக்கூடாது, மிஸ்டர் பர்ட்டன். மிஸ் பார்ட்டனுக்கு ஒரு கடுதாசி வந்திருக்கு - ஒன்றுக்கு மேலும் வந்திருக்கணும்.''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''அவங்களுக்கு அர்ப்பணிப்போடு பணியாற்ற ஒருத்தி இருக்காளே, அவ சொன்னா. ஃப்ளாரன்ஸ் எல்ஃபார்டு. இதைப் பற்றி பேசினாலே கடுப்பாயிடறா அவ. எழுதின வனின் ரத்தத்தைக் குடிக்கத் துடிக்கிறா.''

''அப்ப எதுக்காக தனக்கு ஒரு கடுதாசிகூட வரலேன்னு அவங்க சொல்லணும்?''

''கூச்சம். எழுதப்பட்ட தொனிகள் நாகரீகமானவை கிடையாது. மேலும், தனிமைலேயே வாழ்ந்தவங்க, இந்த மிஸ் எமிலி.''

''அந்தக் கடிதங்கள்ல என்ன இருந்துச்சு?''

“வழக்கமானவை. படிச்சா சிரிப்பு வரும் அதிலுள்ள முட்டாள்தனமான குற்றச்சாட்டுக்கள் அப்படிப்பட்டவை. இவங்க அம்மா மற்றும் சகோதரிகளை இவங்கதான் விஷம் வெச்சுக் கொன்னதா ஒரு புதுவித குற்றச்சாட்டு இருந்தது.”

நான் சற்று நம்ப முடியாமல், வஞ்சப்புகழ்ச்சியாய் சொன்னேன்:

“இப்படியெல்லாம் எழுதவல்ல ஒரு பயங்கரமான பைத்தியம் நம்மிடையே உலவிக்கிட்டிருக்கு... ஆனா அதைப் பிடிக்க முடியலேனா நீங்க சொல்ல வரீங்க?”

“நாம அவளை குறிவெச்சுப் பிடிச்சுடுவோம்” என்றார் நாஷ், கறாராய். “அவ ஜஸ்ட் இன்னும் ஒரு கடுதாசியை எழுதுவா.”

“ஓ கடவுளே, என்னாச்சு உங்களுக்கு? இப்படிப்பட்ட கடுதாசிகளை இனிமே அவ எழுதமாட்டா அதுவும் இப்படியெல்லாம் நடந்து போலீஸ் கண் விழிச்சுக்கிட்ட பிறகு, நோ, நோ.”

அவர் என்னைப் பார்த்தார். “யெஸ், யெஸ்” என்றார் நான் சொன்ன நோக்களுக்கு ஓர் அழுத்தமான எதிர்ப்பாய். “அவ எழுதுவா. கவனிங்க... அவளால இப்ப எழுதாம நிறுத்த முடியாது. ஆரோக்கியமற்ற மூளையின் தாகம் இப்படித் தானிருக்கும். கடுதாசிகள் வருவது நீடிச்சுக்கிட்டேத் தானிருக்கும், கவனிச்சுக்கங்க!”

# அத்தியாயம் - 9

## I

வீட்டை விட்டுக் கிளம்புவதற்கு முன்னால் நான் போய் மேகனை சந்தித்தேன். அவள் தோட்டத்தில் இருந்தாள். தனது சுயக்கட்டுப்பாட்டுக்குள் அவள் முழுவதுமாய் வந்து விட்டதைப் போல தெரிந்தது. குதூகலமாய்த்தான் அவள் என்னை வரவேற்றாள்.

அவள் மேலும் சிறிதுகாலம் வந்து எங்களுடன் தங்க வேண்டும் என்று நான் முன்மொழிந்தேன். ஆனால் சிலகண நேர தயக்கத்துக்குப் பிறகு மறுப்பாய் அவள் தலையசைத்து விட்டாள்.

"உங்க கனிவுக்கு நன்றி. ஆனா எனக்கென்னவோ இங்கேயே இருந்துடணும்னு தோணுது. இது இது - வெல், இது என்னோட வீடுன்னு நினைக்கிறேன். பசங்களுக்கும் நான் உதவியா இருக்கலாமே..."

"அப்போ" என்ற நான், "உன்னிஷ்டம்" என்றேன்.

''அப்படின்னா நான் இங்கேயே இருக்கேன். அப்பத்தான் என்னால - அப்பத்தான் என்னால---''

''ம், என்ன?'' நான் கிளறினேன்.

''ஏ-ஏதாவது பயங்கரமா நடந்தால் என்னால உங்களுக்கு போன் போட முடியும், என்ன சொல்றீங்க? நீங்களும் ஓடி வரலாம் ---''

இது என் நெஞ்சைத் தொட்டது. ''இருக்கலாம். ஆனா என்ன மாதிரியான பயங்கரம் நடந்து முடியும்னு நீ நினைக்கிறே?''

''ஓ, எனக்கு சொல்லத் தெரியல'' என்ற அவள் குழப்பமாய் தெரிந்தாள். ''இப்ப நடந்திருப்பது, அப்படி ஏதாவது நடக்கும்னுதான் நினைக்க வெக்குது, இல்லையா?''

''உனக்கு புண்ணியமாப் போகும்'' என்ற நான், ''வேறெங்கே பாடி இருக்கும்னு நீ மோப்பம் புடிச்சுக்கிட்டு அலையாதே, விளங்குதா? உனக்கு அது நல்லதில்ல.''

அவள் என்னைப் பார்த்து ஒரு சிறு சிரிப்புக் கீற்றினை வெளியிட்டாள்.

''அப்படியெல்லாம் பண்ணிட மாட்டேன். ஆனா நடந்திருப்பது என்னைப் பாதிச்சிருக்கு, யெஸ்.''

அவளை அப்படியே அங்கேயே விட்டுவிட்டுக் கிளம்ப நான் விரும்பவில்லை... ஆனால் அவளே சொன்னதைப் போல இது அவளுடைய வீடு. மேலும், இவளைக் கவனித்துக் கொள்வதில் இனிமேல் எல்ஸீ ஹாலண்ட் பொறுப்பாய் நடந்துக் கொள்வாள் என்று எனக்குத் தோன்றியது.

லிட்டில் ஃபேர்ஸூக்கு நானும் நாஷூம் ஒன்றாகவே கிளம்பிப் போனோம். காலை என்னென்ன செய்தேன் என்பதைப் பற்றி ஜோன்னாவிடம் நான் சொல்லிக் கொண்டிருந்த அதே சமயம், பேட்ரிட்ஜை மடக்கப் போயிருந்தார் நாஷ். ஆனால் திரும்பி வரும்போது அவர் ஏமாற்றத்துடன் வந்தார்.

''இவகிட்டேயிருந்து பெரிய உபகாரம் ஒண்ணும் கிடைச்சுடல. அந்தப் பொண்ணு எது குறித்தோ கவலைல இருந்ததாம், என்ன பண்ணுவதுன்னு அவளுக்குத் தெரியலையாம், அதனால அவளுக்கு பேட்ரிட்ஜின் அறிவுரை தேவைப்பட்டதாம் - இவ சொல்றா.''

''இந்த விஷயத்தை பேட்ரிட்ஜ் யாரிடமாவது சொல்லியிருக்காளா?'' கேட்டது, ஜோன்னா.

இறுக்கமாய் இருந்த நாஷ் இதற்கு ஆமோதிப்பாய் தலையசைத்தார்.

''யெஸ். மிஸஸ் எமோரி - உங்க வீட்டுக்கு டெய்லி வரும் வேலைக்காரி அவகிட்டே சொல்லியிருக்கா. 'இந்தக் காலத்து சின்னப் பொண்ணுகளுக்கு பிரச்சினைகளைக் கையாளவே தெரிவதில்ல... என்ன பண்ணலாம்னு கேட்டுக்கிட்டு நேரா பெரியவங்ககிட்டே வந்துடுதுங்க...' இந்தக் கோணத்துல இவ எமோரிகிட்டே சொல்லியிருப்பதைப் போல தெரியுது. ஏக்னஸ் சூட்டிகை அதிகம் இல்லாத பெண்ணா இருக்கலாம் ஆனா அவ மட்டு மரியாதை தெரிஞ்ச ஒரு நல்ல பொண்ணு. எங்கே எப்படி நடந்துக்கணும்னு அவளுக்கு நல்லாவே தெரியும்.''

''தன்னைத்தானே ரொம்பத்தான் பீத்திக்கிறா, இந்த பேட்ரிட்ஜ்'' என முணுமுணுத்தாள் ஜோன்னா. ''அப்படின்னா

மிஸஸ் எமோரி இந்த விஷயத்தை டவுன் முழுக்க பரப்பியிருப்பாளா?''

''தட்ஸ் ரைட், மிஸ் பர்ட்டன்.''

''இதுல ஒரு விஷயம் எனக்கு ஆச்சரியமா இருக்கு'' என்றேன் நான். ''மொட்டைக் கடுதாசி கிடைக்கப் பெற்றவர் களில் எதுக்காக நானும் என்னுடைய தங்கையும் சேர்க்கப் பட்டிருக்கோம்? இது எனக்கு விளங்கல. நாங்களோ இப்பகுதிக்கு புதுசு. அந்நியர்கள். எங்களுக்கு எதிரா எவ்விதமான கோபதாபம் இருக்க வாய்ப்பில்ல. தென்?''

''பாய்ஸன் பென் - விஷப்பேனா! இதை கைல வெச்சுக் கிட்டு கொத்திக்கிட்டிருக்கும் நபருடைய மனோநிலை பற்றி கருத்தில் கொள்ள நீங்க தவறிடறீங்க ஸார். இவருடைய மில்லுக்கு வரும் எதுவும் அரைத்துத் தள்ளப்பட்டுவிடும்! இப்படிப்பட்டவர்களுடைய பழிவாங்கும் வெறி - மனிதாபி மானத்துக்கு வெகுவும் அப்பாற்பட்டது.''

''இதைத்தான் மிஸஸ் டேனே கேத்ராப் குறிப்பிட்டிருப் பாங்கன்னு தோணுது'' என்றாள் ஜோன்னா சிந்தனையாய்.

சூப்பரின்டெண்டெண்ட் கேள்விக்குறியாய் அவளை பார்த்தார். ஆனால் ஜோன்னா எந்த விளக்கமும் தரவில்லை. நாஷ் தொடர்ந்தார்:

''மிஸ் பர்ட்டன்... உங்களுக்கு வந்த கடுதாசியின் உறையை நீங்க நுணுக்கமா பார்த்தீங்களான்னு எனக்குத் தெரியல மேடம். கவனிச்சிருந்தீங்கன்னா, அது நிஜத்துல மிஸ் பார்ட்டனுக்கு அனுப்பத்தான் எழுதப்பட்டதுனு உங்களுக்கு விளங்கியிருக்கும். நீங்க பர்ட்டன் அதாவது ரேசவடிஇ.

அவங்க பார்ட்டன் - அதாவது யேசவடிஇ. அட்சரம் ய, பிறகு ப என்று மாற்றப்பட்டிருக்கு.''

இக்குறிப்பினை நாங்கள் சரியாய் பொருத்திப் பார்த்து அர்த்தப்படுத்திக் கொண்டிருந்தால், இது, இந்த முழு சமாச்சாரத்துக்கும் ஒரு துப்பினை க்ளூ கொடுத்திருக்கும். ஆனால் இதிலுள்ள முக்கியத்துவத்தினை நாங்கள் ஒருவருமே கவனிக்காமல் விட்டிருக்கிறோம்.

நாஷ் கிளம்பிப் போனார். நான் ஜோன்னாவுடன் விடப்பட்டேன். அவள் கேட்டாள்: ''அந்தக் கடுதாசி மிஸ் பார்ட்டனுக்கு அனுப்பத்தான் எழுதப்பட்டதுன்னு நீ நினைக்கல - சரியா?''

''அப்படினா அது 'ஏய் துப்புக்கெட்டவளே...' அப்படினு ஆரம்பிச்சிருக்க வாய்ப்பில்ல'' என்று நான் சுட்டிக்காட்ட ஜோன்னா ஒப்புக்கொண்டாள்.

பிறகு அவள் நான் டவுன் வரை போய்வரவேண்டும் என்று விரும்பினாள். ''ஒவ்வொருத்தரும் என்ன பேசிக்கிறாங்க என்பதை நீ கேட்டாகணும். இதுதான் இன்றைய காலைப்பொழுதின் பெரும் வம்பாய் இருக்கும்!''

அவளும் என்கூட வரவேண்டும் என நான் சொன்னேன். ஆனால் நான் ஆச்சரியப்படும்படி மறுத்து விட்டாள் அவள். தோட்டத்தோடு தோட்டமாய் வேலை செய்யப்போவதாய் சொன்னாள் அவள்.

கதவு வரை போனவன் அங்கு நின்று, குரலின் ஒலியைத் தணித்து கேட்டேன்:

''பேட்ரிட்ஜ் நல்லா இருக்கான்னு நினைக்கிறேன், ஆங்?''

“பேட்ரிட்ஜ்!”

ஜோன்னாவின் குரலில் இருந்த ஆச்சரியம் என்னை சற்றே கூச வைத்தது. நான் மன்னிப்புக் கோரும் தொனியில் பேசினேன்: “சும்மா கேட்டேன். அவ சில விஷயங்கள்ல விளங்கிக்க முடியாதவளா தெரிஞ்சா. கடுகடுனு இருப்பவ. திருமணமாகாதவ. சமயப்பற்று அதிகம் இருக்கவல்ல ஒரு டைப்.”

“இதெல்லாம் சமயப்பித்து கிடையாது அதாவது ரிலீஜியஸ் மேனியா கிடையாது. நீதான் க்ரேவ்ஸ் சொன்னதா என்கிட்டே சொன்னே.”

“சரி, அப்ப செக்ஸ் மேனியா செக்ஸ் பித்து. அவங்க எல்லாருமே வெளிவாசல்ல போகாம இறுக்கமா பின்னப் பட்டே வாழ்ந்திருக்காங்கன்னு கேள்விப்பட்டேன். அமுக் கப்பட்டிருக்கா, பேட்ரிட்ஜ். மரியாதை கொடுத்து வாழ்வது ஒன்றே இவளோட தினசரியா போயிருக்கு. மேலும் பல வயசான பொம்பிளைங்களோட மட்டுமே பல வருஷங்களா இங்கே அடைப்பட்டுக் கிடக்கா.”

“எது, இப்படியெல்லாம் உன் மூளைக்குள்ளே ஐடியாக் களைக் கொண்டு வந்து போட்டது?”

நான் மெதுவாய் சொன்னேன்:

“ஏக்னஸ் இவகிட்டே என்ன சொன்னா என்பதற்கு, இவ சொல்லும் வார்த்தைகள் மட்டும்தான் நம்மகிட்டே இருக்கு, இல்லையா? அது எந்த அளவுக்கு நிஜம்? அன்னிக்கு எதுக்காக பேட்ரிட்ஜ் அந்த வீட்டுக்கு வந்து ஒரு குறிப்பினை போட்டுட்டுப் போனானு, ஒருவேளை ஏக்னஸ் இந்த பேட்ரிட்ஜைக் கேட்டிருந்தால்? இதுக்கு பதில் தரும்போது,

மத்தியானம் போன் பண்ணி விவரத்தை சொல்றேன்னு இந்த பேட்ரிட்ஜ் அவளண்டை சொல்லியிருந்தால்?''

''அப்படி பதில் சொன்னதை மறைக்க, நம்மகிட்டேயே இவ நேரா வந்து, அவ அன்னிக்கு மத்தியானம் இவகூட வந்து டீ எடுத்துக்கலாமானு அனுமதி கேட்டிருந்தால்?''

''யெஸ். அப்படியே.''

''ஆனா அன்னிக்கு மத்தியானம் பேட்ரிட்ஜ் வெளியே போகவேயில்லையே?''

''அது நமக்குத் தெரியாது. நாம ரெண்டு பேருமே அன்னிக்கு வெளிலே இருந்தோம், ஞாபகமிருக்கட்டும்.''

''ஆமாம். நிஜந்தான். யெஸ். நீ சொல்வது சாத்தியம்னே நினைக்கிறேன்.'' நான் சொன்னதை, ஜோன்னா அவளுடைய மூளைக்குள் அசை போட்டாள். ''இதெல்லாம் இருந்தாலும், அப்படி நடந்திருக்கும்னு எனக்குத் தோணல. மொட்டைக் கடுதாசிகள் எழுதி தன் வெறியைத் தணிக்கும் வகையா எனக்கு பேட்ரிட்ஜ் தென்படல. கைரேகைகளை அழித்து விடுவது, இத்யாதிகள். இப்படியெல்லாம் செய்ய வஞ்சகப் போக்கு மாத்திரம் இருந்துவிட்டால் போதாது 'ஞானம்' வேணும். செயல்படுத்தும் புத்திகூர்மை இவளுக்கு இருக்கிறாப்ல தெரியல. நான் என்ன நினைக்கிறேன்னா---''

ஜோன்னா தயங்கிவிட்டு மெதுவாய் கேட்டாள்: இதை செஞ்சுக்கிட்டிருப்பது ஒரு பெண்தான்னு அவங்க நிச்சயமா இருக்காங்க - அப்படித்தானே?'

நான் தாளமுடியாது கேட்டேன்: ''அது ஓர் ஆணா இருக்கக்கூடாதா? நீ என்ன நினைக்கிறே?''

“ம்ம் ஒரு சாதாரண ஆணா இருக்க முடியாது. ஆனா ‘ஒருவகையான’ ஆணாயிருந்தால் இது முடியும். இதுக்கு உதாரணமா நான் மிஸ்டர் பையை இப்ப நினைக்கிறேன்.”

“ஆக, பைதான் உன்னுடைய தெரிவு?”

“இவர் ஒரு சாத்தியக்கூறுன்னு, ஏன் உனக்கு தட்டுப் படலியா, ஆங்? தனிமையிலேயே இருக்கக்கூடிய ஓர் ஆசாமிதான் இவர். சந்தோஷம் அடையாதவர். துவேஷமும் வன்மையும் நிறைந்தவர். யார் அவரைப் பார்த்தாலும், கெக்கெக்கேனு சிரிக்கிறாங்க. ஆகவே சராசரியா சந்தோஷமா இருக்கும் ஆட்களைப் பார்த்து அவர் உள்ளூர ரகசியமா வெறுக்கிறார்னு உனக்குத் தெரியலியா? இதனால கடுதாசி போன்ற எதையோ ஒரு கலைஞனின் கைத் திறனோட செய்து முடித்து அவர் ஆனந்தப்படுவார்னு உனக்கு தென்படலியா?”

“க்ரேவ்ஸ், கலியாணமாகாத ஒரு நடுத்தர பெண் என்று குறிப்பு கொடுத்திருக்கார்.”

“மிஸ்டர் பை” என்ற ஜோன்னா “ஒரு கலியாணமாகாத நடுத்தர வயது பெண் போன்றவர்தான்” என்றாள்.

“இவரது வயதுக்கும் தோற்றத்துக்கும், பொருத்த மில்லாதவர்” - நான் மெதுவாய் சொன்னேன்.

“கரெக்டா சொன்னே. அவருக்கு ஏகப்பட்ட பணமிருக் கலாம் ஆனா செல்வம் மட்டும் உதவாது. அவர் நிலை யில்லாதவர்ன்னும் நான் சொல்வேன். சொல்லப் போனால், அவர், ஒரு, அச்சுறுத்தும் குள்ளன்.”

“அவருக்கேகூட ஒரு கடுதாசி வந்திருக்கு ஜோன்னா, ஞாபகம் வெச்சுக்க.”

''நமக்கு அதுபற்றித் தெரியாது'' என்றாள் ஜோன்னா. ''நாம அப்படி நினைச்சுக்கிட்டிருக்கோம், அவ்ளோதான். அவர் அப்படி சும்மா நடிச்சாலும் நடிச்சிருக்கலாமில்ல...?!''

''நமக்காக...''

''யெஸ். அப்படியெல்லாம் செய்யும்படி சிந்திக்கத் தகுந்தவர்தான் அவர் சிந்திச்சு, மிகைப்படுத்தாமல் நடித்துவிடவும் வல்லவர்.''

''அவர் ஒரு தலைசிறந்த நடிகராயிருக்கணும், அப்ப.''

''ஆமாம் ஜெர்ரி ஆமாம். யார் இப்படி செஞ்சுக்கிட்டிருக்காங்களோ அவங்க ஒரு முதல்தர நடிகரேதான். அவங்க அடையும் சந்தோஷவெறியின் ஒரு பாதி இந்த நடிப்புப் பங்களிப்பில் அடங்கியிருக்கு.''

''ஓ, கடவுளே... ஜோன்னா ப்ளீஸ்... இந்த அளவுக்கு புரிஞ்சு வெச்சிருப்பதைப் போல நீ பேசாதே. எனக்குப் பயமாயிருக்கு. அந்த மனோபாவத்தை - அந்த மனநிலையை ஏ-ஏதோ நீயே முழுக்க விளங்கிக்கிட்ட மாதிரி என்னை நினைக்க வெக்கிறே!''

''எனக்கு விளங்கிடுச்சுனுதான் நான் நினைக்கிறேன். யெஸ்! என்னால ஜஸ்ட் இந்த மூடுக்குள்ளே - அப்படியே நுழைஞ்சுட முடியுது. ஒருவேளை, நான் ஜோன்னா பார்ட்டனா இல்லாமலிருந்தால் - நான், அழகும் இளமையும் கொண்ட கவர்ச்சிப் பெண்ணா இல்லாமலிருந்தால் - எனக்கும் வெறுமனே நேரத்தைக் கழிக்க அவகாசம் இருந்தால் - நானும் ஒடுக்கப்பட்டு, உணர்வுகள் முடக்கப்பட்டு வாழ்ந்தபடி, மற்றவர்கள் சந்தோஷமாய் இருப்பதை வயிறெரிய பார்க்கும் ஒரு பெண்ணாயிருந்தால் ஓஹ், இந்த கறுப்புப் பேய்

என்னுள்ளும் எழுந்திருக்குமா? சொல்லு ஜெர்ரி சொல்லு... மற்றவர்களை காயப்படுத்தி, கொடுமைப்படுத்தி, ஏன்... அழிக்குமளவுக்கு அது போயிருக்குமா?''

''ஜோன்னா!'' பேசிக்கொண்டே போனவளை என் தோளோடு அணைத்து உலுக்கினேன். பெருமூச்செறிந்தாள் அவள். சின்னதாய் நடுங்கினாள். பிறகு என்னை பார்த்து சிரித்தாள்.

''பயமுறுத்திட்டேனா, ஜெர்ரி? மன்னிச்சுடு. ஆனா எனக்கென்னவோ இப்பிரச்சினையை தீர்க்க இதுதான் ஒரே வழினு தோணுது. அந்த ஆளா நீயே மாறியாகணும். அவங்க என்ன உணர்றாங்க... எது அவங்களை இயங்க உந்தித் தள்ளுது என்பதை அறியணும். ஒருவேளை, அப்ப, உனக்கு, அவங்க அடுத்து என்ன செய்வாங்க என்பது பிடிபட்டுடலாம்...''

''ஓ கடவுளே, கடவுளே!'' என்றலறினேன் நான். ''ஓய்வெடுத்து உடம்பைத் தேற்றிக்க வந்தேன் நான். இப்ப இங்கே நடக்கிற லோக்கல் பிரச்சினையால நானே போயிடுவேன் போலிருக்கு.''

## II

ஜோன்னாவின் கணிப்பு மிகவும் சரி. ஹை ஸ்ட்ரீட் முழுதும் வம்புபேசுவதில் ஈடுபாடு கொண்டோரால் நிரம்பி வழிந்தது. ஒவ்வொருத்தரின் எண்ணம் என்ன என்பதை ஒவ்வொன்றாக பெற்றுவிடுவது என்று நான் முடிவெடுத்தேன்.

முதலில் க்ரிஃபித்தை சந்தித்தேன். அவர் மிகவும் அசதியுடனும் ஆரோக்கியமற்றவராகவும் தெரிந்தார்.

டாக்டராயிருந்தாலும், அவதிப்படும் பல நோயாளிகளை தினந்தோறும் பார்க்கும் ஒரு மருத்துவரேயானாலும், மரணம் எனும் முகவரியை வலிக்க வலிக்கக் காட்டும் கொலை என்பது அவரையும் வாட்டி வதைத்துவிடும்போல!

"நீங்க கடல்ல மூழ்கி விட்டவரைப் போல ஆகிட்டீங்க" என்றேன் நான்.

"அப்படியா தெரியறேன்?" என்றார் அவர். நிச்சயமற்று இருந்தது அவருடைய போக்கு. "ஓ, காலையிலிருந்தே பிராணனை வாங்கிய சில கேஸ்களை கையாள வேண்டி யிருந்தது..."

"நம்முடைய கிரகணம் பிடிச்ச மொட்டைக் கடுதாசி ஆள் சம்பந்தப்பட்ட கவலைகள் வேற..."

"அது ஒருபக்கம்." என்னையும், என் பின்னால் இருந்த சாலையையும் தாண்டி வேறெங்கோ நீண்ட தொலைவு பார்த்தார் அவர். ஒரு நுண்ணிய நரம்பு அவருடைய இமையைப் பிடித்திழுத்துத் துடிக்க வைத்ததை நான் கவனித்தேன்.

"உங்களுக்கு சந்தேகமே வரலியா - அது யார்னு?"

"நோ. நோ. ஆனா அது யார்னு எனக்கு காட்டேன்னு கடவுளை வேண்டிக்கறேன்."

திடீரென்று அவர் ஜோன்னாவைப் பற்றி விசாரித்தார். பிறகு தயக்கமாய், அவள் கேட்ட ஏதோ புகைப்படங்களை வைத்திருப்பதாய் சொன்னார்.

அவற்றை நான் கொண்டு போய் அவளிடம் தருகிறேன் என்று முன்வந்து சொன்னேன்.

''ஓ, பரவாயில்ல'' என்றார். ''நான் இன்னிக்குக் காலைல அந்தப் பக்கமாத்தான் போவேன்.''

அவளையே இந்த க்ரிஃபித் டாக்டர் எண்ணிக் கொண்டிருக்கிறாரோ என நான் பயந்தேன். ஜோன்னா, பாவி! ஒரு பேனைப் போல வளைத்துப் போட்டு சொடுக்கக் கூடாது, பாவப்பட்ட இந்த க்ரிஃபித்தை!

கிளம்பியவரை அனுமதித்தேன். தூரத்தில் வந்து கொண்டிருந்த இவருடைய சகோதரி ஐமீயுடன் நான் உடனே பேசியாக வேண்டும்.

ஏதோ உரையாடலின்நடுவில் பேசுவதைப் போல ''ஷாக்கிங்ப்பா, ஷாக்கிங்'' என்றார் அவர், ஆரம்பிக்கும் போதே. ''நீங்க இடத்துக்கு ரொம்ப முன்கூட்டியே போயிட்டதா கேள்விப்பட்டேன்?''

வாக்கியத்தின் முடிவில் கேள்விக்குறி வைத்தார் அவர். 'முன்கூட்டியே' என்று சொன்னபோது அவருடைய கண்கள் பளபளத்தன. மேகன்தான் எனக்கு போன் போட்டு வரச்சொன்னாள் என்று நான் சொல்லப் போவதில்லை. அதற்குப் பதிலாக நான் சொன்னேன்:

''முந்தைய நாள் இரவு நான் கொஞ்சம் இருப்புக் கொள்ளாம இருந்தேன். எங்க வீட்டுக்கு டீ நேரத்துல அந்தப் பொண்ணு வருவதா ஏற்பாடாகியிருந்தது. ஆனா அவ வரல.''

''அதனால ஏதாவது பயங்கரமா நடந்திருக்கும்னு நீங்க கற்பனை பண்ணிக்கிட்டீங்க, ஆங்? சூப்பர் போங்க!''

''ஆமாம்'' என்றேன் நான். ''நான் ஒரு தீர்க்கதரிசி.''

‘‘லிம்ஸ்டாக்குல நாங்க எதிர்கொள்ளும் முதல் கொலை இது. இது ஏற்படுத்தும் பரபரப்புக்கு அளவில்ல. இதை போலீஸ் சிறப்பா கையாளும்னு நினைக்கிறேன்.’’

‘‘அதைப் பற்றி எனக்கு கவலையே கிடையாது’’ என்றேன் நான். ‘‘அவங்க ஒரு செமத்தியான புத்திசாலிக் கூட்டம்.’’

‘‘அவ எனக்காக ஒரு டஜன் தடவை கதவை திறந்து விட்டிருப்பா ஆனாலும் அவ முகம்கூட எனக்கு சரியா நினைவுக்கு வரமாட்டேங்குது. சட்டுனு நினைவுக்கு வரும் குறிப்பிடத்தகுந்த முகம் கிடையாது. ப்ச், அமைதியானவ. தலைல அடிக்கப்பட்டு, அப்புறமா பின்புறத்து கழுத்துல குத்தப்பட்டிருக்கா. எவனோ ஒரு பாய்-ஃப்ரண்ட்தான் பண்ணியிருக்கணும்னு நான் சொல்றேன். நீங்க என்ன நினைக்கிறீங்க?’’

‘‘இதுதான் உங்க முடிவா?’’

‘‘சாத்தியமானா ஒண்ணா இதுதான் எனக்கு படுது. சண்டை வேற நடந்திருக்காமே, ரெண்டு பேருக்கும். சரியான பொறப்புங்க கிடையாது. ரெண்டையுந்தான் சொல்றேன். இங்கே எல்லாம அப்படித்தான்.’’ சற்று நிறுத்தியவர் பின்பு தொடரலானார்: ‘‘மேகன் ஹண்ட்தான் பாடியைக் கண்டுபிடிச்சதா கேள்விப்பட்டேன்...? அது அவளுக்கு அதிர்ச்சியைத் தந்திருக்கணும்...’’

நான் சுருக்கமாய் ‘‘தந்திருக்கு’’ என்றேன்.

‘‘அவ நிலைமைக்கு இதெல்லாம் உசிதமானதா எனக்கு படலே. அவ மனத்தளவுல ஸ்ட்ராங் கிடையாது. சாதுர்யமும் பத்தாது. இதெல்லாம் அவளை நொறுக்கிடும்...’’

நான் சட்டென்று ஒரு முடிவெடுத்துக் கொண்டேன். எனக்கு தெரிந்தாக வேண்டும்.

''சொல்லுங்க மிஸ் க்ரிஃபித்... அவ வீட்டுக்குக் கிளம்பி விடும்படி நேற்று நீங்கதான் மேகனை விரட்டினீங்களா?''

''வெல், அதை நான் 'விரட்டினேன்னு' சொல்லிக்க மாட்டேன்.''

நான் என் துப்பாக்கியின் குறியை மாற்றவில்லை. ''அப்ப நீங்க அவகிட்டே என்னவோ சொல்லியிருக்கீங்க...''

ஐமீ க்ரிஃபித் தன் பாதங்களை பூமியில் பலமாய் நட்டுக்கொண்டு என் கண்களை நேருக்கு நேராய் பார்த்தார். அவர், கொஞ்சமாய், தோற்றுப் போனவரானார். அவர் சொன்னார்:

''ஓர் இளைய பெண் தன்னுடைய பொறுப்புக்களை உதறிவிட்டு வாழ்வது நல்லதல்ல. அவ சின்னவ. நரம்பில்லாத நாக்கு என்னவெல்லாம் பேசக்கூடியதுன்னு அவளுக்குத் தெரியாது. அதனால அவளுக்கு ஒரு சின்ன ஹிண்ட் தரவேண்டியது என் கடமைன்னு நான் நினைச்சேன்.''

''என்ன நாக்கு அதுஇதுனு சுத்தறீங்க?---'' நான் அதிக பட்சக் கோபத்துக்கு தூக்கியெறியப்பட்டதால் உடைந்து போனேன்.

தன் மீது பைத்தியக்காரத்தனமாய் அவருக்கு உள்ள நம்பிக்கை, முட்டாள்தனமானது. அந்த முட்டாள் தனத்துடன் தொடர்ந்தார் ஐமீ:

''ஓ... இங்கே சுற்றிக் கொண்டிருக்கும் அனைத்து கிசுகிசுக்களையும் நீங்க முழுமையா கேட்டதில்லை. ஆனா

*இங்கிருக்கும் மக்கள் என்னென்ன பேசிக்கிறாங்கன்னு எனக்குத் தெரியும். நல்லா கவனிச்சுக்கங்க: அதிலெல்லாம் மயிரளவு உண்மையிருப்பதாகவும் நான் கருதல - கடுகளவு கூட நான் நம்பல. ஆனா நல்ல மனசு இல்லாத கிராமத்துக் கூட்டம் என்னவெல்லாம் பேசும்னு உங்களுக்கு தெரியுமா? தெரியாது! அப்படிப்பட்ட சமூகம் இது என்ன வேணும் னாலும் பேசும். தன் பிழைப்புக்கு தானே சம்பாதிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் ஒரு சின்னப் பெண்ணுக்கு, அது மிக ஆபத்தானது.''*

*''தானே சம்பாதிச்சு அவ வாழணுமா?'' நான் கேள்விக் குறியானேன்.*

*''பின்னே? அவ இருப்பது ஒரு இக்கட்டான சூழ்நிலைல. எனக்கென்னவோ அவ ரொம்ப கரெக்டான முடிவை எடுத்திருக்கான்னுதான் தோணுது. கிளம்புவதா திடீர்னு நோட்டீஸ் கொடுத்துட்டு, ரெண்டு குழந்தைகளும் கவனிக்க ஆளில்லாம அப்படியே விட்டுட்டுப் போயிட முடியாது தான். அவ அருமையானவ அருமையிலும் அருமை. இப்படித்தான் நான் ஒவ்வொருத்தர்கிட்டேயும் சொல்லிக் கிட்டிருக்கேன்! ஆனாலும், மனித வர்க்கம் பேசும்!''*

*''யாரைப் பற்றி இப்படி கொட்டிக்கிட்டிருக்கீங்க?'' கேட்டேன் நான்.*

*''எல்ஸீ ஹாலண்ட், அஃப்கொர்ஸ்!'' என்றாரே பார்க் கலாம். பொறுமையின்றித் தொடரவும் செய்தார்: ''என்னைப் பொறுத்தவரைக்கும் அவங்க அடிவரை ஒரு நல்ல பொம் பிளை. அவங்க கடமையை மட்டுந்தான் செஞ்சுக்கிட்டிருந் தாங்க. அதை மீறி ஒரு நாற்றம் கிடையாது.''*

*''ஆமாம். மக்கள் என்ன பேசிக்கிறாங்க?''*

ஐமீ க்ரிஃபித் சிரித்தார். அது ஒரு அநாகரீகச் சிரிப்பு என்று தோன்றியது எனக்கு.

''என்ன பேசிக்கிறாங்களா? அவங்க, ஸிம்மிங்டன் நெம்பர் 2 என்று வருவதற்கான நடவடிக்கைகள்ல ஏற்கெனவே இறங்கியாச்சுனு பேசிக்கிறாங்க. விடோயர் ஆகிட்ட மிஸ்டர் ஸிம்மிங்டன்னை நெஞ்சுல சாய்ச்சு ஆறுதல் தந்து, இவரைவிட உகந்த மற்றொருத்தர் இனி கிடையாதுன்னு ஆக்கிக்கிட்டிருக்காங்களாம்.''

''ஓ, ஓ, கடவுளே'' என்றேன் நான் அதிர்ந்துப்போய். ''மிஸஸ் ஸிம்மிங்டன் போய் ஒரு வாரம்கூட ஆகல!''

ஐமீ க்ரிஃபித் தோள்களைக் குலுக்கிக் காட்டினார்.

''ஆமாம். முட்டாள்தனம்தான்! ஆனா உங்களுக்குத்தான் மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள்னு அனுபவம் இருக்கணுமே ஸார்! இந்த ஹாலண்ட் பொண்ணு, இளையவ மேலும் அழகானவ. இது போதாதா? கவனிச்சுக்கங்க: குழந்தைகளைக் கவனிச்சுக்கிற வேலைல அப்படியொன்றும் எதிர்காலம் கிடையாது. அதனால, ஒரு கணவனைத் தேடிப்பிடிச்சு அப்படியே வீட்டோட செட்டில் ஆக அவங்க நினைச்சா அதுல நான் ஒண்ணும் குற்றம் காணமாட்டேன்.

''ஆனா பாவம்...'' என்று விடவில்லை அவர்: ''புவர் டிக் ஸிம்மிங்டன்னுக்கு இதெல்லாம் ஒரு மண்ணும் தெரியாது! அவர் இப்பக்கூட மோனா ஸிம்மிங்டன்னின் மரணத்தால வீழ்ந்துக் கிடக்கார். ஆனா ஆம்பிளைங்க எப்படிப்பட்டவங் கன்னு உங்களுக்கா சொல்லணும்? ஒரு பொண்ணு எப்பவுமே அங்கேயே இருந்து, அவருக்கு வசதிகள் பண்ணித்தந்து, குழந்தைங்க கிட்டேயும் அர்ப்பணிப்பா இருந்தால் வெல், அந்தம்மாவை நம்பி அவர் சாய்ந்துவிடுவது இயல்புதானே!''

நான் சாந்தமாய் சொன்னேன்:

"ஆக, வளைத்துப் போட்டுக் கொள்வதில் கில்லாடி இந்த எல்ஸீ ஹாலண்ட்னு சொல்ல வரீங்களா?"

ஐமீ க்ரிஃபித் சிவந்தார்.

"அப்படியெல்லாம் சொல்லல. மக்கள் இப்படியெல்லாம் அவதூறா சொல்வதைக் கேட்டு நான் அவங்களுக்காக வருத்தப்படறேன்! இதனாலத்தான் வீட்டுக்குக் கிளம்பிடுனு நான் பட்டும்படாமல் மேகன்கிட்டே சொன்னேன். ஹாலண்ட்டையும் டிக் ஸிம்மிங்டன்னையும் தனியா வீட்டுல விட்டு வைப்பதற்கு இது மேல்னு பட்டுது எனக்கு."

விஷயங்களை நான் விளங்கிக்கொள்ள ஆரம்பித்தேன்.

ஐமீ க்ரிஃபித் அவருக்கே உரிய ஜாலியான சிரிப்பை உதிர்த்தார்.

"எங்க சின்ன கிராம மக்கள் என்னவெல்லாம் நினைக் கிறாங்க என்பதைக் கேட்டதும் நீங்க அதிர்ந்துட்டீங்க, மிஸ்டர் பர்ட்டன். ஒண்ணு சொல்றேன் கேட்டுக்கங்க: இங்கேயிருக்கும் மக்கள் கூட்டம் எப்பவுமே மோசமானதைத்தான் முதல்ல நினைக்கும்!"

சிரித்தார். தான் சொன்னதை ஆமோதித்து தானே தலையசைத்துக் கொண்டார். தப்படிகள் வைத்துப் போய்விட்டார்.

## III

சர்ச்சுக்கு அருகில் நான் மிஸ்டர் பையை எதிர் கொண்டேன். அவர், பரபரப்பாய்த் தெரிந்த எமிலி பார்ட்டனுடன் பேசிக்கொண்டிருந்தார்.

உற்சாகம் என்பதன் அர்த்தமாய் நின்ற அவர் என்னை குதூகலமாய் வரவேற்றார்.

''ஆஹ், பார்ட்டன், குட்மார்னிங். எப்படியிருக்காங்க உங்க ரம்யமான தங்கை?''

ஜோன்னா நன்றாய் இருக்கிறாள் என்று நான் அவரிடம் சொன்னேன்.

''ஆனா நம்ம கிராமத்து பாராளுமன்ற விவாதங்கள்ல வந்து அவங்க இணைஞ்சுக்கலியா? சேதியைக் கேட்ட திலிருந்து நாங்கள்லாம் குதிச்சுக்கிட்டிருக்கோம். கொலை! செய்தித்தாள்கள்ல வரும் பிரமிக்க வைக்கும் சேதி இப்ப நமக்கு நடுவுல! ஒரு இளைய வேலைக்காரியை ஈவிரக்கமின்றி கொன்னிருக்காங்க. மேற்கொண்டு வேற தகவல்கள் ஏதும் இல்ல, ஆனாலும், சந்தேகமற்ற ஒரு சேதி!''

மிஸ் பார்ட்டன் ''இட் ஈஸ் ஷாக்கிங்'' என்றார். ''குலை நடுங்க வெக்குது.''

மிஸ்டர் பை, அவர் பக்கமாய் திரும்பினார்.

''சும்மா ஊத்தாதீங்க, டியர் லேடி. நீங்க இந்த சேதியைக் கேட்டு பரபரப்பா கொண்டாடறீங்க, யெஸ் கொண்டா டறீங்க. ஒத்துக்கங்க. இதை பாவம்கறீங்க. தண்டனைக்குரிய துங்கறீங்க. எல்லாம் ஓ கே. ஆனா இதுல த்ரில் இருக்கு. நிச்சயமா சொல்வேன், த்ரில் இருக்கு! அதை என்ஜாய் செய்றீங்க செய்றோம்!''

''அத்தனை நல்ல பொண்ணு!'' என்றார் எமிலி பார்ட்டன். ''செயின்ட் க்ளோடைல்ஸ் விடுதியிலிருந்து நேரா என்கிட்டே வந்தவ அவ. வளர்ந்திருந்தாலும் ஒண்ணும் தெரியாத குழந்தையா இருந்தா. ஆனா சொல்லிக் கொடுத்தால்

கற்றுக்கொள்ளக் கூடியவள். சொல்லிக் கொடுத்தேன். ஒரு சிறப்பான வீட்டு வேலைக்காரியா மாறினா. பேட்ரிட்ஜ் அவ வேலைல ரொம்பவே திருப்தி அடைஞ்சா.''

நான் விரைவாய் குறிப்பிட்டேன்:

''நேற்று மத்தியானம் பேட்ரிட்ஜுடன் அவ டீ எடுத்துக் கொள்வதா இருந்தது.'' மிஸ்டர் பை பக்கமாய் திரும்பினேன். ''ஐமீ க்ரிஃபித் இதை உங்ககிட்டே சொல்லியிருக்கணும்னு நினைக்கிறேன்.''

என் தொனி சராசரியாய் இருந்தது. பையும் சந்தேகத்துக்கு இடம்தராதவாறு பதில் தந்தார்: ''அவங்க இதை சொன்னாங்க, யெஸ். முதலாளியின் தொலைபேசியில வேலைக்காரர்கள் பேசி தகவல் தருவது புதுசுனு அவங்க சொன்னதும் ஞாபகமிருக்கு.''

''பேட்ரிட்ஜ் அப்படி கனவுலகூட செய்ய மாட்டா'' என்றார் எமிலி. ''ஏக்னஸ் அப்படி பண்ணினதைக் கேட்டு நான் ஆச்சரியப்பட்டுட்டேன்.''

''நீங்க காலத்துல ரொம்பவும் பின்தங்கியிருக்கீங்க, டியர் லேடி'' என்றார் மிஸ்டர் பை. ''என்னிடமிருக்கும் ரெண்டு பிசாசுங்களும் டெலிபோனை தொடர்ச்சியா பயன்படுத்தியதுங்க... நான் தடுக்கும் வரை, விடாம வீடு முழுக்க புகை விட்டதுங்க - சிகரெட்! ஆனா ப்ரஸ்காட், சுவையா சமைக்கவே இறைவனால அனுப்பப்பட்டவர். மிஸஸ் ப்ரஸ்காட்டோ, குறிப்பிடும்படியான ஒரு வேலைக்காரி.''

''ஆமாமாம். நாங்கள்லாம் நீங்க ஒரு லக்கி பேர்வழினு சொல்லிப்பதுண்டு.''

வீட்டைச் சுற்றியே உரையாடல் நீளுவதைத் தடுக்க நான் இடைபுகுந்தேன். ''கொலை பற்றிய செய்தி ரொம்ப சீக்கிரமா பரவிடுச்சே'' என்றேன்.

''அஃப்கொர்ஸ், அஃப்கொர்ஸ்'' என்றார் மிஸ்டர் பை. ''கசாப்புக் கடைக்காரன், பேக்கரிக்காரன், மளிகைக் கடைக்காரன். ஒரு கிசுகிசுவைக் கொண்டு வந்து சும்மா விட்டுப் பாருங்க - அதுக்கு கால் கையெல்லாம் பெயிண்ட் பண்ணப்பட்டு ஜம்முனு நிக்கும்! அதுவே, லிம்ஸ்டாக்! கிராமம் மாறிக்கிட்டே வருது. முதல்ல மொட்டைக் கடுதாசிகள், அப்புறம் கொலை... இன்னும் என்னவெல்லாம் சட்டவிரோதங்கள் நடக்கப் போகுதோ...''

எமிலி பார்ட்டன் நரம்பதிர சொன்னார்: ''இது ரெண்டுக்கு இணைப்பு இருக்குனு யாரும் நினைக்கல இல்ல - தொடர்பு இருக்கலாம்னு எண்ணங்கள் இல்ல, இல்ல?''

மிஸ்டர் பை இந்தக் கோணத்தினைக் கவ்விக் கொண்டார்.

''ஆஹ், ஓர் இண்ட்ரஸ்டிங் சிந்தனை. அந்தப் பொண்ணுக்கு என்னவோ தெரிஞ்சிருக்கு, அதனால கொல்லப்பட்டிருக்கா. யெஸ், யெஸ், அப்பழுக்கற்ற சிந்தனை. இப்படி ஒரு சிந்தனையை விதைச்ச நீங்க எத்தனை புத்திசாலி.''

''எ-எ-என்னால இதை தாள முடியல.''

எமிலி பார்ட்டன் மொட்டையாய் பேசிவிட்டு, திரும்பினார். மிகவேகமாய் நடந்துப் போனார்.

பை, போகும் அவரையே பின்னால் பார்த்தார். அவருடைய குண்டு முகம் கேள்விக்குறியாய் ஆனது.

என் பக்கமாய் திரும்பிய அவர் மிருதுவாய் மறுத்து தலையசைத்துக் கொண்டார்.

''உணர்ச்சிவயப்படக்கூடிய ஆத்மா. ஆனாலும் வசீகர மானவங்க, என்ன நினைக்கிறீங்க நீங்க? அவங்க தலைமுறை பொம்பிளைங்களைப் போன்றவங்களே கிடையாது, மிஸஸ் எமிலி. ஒரு தலைமுறை பின்னுக்குப் போய் வாழ்ந்துக் கிட்டிருக்காங்க. இவங்க அம்மா கடுமையான ஒரு கேரக்டரா இருந்திருக்கணும். பலசாலி மாதிரி. 1870-ஐ ஒட்டி குடும்பத்தை நடத்தினவங்க அவங்கனு நினைக்கிறேன். முழு குடும்பமும் ஒரு கண்ணாடிக் குடுவைக்குள்ளே அடைக்கப்பட்டதைப் போல அடைபட்டு வாழ்ந்திருக்கு. இப்படிப்பட்ட தலை முறையினரை சந்திப்பதுல எனக்கு ஆர்வம் உண்டு.''

எனக்கு கிடையாது, எனவே, ''நடக்கும் சமாச்சாரங் களைப் பற்றி நீங்க ரியலா என்ன நினைக்கிறீங்க?'' என கேட்டேன்.

''அதாவது...?''

''அதாவது இந்த மொட்டைக் கடுதாசிகள், கொலை...?''

''நம்முடைய லோக்கல் க்ரைம் அலை! ஆங், நீங்க என்ன நினைக்கிறீங்க?''

நான் சாந்தமாய் ''நாந்தான் உங்களை முதல்ல கேட்டது'' என்றேன்.

மிஸ்டர் பை ஜென்டிலாய் சொன்னார்:

''அசாதாரணங்கள் பற்றிய அறிதல்கள்ல, நான் இன்னும் ஒரு கத்துக்குட்டி. இவையெல்லாம் என்னை ஈர்க்கின்றன. நாம நினைச்சே பார்க்காத ஆசாமிகள் செய்யும் அதியற் புதங்கள்! இந்த கேஸைப் பொறுத்தவரைக்கும் போலீஸுக்கு நான் ஒரு அறிவுரை தர விரும்பறேன்: குணாதிசயத்தைப் படிங்க. அதாவது கேரக்டரை. கைரேகைகளைப் படிப்பது,

கையெழுத்தினை அளப்பது, நுண்ணோக்கியை வெச்சுக் கிட்டு சுரண்டுவது போன்ற அவங்களுடைய அணுகு முறை களை மூட்டை கட்டட்டும். இதுக்கெல்லாம் பதிலாக மக்கள் அவங்களுடைய தந்திரமான நடவடிக்கைகளால் என்ன வெல்லாம் பண்றாங்கன்னு பார்க்கட்டும். காரணமில்லாம சிரிச்சால் அது ஏன்னு காரணம் தேடட்டும். விடை கிடைக்கும்!''

நான் மலைத்துப் போனேன். ''பைத்தியத்தைத் தேடச் சொல்றீங்களா?'' புருவத்தை உயர்த்திக் கேட்டேன் நான்.

''ஆமாம், ஆமாம்'' என்றார் பை. கூடுதலாய் ஒரு தகவலும் தந்தார்: ''ஆனா அவங்க பைத்தியம்னு நமக்கு வெளிப்படையா தெரியாது!''

அவர் ஏறக்குறைய தரையிறங்கி நடக்க ஆரம்பித்திருந்தார்.

## IV

போகும் அவரையே வெறித்தபடி நான் பேச்சற்று நின்று கொண்டிருக்க, சர்ச் கதவு திறந்தது. ரெவரெண்ட் கலேப் டேனே கேத்ராப் வந்தார்.

அவர் என்னைப் பார்த்து நிச்சயமற்று சிரித்தார்.

''குட் - குட் மார்னிங், மிஸ்டர் - மிஸ்டர்---''

நான் அவருக்கு உதவினேன்: ''பர்ட்டன்.''

''ஆங், பர்ட்டன். பேரை மறந்துட்டேன்னு நீங்க நினைச்சுடக் கூடாது. சட்டுனு உங்க பேர் என் நினைவிலிருந்து வழுக்கியிருக்கு. ஆங், இது ஒரு ப்யூட்டிஃபுல் டே.''

''யெஸ்'' என்றேன் நான், சுருக்கமாய்.

அவர் என்னையே துளைத்தார்.

''ஆனாலும், ஒரு ஒரு அதாவது ஆங், மிஸ்டர் ஸிம்மிங்டன் வீட்டுல வேலைக்காரியா இருந்த அந்த துரதிர்ஷ்டமான சிறுமி நமக்கு நடுவுல ஒரு கொலை விழுந்திருக்கு என்பதை என்னால நம்பவே முடியல, மிஸ்டர் --- பர்ட்டன்.''

''யெஸ்.''

''இன்னொரு சேதியும் என் காதுகளுக்கு வந்தது'' என்ற அவர் என்னருகில் வளைந்து வந்தார். ''இங்கே மொட்டைக் கடுதாசிகள் சுற்றிக்கிட்டிருக்குனு நான் கேள்விப்பட்டேன். இந்தப் புரளியை நீங்க கேள்விப்பட்டீங்களா?''

''ம், கேள்விப்பட்டேன்.''

''கோழைத்தனமான கொடூரம்.'' இங்கு நிறுத்திக் கொண்டு, ஒரு நீண்ட லத்தீன் ஸ்லோகனைச் சொன்னார் அவர். ''விளங்குதா?'' என்றார் கடைசியாய்.

''முழுசா'' என்றேன் நான்.

## V

எனக்கு பயன்படும்படியாய் நான் பேச மேற்கொண்டு ஒருத்தரும் அங்கு இல்லை. ஆகவே நான் வீட்டுக்குப் போனேன். நடுவில் புகையிலைக்காகவும், ஒரு பாட்டில் ஒயினுக்காகவும் நின்றேன். கடையில், கொலை பற்றி மேலும் சில கருத்துக்கள் கிடைக்கலாம் என்ற நப்பாசையில் இப்படி செய்தேன்.

''வீட்டுக்கு வரானுங்க... கதவு வரைக்கும்... ஒயின் இருக்கு வேணுமானு கேட்கிறாங்க... பொண்ணு தனியாத் தான் வீட்டுல இருக்குனு புரிஞ்சுட்டா, மாறிடறானுங்க... கையைப் பிடிச்சு இழுப்பது, இல்லேனா திருடுவது...''

ம்ம், எனக்கு உபயோகமாய் எதுவும் கிடைக்கவில்லை.

லஞ்சுக்கு சற்று முன்பு நான் லிட்டில் ஃபார்ஸ் வந்தடைந்தேன். வரவேற்பறை ஜன்னலருகே எதுவும் செய்யாமல் நின்று கொண்டிருந்தாள் ஜோன்னா. அவளது நினைவுகள் பல மைல்கள் தள்ளியிருப்பதைப் போல இருந்தாள் அவள்.

''நீ என்ன பண்ணிக்கிட்டிருந்தே?'' என்று கேட்டேன் நான்.

''ஓ, ஒண்ணும் குறிப்பிடும்படியா செய்யல.''

நான் வெளியே வராண்டாவுக்குப் போனேன். இரண்டு இருக்கைகள் அங்கிருந்த டேபிள்வரை இழுத்துப் போடப் பட்டிருந்தன. டேபிளிலும், குடித்துக் காலியான இரண்டு கோப்பைகள் இருந்தன. இன்னொரு சேரில் ஒரு பொருளிருந்தது அதனை நான் பயக்கலவரத்துடன் பார்த்தேன்.

''என்னது இது, ச்சே?''

''ஓ'' என்று வந்தாள் ஜோன்னா. ''இது ஒரு நோய்கண்ட கல்லீரலின் படமோ, என்னவோ. இதுல எனக்கு இண்ட்ரஸ்ட் இருக்கும்னு நினைச்சாராம், டாக்டர் க்ரிஃபித்.''

நான் அந்த புகைப்படத்தை சற்றுக் கவனம் பொதித்துப் பார்த்தேன். பெண்பாலினை வர்ணிக்க, ஒவ்வோர்

ஆணுக்கும் ஒரு விதம் இருக்கின்றது. இதற்கு நானாயிருந்தால் போட்டோகிராப் எனும் கலையைத் தெரிந்தெடுத்திருக்க மாட்டேன். இதைப்போய் ஜோன்னா கேட்டிருக்கிறாள்!

''கொஞ்சங்கூட நல்லாயில்ல இது'' - நான் சொன்னேன்.

ஜோன்னா அது நன்றாய் உள்ளது என்றாள்.

''க்ரிஃபித் எப்படியிருக்கார்?'' என்று கேட்டேன் நான்.

''அசதியாக இருந்தார். சந்தோஷமில்லாம தெரிந்தார். அவர் மூளைக்குள்ளே என்னவோ இருக்குனு நான் நினைக்கிறேன்.''

''அவர் மூளைக்குள்ளே நீ இருக்கேன்னுதான் நான் சொல்வேன். பாவம் ஜோன்னா, அவரை விட்டுடு.''

''ஓ, வாயை மூடு. நான் ஒண்ணும் பண்ணல அவரை.''

''பொம்பிளைங்க எப்பவும் சொல்வது இதைத்தானே.''

ஜோன்னா கோபமாய் அங்கிருந்து அகன்றாள்.

வராண்டாவில் வெளிச்சம் படர்ந்தது. அந்த சூரிய வொளியில் அப்புகைப்படம் சுருள ஆரம்பித்தது. அதனை நான் ஒரு நுனியில் பிடித்தெடுத்து வரவேற்பறைக்குள் கொண்டு வந்தேன். எனக்கு அதில் கொஞ்சமும் ஈடுபாடு இல்லாவிட்டாலும் அது க்ரிஃபித்தின் பொக்கிஷம் என்ற அளவில் மதிப்பு கொடுத்தேன்.

நான் புத்தக அலமாரிக்கு அருகில் குனிந்தேன். புகைப் படத்தினை மீண்டும் சமமாய் ஆக்குவதற்கு ஏதுவாக உதவ, கீழ் டிராயரிலிருந்து ஒரு குண்டுப் புத்தகத்தை உருவினேன். யாருடைய பொன்மொழிகளோ அடங்கியதொரு பெரிய தொகுப்பு அது.

அப்புத்தகம் திறந்தபடி பட்டென்று என் கைகளில் அமர்ந்தபோது நான் சற்று ஆச்சரியப்படும்படி ஆனது. ஒருசில நிமிடங்களில் அது ஏன் என்பது எனக்கு விளங்கியது. அதன் மையப்பகுதியிலிருந்து நிறைய பக்கங்கள் அழகாய் கத்திரித்து எடுக்கப்பட்டிருந்தன.

## VI

அதைப் பார்த்தபடியே நின்றேன் நான். டைட்டில் பக்கத்தை நான் கவனித்தேன். 1840ல் அது பிரசுரமாகி யிருந்தது.

சந்தேகத்துக்கு இதில் இடமே இல்லை. நான் பார்த்துக் கொண்டிருக்கும் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட பக்கங் களிலிருந்ததான் மொட்டைக் கடுதாசிகள் வடிவமைக்கப் பட்டிருக்கின்றன. யார் இவற்றைக் கத்திரித்து எடுத்தது?

வெல், துவக்கமாய் வருவது, எமிலி பார்ட்டனே. இது அவருடைய வீடு ஆகையால் அவரைத்தான் முதலில் நினைக்கத் தோன்றும். அல்லது அது பேட்ரிட்ஜாய் இருக்க வேண்டும்.

ஆனால் மற்ற சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன. இந்த அறையில் தனியாய் இருந்த எவராலும் அப்புத்தகத்தின் பக்கங்கள் நறுக்கப்பட்டிருக்கலாம். உதாரணத்துக்கு, யாராவது பார்வையாளர். இங்கு மிஸ் எமிலி பார்ட்டனுக்காக காத்திருக்கும்போது செய்திருக்கலாம்.

அல்லது வியாபாரரீதியாய் இங்கு வந்து காத்திருந்த வேறு எவராவது செய்திருக்கக்கூடும்.

நோ, இதற்கு வாய்ப்புகள் கம்மி. ஒருநாள் பேங்க்கிலிருந்து குமாஸ்தா என்னைப் பார்க்க வந்தபோது அவருக்குப் பின்னா லிருக்கும் சின்ன அறையைக் காட்டி அங்குதான் அவரை உட்கார வைத்தாள் பேட்ரிட்ஜ். இதுதான் இவ்வீட்டின் வாடிக்கை.

எனில், பார்க்க வந்த யாரோ ஒரு பார்வையாளர்? 'சமூகத்துல நல்ல நிலைல உள்ள ஒருத்தர்?' மிஸ்டர் பை? ஐமீ க்ரிஃபித்? மிஸஸ் டேனே கேத்ராப்?

# VII

லஞ்ச் ரெடியென்ற அழைப்பு வந்தது. போனேன். சாப்பிட்ட பிறகு வரவேற்பறைக்கு வந்தோம். ஜோன்னா விடம் நான் கண்டுபிடித்ததைப் பற்றி சொன்னேன்.

அனைத்து நிலைகளிலிருந்தும் இதனை நாங்கள் விவாதம் செய்தோம். பிறகு இவ்விஷயத்தை நான் போலீஸுக்குக் கொண்டு போனேன்.

இக்கண்டுபிடிப்பால் அவர்கள் குதூகலமானார்கள். வெறும் லக்கினால்தான் இதனை நான் கண்டுபிடித்தேன் என்பது என் கருத்து... இதற்காக என்னைப் பெருமைபொங்க முதுகில் தட்டிக்கொடுத்தார் சூப்பரின்டெண்டெண்ட்.

க்ரெவ்ஸ் ஸ்டேஷனில் இல்லை. ஆனால் நாஷ் இருந்தார். இவர் அவருக்கு போன் போட்டு விஷயத்தை சொன்னார். அப்புத்தகத்தை கைரேகைகளை ஆராய்வதற்காக அவர் களிடமே வைத்துக்கொண்டாலும், நாஷுக்கு அப்படி யொன்றும் பெரிதாய் நம்பிக்கை இல்லை. அவர்களால் உதவவல்ல கைரேகைகள் எதையும் கண்டுபிடிக்க முடிய

வில்லை. அதில் என் கைரேகையும், அதனை அவ்வப்போது தூசுதட்டியிருக்கிறாள் என்பதை சுட்டிக்காட்ட பேட்ரிட்ஜின் கைரேகையும் இருந்தன. வேறு எவருடைய கைரேகையும் காணப்படவில்லை.

என்னுடன் திரும்பி குன்றுகளின் வழியே நடந்து வந்தார் நாஷ். இந்த சமாச்சாரம் எப்படி நகர்ந்து கொண்டிருக்கிறது என்று கேட்டேன் நான். ''நெருங்கிக்கிட்டிருக்கோம், மிஸ்டர் பர்ட்டன்'' என்றார் அவர். ''யார் பண்ணியிருக்க மாட்டாங்கன்னு வகைப்படுத்தி வடிகட்டியிருக்கோம்.''

''ஆஹ்'' என்றேன் நான் வாயகல. ''யார் யாரெல்லாம் உள்ளே வராங்க?''

''மிஸ் கிஞ்ச். யாரோவொரு க்ளையண்ட்டை நேற்று மத்தியானம் சந்திக்க முன்பதிவு இருந்திருக்கு. கேம்பியேக்கர் சாலைக்கு அருகில் வருது அந்த க்ளையண்ட்டோட வீடு. ஸிம்மிங்டன் வீட்டைத் தாண்டித்தான் இந்த சாலைக்குப் போகணும். போகும்போதும் வரும்போதும் ஸிம்மிங்டன் வீட்டை அவங்க கடந்துத்தான் ஆகணும். இதுக்கு முந்தைய வாரம் அதாவது மொட்டைக் கடுதாசி வந்து அதனால மிஸஸ் ஸிம்மிங்டன் தற்கொலை செய்துக்கிட்ட நாள்தான் - மிஸ்டர் ஸிம்மிங்டன் அலுவலகத்துல மிஸ் கிஞ்ச் கடைசியா பணியாற்றிய நாள். அன்னிக்கு மத்தியானம், மிஸ் கிஞ்ச் அலுவலகத்தை விட்டுப் போகாமல் அங்கேயே வேலை செஞ்சுக்கிட்டு இருப்பதாத்தான் ஆரம்பத்துல நினைச்சிருக்கார் மிஸ்டர் ஸிம்மிங்டன். அந்த மத்தியானம் ஸிம்மிங்டன்னைப் பார்த்துப் பேச மிஸ்டர் லஷிங்டன் வந்திருக்கார். மத்தியானம் முழுக்க ரெண்டு பேரும் உள்ளேயேதான் இருந்திருக்காங்க. மிஸ் கிஞ்ச்சுக்காக

பலமுறை அழைப்பு மணியை அடிச்சிருக்கார் இவர். அந்தம்மா, மதியம் மூணு மற்றும் நாலு மணிக்கு உட்பட்ட காலத்துல வெளியேறியிருக்காங்கன்னு நான் கண்டுபிடிச்சிருக்கேன். அங்கே அலுவலகத்துல தீர்ந்து போயிருந்த சில ஸ்டாம்புகளை வாங்குவதற்காக அவங்க வெளியே போயிருக்காங்க. இதுக்கு ஆபீஸ் பாயையே அனுப்பியிருக்கலாம்... ஆனா தலைவலி ரொம்ப இருந்ததாம், அதனால காற்றாட வெளியே போய்வந்தால் தேவலாம்னு நினைச்சாங்களாம் சொல்றாங்க, மிஸ் கிஞ்ச். ரொம்ப தூரம் போகல அவங்க.''

''ஆனா தேவையான தூரம் போயிருக்காங்க...!''

''ம், சொல்லலாம். கிராமத்தின் அடுத்த பக்கத்துக்கு அவசரஅவசரமா போய், அங்கே போஸ்ட் பாக்ஸ்ல கடிதத்தை துரிதமா நழுவ விட்டுட்டு, அதே அவசரத்துடன் திரும்பும் வரை - போய்ட்டு வந்திருக்காங்க! ஆனா, மிஸஸ் ஸிம்மிங்டன் வீட்டுல மிஸ் கிஞ்ச்சைப் பார்த்ததா சொல்லும் ஒரு சாட்சியை என்னால அடைய முடியல, யெஸ்.''

''அப்படியும் கவனிப்பாங்களா என்ன?''

''கவனிக்கலாம், கவனிக்காமலும் இருக்கலாம்.''

''வேற யாரெல்லாம் உங்க போலீஸ் பைக்குள்ளே இன்னும் இருக்காங்க?''

அவர் முன்னால் வெகுதூரம் பார்த்தார் நாஷ்.

''நம்மால யாரையும் ஒதுக்கி வைக்க முடியாதுனு நீங்க விளங்கிக்கணும் - ஒருத்தரையும் விலக்க முடியாது.''

''முடியாது'' என ஆமோதித்தேன் நான். ''எனக்கு இது விளங்குது.''

அவர் ஆழ்ந்து சொன்னார்: ''பெண் சாரணியர்கள் சம்பந்தப்பட்ட ஒரு மீட்டிங்குக்காக நேற்று மத்தியானம் ப்ரெண்டன் வரை போயிருக்காங்க மிஸ் க்ரிஃபித். காலந்தாழ்த்தித்தான் அவங்க திரும்பியிருக்காங்க.''

''நீங்க அவங்களை ஒரு குற்றவாளியா---''

''இல்ல. அப்படி நான் நினைக்கல. ஆனா எனக்குத் தெரியாது. மிஸ் க்ரிஃபித்தைப் பார்த்தால், திறமைமிக்க, ஆரோக்கியமான மனோநிலைல வாழ்பவராத்தான் தெரியுது. ஆனாலும் சொல்றேன், எனக்கு தெரியாது.''

''போன வாரம்? இவங்க கடுதாசியை அந்த வீட்டு தபால் பெட்டில போடும் நிலை இருந்திருக்கா?''

''சாத்தியம்தான். அந்த மத்தியானம், இவங்க டவுன்ல ஷாப்பிங் போயிருக்காங்க.'' இங்கு நிறுத்தினார் நாஷ். ''இது மிஸ் எமிலி பார்ட்டனுக்கும் பொருந்தும். நேற்று மத்தியானத்துக்கு முன்னாலேயே கிளம்பி ஷாப்பிங் போயிருக்காங்க அவங்க. போன வாரம், இவங்க, ஸிம்மிங்டன் வீடு இருக்கும் தெருவைத் தாண்டி வசிக்கும் ஏதோ நண்பர்களைப் பார்க்க ஒரு பொடிநடை போயிருக்காங்க.''

நம்பமுடியாமல் நான் மறுப்பாய் தலையசைத்தேன். பக்கங்கள் நறுக்கி எடுக்கப்பட்டிருந்த புத்தகத்தைக் கண்டெடுத்த உடனேயே, அந்த வீட்டின் சொந்தக்காரர் மீது சந்தேகப் பார்வை விழும் என்பது நான் எதிர்பார்த்ததே. ஆனால் நேற்று என்னை சந்திக்க வந்த சந்தோஷமான எமிலியை நினைக்கும்போது... பிரகாசமும், பரபரப்பும், கிளர்ச்சியும்...

*எல்லாவற்றையும் நகர்த்து. அந்த கிளர்ச்சி! யெஸ், அதுவொரு மிதமிஞ்சிய துள்ளலான கிளர்ச்சி... அப்போது மெருகேறிய அவரது கன்னங்கள்... டாலடித்த கண்கள்... இதெல்லாம் எதனால்? என்ன காரணத்தால்? ஓ, நிச்சயமாய் - நிச்சயமாய் ---''*

நான் மனச்சுமையோடு சொன்னேன்: ''இது ஒரு தாளமுடியாத பிஸினஸா ஆகிடுச்சு. கற்பனை பண்ணி இப்படியோ அப்படியோனு சிந்திச்சு - அதனால மனச்சுமை கூடி...''

''யெஸ். ஒத்தக்கறேன். சந்திக்கும் எல்லோருக்குள்ளும், ஒரு சாத்தியமான கொலைகாரனைத் தேடுவதென்பது, அத்தனை ஆரோக்கியமான மனோநிலையா இருக்க முடியாது. ஆனா எங்களுக்கு பழகிடுச்சு.''

கணநேரம் தாமதித்து விட்டு அவர் தொடரலானார்:

''மிஸ்டர் பை வேற இருக்கார் ---''

நான் கூர்மையாய் கேட்டேன்: ''ஆக நீங்களும் அவரை பட்டியல்ல சேர்த்திருக்கீங்க?''

நாஷ் சிரித்தார்.

''ஓ யெஸ், நாங்க அவரை உடனடியாவே சேர்த்துட்டோம். விளங்கிக்க முடியாத பாத்திரம் அவர். அப்படியொன்றும் நல்ல கேரக்டரா தெரியல. இந்த ரெண்டு சம்பவங்களின்போதும் வேறெங்கும் அவர் போகலே என்பதற்கு சாட்சி இருக்கு. தனது தோட்டத்திலேயேதான் இருந்திருக்கார் மிஸ்டர் பை.''

''ஆக நீங்க பெண்களை மட்டுமே சந்தேகிக்கல?''

''கடுதாசிகளை எழுதியிருப்பது ஆண் என்று நான் நினைக்கல. சொல்லப்போனால் இதுல நான் நிச்சயமா இருக்கேன். க்ரேவ்ஸுக்கும் இதே எண்ணம்தான். மிஸ்டர் பை மட்டும் ஒரு விதிவிலக்கு. ஏன்? என்னா, அவரண்டை அசாதாரணமான பெண் சாயல் கொட்டிக்கிடக்கு. ஆனா நேற்று மத்தியானத்தைப் பொறுத்தவரைக்கும் ஒருத்தரை விடாமல் நாங்க செக் பண்ணியாச்சு. இது ஒரு கொலை வழக்கு, நினைவிருக்கட்டும். உங்களை பொறுத்தவரைக்கும் பிரச்சினை தெரியல.'' சிரித்தார் அவர். ''இதேபோல உங்க தங்கைக்கும். தனது அலுவலகத்துக்குப் போன பிறகு அங்கிருந்து மிஸ்டர் ஸிம்மிங்டன் வெளியே போகவே இல்ல. டாக்டர் க்ரிஃபித் கிராமத்தின் எதிர்த்திசைல ரவுணட்ஸ்ல இருந்திருக்கார். இவருடைய விஸிட்டுகள் பற்றி நான் முழுமையா தகவல் சேகரிச்சு செக் பண்ணிட்டேன்.''

நிறுத்தினார். மீண்டும் சிரித்தார். சொன்னார்: ''போதுமா? நாங்க அடியாழம் வரை போய் ஆணிவேரின் கீழ்நுனில நிக்கறோம். அதாவது - ஒண்ணையும் விட்டு வைக்கல.''

நான் மெதுவாய் சொன்னேன்: ''ஆக உங்களுடைய இந்த கேஸ் நாலு பேர் மேல குவிஞ்சிருக்கு - மிஸ் கிஞ்ச், மிஸ்டர் பை, மிஸ் க்ரிஃபித் மற்றும் மிஸ் பார்ட்டன்?''

''ஓ நோ எங்க பட்டியல்ல இன்னும் ரெண்டு பேர் இருக்காங்க. கூடுதலா, பாதிரியாரின் மனைவி.''

''அவங்களையுமா நீங்க சிந்திச்சிருக்கீங்க?''

''நாங்க எல்லாரையும் சிந்திச்சிருக்கோம் - குற்றவாளியா! பாதிரியாரின் மனைவி ரொம்பவும் திறந்த மனதுடன் நடந்துக்கலாம் - இருந்தாலும் சொல்றேன், அவங்ககூட இந்த மாபாதகத்தைப் பண்ணியிருக்கலாம். நேற்று மத்தியானம்

அருகிலிருக்கும் காட்டுப் பகுதிக்குப் போயிருந்தேன்னு சொல்றாங்க அவங்க. பறவைகளைப் பார்க்கவாம். நிச்சயமா பறவைகள் வந்து அவங்களுக்காக சாட்சி சொல்லப் போவது கிடையாது, என்ன சொல்றீங்க?''

சட்டென்று அவர் வாசல் பக்கமாய் திரும்பினார் - அங்கு ஓவன் க்ரிஃபித் வருவதைக் கவனித்தபடி.

''ஹல்லோ நாஷ். இன்னிக்குக் காலைல நீங்க என்னை தேடிக்கிட்டு வந்ததா கேள்விப்பட்டேன். ஏதாவது முக்கியமா?''

''மரண விசாரணை வெள்ளிக்கிழமை அன்று வெச்சுக் கலாமா - உங்களுக்கு ஆட்சேபணை இல்லைனா?''

''ரைட். மோர்ஸ்பீயும் நானும் இன்னிக்கு போஸ்ட் மார்ட்டம் முடிச்சுடறோம்.''

நாஷ் பேசினார்:

''ஜஸ்ட், இன்னுமொரு சமாச்சாரம் கேட்கணும், டாக்டர் க்ரிஃபித். மிஸஸ் ஸிம்மிங்டன் அவங்க உடல்நிலைக்காக ஏதோ மருந்துகள் எடுத்திருக்காங்க. பவுடரோ என்னவோ. நீங்க எழுதிக் கொடுத்தது.''

அவர் நிறுத்தினார். அதற்கென்ன என்பதைப் போல கேட்டார் டாக்டர்: ''யெஸ்?''

''அந்த மருந்தை அளவுக்கதிகமா எடுத்துக்கிட்டா, மரணம் நேருமா?''

''நிச்சயமா கிடையாது. அந்த மருந்தை 25 எனும் எண்ணிக்கைக்கு அவங்க சாப்பிட்டிருந்தாலே ஒழிய!''

*''ஆனா நீங்க ஒருமுறை அதிகமா அந்த மருந்தை சாப்பிட்டால் உண்டாகவல்ல கேட்டினைப் பற்றி அவங்க கிட்டே விளக்கியிருப்பதா சொல்றாங்க, மிஸ் ஹாலண்ட்...''*

*''ஓ, அதுவா - யெஸ். மிஸஸ் ஸிம்மிங்டன்னிடம் நீங்க எதை சொன்னாலும் அல்லது தந்தாலும் அதை மிகைப் படுத்தியே செய்யக்கூடிய வகை, அவங்க. ஒரு மாத்திரைக்கு பதிலா ரெண்டா சாப்பிட்டால் அதன் பலனும் ரெட்டிப் பாகும்னு நினைக்ககூடிய வகை. ஆஸ்பிரின் போன்ற மருந்து கள்ல இப்படி விளையாடிடக் கூடாது. அது இருதயத்துக்கே வினையா போய் முடிஞ்சுடும். ஆனா மரணத்துக்கு காரணம் எது என்பது பற்றி உங்களுக்கு சந்தேகமே வேண்டாம். அது - ஸையனைட்தான்.''*

*''ஓ, எனக்கு அது தெரியும் - நான் சொல்வதன் அர்த்தத்தை நீங்க சரியா பிடிக்கல. தற்கொலைனு முடிவு பண்ணிட்ட பிறகு, எரிச்சுடும் அமிலத்துக்கு பதிலா அளவுக்கதிகமா தூக்க மாத்திரைகளை சாப்பிட்டுட்டுப் படுத்து விடுவது நல்லதுன்னு நினைக்கத் தோணுமில்லையா... ஓ கே, தேங்க் யூ மிஸ்டர் க்ரிஃபித்.''*

*க்ரிஃபித் கிளம்பிவிட, நானும் நாஷுக்கு குட் பை வைத்தேன். நான் மெல்லமாய் நடந்து குன்றுகளைக் கடந்து வீடடைந்தேன். ஜோன்னாவின் அறிகுறி தென்படவில்லை. ஆகவே அவள் போயிருக்க வேண்டும். அங்கு டெலி போனுக்கு அருகிலிருந்த ஞாபகக்குறிப்பு அட்டையில், நானோ அல்லது பேட்ரிட்ஜோ பார்ப்பதற்காக, ஒரு சிறு குறிப்பு வைக்கப்பட்டிருந்தது.*

*டாக்டர் க்ரிஃபித் போன் செய்தால்: ''செவ்வாய்க்கிழமை போக, என்னால இனிமே முடியாது... ஆனால் புதன் அல்லது*

வியாழன்ல எப்படியாவது சமாளிச்சுக்கிட்டு போகலாம்.'' இதை சொல்லி விடவும்.

நான் என் புருவங்களை உயர்த்தியபடி வரவேற்பறைக்குப் போனேன். எல்லா நாற்காலிகளும் நெட்டைக்குத்தலான பின்பக்கங்கள் கொண்ட இருக்கைகளாய் இருக்கின்றன... மிஸஸ் பார்ட்டனின் கைங்கர்யம். ஆகவே சாய்வாய் உள்ள ஒரே நாற்காலியில் போய் அமர்ந்தேன். கால்களை நன்கு அகட்டி சாய்ந்தேன். உட்கார்ந்து வேறென்ன நான் செய்ய - இந்த முழு சமாச்சாரத்தையும் மீண்டுமொருமுறை அசை போடலானேன்!

எதிர்பாராமல் உள்ளே வந்த டாக்டர் க்ரிஃபித்தின் வருகையால் எனக்கும் இன்ஸ்பெக்டருக்கும் இடையேயான சம்பாஷணை பாதியில் தடைப்பட்ட சம்பவம், திடீரென்று விளைந்த எரிச்சலுக்கிடையே என் நினைவுக்கு வந்தது. மேலும் இரண்டு பேர் கொலைக்கான சாத்தியப் பட்டியலில் இருப்பதாய் நாஷ் சொல்லியிருந்தார்.

அந்த இரண்டு பேர் யார் யார் என நான் வியந்தேன்.

அவற்றில் ஒன்று, ஒருவேளை பேட்ரிட்ஜாயிருக்கலாமா? பார்க்கப்போனால், நறுக்கப்பட்ட பக்கங்களினாலான அப்புத்தகம் அவரிருக்கும் வீட்டில்தான் கண்டெடுக்கப் பட்டுள்ளது. மேலும், தனக்கு ட்ரெயினிங் தந்து தொழிலில் வளர்த்து விட்டவர் என்ற காரணத்தால் துளிகூட சந்தேகம் எழாத சூழலில் ஏக்னஸ் அடித்துக் கவிழ்க்கப்பட்டிருக்கலாம். நோ, பேட்ரிட்ஜைத் தள்ளி வைக்க முடியாது.

இதில் இரண்டாமவர் யார்?

ஒருவேளை, நான் இதுவரை அறிந்திராத ஒருத்தராய் இருக்கலாமா? மிஸஸ் க்ளீட்? ஒரிஜினல் சந்தேகப்பட்டியலில் முதன்முதலாய் இடம்பெற்றவர்?

நான் கண்களை மூடிக்கொண்டேன். இவராய் இருக்கவே முடியாது என்று நினைக்கத்தோன்றும் நால்வரையும் ஒவ்வொருத்தராய் எடுத்துக் கொண்டேன். ஜென்டிலாயும் ஒடிசலாயும் இருக்கும் எமிலி பார்ட்டனா? இவருக்கு எதிராய் இருக்கும் பாயிண்ட்டுகள்தான் என்னென்ன? தணியாத தாகங்களுடன் சென்ற ஒரு வாழ்வு? சிறுபிராயம் முதலே அடக்கியும் ஒடுக்கியும் வைக்கப்பட்ட துர்லப நிலை? இவரைப் போன்ற ஒரு சராசரி பெண்ணிடமிருந்து பெறப் பட்டிருக்கும் கணக்கிலடங்கா தியாகங்கள்? 'சாதாரணமாய் இன்பகரமாய் அமையாத' எதுவாகினும் அதுபற்றி விவாதிக்க இவருள் மூளும் பயங்கரமானதொரு பரபரப்பு? இது, இன்பமாய் அமையாதவற்றைப் பற்றியே நினைத்துக் கொண் டிருக்கும் இவருடைய உள்ளார்ந்த ஆழ்ந்த யோசனைகளின் அறிகுறியா? ஒருமுறை டாக்டரொருவர் என்னிடம் பேசிக் கொண்டிருந்தபோது சொன்னது எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றது: 'மயக்க நிலைக்குள் போய்க்கொண்டிருக்கும் ஒரு மிருதுவான வேலைக்காரி சொல்லும் எதுவுமே, ரகசிய உண்மைகளாகும்.' மேலும் அவர் சொன்னார்: 'அப்படிப் பட்ட வார்த்தைகளும் சங்கதிகளும் ஒரு வேலைக்காரிக்கா தெரிஞ்சிருக்குனு நீங்க ஆச்சரியப்பட்டுப் போவீங்க.'

ஐமீ க்ரிஃபித்?

நிச்சயமாய் அவரை பற்றி விபரீதமாய் எதுவும் அழுத்த வில்லை. உன்னதமான மனோநிலை, ஆண்போன்ற உரம், எதிலும் வெற்றி. வேறெதற்கும் சிந்தனை தராத ஒரு

முழுமையான, பிஸி வாழ்க்கை. இத்தனையிருந்தும் மிஸஸ் டேனே கேத்ராப் சொல்லியிருக்கிறார்: 'பரிதாபமான பிறவி.'

இதிலும் ஏதோ, ஏதோவொரு ஞாபகம் - விடுபடுகின்றது ஒரு நினைவு என்னவோவொரு நினைவு - அது, அது... ஆங், வந்து விட்டது! 'நாங்க வடக்குப் பிரதேசங்கள்ல ப்ராக்டீஸ்ல இருந்தபோது அங்கேயும் மொட்டைக் கடுதாசி கள்னு ஒரு பிரளயம் நிகழ்ந்தது' என்று ஓவன் க்ரிஃபித் சொன்னது...

எனில், அதுவும்கூட ஐமீ க்ரிஃபித்தின் வேலையாய் இருக்குமோ? இது வெறும் எதிர்பாரா Co-incidenceஆக இருக்கலாம்... ஒரே மாதிரியான இரண்டு சம்பவங்கள். ஆனாலும்கூட....

ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம். ஆங், அந்தக் கடுதாசிகளை எழுதியது யார் என்றுதான் கண்டுபிடித்து விட்டார்களே... க்ரிஃபித்தான் ஒரு முறை சொல்லியிருக்கிறார்... ஒரு பள்ளிக்கூட மாணவி அது.

திடீரென்று குளிரெடுத்தது. ஜன்னல் வழியாய் வந்து விழுந்த கொத்துக் காற்றாய் இருக்க வேண்டும். அசௌகரிய மாய் என் இருக்கையில் நான் நெளிந்தேன். ஏன் நான் திடீரென்று குழப்பமாகவும் மனமொடிந்தும் உணர வேண்டும்?

ம், விடாமல் சிந்தி.

ஒருவேளை அது அந்தப் பள்ளிக்கூடத்து மாணவியாய் இல்லாமல், ஐமீ க்ரிஃபித்தாய் இருந்தால்? இப்போது இங்கு வந்து தனது தந்திரங்களை ஐமீ தொடங்கியுள்ளாள். இதனால்தான் ஓவன் க்ரிஃபித் அத்தனை கவலையுடனும்

துருப்பிடித்தவராகவும் தோன்றுகின்றார். அவருக்கு சந்தேகம் இருந்துள்ளது. யெஸ்... அவர் சந்தேகப்பட்டிருக்கிறார்.

மிஸ்டர் பை? அப்படியொன்றும் ஒரு நல்ல மனுஷர் கிடையாது. இந்த முழு பிஸினஸையும் மேடையிட்டு வெற்றிகரமாய் நடத்துபவராய் அவரை என்னால் பார்க்க முடிகின்றது... வெற்றிகரமாய் முடித்து விட்டு, விழுந்து விழுந்து சிரித்தபடி... விடாது மேலும் மேலும் சிரித்தபடி...

தொலைபேசி அருகே விடப்பட்டிருந்த அந்த துண்டு நினைவுக்குறிப்பு... அதையே நான் ஏன் விடாமல் நினைக்க வேண்டும்? க்ரிஃபித்தும் ஜோன்னாவும்... இவளுக்காக அவர் வீழுகின்றார்... நோ, இக்காரணத்துக்காக அல்ல அந்த குறிப்பு என்னை வதைப்பது. காரணம் வேறு ஏதோ...

என் உணர்வுகள் அலைபாய்ந்தன. தூக்கம் வெகு அருகாமையில். முட்டாள்தனமாய் எனக்கு நானே, “நெருப் பில்லாமல் புகையாது, நெருப்பில்லாமல் புகையாது... ஆமாம், அதேதான்... இப்போது எல்லாம் அழகாய் பொருந்தி நிற்கின்றன...” என்று திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

பிறகு நான் மேகனுடன் தெருவில் நடந்து கொண்டிருந்தேன்...

அப்போது எல்ஸீ ஹாலண்ட் எங்களைக் கடந்து போனார்...

மணப்பெண் போல அலங்கரிக்கப்பட்டிருந்தார் அவர். மக்கள் கூட்டம் முணுமுணுத்தது:

‘கடைசியாய் இவர் டாக்டர் க்ரிஃபித்தை மணமுடிக்கப் போகின்றாள். அஃப்கொர்ஸ் இவர்கள் இருவருக்கும் பல

வருடங்களுக்கு முன்னாலேயே நிச்சயம் செய்யப் பட்டுள்ளது...'

நாங்கள் இருந்தோம், சர்ச்சில்...

திருமண வரிகளை லத்தீன் மொழியில் படிக்கிறார் டேனே கேத்ராப்...

இதற்கு நடுவில் வந்து குதித்து வலிமையாய் கத்துகிறார் மிஸஸ் டேனே கேத்ராப்: 'இதை நிறுத்தணும். கேட்கலே... இதை நிறுத்தணும், நிறுத்தணும், நிறுத்தணும்!''

நான் முழித்துக் கொண்டிருக்கிறேனா அல்லது தூங்கிக் கொண்டிருக்கிறேனா என்று எனக்கு ஒருசில கணங்கள் விளங்கவில்லை. பிறகு என் மூளை தெளிந்தது. நான் லிட்டில் ஃபர்ஸ் வீட்டின் வரவேற்பறையில் இருப்பதையும், எனக்கு முன்னால் ஜஸ்ட் இப்போது வந்து நின்றுகொண்டு "இதை நிறுத்தணும். இதை நிறுத்தணும்'' என்று நரம்பதிரக் கத்திக் கொண்டிருப்பதையும் உணர்ந்தேன்.

குதித்தெழுந்தேன் நான். "மன்னிக்கணும் மேடம்'' என்றேன். "நான் தூங்கிக்கிட்டிருந்தேன். என்ன சொல்றீங்க நீங்க?''

தனது வலக்கை முஷ்டியை இடது உள்ளங்கையில் கடுமையாய் குத்திக்கொண்டார் அவர்.

"இதை நிறுத்தணும். கடுதாசிகள்! கொலை! ஏக்னஸ் போன்ற பரிதாபமான ஏழைப் பெண்களை இனியும் நாம பலி கொடுத்துக்கிட்டிருக்க முடியாது.''

"ரொம்ப சரியா சொன்னீங்க'' என்றேன் நான். "ஆனா இதைத் தீர்க்க நாம என்ன முறையைப் பின்பற்றுவது?''

மிஸஸ் கேத்ராப் ஸ்திரமாய் சொன்னார்:

“நாம ஏதாவது செஞ்சாகணும்!”

நான் சிரித்தபடி கேட்டேன்: “நாம என்ன பண்ணணும்னு சொல்ல வரீங்க?”

“எல்லாத்துக்கும் சேர்த்து ஒரு பெரிய முற்றுப்புள்ளி வைங்க. முதல்ல இதை செய்ங்க.”

“வெச்சுட்டு? கவனிங்க மேடம்... போலீஸ் அவங்களால முடிஞ்ச அதிகபட்ச நடவடிக்கைகளை செஞ்சுக் கிட்டிருக்கு.”

“நேற்று ஏக்னஸ் கொல்லப்பட்டிருக்கா. இது எதைக் காட்டுது? அவங்க - போலீஸை சோல்றேன் - அதிகபட்சமா இல்ல, குறைந்தபட்சமாகூட எதையும் பண்ணலே என்பதைத் தான் காட்டுது.”

“அப்ப, அவங்களைவிட சிறப்பா செய்ய உங்களுக்கு தெரியுமா?”

“கிடையாது. எனக்கு போலீஸ் வேலை பண்ண எதுவும் தெரியாது. இதனாலத்தான் நான் ஒரு நிபுணரைக் கூட்டிட்டு வரப்போறேன்.”

நான் மறுப்பாய் தலையசைத்தேன்.

“அதை நீங்க செய்ய முடியாது செய்யக் கூடாது. கிராமத்தின் முதன்மை கான்ஸ்டபிள் கேட்டுக் கொண்டால் தான் ஸ்காட்லாண்ட் யார்டு கிராமவழக்குகளை அதன் கட்டுக்குள் எடுத்துக்க முடியும். சொல்லப்போனால் அவங்க க்ரேவ்ஸை உதவ அனுப்பியிருக்காங்க.”

“ப்ச்... அப்படிப்பட்ட நிபுணரை நான் மனசுல வெச்சுக் கிட்டு சொல்லல. மொட்டைக் கடுதாசிகள் பற்றியோ

அல்லது கொலைகள் பற்றியோ நிபுணத்துவம் பெற்றவர் களை நான் இங்கே குறிப்பிடல. மக்களைப் பற்றி அறிந்த ஒருத்தரைக் குறிப்பிடறேன் நான். என்ன முழிக்கிறீங்க விளங்கல? நரித்தனம் பற்றி நயவஞ்சகம் பற்றி நல்லா விலாவாரியாத் தெரிஞ்ச ஒருத்தர் நமக்கு இப்ப வேணும், ஆங்!''

இது ஒரு விளங்கிக்கொள்ள முடியாத கோணம். விவர மாய் புரியாத நிலைப்பாடு. ஆனாலும், இது, ஏனோ, போதை யூட்டியது. ஈர்த்தது.

நான் மேற்கொண்டு எதுவும் சொல்வதற்கு முன்னால், என்னை நோக்கி ஆமோதிப்பாய் தலையசைத்துக் கொண்ட மிஸஸ் டேனே கேத்ராப், விரைவாகவும் நம்பிக்கை நிறைந்தும் சொன்னார்:

''இப்பவே இதை நான் நிறைவேற்றப் போறேன்.''

அவர் வந்தவழியே மீண்டும் கிளம்பிப் போனார்.

# அத்தியாயம் - 10

## I

அடுத்து வந்த வாரம்தான் என் வாழ்க்கையிலேயே நான் கடந்துவந்த மிகக் குழப்பமான மற்றும் விளக்க முடியாத வொரு வாரம் என்று சொல்ல வேண்டும். ஒரு தீக்கனாவின் தரம் இருந்த வாரமது. எதுவுமே உண்மையாய் தோன்ற வில்லை.

ஏக்னஸ் மீதான மரண விசாரணை லிம்ஸ்டாக் கிராமத்தில் நடந்தது. விளங்கிக்கொள்ள முடியாத மக்களால் நிரம்பித் ததும்பும் இக்கிராமத்தின் அத்தகைய அனைவரும் வந்திருந்தார்கள். எந்தவிதமான புது சாட்சியும் வெளிச் சத்துக்கு வரவில்லை எனவே சாத்தியப்பட்ட ஒரே தீர்ப் பினையே எழுதினார்கள்: 'அடையாளம் தெரியாத நபர் அல்லது நபர்களால் நடந்துள்ள கொலை.'

அழகாய் பூத்துக் குலுங்கியிருக்க வேண்டிய ஏக்னஸ் எனும் வாலிப மலர், சர்ச்சின் பின்னால் அமைந்துள்ள அமைதியான கல்லறையில், அந்த மாலைப்பொழுதில் நல்லடக்கம்

செய்யப்பட்டாள். லிம்ஸ்டாக்கின் வாழ்க்கை முன்பைப் போலவே தொடர ஆரம்பித்தது.

ம்ம், அந்தக் கடைசி வாக்கியம் தவறு. முன்பைப் போல அல்ல...

பாதி கிலியும், பாதி நிச்சயமற்ற தன்மையும் அங்கிருந்த ஒவ்வொருவரின் கண்களிலும் மின்னின. பக்கத்திலிருப் பவர், பக்கத்திலிருப்பவரை கீழ்க்கண்ணால் கவனித்துக் கொண்டார். மரணவிசாரணையில் ஒரேயொரு விஷயம் மட்டும் சர்வநிச்சயமாய் பிரகடனப்படுத்தப்பட்டது. 'ஏக்னஸைப் புதிதாக வந்த ஓர் அந்நிய நபர் கொன்றிருக்கும் வாய்ப்பு மிகவும் குறைவு.' யாராவது புது நபர்கள் கிராமத் துக்குள் உலவியதாய் யாரிமிருந்தும் அறிக்கை இல்லை. எனில், லிம்ஸ்டாக்கிலேயே உள்ள எவரோ, ஹை ஸ்ட்ரீட் சென்று, ஷாப்பிங் பண்ணி, அப்படியே கொஞ்சம் நேரத்தைக் கழித்துவிட்டு, பிறகு பாதுகாப்பற்ற பெண்ணின் கபாலத்தை ஓங்கியடித்து உடைத்து, இறுதியாய் கூர்மையான பொருளால் மூளையைக் கிழித்தும் எடுத்து...

யாரந்த நபர் என்பதுதான் ஒருவருக்கும் தெரியவில்லை.

நான் சொன்னதைப்போல நாட்கள் கொடுமையான ஒரு கனவினைப் போலவே சென்றன. நான் ஏற்கெனவே சந்தித்துள்ள ஒவ்வொருவரையும் ஒரு புது பிரகாசத்தில் நான் பார்க்கலானேன்: 'இவர்தான் அந்தக் கொலைகாரனோ?' ஓஹ், இப்படி வாழ்வது ஒரு கொடிய அனுபவம்!

மாலை வேளைகளில் நானும் ஜோன்னாவும் திரைச் சீலைகளை இழுத்து மூடிக்கொண்டு விடுவோம். உட்கார்ந்து கொள்வோம். பிரமிப்பாகவும், தீர்க்கவே முடியாதவை களாகவும் தோன்றும் அனைத்து சாத்தியக் கூறுகளையும்

ஒன்றன் பின் ஒன்றாக இழுத்துப் போட்டு பேசுவோம், பேசுவோம், பேசுவோம்...

மிஸ்டர் பை, தான் என்ற தனது தியரியை ஓங்கிப் பிடித்தபடியிருந்தாள் ஜோன்னா. நான் எனக்குள்ளேயே இப்படியும் அப்படியுமாக சற்று அல்லாடிவிட்டு கடைசியாய் எனது முதல் சந்தேகத்துக்குரியவரான மிஸ் கிஞ்ச்சிடமே போய் நின்றேன். ஆனாலும், சாத்தியமாய்படும் அத்தனை பெயர்களையும் நாங்கள் விவாதித்தோம், தர்க்கித்தோம்...

மிஸ்டர் பை?

மிஸ் கிஞ்ச்?

மிஸஸ் டேனே கேல்த்ராப்?

ஐமீ க்ரிஃபித்?

எமிலி பார்ட்டன்?

பேட்ரிட்ஜ்?

இந்த அழகில், காலையும் மாலையும், படபடப்புடன் நரம்பதிர, ஏதாவது நடக்கும் என்று நாங்கள் காத்திருந்தோம்.

ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. எங்களுக்குத் தெரிந்து, ஒருவருக்கும் எவ்விதமான அசிங்கக் கடிதங்களும் வரவில்லை. அவ்வப்போது கரெக்டாய் டவுனில் வந்து காட்சியளித்தார் நாஷ். ஆனால் அவர் என்ன செய்கிறார் என்பதோ என்ன பொறியை அமைத்துக் கொண்டிருக்கிறார் என்பதோ, நானறியாதவை. க்ரேவ்ஸ் திரும்பிப் போய் விட்டார்.

எமிலி பார்ட்டன் தேநீர் நேரத்தில் ஒருமுறை வந்தார். ஒருமுறை லஞ்ச் சாப்பிட மேகன் வந்திருந்தாள். ஓவன்

க்ரிஃபித் அவருடைய ப்ராக்டீஸில் மூழ்கிப் போனார். நாங்கள் மிஸ்டர் பை இருப்பிடம் போய் மதுபானம் அருந்தினோம். பாதிரியார் ஜாகைக்கு தேநீர் அருந்தப் போயிருந்தோம்.

எங்களது கடைசி சந்திப்பின்போது மிஸஸ் டேனே கேத்ராப் என்னிடம் காட்டிய மிலிட்டரி கடுமையை இம்முறை காட்டாமல் இருந்ததைக் கண்டு நான் மகிழ்ந்தேன். அதுபற்றி அவர் முழுக்கவும் மறந்து விட்டார் என் நான் கருதினேன். இப்போதைக்கு அவரது தோட்டத்து காலிஃப்ளவர்களை பூச்சி தாக்காமலிருக்க அடிக்க வேண்டிய மருந்தில்தான் அவரது முழு கவனமும்.

நாங்கள் கழித்த மிகவும் சாந்தமான பொழுதுகளில் முக்கியமான ஒன்றாக அமைந்தது, பாதிரியார் இல்லத்தில் நாங்கள் கழித்த அந்த மதியப்பொழுது. அது, ஈர்த்திழுக்கும் ஒரு பழைய இல்லம். பெரிய, வசதியான வரவேற்பறை இருந்தது. அதில் மங்கிய ரோஸ்நிற சுண்ணாம்பு அடிக்கப் பட்டிருந்தது. டேனெ கேத்ராப் இல்லத்தில் ஒரு கெஸ்ட் வந்து தங்கியிருந்தார். அமரிக்கையான ஒரு ஓல்ட் லேடி. வெள்ளைக் கம்பளி நூலினால் அவர் நெய்து கொண்டிருந் தார். அருமையான தேநீர் பரிமாறப்பட்டது. அப்போது பாதிரியார் வந்தார். அவரது செழுமையான பிரசங்கப் பேச்சினை நிகழ்த்தியபடியே சாந்தமும் தெளிவும் தவழுமாறு எங்களை அவர் பார்த்தார்... யெஸ், அது ஒரு மனோஹர மான பொழுது.

கொலை பற்றிய பேச்சையே நாங்கள் அந்த இனிமையான சூழலில் எடுக்கவில்லை என்று சொல்ல மாட்டேன்... ஏனென்றால் அதுவே முக்கிய அம்சமாக ஒருகட்டத்தில் ஆகிப்போனது.

மிஸ் மார்ப்பிள், அந்த கெஸ்ட், இவ்விஷயத்தால் சுலபமாக த்ரில் ஆகிப்போனார். மரணமடைந்த இளைய யுவதி அவரது எடித்தைப் போல இருந்திருக்க வேண்டும் என்று ஓர் எண்ணத்தை உருவாக்கிக் கொண்டார் அவர்.

“அருமையான இளையவ அவ, எதைச் சொன்னாலும் செஞ்சுத்தருவா, ஆனா சில சமயங்கள்ல சொல்வதை உடனடியா மண்டைல வாங்கிக்க வராது அவளுக்கு.”

மிஸ் மார்ப்பிளுக்கு ஒரு உறவுக்காரப் பெண் இருக்கிறாள்... அவளுடைய நாத்தனாருக்கும் இங்கு நடந்துள்ளதைப் போல மொட்டைக் கடுதாசிகள் வந்து திணறடித்த அனுபவம் உள்ளன. ஆகவே கடுதாசிகள் பற்றிய சேதிகளும் அந்த வசீகர ஓல்ட் லேடியை ஈர்த்தன.

மிஸஸ் டேனே கேத்ராப்பைப் பார்த்து “ப்ளீஸ், டெல் மீ டியர்” என்றார். “கிராமத்து மக்கள் - அதாவது இங்கு வாழும் மக்கள் அவங்க என்ன சொல்றாங்க? அவங்க என்ன நினைக்கிறாங்க?”

“இன்னமும், மிஸஸ் க்ளீட்தான்னு நினைக்கிறாங்க...” என்றாள் ஜோன்னா.

“ஓ, நோ” என்றார் மிஸஸ் டேனே. “இப்ப - நினைக்கல.

மிஸஸ் க்ளீட் என்பவர் யார் என்று கேட்டார் மிஸ் மார்ப்பிள்.

கிராமத்தில் வாழும் சூனியக்காரி என்று பதில் தந்தாள் ஜோன்னா. “அப்படித்தானே, மிஸஸ் டேனே?”

பாதிரியார் உடனடியாய் நிறைய லத்தீன் ஸ்லோகத்தை சொல்ல ஆரம்பித்து விட்டார். சூனியக்காரர்களுக்கு உள்ள

துர்சக்திகள் பற்றிய ஏதோ ஓதுதல்கள் என்று விளங்கிக் கொண்டேன் நான். வாயைத் திறக்காமல் அவற்றை நாங்கள் மரியாதையாய் கேட்டுக் கொண்டோம்.

“அவ ஒரு அலட்டல் பேர்வழி” என்றார் அவரது மனைவி. “எப்பவும் தன்னை விளம்பரப்படுத்திக்கணும் அவளுக்கு. பௌர்ணமி அன்று மூலிகை அதுஇது எடுக்கப் போறேன்னு கிளம்பிடுவா. தவறாம. அதை இங்கிருக்கும் அனைவரும் கவனிப்பதை மட்டும் தவறாம ஊர்ஜிதப்படுத் திப்பா.”

“அவதிப்படும் பொண்ணுங்க அவகிட்டே போய் ஆலோசனைகள் கேட்கும்?” - சொன்னார் மிஸ் மார்ப்பிள்.

இன்னும் அதிகமாய் லத்தீனை எங்கள் மீது அவிழ்த்துவிட பாதிரியார் தயாராகிக் கொண்டிருப்பதைப் பார்த்த நான், அவசர அவசரமாய் “அப்படினா எதுக்காக கொலையை செஞ்சது இவங்கதான்னு மக்கள் இப்ப சந்தேகப்படல? கடிதங்கள் எழுதியது மிஸஸ் க்ளீட்னுதானே சந்தேகப் பட்டாங்க?” என்று பாதை மாற்றி விட்டேன் நான்.

“ஓ... அந்தப் பொண்ணு கூர்மையான ஒரு பொருளால குத்தப்பட்டுக் கொல்லப்பட்டானுல்ல நான் கேள்விப் பட்டேன்” என்றார் மிஸ் மார்ப்பிள். “இது, ஒரு சூனியக்காரி செய்யவல்லது கிடையாதே! அதனால அவர்மீது சந்தேகங் களே வராம ஆகிடுதே! சூனியக்காரின்னா மந்திரங்கள் ஓதி, உட்கார்ந்த இடத்திலிருந்தே சிதைச்சுடுவா, ஆங்!”

“இன்னும் இந்த நம்பிக்கைகள் நம்மை விடாமல் சுத்திக்கிட்டிருக்கு பாருங்க” என்றார் பாதிரியார்.

இதற்கு, ''இப்ப நாம சமாளிக்க வேண்டியது மூடநம்பிக்கைகளை இல்லற என்றார் அவரது மனைவி. ''சமாளிக்க வேண்டியது நிதர்சனங்களை.''

''அவை மிகவும் மோசமான நிதர்சனங்கள்'' என்றேன் நான்.

''சரியா சொன்னீங்க, மிஸ்டர் பர்ட்டன்'' என்றார் மிஸ் மார்ப்பிள். ''ஆங், நான் கொஞ்சம் உரிமை எடுத்துக்கிட்டு இப்ப சொல்லப்போறேன், அதுக்கு மன்னிக்கணும். நீங்க இப்பகுதிக்கு புதியவர். ஓர் அந்நியர். உலகம் பற்றியும் வாழ்க்கையின் வெவ்வேறு அங்கங்கள் பற்றியும் நல்ல அனுபவ ஞானம் இருக்கணும் உங்களுக்கு. இந்த ருசியற்ற கொடூர சம்பவத்துக்கு உங்களால ஒரு தீர்வு தரமுடியணும்னு எனக்குப் படுது.''

நான் சிரித்தேன். ''எனக்குக் கிடைத்த ஒரு சிறந்த தீர்வு, கனவுதான். கனவில் எல்லாமும் அழகாய் பொருந்தி நின்றன... அழகான படமாய் பிசகில்லாமல் அமைந்தன. துரதிர்ஷ்டவசமா, நான் கண்முழிச்சதும் அத்தனையும் முட்டாள்தனமா ஆகிடுச்சு!''

''இருந்தாலும், இண்ட்ரஸ்டிங்கா இருக்கு இது. அந்த முட்டாள்தனம் எப்படிப் போச்சுனு சொல்லுங்களேன்!''

''ஓ, அக்கனவு முழுக்க ஒப்பேறாத ஒரு வாக்கியத்தால ஆரம்பிச்சது: நெருப்பில்லாம புகையாது. இங்கிருக்கும் மக்கள் திரும்பத்திரும்ப சொன்னது இது. பிறகு இதை நான் போர் சம்பந்தப்பட்ட வார்த்தைகளோட போட்டுக் கலந்துக்கிட்டேன். புகைப்படலம், துண்டுக்காகிதம். ஆங், அப்புறம் டெலிபோன் சேதிகள் - நோ, நோ. இது வேற கனவு.''

''அந்தக் கனவு என்ன?''

ஓல்ட் பாட்டிக்கு இருந்த ஆர்வ ஈர்ப்பினைப் பார்த்தபோது 'கனவுகளின் பலன்கள்' என்பதை போன்ற ஏதோ ஒரு சிறந்த புத்தகத்தினை ஆழ்ந்து படித்திருப்பார் என்று தோன்றியது எனக்கு.

''ஓ! அதுல, எல்ஸீ ஹாலண்ட் - இவ மிஸ்டர் ஸிம்மிங்டன் குழந்தைகளை கவனித்துக் கொள்பவள் டாக்டர் க்ரிஃபித்தைக் கலியாணம் கட்டிக்கிட்டா. அதுக்கான மந்திரத்தை பாதிரியார் லத்தீன் மொழியில படிச்சார். (இங்கு அவர் 'எவ்ளோ பொருத்தமா கனவு கண்டிருக்கான்' என்று சொல்லிக் கொண்டார்!) அப்பத்தான் மிஸஸ் டேனே களே பரமாய் உள்ளே நுழைந்து அத்தனையையும் நிறுத்தியாக வேண்டும்னு குதிச்சாங்க!

''ஆனா இந்தப்பகுதி மட்டும்'' என்று சிரிப்பினூடே நான் சொன்னேன்: ''நிஜம்! நான் கண்விழித்திருந்தேன். என் மேலேயே விழுந்துவிடும்படி நின்னுக்கிட்டு இதை நிறுத்தணும்னு கதறிக்கிட்டிருந்தாங்க மிஸஸ் டேனே.''

''அப்படி நான் சொன்னதுதான் சரி'' என்று இப்போதும் குறிப்பிட்டார் மிஸஸ் டேனே, ஆனால் மிருதுவாய்.

''இதுல டெலிபோன் மெஸேஜ் எங்கிருந்து வருது?'' என்றார் மிஸஸ் மார்ப்பிள் புருவங்களைக் கேள்விக் குறியாக்கி.

''குழப்பிட்டேன். அது கனவு கிடையாது. கனவுக்கு ஜஸ்ட் முன்னால நடந்த ஒரு நிஜம். ஹாலுக்கு நான் வந்தேன். அங்கே டெலிபோன் பக்கத்துல, ஒருத்தர் போன் பண்ணினால் அவரிடம் சொல்லணும்னு ஒரு குறிப்பு எழுதி வெச்சிருந்தாள்...''

மிஸ் மார்ப்பிள் வளைந்து முன்னுக்கு வந்தார். அவரது கன்னங்களில் பிங்க் நிற முத்துக்கள் தெரிந்தன. ''அது என்ன குறிப்புனு நான் கேட்டால், என்னடா இவ இத்தனை தூரத்துக்கு மூக்கை நுழைச்சு பிராணனை வாங்கறானு நீங்க நினைச்சுடக் கூடாது!'' என்றார். உடனே ஜோன்னா பக்கமாய் நோட்டமிட்டார். ''மன்னிக்கணும், மை டியர்.''

ஜோன்னாவோ நடப்பவற்றை ஒரு சிறந்த பொழுது போக்காய் கருதிக் கொண்டிருந்தாள். எனவே ''அய்யய்ய... எனக்கு ஆட்சேபணையே இல்ல'' என்றாள் அவரிடம். ''அதுல என்ன எழுதியிருந்தேன்னு என்னால துளியும் நினைவு படுத்திக்க முடியல. ஒருவேளை ஜெர்ரியால முடியலாம். ஏதாவது அற்பமானதாத்தான் அது இருக்கணும்.''

என்னால் என்ன அளவுக்கு நினைவுபடுத்த முடியுமோ அப்படி செய்து நான் அவரிடம் சொன்னேன். இதற்கு அந்த ஓல்ட் லேடி காட்டிய சிதறாத கவனிப்பை நான் பிரமித்தேன்.

இவ்வார்த்தைகள் அவருக்கு ஏமாற்றத்தைத்தான் தரும் என்றே நான் நினைத்தேன்... ஆனால் அவர் ஆமோதிப்பாய் தலையசைத்தார். சிரித்தார். திருப்தியாய் தோன்றினார்.

''விளங்குது'' என்றார். ''இப்படித்தான் ஏதாவது இருக்கும்னு நான் நினைச்சேன்.''

மிஸஸ் டேன கேத்ராப் கூர்மையாய் கேட்டார்: ''எதுமாதிரி, ஜேன்?''

''ரொம்ப ரொம்ப சாதாரணமானதா.''

என்னை சில கணங்கள் சிந்தனையாய் பார்த்த அவர், நான் எதிர்பாராதவிதமாய் சொன்னார்: ''நீங்க மகா புத்திசாலி

யானவர்னு எனக்கு தெரியுது ஆனா உங்களுக்கு உங்க மேலேயே நம்பிக்கை இல்ல. அது இருக்கணும் உங்களுக்கு!''

ஜோன்னா கத்திவிட்டாள்.

''ப்ளீஸ்மா, இப்படி அவன்கிட்டே சொல்லி சூடு ஏத்திடாதீங்க. தன்னை அப்படித்தான் அவன் நினைச்சுக்கிட்டு அலையறான்!''

''மூடு ஜோன்னா'' என்றேன் நான். ''மிஸ் மார்ப்பிளுக்குத் தான் என்னை விளங்குது.''

மிஸ் மார்ப்பிள் தனது கம்பளி நூலுக்குத் திரும்பியிருந்தார். ''உங்களுக்கு ஒண்ணு தெரியுமா'' என்று நெய்தபடியே பேசினார்: ''ஒரு கொலையை வெற்றிகரமா செய்து முடிப்பதென்பது, நரித்தனம் மிக்க ஒரு வஞ்சகச் செயலை நடைமுறைப்படுத்துவதற்கு சமம்.''

''பரபரவெனும் கைகளின் வேகம், கண்காணிப்பாய் இருக்க வேண்டிய கண்களை ஏமாற்றி விடுமா?''

''அது மட்டுமில்ல. நீங்க மக்களை தப்புத்தப்பான துப்புக்களை தப்புத்தப்பான இடங்களில் பார்க்கும்படி செய்யணும். திசையை திருப்பி விடுதல்னு சொல்லுவாங்க இதை.''

''வெல்'' என்ற நான், ''இந்த கேஸின் முகமூடி ஆளைப் பொறுத்தவரைக்கும், இங்கிருக்கும் ஒவ்வொருவரும் அப்படி தப்புத்தப்பான இடங்களில்தான் தேடிக்கிட்டிருக்காங்க'' என்றேன்.

''என்னைக் கேட்டீங்கன்னா, நல்ல சொந்த புத்தியுள்ள, சுவாதீனமும் ஆரோக்கியமும் பெற்ற ஒருத்தரைத்தான் தேடுவேன்.''

“யெஸ்” என்றேன் நான். “இப்படித்தான் நாஷும் சொன்னார். கூடவே ‘பொறுப்புள்ள’ என்பதையும் அவர் அழுத்தினார்னு நினைக்கிறேன்.”

“யெஸ்” என முழுதுமாய் ஒப்புக்கொண்டார் மிஸ் மார்ப்பிள். “அது ரொம்ப அவசியம். முக்கியம். ‘பொறுப் புள்ள நபர்.’ யெஸ்.”

வெல், இதனை நாங்கள் அனைவருமே ஒப்புக் கொண்டதைப் போல ஆனது.

நான் மிஸஸ் கேல்த்ராப்பிடம் பேசினேன்: “மேலும் மொட்டைக் கடுதாசிகள் வரும்னு நாஷ் நினைக்கிறார். நீங்க என்ன நினைக்கிறீங்க?”

அவர் மெதுவாய் சொன்னார்: “இருக்கலாம்னுதான் நினைக்கிறேன்.”

“போலீஸ் அப்படி நினைத்தால், மேற்கொண்டு கடுதாசிகள் பரவும்னு நினைத்தால், அதில் சந்தேகம் கொள்ள வேண்டாம்” என்றார் மிஸ் மார்ப்பிள்.

நான் மிஸஸ் டேனே கேத்ராப்பின் கால்களை வார எத்தனித்தேன். “அந்தக் கடுதாசிகளை எழுதுபவனுக்காக நீங்க இன்னமும் இரக்கப்படறீங்களா?”

அவர் முகஞ்சிவந்தார். “ஏன் கூடாதா?”

“உன் கருத்தை என்னால ஏத்துக்க முடியாது, டியர்” என்றார் மிஸ் மார்ப்பிள். “இந்த வழக்கைப் பொறுத்த மட்டும்.”

நான் வெப்பமாய் சொன்னேன்: “எழுதினவங்க, ஒரு பெண்ணைத் தற்கொலை பண்ணிக்குமளவுக்கு செஞ்சிருக்

காங்க... வெளியே தெரியாத மனக்காயங்களையும் கவலைகளையும் பலருக்கு ஏற்படுத்தியிருக்காங்க.''

''உங்களுக்கு ஒரு கடுதாசி வந்திருக்கா, மிஸ் பர்ட்டன்?'' ஜோன்னாவிடம் கேட்டார் மிஸ் மார்ப்பிள்.

''ஓ, யெஸ்! அலற வைக்கும்படி சமாச்சாரங்களை சொல்லிச்சு அது.''

''எனக்கென்னவோ, இளமையும் வசீகரமும் கொண்ட இளையவர்களாப் பார்த்து அக்கடுதாசிகளை எழுதுபவன் குறி வைக்கிறானோனு எனக்கு பயமாயிருக்கு.''

''இதனாலத்தான் எல்ஸீ ஹாலண்டுக்கு இன்னும் ஒரு மொட்டைக் கடுதாசிகூட ஏன் வரலேன்னு எனக்கு விந்தையா இருக்கு'' என்றேன் நான்.

''அது ஸிம்மிங்டன்னுடைய பணிப்பெண், சரியா?'' என்று சரிபார்த்துக்கொண்டார் மிஸ் மார்ப்பிள். ''நீங்க கனவுல பார்த்த பெண், இல்லையா மிஸ்டர் பர்ட்டன்?''

''ஆமாம்.''

''அவளுக்கும் ஒண்ணு வந்திருக்கணும். ஆனா வெளியே சொல்லல'' என்றாள் ஜோன்னா.

''நோ'' என மறுத்தேன் நான். ''நான் அவங்களை நம்பறேன். அப்படியேதான் நாஷும் நம்பறார்.''

''என் டியர்'' என்றார் மிஸ் மார்ப்பிள். ''இது ரொம்ப இண்ட்ரஸ்டிங். ஆமாம். நான் இதுவரை கேட்டதுல, இதுதான் ரொம்ப இண்ட்ரஸ்டிங். இழுக்குதுங்கறேன்.''

## II

நானும் ஜோன்னாவும் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும்போது, மேலும் மொட்டைக் கடுதாசிகள் வர வாய்ப்பிருப்பதாய் நாஷ் சொன்ன சமாச்சாரத்தை நான் அங்கு எல்லோர் முன்னிலையிலும் விளம்பரப்படுத்தி யிருக்கக் கூடாது என்று சொன்னாள் ஜோன்னா.

"ஏன் அப்படி?"

"ஏன்னா, 'அது', மிஸஸ் டேனே கேத்ராப்பாய் இருக்கலாம்."

"ஏய், ஆனா அப்படி இருக்கும்னு நம்பவே இல்ல!"

"என்னால நிச்சயமா இருக்க முடியல ஜெர்ரி. அவங்க ஒரு புரிஞ்சுக்க முடியாத பொம்பிளை."

யார் யார் கொலைகாரர்கள் என்கிற எங்களுடைய விவாதத்தை நாங்கள் மீண்டுமொரு முறை ஆரம்பித்தோம்.

எக்ஸாம்ப்ஷன் என்றொரு இடம் உள்ளது. இரண்டு நாட்கள் கழித்து நான் அங்கு சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தேன். அங்கு ஒரு டின்னர் பார்ட்டி இருந்தது. கிளம்பி லிம்ஸ்டாக் வந்தபோது நன்கு இருட்டிவிட்டிருந்தது.

எனது கார் லைட்டுகளில் ஏதோ பிரச்சினை. வேகத்தைக் குறைத்து, அவற்றை அணைத்தும் போட்டும் முயற்சி செய்தேன். பலனில்லாததால் என்ன பிரச்சினை என்று பார்க்க பிறகு வண்டியை நிறுத்திவிட்டு இறங்கினேன். கொஞ்ச நேரம் அல்லாட வேண்டியிருந்தது, ஆனால் கடைசியில் சரிசெய்து விட்டேன்.

அந்த சாலை பாலைவனமாய் வெறிச்சோடிக் கிடந்தது. இருட்டியபிறகு லிம்ஸ்டாக்கில் ஒருத்தரும் வெளியில் நடமாடுவது கிடையாது. எனக்கு முன்னால் ஓரிரு வீடுகள் அமைந்திருந்தன. அவற்றில் ஒன்று, அவலட்சணமாய் இருந்த பெண்கள் இன்ஸ்டிட்யூட். நட்சத்திரங்களின் மங்கிய இருட்டில் பயமுறுத்துவதாய் இருந்தது அதன் தோற்றம். எதுவோ ஒன்று, அந்த இன்ஸ்டிட்யூட் எப்படித்தான் இருக் கிறது என்று போய்ப்பார் என என்னை உந்தித் தள்ளியது. அதன் கேட்டின் அருகே திருட்டுத்தனமாய் நகரும் ஓர் உருவத்தின் காட்சிக்கீற்று என் கண்களுக்கு தெரிந்ததாய் நினைக்கிறேன்... அப்படித்தான் என்றால், அது சட்டென்று விலகிவிட்ட காரணத்தால் என் நினைவுக்குள் ஸ்திரமாய் பதியவில்லை. ஆயினும், அவ்விடம் பற்றி என்னுள் திடீரென்று ஓர் ஆர்வ பரபரப்பு பொங்கி வழிந்தது.

கேட் ஒருக்களித்திருந்தது. அதனை தள்ளித் திறந்து உள்ளே நடந்தேன். ஒரு சிறு பாதையும் நான்கு படிக்கட்டு களும் என்னை முன்கதவருகே கொண்டு போய் சேர்த்தன.

நான் அங்கே சற்றுத் தயங்கி நின்றேன். இங்கு நான் வந்து என்ன செய்யப் போகிறேன்? எனக்கே தெரியவில்லை. பிறகு, திடீரென்று, என் கைக்கு வெகு அருகே, சரசரவென்று ஓசையை நான் கேட்டேன். அது ஒரு பெண்ணுடைய உடை ஏற்படுத்தும் ஓசையைப் போல இருந்தது. கூர்மையாய் திரும்பினேன். ஓசை வந்த கட்டிடத்தின் மூலை நோக்கி வேகமாய் சென்றேன்.

யாரையும் என்னால் அங்கு பார்க்க முடியவில்லை. நான் அப்படியே மேற்கொண்டு விரைந்து போய் அங்கிருந்த மூலையில் மறுபடியும் திரும்பினேன். நான் தற்போது

கட்டிடத்தின் பின்பகுதிக்கு வந்திருந்தேன். அங்கு, ஓரிரு அடிகள் தள்ளி, திடுமென்று நான் பார்த்தேன், திறந்திருந்த ஒரு ஜன்னலை. அது, கம்பிகள் அற்ற ஒரு ப்ரெஞ்சு ஜன்னல்.

அதுவரை ஊர்ந்து போன நான், கவனிக்கலானேன். என்னால் எவ்வித அரவத்தையும் கேட்க முடியவில்லை. ஆனால், என்ன காரணத்தாலோ, உள்ளே யாரோ இருக்கிறார்கள் என்று நான் ஊர்ஜிதமானேன்.

என் முதுகு, வளைந்து குனிந்து நுழைய இன்னும் தயாராக வில்லை. ஆயினும், எப்படியோ சமாளித்துக்கொண்டு மேலே ஏறி ஜன்னல் திட்டுக்குள் நின்று விட்டேன் நான். அப்போது எனக்கு வலதுபக்கத்தில் மிகவும் நுண்ணிய ஓசை எழுவதை என்னால் கேட்க முடிந்தது.

என் பாக்கெட்டில் டார்ச் ஒன்றிருந்தது. அதனை நான் ஏற்றினேன்.

உடனடியாய், ஒரு கூர்மையான மற்றும் ஒலி குறைந்த குரல், பேசியது: ''அதை அணைங்கறேன்.''

அந்தக் குறுகிய வினாடிக்குள் ஒலிக்கும் குரல் சூப்பரின் டெண்டெண்ட் நாஷுடையது என்பதை அறிந்து கொண்ட நான், கட்டுப்பட்டேன்.

அவர் என் கையை இறுக்கிப்பிடித்து ஒரு கதவின் வழியே தரதரவென்று பக்கத்திலிருந்த வராண்டாவுக்குள் இழுத்துப் போனார். நாங்கள் உள்ளேயிருக்கும் விஷயத்தை வெளியிலிருப்போருக்கு வெளிச்சம் போட்டுக்காட்ட இங்கு ஜன்னல்கள் இல்லை ஆதலால் ஒரு விளக்கினை மட்டும் எரியவிட்ட அவர், என்னை, கோபமேயில்லாமல் மிகவும் வருத்தமாய் பார்த்தார்.

''ஜஸ்ட் அந்த அருமையான நொடியிலேதானா நீங்க மூக்கை நுழைக்கணும், மிஸ்டர் பார்ட்டன்?'' என்றார்.

''என்னை மன்னிச்சுடுங்க'' என்று நான் மன்றாடி சொன்னேன். ''வழக்கின் முக்கிய ஆசாமியைப் பின்தொடர் வதாய் ஓர் எண்ணம் எனக்கு...''

''இருந்திருக்கும்... ஆங், அப்படி யாரையாவது நீங்க பார்த்தீங்களா?''

நான் தயங்கினேன். ''எனக்கு நிச்சயமா தெரியல'' என்றேன் மெதுவாய். ''முன் கேட் வழியா யாரோ ஒருத்தர் நழுவலாய் உள்ளே நுழைந்ததைப் பார்த்ததாய் நினைவு... ஆனா உள்ளே இங்கே யாரையும் நான் ரியலா பார்க்கல. அப்புறமா சரசரனு ஓசையை நான் வீட்டை சுற்றிலும் கேட்டேன்.''

நாஷ் ஆமோதிப்பாய் தலையசைத்தார்.

''தட்ஸ் ரைட். நீங்க வருவதற்கு முன்னாடி யாரோ இன்ஸ்ட்டிட்யூட்டை சுற்றிக்கிட்டு வந்திருக்காங்க. ஜன்ன லருகே தயங்கியிருக்காங்க. அப்புறம் சீக்கிரமா போயிட் டாங்க நீங்க நெருங்குவதை கவனிச்சிருக்கணும்.''

நான் மறுபடியும் ஸாரி கேட்டேன். பிறகு ''இப்ப என்ன ஐடியா?'' என்றேன்.

நாஷ் சொன்னார்:

''மொட்டைக் கடுதாசி எழுதிப் பழக்கப்பட்ட ஆளால அப்படி எழுதுவதை நிறுத்திட முடியாது எனும் என் கருத்திலேயே நான் நிக்கறேன். இங்கே அப்படி எழுதிக் கிட்டிருக்கும் அவளுக்கு இப்ப மறுபடியும் எழுதுவது மிகவும்

ஆபத்தானதுன்னு தெரியும்... ஆனா அவ எழுதித்தான் ஆகணும். போதை மருந்துக்காக ஆலாப்பறப்பதைப் போன்றது இது.''

நான் ஒப்புதலாய் தலையசைத்தேன்.

''கவனிங்க மிஸ்டர் பர்ட்டன்... எழுதுவது யாரோ, அவ, முன்பிருந்ததைப் போலவே அச்சுஅசலா அப்படியேத்தான் புதுக்கடுதாசிகளும் அமையணும்னு எதிர்பார்ப்பா. அப்புத்தகத்தின் கத்திரிக்கப்பட்ட பக்கங்கள் அவளிடம் இருக்கு, ஆக, அதிலிருக்கும் வார்த்தைகளையும் எழுத்துக் களையும் பயன்படுத்திக்கிட்டு அவ முன்னேறலாம். ஆனா உறைகள் பிரச்சினையை முன்வைக்கும். அதே டைப் மெஷின்ல அடிக்கத்தான் அவ நினைப்பா. இன்னொரு டைப் மெஷினையோ அல்லது தனது சொந்தக் கையெழுத்தில் எழுதும் ஆபத்தையோ அவ கையிலெடுக்க மாட்டா.''

நான் நம்பிக்கையே இல்லாமல் கேட்டேன்: ''இந்த விளையாட்டை விடாம இன்னும் அவ பிடிச்சுக்கிட்டுத் தொங்குவாள்னா நீங்க நினைக்கிறீங்க?''

''யெஸ். நான் நினைக்கிறேன். பந்தயம் வெக்கிறேன் உங்க கிட்டே: அவ முழு தன்னம்பிக்கையோட - தைரியத்தோட - இயங்கிக்கிட்டிருக்கா. இதுங்க அப்படித்தான் - மலைபோல கான்ஃபிடன்ஸ் இருக்கும். அதனால, அது யாராயிருந்தாலும், இருட்டிட்ட பிறகு அந்த டைப் மெஷின்ல உட்கார இங்கே வருவானு நான் எதிர்பார்த்தேன்.''

''மிஸ் கிஞ்ச்'' என்றேன் நான்.

''இருக்கலாம்.''

"இன்னும் உங்களுக்குத் தெரியாதா?"

"எனக்குத் தெரியாது."

"ஆனா நீங்க சந்தேகப்படறீங்க?'

"யெஸ். ஆனா, யாரோ ரொம்பவும் நயவஞ்சகம் பிடிச்சு அலையறாங்க, மிஸ்டர் பர்ட்டன். இந்த விபரீத ஆட்டத்தின் அத்தனை ட்ரிக்கும் அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கு, ஊஃப்."

வெளிநாடுகளில் நாஷ் படைத்திருக்கும் சில நெட்வொர்க்குகளை என்னால் கற்பனை செய்து கொள்ள முடிந்தது. சந்தேகத்துக்குரியவரால் எழுதி போஸ்ட் பண்ணப் படும் அல்லது கையால் கொண்டுபோய் போடப்படும் ஒவ்வொரு கடிதமும் உடனடியாய் கண்காணிக்கப்படும். கொஞ்சகாலம் கழித்து அந்த சந்தேகப்பட்டியல் பேர்வழி வழுக்கி விடக்கூடும்... அஜாக்கிரதையாய் நடந்து கொள்ளக் கூடும்... அகப்பட்டு விடக்கூடும்!

ஆர்வமிகுதியால் தேவையற்று இங்கு மூக்கை நுழைத்து விட்டதற்காக மூன்றாவது முறையாக நான் எக்ஸ்க்யூஸ் கேட்டுக் கொண்டேன்.

"அத விடுங்க" என்றார் அவர். "அது அப்படித்தான். அடுத்த முறை வெற்றி கிட்டட்டும்."

நான் இரவுக்குள் இறங்கினேன். என் காருக்கு அருகில் மங்கலாய் ஓர் உருவம் நின்றுக் கொண்டிருந்தது. என்னை ஆச்சரியத்தில் தூக்கிப்போடும்விதமாய் அது மேகன் என்று அறிந்தேன் நான்.

"ஹல்லோ" என்றாள் அவள். "இது உங்க கார்னு வந்தேன். என்ன பண்ணிக்கிட்டிருந்தீங்க, நீங்க?"

''நீ முதல்ல என்ன பண்ணிக்கிட்டிருக்கேன்னு சொல்லு...''

''ஒரு பொடிநடைக்காக வெளியே வந்தேன். இரவில் நடப்பது எனக்குப் பிடிக்கும். யாரும் உங்களை வழியில நிறுத்தி வேண்டாத சமாச்சாரங்களை சொல்ல மாட்டாங்க. எனக்கு நட்சத்திரங்களைப் பிடிக்கும். சுற்றுவட்டாரம் சுகந்தமாய் வாசனை தரும். இதுக்கெல்லாம் மேல, ஒவ்வொரு நாளும், பூமி ஒரு மர்மப்பந்தாய் காட்சி தரும்.''

''இதெல்லாம் நான் ஒத்துக்கறேன்'' என்ற நான், ''இப்படிப்பட்ட கும்மிருட்டுல ரெண்டு பேர்தான் வெளில வருவாங்க'' என்றேன். ''ஒண்ணு பூனை. ரெண்டு சூனியக் காரர். உன்னை வீட்டுல தேடிக்கிட்டிருப்பாங்க பாரு...''

''நோ, தேட மாட்டாங்க. நான் எங்கே இருக்கேன், என்ன பண்றேன்னு அவங்க எப்பவுமே கண்டுக்கிட்டுதில்ல.''

''நீ எப்படியிருக்கே? எல்லாம் எப்படிப் போகுது?'' - நான் கேட்டேன்.

''ஆல் ரைட்டுனு நினைக்கிறேன்.''

''மிஸ் ஹாலண்ட் உன்னைக் கவனிச்சுக்கறாங்களா? மற்ற தெல்லாம்?''

''எல்ஸீ பரவாயில்ல.''

''உள்ளே குதி. உன்னைக் கொண்டுபோய் வீட்டுல விட்டுடறேன்.''

மேகனை ஒருத்தரும் கருத்தில் கொள்வதில்லை என்பது அப்படியே முழுசும் உண்மை கிடையாது.

நாங்கள் உள்ளே காரை நுழைத்தபோது வாசலில் ஸிம்மிங்டன் நின்று கொண்டிருந்தார்.

உள்ளே தலையைக் குனிந்து பார்த்தார். ''மேகன் இருக்காளா உள்ளே?''

''யெஸ்'' என்றேன் நான். ''நான் அவளை வீட்டுக்குக் கூட்டிட்டு வந்துட்டேன்.''

ஸிம்மிங்டன் கூர்மையாய் சொன்னார்: ''எங்ககிட்டே ஒரு வார்த்தை சொல்லாம நீ இப்படி போயிடக்கூடாது, மேகன். நீ எங்கே போனேன்னு மிஸ் ஹாலண்ட் கலவரமா யிட்டாங்க.''

எதையோ முணுமுணுத்துவிட்டு அவரைக் கடந்து வீட்டுக்குள் போய்விட்டாள் மேகன். ஸிம்மிங்டன் பெருமூச்செறிந்தார்.

''கவனிச்சுக்க! பெற்ற தாய் இல்லாத வயசுக்கு வந்த ஒரு பொண்ணு - ஓஹ், தலைமேலேயே கனக்கும் ஒரு மாபெரும் பொறுப்பு.''

அவர் அப்போது என்னை சிறு சந்தேகத்துடன் பார்த்தார். ''நீங்கதான் அவளை ஒரு ரவுண்ட் கூட்டிட்டுப் போனீங் கன்னு நினைக்கிறேன்?''

இதை அப்படியே விட்டுவிடுவதுதான் சிறந்தது என்று நினைத்தேன் நான்.

# அத்தியாயம் - 11

## I

இதெல்லாம் நடந்த மறுநாள் நான் பைத்தியமாகவே ஆகிவிட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். திரும்பிப் பார்க்கும்போது, இது ஒன்றுதான் சிறந்த விளக்கமாய் எனக்குப்படுகின்றது.

மார்க்கஸ் கென்ட்டைப் போய்ப் பார்க்க வேண்டிய மாதாந்திர கெடு பாக்கியிருந்தது. நான் ட்ரெயினில் போக முடிவு செய்தேன். என்னை படு ஆச்சரியத்தில் ஆழ்த்தும் படியாய், வீட்டிலேயே இருந்துவிடப் போவதாய் சொல்லி விட்டாள் ஜோன்னா. வழக்கமாய் அவளும் கூட வருவாள்... இருவரும் அங்கேயே இரண்டு நாட்கள் போல தங்கியிருப் பதுண்டு.

எனினும், இம்முறை, அன்றைய தினமே மாலை ட்ரெயினில் திரும்பிவிடுவதாய் முடிவெடுத்திருந்தேன். இப்படியிருந்தும் ஜோன்னாவின் நடவடிக்கையில் நான் வியந்துதான் போனேன். என்னால் அவளை விளங்கிக்

கொள்ள முடியாத அளவுக்கு, அவள் செய்யவேண்டிய ஜோலிகள் நிறைய இருப்பதாகக் காரணம் சொன்னாள்.

கசகசக்கும் ட்ரெயினில் போய் நேரத்தை வீணாக்குவதை விட அருமையான கிராமத்துச் சூழலில் இருப்பதையே விரும்புவதாய் குறிப்பிட்டாள். இது சரிதான்... ஆனால் இது அல்லவே வழக்கமான ஜோன்னா.

அவளுக்கு கார் வேண்டாம் என்று சொல்லி விட்டாள். எனவே அதனை ஸ்டேஷன் ஓட்டிச்சென்று, திரும்பும்போது கொண்டு வர வசதியாக பார்க்கிங்கில் போட வேண்டிய தாயிற்று.

லிம்ஸ்டாக் ரயிலடி, ரயில்வே நிர்வாகத்துக்கு மட்டுமே தெரிந்துள்ள ஏதோவொரு ஒவ்பேறாத காரணத்துக்காக, லிம்ஸ்டாக்கிலிருந்து அரை மைல் போல தள்ளி அமைந் திருந்தது. பாதி தூரம் போயிருக்கும்போது, இலக்கின்றி சென்றுக் கொண்டிருந்த மேகனை நான் கடந்து போக நேர்ந்தது. இழுத்து நிறுத்தினேன் நான்.

''ஹலோ, என்ன பண்ணிக்கிட்டிருக்கே?''

''ஜஸ்ட், வாக்.''

''பார்த்தால் கடகடனு வாக் போக வந்ததைப் போல தெரியலியே. கால் ஒடிஞ்ச நண்டு இழுத்துக்கிட்டு தவிப்பதைப் போலல்ல நீ நடந்துக்கிட்டிருக்கே...''

''வெல், குறிப்பா நான் எங்கேயும் நான் போகல. அதான்.''

''அப்ப நீ கிளம்பி ஸ்டேஷன்ல வந்து எனக்கு டாடா சொல்லு, வா.'' நான் கார் கதவை திறந்துவிட, அதற்குள் குதித்தேறினாள் மேகன்.

''நீங்க எங்கே போறீங்க?''

''லண்டன். என் டாக்டரைப் பார்க்க.''

''உங்க முதுகு ப்ராப்ளம் நல்லாயிடுச்சு, இல்ல?''

''இப்ப ஏறத்தாழ அது முழுசா குணமாகிடுச்சு. இந்த நிலைமைல என்னைப் பார்க்க அவர் ரொம்ப சந்தோஷப் படுவார்னு நினைக்கிறேன்.''

மேகன் ஒப்புதலாய் தலையசைத்தாள்.

நாங்கள் ஸ்டேஷன் அடைந்தோம். காரை நிறுத்திவிட்டு, உள்ளே போய் எனக்கான டிக்கெட் வாங்கி வந்தேன் நான். நடைபாதையில் சொற்பமானவர்களே இருந்தார்கள், அவர்களில் ஒருவரையும் எனக்கு தெரியாது.

''எனக்கு கொஞ்சம் சில்லறை தரமுடியுமா?'' என்றாள் மேகன். ''நான் மெஷினிலிருந்து சாக்லெட் வாங்கிட்டு வரேனே...''

''இதோ பிடி, பேபி'' என்ற நான், தேவையான சில்லறையை கொடுத்தேன்.

அவள் சாக்லெட் மெஷின் நோக்கிச் சென்றதைக் கவனித்தபோது எனக்கு எரிச்சல் கொஞ்சங்கொஞ்சமாய் கூடுவதை உணர்ந்தேன்.

ஓசையெழுப்பிய நடக்கும் காலணி அணிந்திருந்தாள்... தொடை வரும் நீளும் இறுக்கமான ஸாக்ஸோ, ஈர்ப்பற்று அநாகரீகமாய் இருந்தது. அவளுக்கு சற்றும் பொருந்தாத பாவாடை மற்றும் மேல்சட்டை.

இவையெல்லாம் எனக்குள் ஏன் கடுங்கோபத்தை ஏற்படுத்த வேண்டும் என எனக்கே தெரியவில்லை... ஆனால் மண்டியது.

அவள் திரும்பியதும் நான் கோபமாய் கேட்டேன்: "எதுக்காக நீ இப்படி அசிங்கமான ஸாக்ஸ் அணியணும், ஆங்?"

இரு கால்களையும் அவள் குனிந்து பார்த்தாள். ஆச்சரிய மானாள். ஆகவே கேட்டாள்: "இதுல என்ன பிரச்சினை தெரியுது உங்களுக்கு?"

"உன் ஸாக்ஸ்ல எல்லாமே பிரச்சினைதான். கவரல. மாறா வெறுப்பாக்குது. எதுக்காக ஏதோ ஒரு திருடன்போல இப்படி தொளதொளனு ஒரு மேல்சட்டை?"

"இதெல்லாம் நல்லாத்தானே இருக்கு, இல்லையா? பல வருடங்களா நான் அணிபவை இவை."

"சொல்லணுமா - எல்லாம் பார்த்தாலே தெரியுது. ஆமாம் ஏன் நீ---"

இத்தருணத்தில் ட்ரெயின் உள்ளே வந்து என் கோப விரிவுரையை தடைசெய்தது.

நான் காலியாயிருந்த ஒரு முதல்வகுப்புப் பெட்டிக்குள் ஏறிக்கொண்டேன். விடுபட்ட உரையாடலைத் தொடர லானேன்.

என் மட்டத்துக்குக் கீழே வந்தாள் மேகன். எனவே நிமிர்ந்து பார்த்துப் பேசினாள் அவள். ஏன் இந்த அளவுக்கு கோபங்கொண்டேன் என கேட்டாள்.

''கோபமெல்லாம் இல்ல'' என்று பொய் சொன்னேன் நான். ''இப்படி கந்தலா போட்டுக்கிட்டு, உன்னைப் பற்றி நீ கவனிச்சுக்காம இருப்பது, என்னை வெறுப்பாக்குது.''

''நான் எப்படியும் அழகாத் தெரியப் போவதில்ல... பிறகு எப்படியிருந்தால் என்ன?''

''அப்படியா'' என்ற நான், ''நீ எவ்ளோ அழகுனு நான் உன்னை உணர வைக்க விரும்பறேன். உன்னை லண்டன் கூட்டிட்டுப் போய் தலைமுதல் கால்வரை மாற்றப் போறேன்'' என முடித்தேன்.

''அதப் பண்ணுங்க முதல்ல'' என்றாள் மேகன்.

ட்ரெயின் நகர ஆரம்பித்தது. மேகனின் முகத்தை நான் அப்படியே குனிந்து பார்த்தேன்.

அப்போதுதான், நான் முன்னால் சொன்னதைப்போல, பைத்தியமாகவே ஆகிவிட்டேன்.

ஒரு கையால் கதவைப் பிடித்துக்கொண்டேன். மறுகையால் கீழேயிருந்த அவளை அப்படியே தூக்கினேன். அசத்தலாய் உள்ளுக்குள் அவளைக் கொண்டு வந்தேன்.

இதற்கு போர்ட்டரிடமிருந்து கடுமையான வசைச் சொற்கள் வந்தன... ஆனால் அவனால் கதவினை அடித்து மூடத்தான் முடிந்ததே தவிர, வேறொன்னும் இயலவில்லை. தூக்கிக் கொண்டிருந்த மேகனை நான் தரையிறக்கினேன்.

''எதுக்காக இப்படியொரு வெறிச்செயலை நீங்க செஞ்சீங்க?'' என்று கண்டிப்பாய் கேட்டாள் அவள், ஒரு கையால் கால்முட்டியை நீவிக்கொண்டே.

''மூடு வாயை'' என்றேன் நான். ''நீ என்கூட லண்டன் வரே. உன்னை நான் மாத்தறேன். அப்புறம் நீ நீதானான்னு உனக்கே சந்தேகம் வரும். நீ முயற்சி பண்ணினால் எத்தனை அழகா நீ தெரிவேன்னு உனக்கு நான் காட்டறேன் பாரு. கந்தர்வகோலமா உன்னைப் பார்த்துப்பார்த்து நான் சலிச்சுப் போயிட்டேன், மேகன்.''

புளகாங்கிதம் கொண்டவளாய், ''ஓ!'' என சொல்லிக் கொண்டாள் அவள்.

டிக்கெட் கலெக்டர் வந்தார். மேகனுக்கும் சேர்த்து டிக்கெட் எடுத்தேன். ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்ட அவள், அடக்க முடியாத மரியாதையுடன் என்னைக் கவனித்தாள்.

''கவனிங்க'' என்றாள் அவள், அவர் நகர்ந்ததும். ''நீங்க திடீர்னு நடந்துக்கிட்டீங்க, இல்ல? எதிர்பாராமல்...''

''நிச்சயமா'' என்றேன் நான். ''எங்க குடும்பத்துக்கே இக்குணம் இருக்கு.''

எனக்குள் சட்டென்று ஓடிய அந்த உத்வேகத்தை நான் மேகனுக்கு எவ்வாறு விளக்குவது? வெறுத்து ஒதுக்கப்பட்ட நாய் பரிதாபமாய் பார்த்துக் கொண்டு நிற்பதை போல இருந்தாள் அவள்... ஆனால் இப்போது எஜமானனின் அன்பில் அவன் பின்னாலேயே ஆசையாய் ஓடும் நாயாய் மாறியிருந்தாள்.

''உனக்கு லண்டன் பற்றி நல்லா தெரியாதுன்னு நினைக்கிறேன்'' என்றேன் நான்.

''தெரியும்'' என்றாள் அவள். ''அதன் வழியாத்தான் நான் பள்ளிக்கூடத்துக்குப் போவேன். அங்கே நான் பல் மருத்துவர்கிட்டேயும் போயிருக்கேன்.''

''ஆனா நான் காட்டப்போவது முழுக்கவும் வித்தியாசமான லண்டனா இருக்கும் பார்...''

ஹார்லி சாலை டாக்டரிடம் எனக்கு அளிக்கப்பட்டிருந்த முன்பதிவுக்கு அரைமணிநேரம் முன்னமேயே நாங்கள் லண்டனை அடைந்திருந்தோம்.

ஒரு டாக்ஸியை அமர்த்திக்கொண்டு நாங்கள் நேராய் மிராட்டின் ஜோன்னாவின் உடையலங்காரக் கடை சென்றடைந்தோம். கலகலவென்று பழகவல்ல 45 வயது மேரி க்ரே இருந்தாள். அவள் தொழிலில் ஒரு புத்திசாலி. பழக, சிறந்த கம்பெனி. எனக்கு அவளை எப்பவும் பிடிக்கும்.

நான் மேகனிடம் சொன்னேன்: ''நீ என் உறவுக்காரப் பொண்ணு - கஸின்.''

''ஏன்?''

''விவாதிக்காதே.''

இந்த ஏற்பாட்டோடு நாங்கள் கடைக்குள் போனோம்.

''கவனிங்க'' என்றேன் மேரியிடம். ''என்னுடைய ஒரு கஸினை இப்ப நான் கையோட கூட்டிட்டு வந்திருக்கேன். ஜோன்னாவும் வந்திருக்கணும்... ஆனா, ஏனோ மாட்டேன்னுட்டா. ஆனா அவத்தான் உங்ககிட்டே இவளை அப்படியே ஒப்படைச்சுடலாம்னு நம்பிக்கை கொடுத்தது. இப்ப இந்தப் பொண்ணு என்ன மாதிரியான நிலைமைல இருக்குன்னு கொஞ்சம் வந்து பாருங்க.''

அங்கிருந்தே பார்த்த அவர், ''மை காட்'' என்ற பரிதாபமாய். ''புரியுது.''

*''வெல், அந்தப் பொண்ணு, தலை முதல் கால் வரை தலைகீழா மாற்றப்படணும், ஓ கே? ஷூ, தொடைக்கு மேலே நீளும் ஸாக்ஸ், பாவாடை, உள்ளாடை - எல்லாம்! ஆங், ஜோன்னாவின் தலையலங்காரம் செய்யும் ஆள் இங்கேதானே எங்கேயோ பக்கத்துல இருக்கான்...?''*

*''ஆண்டனி? அதோ அந்த திருப்பத்துல. அதையும் நான் கவனிச்சுடறேன்.''*

*''ஆயிரத்தில் ஒருத்தியம்மா, நீங்க...''*

*''ஓ, உதவுவதை நான் என்ஜாய் செய்வேன். பணம் ஒருபக்கம் வந்தாலும், உவந்து உதவுவதைத்தான் நான் விரும்பறேன். இதைத் தெரிஞ்சுக்கிட்ட பொம்பிளைங்கள்ல பாதிபேர் என் பில்லை சரியா செட்டில் பண்றதில்ல.'' சொல்லிவிட்டு, சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்த மேகன்மீது தொழில்ரீதியான பார்வையை மேயவிட்டார். ''அவளுக்கு அம்சமான முகவெட்டு இருக்கு.''*

*''அப்படின்னா உங்களுக்கு எக்ஸ்-ரே கண்கள்தான் இருக்கணும்'' என்றேன் நான். ''எனக்கு, எவ்விதமான அமைப்பு மற்ற தூணாத்தான் அவ தெரியறா.''*

*மேரி சிரித்தார்.*

*''கவலைப்படாதீங்க. எத்தனை பேரை நான் பார்த்திருப்பேன்... என்கிட்டே விடுங்க அவளை...''*

*''ரைட்'' என்றேன் நான். ''நான் ஆறுமணியைப் போல வந்து அவளை அழைச்சுக்கறேன்.''*

# II

என் முன்னேற்றத்தில் அகமகிழ்ந்து போனார் டாக்டர் கென்ட். என் உடல்நிலையில் அவர் பயந்ததையெல்லாம் நான் முறியடித்து விட்டதாய் சொன்னார்.

''ஆஹாஹா... பரபரப்பில்லாத கிராமத்தின் அமைதியும் தூயகாற்றும் ஒருத்தருக்கு எத்தனை உபகாரம் செய்யுது'' என்றார் அவர்.

இதற்கு ''நீங்க முதல்ல சொன்ன ரெண்டையும் நான் ஒத்துக்கறேன்'' என்றேன் நான். ''ஆனா பரபரப்பு இல்லைன்னு சொல்லாதீங்க. முழு பரபரப்பால நாங்க மூச்சு முட்டிக் கிடக்கோம்.''

''என்ன விதமான பரபரப்பு?''

''கொலை!''

உதடுகளைக் குவித்து விஸிலடித்தார் டாக்டர். ''காதல் தோல்வியா? விவசாயி அப்பா, மகளைப் போட்டுத் தள்ளிட்டாரா?''

''கிடையவே கிடையாது. திட்டமிடப்பட்ட கொடூரக் கொலை.''

''அதைபற்றி நான் எந்த செய்தியும் படிக்கல. எப்ப அவனைப் பிடிச்சாங்க?''

''இன்னும் பிடிக்கல. அது அவன் இல்ல. அவள்.''

''ஊ! அப்ப நீங்க ஓய்வுல இருக்க லிம்ஸ்டாக் உங்களுக்கு தகுந்த உறைவிடம் கிடையாது, ஸார்.''

நான் உறுதியாய் நின்றேன். "அதுதான் எனக்கு இப்போதைக்கு ஒரேயிடம்! அங்கேயிருந்து என்னை நீங்க அகற்ற முடியாது."

டாக்டருக்கு எப்போதும் கீழ்நிலையிலேயேதான் எண்ணங்கள். "அப்ப, ஒருத்தியைப் பிடிச்சாச்சா அங்கே?"

"ப்ச், அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாது" என்றேன் நான், எல்ஸீ ஹாலண்டை குறுகுறுப்பாய் மனதில் நிறுத்தி. "கொலை என்பதன் உளவியல் தர்க்கங்கள் என்னை ஈர்க்குது - அவ்ளோதான்."

"ஓ, அப்ப சரி. இதுவரைக்கும் கொலைகாரன் உங்களை ஒண்ணும் பண்ணல. இனிமேலும் ஒண்ணும் பண்ண மாட்டான் என்பதை மட்டும் ஊர்ஜிதப்படுத்திக்கங்க."

"அந்தக் கவலை வேண்டாம்."

"இன்னிக்கு சாயந்திரம் என்கூட சாப்பிடலாமே? உங்களுடைய த்ரில்லிங் க்ரைம் கதையையும் அப்படியே எனக்குச் சொல்லலாம்..."

"ஸாரி. என்னை புக் பண்ணியாச்சு."

"டேட்டிங், ஆங்? யெஸ், நீங்க அந்த அளவுக்கு குணமாகியாச்சுதான்...!"

ஆறு மணிக்கு மிராட்டின் மூடப்படும் தருணத்தில் நான் அங்கு சென்றடைந்தேன். ஷோ ரூமின் வெளியே படிக்கட்டு களின் உச்சியில் நின்று என்னை அழைத்தார் மேரி க்ரே. உதடு களில் ஒரு ஆட்காட்டி விரலை வைத்து என்னை எச்சரித்தார்.

"உங்களுக்கு ஒரு ஷாக் காத்திருக்கு! அந்த அளவுக்கு நான் உழைச்சிருக்கேன்."

நான் அந்த அகண்ட ஷோ ரூமுக்குள் போனேன். பெரிய கண்ணாடியில் தன்னைத்தானே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் மேகன். நான் மிகைப்படுத்திச் சொல்ல வில்லை - அது அவள்தான் என்று என்னால் அடையாளம் காணவே இயலவில்லை! ஒரு கணம் மூச்சடைத்து நின்றேன். நெட்டையும் ஒல்லியுமான தேவதையாயிருந்தாள். தொடைக்குள் போன பட்டு ஸாக்ஸ். காலுக்கு அணிகலனாகவே ஆகியிருந்த பளபள ஷூ. கலகலக்கும் வளையோசை. யெஸ் லவ்வீ கால்கள், கைகள், இளமை பூரித்துத் துருத்தும் எலும்புகள்... அவளின் ஒவ்வொரு அங்குலத்திலும் தனித்துவமும் தரமும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அவளது கேசம் வளைத்துச் சுருட்டப்பட்டு கழுத்தின் பின்பகுதியோடு முடியுமாறு அமைக்கப்பட்டிருந்தது அது தங்கக் கலவை யென மின்னியது. அவளது முகத்தை மட்டும் அப்படியே விட்டுவிடும் முடிவினை அழகு நிலையம் எடுத்திருக்கின்றது. அவளுக்கு மேக்-அப் பண்ணவில்லை... அப்படியே செய் திருந்தாலும், அது தெரியாவண்ணம் மிகவும் நுண்மையாய் அமைக்கப்பட்டிருந்தது. அவளது இதழ்களுக்கு உதட்டுச் சாயம் தேவைப்படவில்லை.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக அவளிடம் நான் இதுவரை எப்போதுமே கண்டிராத ஒன்றினைக் காணப் பெற்றேன் - ஒரு குழந்தைத்தனம் மிளிரும் பெருமை! கூச்சம் உடைய ஒரு சிரிப்பினூடே ஆழ்ந்து என்னைப் பார்த்தாள் அவள்.

''நான்கூட - எப்படிச் சொல்வது, ஆங்... பார்க்க அழகா இருக்கேன், இல்ல?'' என்றாள் அவள்.

''அழகு?'' என கேட்டேன் நான். ''அழகு என்பது இங்கு பயன்படுத்த வேண்டிய வார்த்தை கிடையாது! இது பேரழகு.

வா, என்கூட இப்பவே. உன்னை நான் ஒரு டின்னருக்கு கூட்டிட்டுப் போறேன் நான். அங்கே வரும் ஆம்பிளைங் கள்ல எவனாவது உன்னை மறுமுறை திரும்பிப் பார்க்காம போனான்னா என்னை ஏன்டானு கேளு!''

மேகன் அழகு கிடையாது, ஆனால் அவள் வழக்கத்துக்கு மாறுபட்டவள், பார்ப்போரை பிரமிப்பாய் அறையும் ஒருவித அழகு பொதிந்தவள். அவளுக்கு பர்ஸனாலிட்டி உள்ளது. ரெஸ்டாரண்ட்டுக்குள் அவள் எனக்கு முன்னால் போனாள். அப்போது வேகமாய் வெயிட்டர் என்னை நோக்கி உடனே ஓடிவந்தபோது, வழக்கமாக சாதாரணமாய் கையில் வைத்துக்கொள்ளாத ஒன்றை எடுத்துச் செல்லும் ஒருவனுடைய மதமதப்பு என்னுள் விளைந்தது.

நாங்கள் முதலில் மதுபானம் அருந்தினோம். அதிலேயே நீண்ட நேரமிருந்தோம். பிறகு சாப்பிட்டோம். இதற் கெல்லாம் அடுத்து நடனமாடினோம். ஆட வேண்டும் என்பதில் குறியாய் இருந்தாள் மேகன்... அவளை ஏமாற்ற நான் விரும்பவில்லை. ஏனோ அவள் நன்றாய் ஆடமாட்டாள் என்ற நினைப்பிலிருந்தேன் நான். ஆனால் அவள் ஆடினாள். நன்றாய். என் கைகளில் அவளொரு இறகாய் வளைந்தாள். ஒலித்த இசையின் ரிதத்தினை அவளுடைய உடலும் பாதங்களும் துல்லியமாய் பின்பற்றின.

''ஓஹ்...'' என்றேன் நான். ''உனக்கு ஆடக்கூட வருமா?''

கொஞ்சமாய் அவள் ஆச்சரியப்பட்டதாய் தோன்றியது. ''வெல், அஃப்கொர்ஸ்... என்னால முடியும். ஒவ்வொரு வாரமும் எங்க ஸ்கூல்ல டான்ஸிங் வகுப்பு உண்டு.''

''ஒரு டான்ஸரை உருவாக்க நடன வகுப்புப் பயிற்சியைவிட, திறமை வேண்டும்'' நான் சொன்னேன்.

நாங்கள் மீண்டும் டேபிளுக்குத் திரும்பினோம்.

‘‘இந்த உணவு நல்லாயிருக்கு இல்ல?’’ என்றேன் நான். ‘‘இங்கு எல்லாமும்!’’ குதூகலித்துப் போனாள்.

அது ஒரு சுகந்தமான மாலைப்பொழுது. நான் பைத்திய மாகத்தான் அங்கிருந்தேன். ‘‘நாம வீட்டுக்குப் போகணும் இல்ல?’’ என்ற ஒரு கேள்வியின் மூலம் என்னை பூமிக்குக் கொண்டு வந்தாள் மேகன்.

என் வாய் பிளந்தது. யெஸ், யெஸ், நிச்சயமாய் எனக்குக் கிறுக்குத்தான் பிடித்திருந்தது. எல்லாவற்றையும் நான் மறந்திருந்தேன்! உலகின் நிஜங்களிலிருந்து விலகிப் போயிருந்தேன் நான் நான் படைத்த படைப்பின் அருகாமையில் இருந்ததால்!

‘‘அடக்கடவுளே!’’ நான் சொன்னேன்.

கடைசி ட்ரெயின் போயிருக்கும் என்பதை நான் அப்போதுதான் உணர்ந்தேன்.

‘‘இங்கேயே இரு’’ என்றேன் நான். ‘‘ஒரு போன் பண்ணணும்.’’

கேப்ஸுக்கு போன் போட்டு, அவர்களிடமிருக்கும் பெரிய மற்றும் வேகமாக போகவல்ல ஒரு காரை அனுப்பு மாறு உத்தரவிட்டேன்.

நான் மேகனிடம் திரும்பி வந்தேன். ‘‘கடைசி ட்ரெயின் போயாச்சு’’ என்றேன். ‘‘ஆகவே, வீட்டுக்கு நாம கார்ல போகப் போறோம்.’’

‘‘அப்படியா? ஜாலி!’’

என்ன ஓர் அருமையான குழந்தை இவள் என் நினைத்துக் கொண்டேன் நான். எல்லாவற்றிலும் இனிமையைக் காண்கிறாள். மறுபேச்சு கிடையாது. முகச்சுளிப்போ வாதமோ அன்றி நான் சொல்லும் அனைத்தையும் ஏற்கிறாள்.

கார் வந்தது. அது பெரிதாகவும் வேகமாகவும் இருந்தது. ஆயினும், நாங்கள் வெகுநேரம் கழித்தே லிம்ஸ்டாக் வந்தோம்.

என் மனச்சாட்சி குறுகுறுத்ததால், ''உன்னைத் தேட குழுக்கள் அமைத்து அனுப்பியிருக்காங்க!'' என்றேன் நான்.

அவள் சந்தேகமாய் ''ஓ, அப்படியெல்லாம் எனக்குத் தோணல'' என்றாள். ''நான் பலதடவை வெளியே போய்ட்டு லஞ்சுக்கு வராமலே இருந்திருக்கேன்.''

''அது சரிடா கண்ணு. ஆனா இன்னிக்கு நீ டீக்கும் போகாமல் டின்னருக்கும்கூட வெளியிலேயே இருந்திருக்கே.''

ஆயினும் மேகனுக்கு அன்று லக்கி ஸ்டாராய் இருந்திருக்க வேண்டும். வீடு இருண்டு அமைதியாய் இருந்தது. மேகனின் ஆலோசனையின்படி நாங்கள் வீட்டின் பின்பக்கத்துக்குப் போய் ரோஸின் ஜன்னலில் கல் எறிந்தோம்.

அதனிடையே ரோஸ் எட்டிப் பார்த்தாள். அடக்கிய ஆச்சரியத்துடனும் நெஞ்சுப் படபடப்புடனும் கீழே வந்து எங்களை உள்ளே அனுமதித்தாள்.

''வெல், இப்ப கவனிங்க. நீங்க படுக்கைலத்தான் ஆழ்ந்த தூக்கத்துல இருந்தீங்கன்னு நான் சொல்லிடறேன். மாஸ்டரும் இந்த ஹாலண்ட் பொம்பிளையும் (இங்கு முகவாயை இடித்துக் காட்டினாள்) ஒரு ட்ரைவ் போயிருக்காங்க. நான் பசங்களைக் கவனிச்சுக்கறேன்னு சொல்லியிருக்கேன்.

விளையாடிக்கிட்டிருந்த காலினைத் தூங்க வெச்சுக் கிட்டிருந்த போது நீங்க வந்ததா சொல்லிடறேன். ஆனா பிறகு நான் திரும்பி வந்தபோது உங்களை காணல, ஆகவே, நீங்க படுக்கப் போயிட்டதா நான் புரிஞ்சுக்கிட்டேன். மாஸ்டர் வந்து உங்களைப் பற்றிக் கேட்டால் இவ்ளோதான் நான் சொல்லப்போறேன். மாத்திடாதீங்க. ஆனாலும் இவ்ளோ நேரம் கழிச்சு நீங்க வருவது, தப்பு மேடம்.''

ரோஸ் சொன்ன படுக்கைக்கே இப்போது மேகன் போய் விடுவதுதான் உசிதம் என்ற குறிப்பு கொடுத்து ரோஸின் பிரசங்கத்தை நான் நிறுத்தினேன்.

''குட் நைட்'' என்றாள் மேகன். ''மேலும், கூடை கூடையா தேங்க்ஸ். இன்றைய தினம் நான் அனுபவித்த முதன்முதல் அற்புதமான லவ்லீ தினம்.''

நெஞ்சு லேசாயிருக்க நான் வீடு திரும்பினேன். டிரை வருக்கு நன்றாய் டிப்ஸ் கொடுத்தேன். வேண்டுமானால் அவன் என் வீட்டிலேயே படுத்திருந்து விட்டு காலையில் போகலாம் என்றுகூட சொன்னேன். ஆனால் அவன் கிளம்புவதாய் சொல்லிவிட்டான்.

எங்களது உரையாடலின்போது அறைக்கதவு திறக்கப் பட்டது. அவன் கிளம்பியதும் அது முழுக்க திறக்கப்பட, ஜோன்னா கேட்டாள்: ''ஓ, நீதானா?''

''என்ன என்னைப் பற்றி கவலைப்பட்டுக்கிட்டிருந்தியா?'' - உள்ளே நுழைந்து கதவினை மூடியபடி நான் கேட்டேன்.

ஜோன்னா வரவேற்பறைக்குள் போனாள். நான் தொடர்ந்தேன். அங்கு டீப்பாயில் காபிக் குடுவையிருந்தது. ஜோன்னா காபி தயார் பண்ணிக்கொண்டாள். நான் விஸ்கியை விரும்பினேன்.

“உன்னைப் பற்றிய கவலையா? நோ. கிடையாது. டவுன்லேயே யாரையாவது பிக்-அப் பண்ணிக்கிட்டுத் தங்கியிருப்பேன்னு நினைச்சேன்!”

“யெஸ், ஒருவகைல சொல்லணும்னா, நான் பிக்-அப் பண்ணினேன்...”

நான் புன்முறுவத் தொடங்கி பிறகு சிரித்து விட்டேன்.

நான் எதற்காக சிரிக்கிறேன் என்று ஜோன்னா கேட்க, நான் அவளிடம் நடந்தவற்றைச் சொன்னேன்.

“ஓ ஜெர்ரி, உனக்கு பைத்தியம் பிடிச்சிருக்கணும் - யெஸ், கிறுக்கன் நீ!”

“அப்படித்தான் நானும் நினைக்கிறேன்.”

“ஆனா, அண்ணா... இப்படிப்பட்ட விஷயங்களை நீ இதுபோன்ற சிக்கலான கிராமங்கள்ல செய்யக்கூடாதுன்னு உனக்குத் தெரியலியா? நாளைக்கு பார்... இது லிம்ஸ்டாக் முழுக்க பரவியிருக்கப் போகுது...”

“ஆமாம், நடக்கும். ஆனா, மேகன் வெறும் சின்னப் பொண்ணுதானே?”

“மண்ணாங்கட்டி. அவ ஒண்ணும் சின்னவ கிடையாது. அவளுக்கு வயசு இருபது. கிசுகிசுக்களின் பங்களிப்பு இல்லாமல், இருபது வயசுப் பொண்ணை லண்டனுக்குக் கூட்டிட்டுப் போய் நீ தினுசுதினுசா ஆடையணிகள் வாங்கித் தரமுடியாது. விளங்குதா என்ன சொல்றேன்னு? பாவி அண்ணா... கிசுகிசு வலுத்துச்சுன்னா நீ அவளையே கலியாணம் கட்டிக்க வேண்டியிருக்கும்.”

ஜோன்னா பாதி ஸீரியஸாகவும், பாதி சிரிப்புடனும் சொன்னாள்.

அக்கணத்தில்தான், அந்த நொடிப்பொழுதில்தான், நான் ஒரு முக்கியமான கண்டுபிடிப்பினை செய்தேன். இவள் சொல்வதில் தவறென்ன எனும் கண்டுபிடிப்பு அது! சட்டென்று தன்னிச்சையாய் ‘‘அப்படி நடந்தால் எனக்கு மறுப்பில்லைப்பா’’ என்று விட்டேன் நான். ‘‘சொல்லப் போனால் - அதை நான் விரும்புவேன்.’’

வேடிக்கையான ‘பாவம்’ ஜோன்னாவின் முகத்தில் படர்ந்தது. அவள் எழுந்து வெளியேறக் கதவினைக் கடக்கும் போது வறட்சியாய் சொன்னாள்:

‘‘யெஸ், இது இப்படித்தான் என்று எனக்கு கொஞ்ச நாளாகவே தெரியும்...’’

கையில் கண்ணாடிக் கோப்பையுடன், எனது புதுக் கண்டு பிடிப்பின் தாக்கத்தால் திறந்த வாய் மூடாமல் நான் நிற்க, என்னை அப்படியே விட்டுவிட்டுப் போனாள் அவள்.

# அத்தியாயம் - 12

I

கலியாணம் பற்றி ஒரு பெண்ணிடம் முதன்முறையாய் பேச்சினை எடுக்கப் போகும் ஆணின் நிலை எப்படி யிருக்கும் என்று எனக்குத் தெரியாது.

கதைகளில், அவனது தொண்டை வறண்டு போகும்... உடையில் திடீர் இறுக்கமும் அதனால் வியர்வையும் உண்டாகும்... பார்க்கவே பரிதாபப்படும்படியாய் நரம்பதிர் வான் அவன்...

அப்படியெல்லாம் நான் உணரவே இல்லை. ஒரு நல்ல எண்ணம் மனதில் உதித்துள்ள வேளையில் அந்த சுபகாரியத்தை எத்தனை சீக்கிரத்தில் முடிக்க வேண்டுமோ அத்தனை சீக்கிரத்தில் முடிப்பதே சிறந்தது என்று மட்டுமே எனக்குத் தோன்றியது. இதில் சிரமமாய் உணர குறிப்பிட்ட காரணம் எதுவும் எனக்கு தெரியவேயில்லை.

ஸிம்மிங்டன்னின் வீட்டுக்கு நான் பதினோரு மணியை யொட்டி போனேன். அழைப்பு மணியை நான் அடிக்க,

அதற்குப் பதில்தர ரோஸ் வெளியே வந்தபோது மேகன் வேண்டும் என கேட்டேன். ஏதோ தெரிந்ததைப் போன்ற பார்வையை ரோஸ் என்மீது படரவிட்ட அப்போதுதான், நான் சற்று வெட்கமாய் உணர ஆரம்பித்தேன்.

வாசல் பார்த்திருந்த சிறிய வரவேற்பறையில் என்னை அமரச் செய்தபோது, இங்கு எவரும் மேகனின் மனம் புண்படும்படி நேற்றிரவு நடந்துக் கொண்டிருக்கக் கூடாதே என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

கதவு திறக்கப்பட்டதைக் கேட்டு நான் வட்டமடித்து திரும்பியதும், பெருமூச்செறிந்தேன். அப்செட் ஆனதைப் போல மேகன் தோன்றவில்லை. அவளது கேசம் இன்னமும் அதே அழகுடன் இருந்தது. நேற்று மேகன் அடைந்திருந்த சுயமதிப்பும் பெருமிதமும் இன்றும் மின்னின. அவளது பழைய உடையிலேயேதான் இருந்தாள். ஆனால் அவற்றை வித்தியாசமாய் தெரியும்படி பார்த்துக் கொண்டாள். தன்னைப் பற்றிய பெருமை தெரியவரும்போது அது ஒரு பெண்ணுக்குள் எத்தனை விந்தையான மாற்றத்தைச் செய்து விடுகின்றது. திடீரென்றுதான் நான் உணர்ந்தேன், ஆஹ்... மேகன் ஒரு வளர்ந்த பெண்!

மேகன் என்னை பார்த்ததும் சிரித்தாள். ‘‘ஹல்லோ’’ என்றாள்.

‘‘நேற்று பெருசா சண்டையொண்ணும் நடந்துடல, இல்ல?’’ என்று கேட்டேன் நான்.

நிச்சயப்படுத்தி ‘‘ஓ, நோ’’ என்ற அவள், பிறகு சற்று நிச்சய மற்றுப் போனவளாய், ‘‘யெஸ், நான் போட்டது சண்டை தான்னு நினைக்கிறேன்’’ என்றாள். ‘‘என்னவெல்லாமோ சொன்னாங்க, ஜெர்ரி. எனக்கு அது பிடிக்கல. லேட்டா

வந்ததையே பகடைக்காயா வெச்சு என்னைத் தனிமைப் படுத்திப் பேசினாங்க. மக்களே இப்படித்தான்... ஒண்ணு மில்லாததைப் பிடிச்சுக்கிட்டு கட்டுக்கதைங்களை அவுத்து விடும் கூட்டம் இதுங்க.''

இந்த அதிர்ச்சி நிறைந்த கோபம், வடியும் தண்ணீர் போல மேகனிடமிருந்து வடிந்துவிட்டதில் நான் மகிழ்ந்தேன்.

''உன்கிட்டே ஒரு ஆலோசனை பண்ணியாகணும். அதுக்காக நான் வந்திருக்கேன்'' என்றேன் நான். ''கவனி. எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்குது. உனக்கும் என்னைப் பிடிக்குதுனு நினைக்கிறேன்...''

அடக்க முடியாத உற்சாகம் பொங்க ''பைத்தியக் காரத்தனமா!'' என்று பதில் தந்தாள் அவள்.

''மேலும் நாம பிரமாதமா ஒத்துப்போறோம். ஆகவே நாம கலியாணம் பண்ணிக்கொள்வது சிறப்பா இருக்கும்னு எனக்கு தோணுது.''

''ஓ'' என்றாள் மேகன்.

அவள் ஆச்சரியப்பட்டவளாய் தோன்றினாள். அவ்வளவு தான். துணுக்குறவில்லை. அதிர்ச்சியுறவில்லை. ஜஸ்ட், கொஞ்சமான ஆச்சரியம்.

சரிபார்த்துக் கொள்ளக் கேட்பதைப் போல அவள் மறு படியும் கேட்டாள்: ''உண்மையாவா என்னைக் கலியாணம் கட்டிக்கிறேன்னு சொல்றீங்க?''

''இந்த உலகத்தில் இப்போதைக்கு எனக்கு வேறெதுவும் வேண்டாம் உன்னைத் தவிர'' என்றேன் நான். நானும் அப்படித்தான் இருந்தேன்.

"என் மேல காதல்ல இருக்கீங்கன்னா சொல்ல வரீங்க?"

"ஐ ஆம் இன் லவ் வித் யூ."

அசையாத அவளது நயனங்கள், ஆழ்ந்து கவனித்தன. "உலகத்திலேயே ரொம்ப கனிவான நபர் நீங்கதான்னு நினைக்கிறேன்" என்றாள் அவள். "ஆனா - ஐ ஆம் நாட் இன் லவ் வித் யூ. யெஸ்... நான் உங்க மேல இப்ப காதல்ல இல்ல."

"நீ என்னை விரும்பும்படி நான் பண்றேன்."

"அது நல்லதில்ல. நான் காதல் செய்யும்படி பண்ணப் படக்கூடாது. அது உள்ளூர ஊறணும்."

அவள் சற்று நிறுத்தினாள். பிறகு சொன்னாள்: "உங்களுக்கு ஏற்ற மாதிரியான மனைவி கிடையாது நான். நான் விரும்பப்படுவதைவிட வெறுக்கப்பட வேண்டியவள்."

இதனை அவள் விளங்கிக் கொள்ள முடியாத விசையுடன் குறிப்பிட்டாள்.

"வெறுப்பு நிலையானது கிடையாது. அன்பு, நிதர்சன மானது" என்றேன் நான்.

"அப்படியா என்ன?"

"நான் நம்புவது இது."

மறுபடியும் அமைதி கவிந்தது. பிறகு நான் சொன்னேன்: "அப்ப 'நோ'தான், இல்லையா?"

"யெஸ். நோதான்."

"நம்பிக்கையோட நான் காத்திருக்கலாமா?"

"அதுல என்ன லாபம் விளைஞ்சுடப் போகுது?"

# II

வெல், இவ்வளவுதான் நடந்தது. சற்றே வீழ்த்தப்பட்ட உணர்வுடன் நான் அறையை விட்டு வெளியேறி நடந்தேன்.

நான் முழுசாய் வீட்டை விட்டு நகர்வதற்குள் என்னிடம் சொல்ல நிறையவே ரோஸ் வைத்திருந்தாள். அனைத்தையும் மெஷின் போன்ற மனோநிலையுடன் நான் கேட்டேன்.

அந்தக் கொடூர நாளுக்குப் பிறகு எல்லாமே மாறிவிட்டதாய் சொன்னாள். குழந்தைகள் மீது வைத்த பாசம் மற்றும் புவர் ஸிம்மிங்டன் மட்டும் இல்லையென்றால், எப்போதோ வீட்டை விட்டுக் கிளம்பியிருப்பாளாம். இன்னும் ஒரு வேலைக்காரி வேண்டுமென்றும், கொலை நடந்த வீட்டில் அது சீக்கிரத்தில் கிடைக்காது என்றும் வருந்தினாள். ஆனாலும் வீட்டு வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு மிஸ் ஹாலண்ட்டே செய்து விடுகின்றாள் என்று வியந்தாள் கூடுதல் வியப்பாக, சீக்கிரத்திலேயே மிஸஸ் ஸிம்மிங்டன் ஆகும் எண்ணம் மிஸ் ஹாலண்ட்டுக்கு இருப்பதால்தான் இப்படி உயிரை விட்டு உழைக்கிறாள் என்றாள்.

ரோஸ் சொன்னதில் ஏதேனும் உண்மையிருக்குமா என யோசித்தேன். இரண்டாவது மிஸஸ் ஸிம்மிங்டன்னாக வர மிஸ் ஹாலண்ட்டிடம் திட்டம் இருக்குமா என்ன? மாறாக, வருந்தும் முதலாளிக்கு உதவ நினைக்கும் கனிவான ஓர் இதயத்தின் வெறும் வெளிப்பாடுதானா இதெல்லாம்?

எதுவாயிருந்தாலும், உருவாகும் விளைவென்னவோ ஒன்றேதான். ஏன் அப்படி இருக்கக்கூடாது, ஆங்? ஸிம்மிங் டன்னின் இளைய சிறுசுகளுக்கு அம்மா என்று ஒருத்தி

வேண்டும் எல்ஸீ ஒரு சாந்தமான ஆன்மா கூடவே, ஈர்க்கும் கவர்ச்சி வேறு - ஓர் ஆண் கண்ணகலப் பாராட்டும் ஒரு முக்கிய பெண்ணம்சம்... ஸிம்மிங்டன்னைப் போல கடுவம்பூனையாகினும்!

மேகன் பற்றிய சிந்தனைகளை அகற்றிப் போடுவதற்காக, இப்படி வேண்டாதவற்றையெல்லாம் நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

ம்ம்... நான் கைவிடப் போவதில்லை. ஓ நோ! மேகன் என்னவள்... நான் அவளை அடையப் போகிறேன்.

சற்று சுருக்கமாய் யோசித்துவிட்டு, மிஸ்டர் ஸிம்மிங்டன்னின் அலுவலகத்துக்குப் போனேன் நான்.

செய்துகொண்டிருக்கும் வேலையை நிறுத்திவிட்டு ஸிம்மிங்டன் என்னை உள்ளே அழைப்பதாய் சொன்னான் காவலாளி.

போன நான் ''குட் மார்னிங்'' என்றேன். ''மன்னிக்கணும். நான் வேலை நிமித்தமா வரல. இது முழுக்கவும் தனிப்பட்ட பர்ஸனல் விஷயம். நான் நேரடியா அந்த விஷயத்துக்கு வந்துடறேன். நான் மேகன் மேல ஆசைப்படுவதை நீங்களே கவனிச்சிருக்கலாம். என்னைக் கலியாணம் பண்ணிக்கோனு நான் அவளண்டை கேட்டேன். அவ மறுத்துட்டா. ஆனா இந்த மறுப்பை நான் இறுதியானதா எடுத்துக்கப் போவதில்ல.''

ஸிம்மிங்டன்னின் 'பாவம்' மாறுவதை நான் கவனித்தேன். அவரது சிந்தனையின் ஓட்டத்தை சுலபமாய் என்னால் படிக்க முடிந்தது. வீட்டில் ஒட்டாத ஒரு பிறவி, மேகன். ஸிம்மிங்டன் ஒரு கனிவானவர் என்பதில் நான்

நிச்சயமாயிருக்கிறேன். மரணமடைந்து விட்ட தனது மனைவியின் குழந்தைக்குப் போய் வீடு வாசல் இல்லாமல் தான் செய்து விடுவதாய் அவர் கனவிலும் நினைக்க மாட்டார். இப்படிப்பட்ட ஒரு சிக்கலான அவரது சூழ்நிலையில், மேகனின் திருமணம் அவருக்கு நிச்சயம் ஒரு நிவாரணமாய்த்தான் அமையும். உறைந்திருந்த அவரது முகம் இளகியது. வெளிறிய ஒரு சிரிப்பினை என்மீது போட்டார்.

''வெளிப்படையா சொல்றேனே... அவ திருமணம் பற்றி நான் இப்ப சிந்திக்கவே இல்ல, மிஸ்டர் பர்ட்டன். அவளை நீங்க இப்பல்லாம் அதிகமா வட்டமடிப்பதை நான் கவனிச் சிருக்கேன். ஆனா, நாங்க இன்னமும் அவளை ஒரு குழந்தை யாத்தான் நினைச்சுக்கிட்டிருக்கோம்.''

''அவ ஒண்ணும் குழந்தை கிடையாது'' என்றேன் நான் கூர்மையாய்.

''நோ, நோ. வயசை வெச்சு நான் அப்படி சொல்லல.''

''அவளைத் தடுக்காமல் விட்டால், அவ வயசுக்குத் தேவையானபடி அவளால நடந்துக்க முடியும்.'' நான் சிறு கோபத்துடனேயே இதனை சொன்னேன். ''இன்னிக்குத் தேதில 21 வயசு எனும் அரசாங்க மேஜரா அவ ஆகல. ஆனா இன்னும் ஓரிரு மாதங்கள் 21 வயசாகிடும் அவளுக்கு. என்னைப் பற்றி என்னென்ன தகவல்கள் வேணுமோ அவை யனைத்தையும் நான் உங்களுக்குத் தரேன். நல்ல வசதியிருக்கு. இதுவரை தப்பான வழிகள்ல போகாம டீஸெண்ட்டா வாழ்ந்திருக்கேன். நான் அவளைக் கவனிச்சுப்பேன். அவ சந்தோஷத்துக்குத் தேவையான அனைத்தையும் செய்து தரேன்.''

"நிச்சயமா, நிச்சயமா. அதெல்லாம் பிரச்சினையே இல்ல, மிஸ்டர் பார்ட்டன். இருந்தாலும், இது அவ கைலத்தான் இருக்கு."

"அவ இப்போ வந்துடலாம்" என்றேன். "உங்ககிட்டே விஷயத்தை சொல்லிவிடுவதுதான் சிறந்ததுன்னு வந்தேன்."

இதனை அவர் பாராட்டுவதாய் சொன்னார். நாங்கள் சச்சரவின்றிப் பிரிந்தோம்.

## III

நான் வெளியில் வந்ததும் எமிலி பார்ட்டன் மீது மோதும்படி ஆனது. ஷாப்பிங் கூடையொன்று அவர் கையில் வைத்திருந்தார்.

"குட் மார்னிங் மிஸ்டர் பார்ட்டன்... நேற்று நீங்க லண்டன் போனதா கேள்விப்பட்டேன்."

யெஸ். இவர் கேட்டிருக்கிறார். அவர் கண்களில் கனிவு தெரிந்தது, ஆனாலும், அவற்றில் அப்படியொரு பரபரப்பு.

"நான் என் டாக்டரைப் பார்க்கப் போயிருந்தேன்."

மிஸ் எமிலி புன்னகைத்தார்.

"மேகன் கணநேரத்துல ட்ரெயினைத் தவற விட்டுட்டதா நான் கேள்விப்பட்டேன். அது ஓடும்போது அவ தாவி ஏறினாளாமே..."

"என் உதவியுடன்" நான் சொன்னேன். "நான்தான் அவளைக் கட்டிப்பிடிச்சு உள்ளே தூக்கி நிறுத்தினேன்."

''நீங்க அங்கே இருந்ததுதான் எத்தனை அதிர்ஷ்டமா போச்சு! இல்லேனா அங்கே ஒரு விபத்து நடந்திருக்கும்.''

இவரிடம் நான் மேற்கொண்டு அவதிப்படுவது, படீரென்று உள்ளே நுழைந்த மிஸஸ் டேனே கேத்ராப்பால் தடுக்கப்பட்டது. அவருடைய வயதான தன்னுடனே அழைத்து வந்திருந்தார். ஆனால் மிஸஸ் டேனே என்னுடன் நேரடியாய் பேச்சில் நுழைவதிலேயே குறியாயிருந்தார்.

''குட் மார்னிங்'' என்றார் முதலில். ''மேகனைக் கூட்டிட்டுப் போய் நீங்க நல்ல புதுத்துணிகள் வாங்கித் தந்ததா கேள்விப்பட்டேன்? புத்திசாலித்தனமான காரியம் பண்ணியிருக்கீங்க. இப்படிப்பட்ட ப்ராக்டிக்கல் விஷயமா நினைக்க ஓர் ஆணாலத்தான் ஆகும்போல. அந்தப் பொண்ணின் நிலையைப் பற்றி நான் ரொம்ப நாளா கவலைல இருந்தேன். நல்ல புத்திசாலிப் பொண்ணுங்களுக்குத்தான் சுயநினைவு குறைஞ்சுடும் வாய்ப்பிருக்கு, இல்ல?''

இப்படிப்பட்ட ஒரு குறிப்பிடும்படியான வாக்கியத்தை விட்டுவிட்டு, மீன் மார்க்கெட்டுக்குள் நுழைந்து விட்டார் அவர்.

என் பக்கத்தில் விடப்பட்டிருந்த மிஸ் மார்ப்பிள், தனது கண்களை அழகாய் சிமிட்டி, சொன்னார்: ''மிஸஸ் டேனே கேத்ராப் ஒரு சிறப்பான பொண்ணு, தெரியுமா? அவ எப்பவுமே சரியாத்தான் பேசுவா.''

''இதனாலத்தான் அவரைப் பார்த்தாலே எச்சரிக்கையா இருக்கத் தோணுது.''

''உண்மைக்கு எப்பவுமே அந்த விளைவு இருக்கும். உண்மையச் சொன்னால் உடம்பு எரியுதோனு சொல்ல மாட்டாங்க...'' என்றார் மிஸ் மார்ப்பிள்.

மீன் மார்க்கெட்டுக்குள்ளிருந்து வெளியே பறந்து வந்து எங்களுடன் இணைந்தார் மிஸஸ் டேனே. ஒரு பெரிய சிகப்பு மீனை அவர் சுமந்திருந்தார்.

''மிஸ்டர் பையைப் போல வித்தியாசமான எதையாவது நீங்க எங்கேயாவது பார்த்திருக்கீங்களா?'' என்றார் அவர். ''நல்ல ஆண்மை, விறைப்பு, ஆளுமை. என்ன முழிக்கிறீங்க?''

ஆம், நான் முழித்துக் கொண்டிருந்தேன்!

## IV

ஜோன்னாவைச் சந்திக்க வேண்டியதை நினைக்கும்போது எனக்கு சற்று படபடப்பாய் இருந்தது, ஆனால் வீடு வந்தடைந் ததும்தான் நான் அப்படி டென்ஷனில் இருந்திருக்க வேண்டாம் என்று தெரிந்தது. அவள் வெளியே போயிருந் தாள். லஞ்சுக்குத் திரும்பவில்லை. இது பேட்ரிட்ஜை எரிச்சலாக்கியது. வரப்போவதில்லை என்பது முன்கூட்டியே தெரிந்திருந்தால் சமையலைக் குறைத்து செய்திருக்கலாம் என்று அவள் அங்கலாய்த்தாள். ''மிஸ் பர்ட்டன் நிச்சயமா லஞ்ச்சுக்கு வருவேன்னு சொல்லிட்டுப் போனாங்க.''

எனக்கு நல்ல பசியிருந்ததால் நான் அதிகப்படியாய் சாப்பிட்டு சமைத்தவற்றை தீர்த்துக் கொடுத்தேன். இதில் பேட்ரிட்ஜின் எரிச்சல் தணிந்தது. ஆயினும், என் சகோதரி எங்கே என்பதில் எனக்கு வியப்பே மிஞ்சியது. வரவர அவளுடைய நடவடிக்கைகள் அனைத்துமே மர்மமாகிக் கொண்டிருக்கின்றன.

வேகமாய் வரவேற்பறைக்குள் வந்து ஜோன்னா விழுந்தபோது மணி மூணரை. வெளியே கார் வந்து நின்ற

ஓசையை நான் கேட்டேன், அது க்ரிஃபித்தாய் இருக்கலாம் என நான் பாதி சந்தேகித்தேன். ஆனால் கார் அப்படியே போய்விட, ஜோன்னா மட்டுந்தான் தனியாய் உள்ளே வந்தாள்.

அவள் முகம் செக்கச் சிவந்துப் போயிருக்க, மனமொடிந்த நிலையில் இருந்தாள் அவள். ஏதோ நடந்திருக்கிறது என்று மட்டும் நான் கிரகித்துக் கொண்டேன்.

''என்ன சமாச்சாரம்?'' - நான் கேட்டேன்.

ஜோன்னா வாய் திறந்தாள். மீண்டும் வாயை மூடிக் கொண்டாள். பெருமூச்செறிந்தாள். தன்னைத்தானே ஒரு மூட்டையாய் இருக்கைக்குள் திணித்துக் கொண்டாள். தனக்கு முன்னால் இருந்த பகுதியை வெறிக்கலானாள்.

அவள் சொன்னாள்:

''படுபயங்கரமான நாளாய் இன்னிக்கு எனக்கு அமைஞ்சிடுச்சு.''

''என்ன நடந்தது?''

''அசாதாரணமான ஒரு விஷயத்தை நான் இன்னிக்கு செய்யும்படி ஆகிடுச்சு. ஓ... அசாத்தியமானதும்கூட...''

''என்னது அது---?''

''நான் ஜஸ்ட் ஒரு பொடிநடை போகலாம்னுதான் வெளிலே கிளம்பினேன். சாதாரணமான ஒரு நடை குன்றுப் பக்கமா போன நான் அப்படியே அதுக்கப்புறம் வரும் பொட்டல்காட்டுக்குள்ளும் நுழைஞ்சேன். நடந்துக் கிட்டேயிருந்தேன். சில மைல்கள் போயிருப்பேன் - எனக் கென்னவோ அப்படி தோணிச்சு. அப்ப ஒரு முடிவுல போய்

நின்னேன். அங்கொரு பண்ணையிருக்கு. வேறொன்றுமே அக்கம்பக்கத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை இல்லாத ஒரு தனிமைப் பண்ணை. எனக்கு தாகம் உயிரை வாங்கிச்சு. அத்தனை நடந்திருக்கேன் இல்ல. அதனால உள்ளே பால் ஏதாவது விற்பாங்களோனு நினைச்சேன். அதனால பண்ணைக்குள்ளே நுழைஞ்சு இப்படியும் அப்படியும் போனேன். அப்புறம் ஒரு கதவு திறந்தது. ஓவன் வந்தார்.''

''என்ன? ஓவன் க்ரிஃபித்? டாக்டர்?''

''வேற எந்த ஓவனை உனக்கு இங்கே தெரியும்? பண்ணைக் குள்ளே வந்தது கிராமத்தின் நர்ஸாயிருக்கு மோன்னு எதிர் பார்த்திருக்கார் அவர். உள்ளே ஒரு கர்ப்பிணிப் பெண் இருந்தா. நர்ஸ் வருவானு பார்த்துக்கிட்டேயிருந்தார் அவர். கூடவே ஒரு டாக்டரை அழைச்சுக்கிட்டு வரும் படியும் அவளுக்கு தகவல் அனுப்பியிருக்கார் இவர். அதாவது - அங்கு நிலைமை மோசமாகிக்கிட்டிருந்தது.''

''ஓ அப்படியா?''

''அதனால அவர் - என்னை செய்யச் சொன்னார். 'வாங்க. கம் ஆன். வேறு எவரையும்விட நீங்க நல்லாவே செய்வீங்க.' இப்படி சொன்னார். என்னால முடியாதுன்னு நான் சொன்னதுக்கு என்ன சொல்றீங்க நீங்கனு குரலை உயர்த்த ஆரம்பிச்சார். அதாவது இதைப்போலல்லாம் நான் முன்னே பின்னே பண்ணாததால் என்னால ஒழுங்காப் பண்ணிட முடியாதுனு சொல்ல வந்தேன்னு விளக்கினேன். மருத்துவ ரீதியா எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னேன்.

''அதனால இப்ப என்ன பெருசா கிழிஞ்சிடுச்சுன்னார். அப்புறந்தான் அவர் தாளமுடியாதவரா ஆகிட்டார். என்னை எரிப்பதைப் போல பார்த்தார். 'நீயும் பொபண்ணுதானே,

ஆங்? இன்னொரு பொண்ணுக்கு உதவ ஒரு பொண்ணான உன்னால முன்வரமுடியாதா?' இந்த ரீதியில என்னைப் பந்தாடினார். டாக்டருக்குப் படிக்க எனக்கு விருப்பம்னு நான் அவரண்டை ஒருமுறை சொல்லியிருப்பதாகவும், நர்ஸா ஆகி உலகுக்கே சேவை பண்ண ஆசைன்னு சொன்ன தையும் குறிப்பிட்டார். 'எல்லாம் வாய்ப்பந்தல்தானா, ஆங்?' என்றார் மிரட்டும்தொனியில். 'பேசினதிலெல்லாம் உண்மையே இல்லைன்னு நினைக்கிறேன். ஆனா இது உண்மை. நிஜமா நடப்பது. ஆகவே ஒரு நல்ல மனுஷியா இப்ப நடந்துக்க. ஆடையலங்காரம் பண்ணிட்டு மினுக்கிக் கிட்டு அலையும் தெருவோர அழகியா நடந்துக்காதே.' இவ்ளோ தூரத்துக்குப் பேசிட்டார்.

''அதனால அசாத்தியமான சங்கதிகளையெல்லாம் பண்ணிட்டு வந்து நிக்கறேன், ஜெர்ரி. உபகரணங்களை எடுத்தேன். அவற்றை கொதிக்க வெச்சு கொடுத்தேன். தரப் பட்ட உபகரணங்களைக் கொதிநீரில் போட்டுத் தந்தேன். என்னத்தையெல்லாமோ எடுத்துத் தந்தேன். நிக்கக்கூட முடியாதபடி அசதியாயிட்டேன். அது ஒரு தீக்கனா. ஆனா, அவர் அவளைக் காப்பாத்திட்டார் - குழந்தையையும். அது அழகா பொறந்திடுச்சு. அதைக் காப்பாற்ற முடியும்னு அவர் துளிகூட நினைக்கல.''

ஜோன்னா தனது உள்ளங்கைகளால் முகம் முழுவதையும் மூடிக்கொண்டாள்.

நான் எனக்குள் மூண்ட சந்தோஷத்தோடு ஆழ்ந்து ஜோன் னாவை பார்த்துக் கொண்டிருந்தேன். ஓவன் சாதித்திருப் பதற்காக அவருக்கு மானசீகமாக ஒரு வந்தனத்தை வைத்தேன். வாழ்க்கை நிதர்சனம் என்றால் என்ன என்பதை

முதன்முறையாக முகத்திலறைந்தாற்போல ஜோன்னாவுக்கு காட்டியுள்ளார் அவர்.

நான் சொன்னேன்: ''உனக்கு ஒரு கடுதாசி வந்திருக்கு. ஹால்ல வெச்சிருக்கேன். பால்கிட்டேயிருந்துன்னு நினைக்கிறேன்.''

''அப்படியா?'' என்றவள் கணநேரம் தாமதித்துவிட்டு சொன்னாள்: ''டாக்டர்கள் என்னல்லாம் பண்ண வேண்டியிருக்கும்னு எனக்கு ஒரு ஐடியா கிடையாது, ஜெர்ரி. அப்பப்பா, அவங்களுக்குத்தான் எத்தனை அசாத்திய தைரியம் தேவைப்படுது!''

நான் ஹாலுக்குப் போய் ஜோன்னாவின் கடிதத்தைக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தேன். அதனை அவள் திறந்தாள்... அதன் மேட்டரைத் தோராயமாய் பார்த்தாள்... பிறகு அது கீழே நழுவும்படி விட்டுவிட்டாள்.

''அவர் - அவர் இருக்காரே அவர் - ஆஹ், ஒண்டர்ஃபுல். அவர் போராடிய வேகம் தோற்கக்கூடாது என்ற அவரது உத்வேகம்! அவர் என்கிட்டே கொடூரமாகவும் கோபமாகவும் நடந்துக்கிட்டதென்னவோ உண்மைதான்... ஆனாலும் அவர் இங்கிய விதம் ஓர் ஆச்சரியம்தான்!''

நான் கண்டுகொள்ளப்படாமல் கீழே விடப்பட்டிருந்த பாலின் கடுதாசியை சந்தோஷ உணர்வோடு பார்த்தேன். அவன் நோயிலிருந்து ஜோன்னா பூரணமாய் குணமாகிவிட்டாள்.

# அத்தியாயம் - 13

## I

*நாம் எதிர்பார்த்துக் காத்திருப்போம்... அப்போது கிடைக்க வேண்டிய அது நமக்கு கிடைக்காது.*

ஜோன்னாவின் பிரச்சினை மற்றும் என்னுடைய தனிப் பட்ட பிரச்சினைகள் ஆகியவற்றில் நான் முழுகிக்கிடக்கும் போது மறுநாள் காலையில் நாஷின் வார்த்தைகளைக் கேட்டதும் நான் அப்படியே மயங்கித்தான் போனேன்.

''நாம அவளைப் பிடிச்சுட்டோம், மிஸ்டர் பர்ட்டன்!''

ரிஸீவரைத் தவறவிடுமளவுக்கு நான் துணுக்குற்றுப் போனேன்.

''அதாவது, நாம தேடிக்கிட்டிருந்த அந்த---''

அவர் இங்கு கூர்மையாய் குறுக்கிட்டார்.

''நீங்க இருக்குமிடத்தில், நீங்க பேசுவதை யாராவது ஒட்டுக்கேட்கும் வாய்ப்புண்டா?''

''நோ. எனக்கு அப்படித் தோணல. வெல், ஒருவேளை.''

கிச்சனுக்கு வழிவிடும் கதவு கொஞ்சமாய் அகண்டுள்ளதோ என்று தோன்றியது எனக்கு.

''உங்களால ஸ்டேஷனுக்கு வருவதுல ஏதாவது அசௌகரியம் இருக்குமா?''

''அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாது. உடனேயே.''

அடுத்த கணங்களில் நான் போலீஸ் ஸ்டேஷனில் இருந்தேன். உள்ளேயிருந்த ஒரு அறையில் நாஷும் சார்ஜெண்ட் பார்க்கின்ஸும் ஒன்றாய் இருந்தார்கள். நாஷ் முகம் முழுவதும் சந்தோஷச் சிரிப்பு.

''ஒரு நீண்ட பின்தொடர்தல் தேவைப்பட்டது'' என்றார் அவர். ''ஆனா, இறுதியில, ஸ்தலத்துலேயே நாங்க இருந்தோம்.''

அவர் ஒரு கடுதாசியை எடுத்து டேபிளுக்குக் குறுக்காய் போட்டார். இம்முறை அது முழுதும் தட்டச்சு செய்யப் பட்டிருந்தது. வழக்கமாய் அது அமையும் வகையிலேயேதான் இம்முறையும் கடுதாசி அமைக்கப்பட்டிருந்தது, ஆனால் வலி அதிகம் தராமல்.

செத்துப்போன ஒருத்தியுடைய இடத்துக்கு நீ போட்டிப் போடுவதில் எவ்விதமான புண்ணியமும் விளைந்து விடாது. இந்தக் கிராமமே உன்னைப் பார்த்துச் சிரிக்கின்றது. உடனே இடத்தைக் காலி பண்ணு. கெட் அவுட். காலந்தாழ்வதற்கு முன்னாடி கிளம்பி விடுவது உனக்கு நல்லது. இது ஓர் எச்சரிக்கை. இன்னொரு பெண்ணுக்கு என்ன நடந்தது என்பதை நினைவில் வைத்துக்கொள். வெளியேறு. இப்பகுதி யிலிருந்து விலகியே இருந்துவிடு.

மேற்கொண்டு சில கீழ்த்தரமான வார்த்தைகளுடன் கடிதம் முடிந்திருந்தது.

"இது இன்னிக்குக் காலைல மிஸ் ஹாலண்ட்டை அடைந்தது" என்றார் நாஷ்.

"அவங்களுக்கு ஒண்ணுமே வரலேன்னு சொன்ன கணக்கு இப்ப தீர்ந்தாச்சு" என்றார் பார்க்கின்ஸ்.

"யார் எழுதினது இதை?" - நான் கேட்டேன்.

நாஷின் முகத்திலிருந்த சந்தோஷத்தின் ஒரு பகுதி இக்கேள்வியால் மறைந்தது.

அவர் அசதியும், அக்கறை உணர்வும் கலந்ததோர் கலவையானார். அவர் துக்கமாய் சொன்னார்:

"இக்கேள்விக்கான பதில், ஒரு டீஸெண்ட் ஆளை பயங்கரமா தாக்கும் என்ற அளவுல நான் வருந்தறேன். ஆனா, நடந்திருக்கே. சொல்லப்போனால், அவருக்கே சந்தேகம் இருந்திருக்கு."

"யார் எழுதினது இதை?" - மீண்டும் கேட்டேன் நான்.

"மிஸ் ஐமீ க்ரிஃபித்."

## II

நாஷும் பார்க்கின்ஸும் அன்றைய தினத்தின் மத்தியானப் பொழுதில் க்ரிஃபித்தின் வீட்டுக்கு கைது வாரண்ட்டுடன் போனார்கள்.

நாஷின் அழைப்பின்பேரில் நானும் அவர்களுடன் சென்றேன்.

“டாக்டருக்கு உங்க மேல அதிக அபிப்ராயம் இருக்கு” என்றார் நாஷ். “இங்கே அவருக்கு நிறைய நண்பர்கள் கிடையாது. இந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளும்படி அவருடன் இருந்து உதவுவது, மிஸ்டர் பர்ட்டன், உங்களுக்கு ஒரு சுமையா இருக்குமா?”

எனக்கு சம்மதமே என்றேன் நான். இப்பணியில் எனக்கு உடன்பாடு அதிகம் இல்லை. ஆனால், என்னாலும் ஒரு சிறு உபகாரம் அமைகிறதே என்று நினைத்துக் கொண்டேன் நான்.

அழைப்பு மணியை நாங்கள் அடித்து மிஸ் க்ரிஃபித் பற்றிக் கேட்டவுடன் வரவேற்பறைக்கு அனுப்பப்பட்டோம். எல்ஸீ ஹாலண்ட், மேகன், ஸிம்மிங்டன் எல்லோரும் அங்கு தேநீர் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

நல்ல நாகரீகமாய் நடந்து கொண்டார் நாஷ்.

ஐமீயுடன் நாஷால் சில வார்த்தைகளை தனியாய் பேச முடியுமா என்று அவரிடமே அனுமதி கேட்டார் சூப்பரின்டெண்டெண்ட்.

அவர் எழுந்து கொண்டு எங்களை நாடி வந்தார். வீழ்த்தப்பட்டுவிட்ட ‘பாவத்தை’ கொஞ்சமாய் அவரது பார்வையில் பார்த்தேன் நான். அப்படியேயானாலும் அது உடனே போய்விட, அவர் சாதாரணமாகவும் உளமார்ந்த வரவேற்புடனும் நடந்து கொண்டார்.

“நானா?” என்றார். “போக்குவரத்து விதிகள் எதையாவது மறுபடியும் நான் மீறிட்டேனா என்ன?” என்றார் அவர் கேலியாய்.

வரவேற்பறையிலிருந்து வெளியேறி, மைய அறையைக் கடந்ததும் உள்ள சிறு அறை நோக்கி எங்களுக்கு வழிகாட்டினார் அவர்.

வரவேற்பறையின் அறையை நான் மூட ஆரம்பிக்கும் போது, ஸிம்மிங்டன்னின் தலை கூர்மையாய்த் திரும்பியதை நான் கவனித்தேன். அவரது சட்டபூர்வமான அனுபவங் களில் பல அனுபவங்கள் போலீஸ் கேப்களுடன் இருந்திருக்க வேண்டும்... நாஷின் அணுகுமுறையில் இருந்த ரகசியத்தை அவர் அறிந்திருக்க வேண்டும். அவர் பாதி எழுந்து விட்டார்.

மற்றவர்களைப் பின்தொடர்வதற்காக கதவினை முழுது மாய் நான் அடைக்கும்போது பார்த்தவை இவ்வளவுதான்.

நாஷ், அவர் சொல்ல வேண்டியதை செய்து கொண்டிருந் தார். அவர், சாந்தமாகவும் சரியாகவும் நடந்து கொண்டிருந் தார். ஐமீயை எச்சரித்த அவர், பிறகு, அவருடன் கிளம்பிவர வேண்டும் என்று சொன்னார். ஐமீ க்ரிஃபித்தைக் கைது செய்வதற்காக கைது வாரண்ட் அவரிடம் இருக்க அதனை அவர் வாசித்தார் ---

அந்த எக்ஸாக்ட் சட்ட வார்த்தைகளை நான் இப்போது மறந்துவிட்டேன். அதில், மொட்டைக் கடுதாசிகளுக் கென்றுதான் காரணம் போடப்பட்டிருந்தது... கொலை பற்றி அல்ல.

தனது தலையை பின்னுக்குத் தள்ளிய ஐமீ, அதே நிலையில் அமோகமாய் சிரித்தார். பிறகு வெடித்தார்: ‘‘என்ன ஒரு கேலிக்கூத்து... முட்டாள் மாதிரி பேசறீங்க நீங்க! ஏதோ நாந்தான் அப்படிப்பட்ட அழுக்குக் கடுதாசிகளை டஜன் கணக்கா எழுதினவ மாதிரியில்ல இருக்கு நீங்க சொல்வது? உங்களுக்கு பைத்தியம் பிடிச்சிருக்கணும், யெஸ். அப்படிப்

பட்ட வார்த்தைகள்ல ஒண்ணுகூட நான் எழுதினது கிடையாது - எழுதல.''

அக்கடிதத்தினை எல்ஸீ ஹாலண்ட்டிடம் கொடுத்திருந்தார் நாஷ். இப்போது, ''இதை நீங்க எழுதலேன்னு மறுக்கறீங்களா, மிஸ் க்ரிஃபித்?'' என கேட்டார்.

இங்கு அவர் பதில்பேசத் தயங்கினார்... ஆனாலும் அது கணத்தின் பின்ன அளவுதான்.

''ஆமாம், ஆமாம். இக்கடிதத்தை நான் முன்னேபின்னே பார்த்ததில்ல.''

நாஷ் சாந்தமாய் சொன்னார்: ''கவனிங்க மிஸ் க்ரிஃபித். உங்ககிட்டே ஒண்ணு சொல்லிக்க விரும்பறேன். எல்ஸீக்கு நீங்க எழுதின கடிதத்தை நீங்களே பெண்கள் இன்ஸ்டிட்யூட் டைப்-மெஷின்ல உக்காந்து முந்தாநாள் ராத்திரி பனிரெண்டரை மணிக்கு தட்டச்சு செய்தது கவனிக்கப் பட்டிருக்கு. நேற்று நீங்க கைல ஒரு கொத்துக் கடுதாசிகளுடன் போஸ்ட் ஆபீஸ் போயிருக்கீங்க---''

''நீங்க சொல்லும் இந்த குறிப்பிட்ட கடிதத்தை நான் போஸ்ட் பண்ணல.''

''நோ, நீங்க பண்ணல. ஸ்டாம்ப் வாங்கும்போது வேணும்னே இதை நீங்க தவற விட்டிருக்கீங்க. அப்பத்தானே பிறகு யாராவது பார்த்து, 'யாரோ கைதவறிக் கீழே விட்டுட்டாங்க'னு நினைச்சு போஸ்ட் பாக்ஸ்ல சேர்ப்பாங்க! அஃப்கொர்ஸ், அதுவும் நடந்துடுச்சு...''

''நான் அப்படியெல்லாம்

கதவு திறக்கப்பட்டு ஸிம்மிங்டன் உள்ளே வந்தார். அவர் கூர்மையாய் கத்தினார்: ''என்ன நடக்குது இங்கே? ஐமீ...

ஏதாவது தவறு நடந்திருந்தாலும் அதை சட்டபூர்வமா சந்திக்க உங்களுக்கு உரிமையிருக்கு. வேணும்னா நான் உங்களுக்காக---''

இங்கு ஐமீ உடைந்து போனார். கைகளால் முகத்தை மூடிக்கொண்டு ஒரு நாற்காலி தேடித் தடுமாறினார். அவர் சொன்னார்:

''நீங்க போயிடுங்க டிக், இங்கேயிருந்து போயிடுங்க. நீங்க வேண்டாம்! என் வக்கீலா, நீங்க வேண்டாம்!''

''உங்களுக்கு இப்ப ஒரு வக்கீல் அவசியம், மை டியர் கேர்ள்...''

''நீங்க வேணாம். எ-எ-என்னால தாங்காது. இதெல்லாம் நீங்க தெரிஞ்சுப்பதை நான் விரும்பல.''

பிறகு அவர் அமைதியாய் சொன்னார்:

''அப்ப நான் வக்கீல் மைல்ட்மே-யை ஏற்பாடு செய்றேன். இதுக்கு சம்மதமா?''

ஒப்புதலாய் தலையசைத்தார் அவர். இப்போது அவர் தேம்பிக் கொண்டிருந்தார்.

ஸிம்மிங்டன் அறையை விட்டகன்றார். கதவருகில் ஓவன் க்ரிஃபித்துடன் அவர் மோதிக் கொள்ளும்படியானது.

''என்ன இதெல்லாம்?'' என்றார் டாக்டர் ஓவன் வெறியாய். ''என் சகோதரி---''

''மன்னிக்கணும் டாக்டர் க்ரிஃபித். வெரி ஸாரி. ஆனா எங்களுக்கு வேற வழி கிடையாது.''

''அந்தக் கடுதாசிகளுக்கெல்லாம் காரணம் இவள்னா நீங்க நினைக்கிறீங்க?''

“அதுல சந்தேகமே கிடையாது ஸார்” - சொன்ன நாஷ், ஐமீ பக்கம் திரும்பி விட்டார். “நீங்க இப்ப எங்ககூட வந்தாகணும் மிஸ் க்ரிஃபித், ப்ளீஸ். ஒரு வக்கீல் மூலமா மேற்கொண்டு வழக்கினைச் சந்திக்க உங்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்.”

ஓவன் கதறினார்: “ஐமீ?”

அவரை கொஞ்சமும் பார்க்காமல் கடந்து போய்விட்டார் ஐமீ. அப்போது சொன்னார்:

“என்கூட பேசாதே. இப்போதைக்கு எதுவும் சொல்லாதே. உனக்கு புண்ணியமாப் போகும் என்னைப் பார்க்காதே!”

அவர்கள் வெளியெறிவிட்டார்கள். சாமிபிடித்த ஒருவனைப் போல நின்றார் ஓவன்.

நான் சில நிமிடங்கள் காத்திருந்துவிட்டு பிறகு அவரை நெருங்கி வந்தேன்.

“என்னால ஏதாவது உதவி மீகூணும்னா, சொல்லுங்க க்ரிஃபித்.”

கனவில் பேசுபவரைப் போல சொன்னார் அவர்:

“ஐமீ? இதை நான் நம்பல.”

“நடப்பது, ஒரு முழு தவறாகூட இருக்கலாம்.” நான் சுரத்தற்று ஆலோசித்தேன்.

அவர் மெதுவாய் சொன்னார்: “அப்படியிருந்திருந்தால், அவ விஷயத்தை இப்ப எடுது துக்கிட்டதைப் போல எடுத்துக்கிட்டிருக்க மாட்டா. என்னால நம்ப முடியல.”

ஒரு சேரில் புதைந்தார் அவர். திக்கான ப்ராண்டி கொண்டு வந்து அவருக்குத் தருவதில் நான் முனைந்தேன். அதனை அவர் விழுங்கியதும் அதன் பலன் கிடைத்ததைப் போலிருந்தது.

அவர் சொன்னார்: ''முதல்ல, கேட்ட உடனே என்னால உள்வாங்கிக்க முடியல. இப்ப ஐயம் ஆல் ரைட். தேங்க்ஸ் பார்ட்டன்... இதுல உங்களால எதுவும் செய்ய முடியாது. யாராலும் எதுவும் செய்ய முடியாது.''

கதவு திறக்க, உள்ளே ஜோன்னா ஓடிவந்தாள். அவள் வெளிறிப் போயிருந்தாள். ஓவனை நெருங்கியவள் அப்படியே என்னைப் பார்த்தாள். சொன்னாள்: ''நீ கிளம்பு ஜெர்ரி. இது என் வேலை.''

நான் கதவு கடந்து வெளியேறும்போது, அவர் சேருக்கு அருகில் உட்கார அவள் முட்டிப்போடுவதை பார்த்தேன்.

## III

அடுத்த இருபத்து நான்கு மணிநேர சம்பவங்களை என்னால் ஒரு கோவையாய் சொல்ல முடியாது. ஒன்றுக் கொன்று தொடர்புகொள்ளாமல் பல்வேறு சமாச்சாரங்கள் தனித்து நிற்கின்றன.

ஜோன்னா, வெளிறிப்போய் தனக்குள் தானே ஒடுங்கிப் போனவளாய் வீட்டுக்கு வந்தது ஞாபகமிருக்கிறது... அவளைக் குஷிப்படுத்த, ''இப்ப யார் இந்தத் தேவதையின் பின்னால மாட்டிக்கிட்டது?'' என்று நான் கேட்டதும் நினைவிருக்கிறது.

இதற்கு அவள் வலி கொண்டு உதடு சுழித்து விரக்தியாய் சிரித்ததும், ''அவருக்கு நான் வேணாமாம் ஜெர்ரி... அவருக்கு பெருமை தலைக்கு மேல கூத்தாடுது - தற்பெருமை... ச்சே'' என்று முனகியதும் காதுகளில் இருக்கின்றன.

இதற்கு பதிலாய், ''என்னவளுக்கும் நான் வேணாமாம்...'' என்றேன் நான்.

நாங்கள் அப்படியே சற்று நேரம் உட்கார்ந்திருந்தோம். கடைசியாய் அவள் சொன்னாள்: ''இப்போதைக்கு யாருக்குமே பார்ட்டன் குடும்பத்தார் வேண்டாம் போல!''

''போனா போகட்டும் டியர்... உனக்கு நானும் எனக்கு நீயும் ஆறுதலா இருக்கலாம்.''

இதற்கு ஜோன்னா, ''இப்ப என்னை ஆசுவாசப்படுத்த, ஜெர்ரி, இந்த வார்த்தைகள் ஏனோ பத்தலடா'' என்றாள்.

## IV

மறுநாள் ஹை ஸ்ட்ரீட்டுக்குப் போயிருந்தேன். நூற்றில் தொண்ணூறு பேர் ஐமீயின் கைது குறித்தே பேசிக் கொண்டிருந்தார்கள். ஐமீ க்ரிஃபித்தை என்றுமே நம்பியது கிடையாது என சொல்லிக் கொண்டிருந்தார் எமிலி பார்ட்டன். மளிகைக்கடைக்காரனின் மனைவி, ஐமீயின் பார்வையில் எப்போதும் விளங்கிக் கொள்ளமுடியாத ஒரு ரகசியம் இருக்கும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்---

ஐமீக்கு எதிரான வழக்கு தீர்மானிக்கப்பட்டு விட்டதாய் நாஷிடமிருந்து நான் அறியப் பெற்றேன். அவருடைய வீட்டில் நடந்த தேடுதலில், எமிலி பார்ட்டன் வீட்டுப் புத்தகத்திலிருந்து நறுக்கப்பட்ட பக்கங்கள் கிடைத்தன.

படிக்கட்டுகளுக்கு அடியிலிருந்த கப்போர்டில், வால்பேப்பர் உருளைகளுக்குள் ஒன்றாய் அது மறைக்கப்பட்டிருந்தது.

''செமத்தியான ஓரிடம்'' என்று ஜாலியாய் சொன்னார் நாஷ். ''எந்த நேரத்துல எந்த கப்போர்டை வேலைக்காரி திறந்து பாப்பான்னு நமக்குத் தெரியாது. ஆனா, வேண்டாத சாமான்கள் மட்டுமே போட்டு வைக்கப்படும் அத்தகைய கப்போர்டுகளை, ஏதாவது வீணாப்போன சமாச்சாரத்தைத் திணிக்கத்தான் மறுபடியும் திறப்போமே தவிர, மற்றபடி ஆண்டு முழுமைக்கும் அது மூடியேதானே இருக்கும்.''

''மாடிப்படியின் கீழ் வளைவிடம்னா இந்தப் பொண்ணுக்கு ரொம்பப் பிடிக்கும் போல...!'' - நான் சொன்னேன்.

''யெஸ். க்ரிமினல் மூளைக்கு வெரைட்டியா ஏதாவது தேவைப்பட்டுக்கிட்டே இருக்கும். ஆங், அந்த கொல்லப் பட்ட பெண்ணைப் பொறுத்தமட்டும், மேற் கொண்டு நாம் நகர ஒரு துப்பு கிடைச்சிருக்கு. மூலிகை மருந்துகளை பாத்திரத்தில் போட்டு கடையப் பயன்படுத்தப் படும் குழவி ஒன்று, டாக்டர் அலுவலகத்திலிருந்து காணாமல் போயிருக்கு. இதனாலத்தான் அவ அடிக்கப்பட்டிருக்கா - பந்தயம் கட்டுறேன் நான்.''

''அதை எப்படி தூக்கிக்கிட்டு பொதுயிடத்துல இறங்க முடியும்?'' - நான் மறுத்தேன்.

''மிஸ் க்ரிஃபித்துக்கு இது ஒரு பிரச்சினையா அமையாது. அன்னிக்கு மத்தியானம் சாரணியர் இடத்துக்குப் போகணும் என்பது அவங்க திட்டம். போகும் வழியிலேயே செஞ்சிலுவைச் சங்கத்துல இறங்கி காய்கறிகள் கொடுக்கவும் முடிவெடுத்திருக்காங்க. இதுக்காக அவங்க பெரிய கூடை கொண்டு போயிருக்கணுமே...''

''மூளையைக் குடைந்த அந்தக் குத்தூசி? அதைக் கண்டு பிடிச்சுட்டீங்களா?''

''நோ. அது முடியும்னும் எனக்குத் தோணல. கொலை காரனுங்க பைத்தியக்காருனுங்கதான்... ஆனா நம்ம கொலை காரி, ரத்தம் படிஞ்ச ஊசியை அப்படியே ஒரு சாட்சியா விட்டுட்டுப் போகுமளவுக்கு பைத்தியம் கிடையாது. அதைக் கழுவி எங்காவது வீசியிருப்பா...''

''எல்லா சாட்சிகளும் நமக்குக் கிடைத்து விட முடியாதே...'' என்றேன் நான்.

இச்செய்தி கடைசியாய் போய்ச்சேர்ந்தயிடம், பாதிரியார் இல்லம். ஓல்ட் மிஸ் மார்ப்பிள் இச்செய்தியால் மிகவும் கிலேசம் அடைந்திருந்தார். இதுகுறித்து என்னிடம் மிக நேர்மையாய் கருத்துக்கள் வைத்தார்.

''இது உண்மை கிடையாது, மிஸ்டர் பர்ட்டன். நான் நிச்சயமா சொல்றேன் - இது உண்மை கிடையாது.''

''எனக்கென்னவோ இதுதான் போதுமான அளவு உண்மைன்னு படுது. காவல்துறை காத்திருந்திருக்கு, தெரியுமா. அவ டைப் பண்ணினதை அவங்க ரெண்டு கண்களால பார்த்திருக்காங்க.''

''யெஸ், யெஸ் - ஒருவேளை அவங்க பார்த்திருக்கலாம். இதை நான் ஒத்துக்கறேன்.''

''மொட்டைக் கடுதாசிகள் எழுத பயன்படுத்தப்பட்ட காகிதத் துண்டுகள், ஐமீயுடைய வீட்டிலிருந்தே கைப்பற்றப்பட்டிருக்கு.''

மிஸ் மார்ப்பிள் என்னை முறைத்தார். பிறகு அவர் சொன்னார், மிகவும் தணிந்த குரலில்: "ஆனா இது கொடுமை நயவஞ்சகத்தனம்..."

வேகமாய் எங்களிடம் வந்தார் மிஸஸ் டேனே. எங்களுடன் இணைந்து கொண்டு சொன்னார்: "என்ன விஷயம், ஜேனே?"

வேறுவழியின்றி மிஸ் மார்ப்பிள் முணுமுணுத்தார்:

"ஓ டியர், ஓ டியர், யாராலதான் என்ன செஞ்சுட முடியும்?"

"எதனால இப்படி பிதற்றறே, ஜேனே?"

மிஸ் மார்ப்பிள் சொன்னார்: "ஏதோவொண்ணு இருக்கணும். விடுபட்ட ஏதோவொண்ணு. என்னது அது? ப்ச்... எனக்கு வயசாயிடுச்சு. இந்த விஷயத்துல ஆரம்பத் திலிருந்தே இல்லாததால முழு விஷயமும் பிடிபட மாட்டேங்குது. முட்டாளா ஆகிட்டே வரேன்னு வேற தோணுது. ப்ச்..."

இக்கட்டான நிலையில் நானிருப்பதாய் நான் பரிதவிக்கும் போது, தனது தோழியைக் கைத்தாங்கலாய் மிஸஸ் டேனே அழைத்துக் கொண்டு சென்று விட்டதில் மகிழ்ந்தேன்.

இந்நிலையில், அன்று மத்தியானம் மிஸ் மார்ப்பிள்ளை நான் பார்க்க வேண்டியதாயிற்று. நான் வீடுதிரும்பிக் கொண்டிருந்தபோது.

கிராமத்தின் கோடியிலிருக்கும் பாலத்தின் ஓரத்தில் நின்றுக் கொண்டிருந்தார் அவர். இது, மிஸஸ் க்ளீட்டின் காட்டேஜுக்கு அருகில் வரும். இருக்கும் எல்லாரையும்

விட்டுவிட்டு, அங்கு மேகனுடன் பேசிக் கொண்டிருந்தார் அவர்.

நான் மேகனைப் பார்க்க வேண்டும் என்றிருந்தேன். நாள் முழுக்கவும் இதற்காக காத்திருந்தேன் நான். எனவே என் நடையை துரிதப்படுத்தினேன் நான். ஆனால் நான் அவர்களிருவரையும் அடைந்தபோது, திரும்பிய மேகன், எதிர்த்திசையில் நடந்து போய்விட்டாள்.

இது என்னைக் கோபமாக்கியது. நான் அவள் பின்னாலேயே ஓடியிருப்பேன் ஆனால் மிஸ் மார்ப்பிள் என்னைத் தடுத்து நிறுத்தி விட்டார்.

''நான் உங்ககூட பேசணும்'' என்றார் அவர். ''நோ, மேகனுக்குப் பின்னாலேயே போகாதீங்க. அது புத்திசாலித் தனமாகாது.''

நான் கூர்மையாய் ஓடி அவளுடன் சேர்ந்திருப்பேன் ஆனால் மிஸ் மார்ப்பிள்ளின் வார்த்தைகள் என்னை நிராதரராவாய் ஆக்கின.

''அந்தப் பொண்ணுக்கு நிறைய தைரியம் இருக்கு உயர்ந்தபட்ச ஊக்கம் இருக்கு.''

இப்பவும்கூட நான் மேகனுக்குப் பின்னால் ஓடோடியிருப்பேன், ஆனால் மிஸ் மார்ப்பிள் சொன்னார்:

''முயற்சிக்க வேண்டாம். அவளை இப்ப பார்க்கவும் வேண்டாம். நான் என்ன பேசறேன்னு எனக்கு முழுசும் தெரியும். அவ, அவளுடைய வைராக்கியத்தை விடாமல் காக்கணும்.''

வயதானவளின் தன்னம்பிக்கையில் இருந்த ஏதோ வொன்று, என்னை சில்லிட வைத்தது. எனக்குத் தெரியாத

ஏதோவொன்றினை அவர் நிச்சயப்படுத்தித் தெரிந்து வைத்துள்ளதைப் போல இருந்தது...

நான் பயந்தேன். ஏன் பயந்தேன் என்று தெரியவில்லை.

நான் வீட்டுக்குத் திரும்பவில்லை. ஹை ஸ்ட்ரீட்டுக்குப் போனேன். அங்கேயே மேலும் கீழுமாய் இலக்கின்றி நடந்துக் கொண்டிருந்தேன். நான் எதற்காக காத்திருக்கிறேன் என்றோ எதனை சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்றோ எனக்குத் தெரியவில்லை...

பேசியே அறுத்துவிடும் அந்த ஓல்ட் கலோனல் ஆப்பிள்டன்னை அங்கு சந்தித்தேன். அவர் என் சகோதரி பற்றிக் கேட்டார். பிறகு ஆரம்பித்து விட்டார்:

''க்ரிஃபித்தின் சகோதரி பற்றி கிளம்பியுள்ள சேதி என்னது இது? மொட்டைக் கடுதாசி பிஸினஸின் அடிவேரே இவதான்னு சொல்லிக்கிறாங்க. ஒவ்வொருவரையும் களேபரமாக்கிய இக்கடுதாசிகளின் சொந்தக்காரியே இவதான்னு சொல்றாங்க? முதல்ல என்னால நம்பவே முடியல... இதுதான் உண்மைன்னு அடிச்சு சொல்றாங்களே...''

போதுமான அளவுக்கு உண்மை என்றேன் நான்.

''வெல், வெல்... இதுலே எல்லாம் கறாரா வெற்றி பெற நம்ம போலீஸ் படைக்கா சொல்லித் தரணும்? அவங்களுக்கு அவகாசம் கொடுக்கணும், அவ்ளோதான்... அவகாசம். மொட்டைக் கடுதாசி ஸ்டண்ட்டைப் பார்த்தீங்கள்லே! ஆச்சரியம், ஆச்சரியம். வயசான கேஸுங்கத்தான் மொட்டைக் கடுதாசிகளுக்குள்ளே இறங்கும்... இந்த மிஸ் க்ரிஃபித் அப்படியொண்ணும் அசிங்கம் கிடையாது அஃப்கொர்ஸ், பல்லு கொஞ்சம் எடுப்புத்தான் அவங்களுக்கு!

என்ன செய்வது... இதுபோன்ற கிராமங்கள்ல அழகான பொண்ணுங்களே கண்ணுக்கு அகப்படாதுங்க. ஆனா ஸிம்மிங்டனுடைய அந்த வேலைக்காரப் பொண்ணு, நல்ல ஃபிகர், ஆங்! நல்லா கவனிக்கலாம் வசீகரமும்கூட. அவளுக்கு சின்னதா ஏதாவது உபகாரம் பண்ணினாலும் நன்றியா நடந்துக்கும் நற்குணம் உண்டு. இப்பத்தான் சமீபத்துல... அந்த ரெண்டு குழந்தைங்களோட அவங்க பிக்னிக் போயிருந்தபோது சந்திக்கும் வாய்ப்பு கிடைச்சது. அதுங்க பொட்டல்காட்டுல விளையாடிக்கிட்டிருந்ததுங்க. அப்படியே அதுங்களைக் கவனிச்சுக்கிட்டு இவங்க கம்பளிச் சட்டையோ என்னவோ தைச்சுக்கிட்டிருந்தாங்க. நூல்கண்டு அப்பன்னு பார்த்து தீரணுமா - தீர்ந்துடுச்சு. 'நான் வேணும்னா லிம்ஸ்டாக் வரை போய் நூல்கண்டு கொண்டு வரட்டுமா?'னு கேட்டேன். 'என் பய ஒருத்தனை நான் அங்கிருந்து கூட்டிட்டு வர வேண்டியிருக்கு. அதனால போகப்போறேன். இதையும் அப்படியே பண்ணிடறேன். என்ன மொத்தமா கால்மணிநேரம்கூட ஆகாது.' பசங்களை அப்படியே விட்டுட்டு வரத் தயங்கினாங்க அவங்க. 'அவனுங்க விளையாடிக்கிட்டிருப்பாங்க'னு ஊக்க மளிச்சேன். 'யார் வந்து அவனுங்களை என்ன பண்ணிடப் போறாங்க?'ன்னு தைரியம் தந்து கூட்டிட்டுப் போனேன். பத்து நிமிஷத்துல திரும்பிட்டோம். அதுக்கு அப்படி நன்றி தெரிவிச்சுக் கிட்டாங்க அவங்க. எனக்கு ரொம்ப கடமைப்பட்டிருக் காங்களாம், இந்த உதவிக்கு! நைஸ் கேர்ள்!''

அவரிடமிருந்து விடுபடுவதில் வெற்றி பெற்றேன்.

இதற்குப் பிறகுதான் மிஸ் மார்ப்பிள்ளை நான் மூன்றாவது முறையாக பார்த்தேன். போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தார் அவர்.

# V

ஒருவருக்கு பயம் என்ற உணர்வு எங்கிருந்து வருகின்றது? அது தங்களைத் தாங்களே எங்கு தங்கியிருந்து வடிமைத்துக் கொள்கின்றது? வெளியே வந்து பிரவாகமெடுப்பதற்குள் அது எங்கு பதுங்கி இருக்கும்?

ஜஸ்ட் ஒரு குறுகிய வாக்கியம். கேட்டுக் குறித்துக் கொள்ளப்பட்டது... என்றுமே ஒதுக்கி வைக்கப்படாதது. 'என்னை இங்கிருந்து கூட்டிட்டுப் போயிடுங்க... இங்கே இருப்பது ஒரு நரக வேதனை... இது ஒரு நரகமே... நயவஞ்சகக் கூட்டம்...'

எதற்காக மேகன் இப்படிச் சொல்ல வேண்டும்? நயவஞ்சகம் என்று உணர அவளுக்கு என்ன காரணம் இருந்திருக்க வேண்டும்?

மிஸஸ் ஸிம்மிங்டன்னின் மரணத்தில், மேகன் வஞ்சகத் தன்மை உள்ளது என்று உணர்வதற்கு எக்காரணமும் இருந் திருக்க வாய்ப்பில்லை.

ஏன் அந்தக் குழந்தை போன்றவள் வஞ்சகத்தன்மையினை உணர்ந்திருக்க வேண்டும்? ஏன்? ஏன்?

ஒருவேளை, அம்மரணத்துக்கு ஏதோவொரு வகையில் இவள்தான் பொறுப்பு என்று மேகன் உணர்ந்ததாலா?

மேகனா?

சாத்தியமேயில்லை! அந்த மொட்டைக் கடுதாசிகளுடன் எவ்வகையிலும் மேகன் பிணைந்திருக்க முடியாது அந்த போலி, உருப்படாத கடிதங்கள்.

வடக்குப் பகுதியில் இருந்தபோது ஓவனுக்கு மொட்டைக் கடுதாசிகள் பற்றிய கேஸ் ஒன்று பரீட்சமாகியுள்ளது... ஒரு பள்ளிக்கூடப் பெண்...

இன்ஸ்பெக்டர் க்ரேவ்ஸ் என்ன சொன்னார்?

வளரும் இளம்பருவத்தினரின் சிந்தனைகள் பற்றி என்னவோ... adolescent mind.

ஆப்ரேட்டிங் டேபிளில் மயக்க மருந்து கொடுக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கே விளங்காத மற்றும் தெரியாத வார்த்தைகளைக் கொட்டும் நடுத்தர வயதுப் பெண்மணிகள் விடலைப்பசங்கள் சுவர்களில் எழுதும் கிறுக்கல்கள்...

நோ, நோ, மேகன் அல்ல.

பரம்பரை வியாதி? ரத்தவழி பரவும் நோய்? நாமறி யாமலே வழிவழியாய் இறங்கும் ஓர் அசாதாரணம்? இவள் தவறாக இல்லாமல் இவளது துரதிர்ஷ்டமாக, முன்னோர் களிடமிருந்து இறக்கி விடப்பட்டுள்ள மரபணுக் குழப்பம்?

'உங்களுக்கு ஏற்ற மாதிரியான மனைவி கிடையாது நான். நான் விரும்பப்படுவதைவிட வெறுக்கப்பட வேண்டியவள்.'

ஓ, என் மேகன், என் அன்பே! அப்படிக் கிடையாது. எதுவாக இருந்தாலும் பரவாயில்லை... உன்னை வெறுப்பது கிடையாது. அந்த கிழவி வேறு உனக்குப் பின்னால் - அவள் உன்னை சந்தேகப்படுகிறாள். உனக்கு தைரியம் அசாத்தியம் என்கிறாள் அவள். வைராக்கியமாம். தைரியம் எதைச் செய்ய?

இந்தக் குழப்பப்புயல் கடந்ததும் நான் மேகனைப் பார்க்க விரும்பினேன் - உடனே, உடனடியாய்.

ஒன்பதரை மணிக்கு வீட்டிலிருந்து கிளம்பிய நான். டவுன் வழியாய் ஸிம்மிங்டன் அகம் போனேன்.

அந்த சமயத்தில்தான் முழுக்கவும் புதிதான ஓர் எண்ணம் எனக்குள் உதித்தது. இதுவரை ஒருத்தர்கூட கருத்தில் கொள்ளாத ஒரு பெண்ணைப் பற்றிய எண்ணம்.

*(அல்லது ஒருவேளை நாஷ் கருத்தில் கொண்டுள்ளாரோ?)*

நிச்சயமாய் சாத்தியமற்றது, சம்பந்தமே இல்லாததைப் போன்றது, நிச்சயம் கிடையாது என்று என்னையேகூட சொல்ல வைக்கும் ஓர் எண்ணம். ஆனால் நிஜத்தில் அப்படிப்பட்டது கிடையாது இது. நோ, சாத்தியமற்றது எனும் வகை கிடையாது.

நான் என் தப்படிகளை விரைவாக்கினேன். ஏனென்றால், மேகனை நேரடியாய் நான் பார்த்து விட வேண்டும் என்பது, இப்போது அத்தியாவசியமாகின்றது.

ஸிம்மிங்டன் வீட்டின் கேட்டினைத் திறந்து வாசல் வரை நுழைந்து விட்டேன். அது ஒரு காரிருள் இரவு. சின்னதாய் மழை ஆரம்பித்திருந்தது. பார்வைக்கு எதுவும் துல்லியமாய் படவில்லை.

இருந்த ஜன்னல்களில் ஒன்றிலிருந்து விளக்கொளிக் கீற்று மெலிதாய்த் தெரிவதை நான் பார்த்தேன். அந்த சின்ன வரவேற்பறை?

முதலில் சற்று தயங்கினேன் நான். பிறகு, முன்பக்க வாயிற்கதவுக்கு நேராய் செல்வதற்கு பதிலாக, மெல்லமாய் ஊர்ந்தபடி அந்த ஜன்னல் வரை போனேன்... ஒரு புதரினை இழுத்து அதன் மறைவில் பதுங்கிக் கொண்டேன்.

ஒழுங்காய் மூடப்படாமல் விலகியிருந்த திரைச்சீலை வழியே அந்த வெளிச்சம் வந்திருக்கிறது. அதன் வழியே உள்ளே பார்ப்பது வசதியாயிருந்தது.

அது, அமைதியும் சாந்தமும் கொண்ட ஒரு குடும்பக் காட்சி. ஸிம்மிங்டன், கைவைத்த ஒரு பெரிய நாற்காலியில். தலையைக் குனிந்திருந்த எல்ஸீ ஹாலண்ட், சிறுவனின் சட்டையைத் தைத்தபடி.

அந்த ஜன்னல் திறந்தும் இருந்தது ஆகையால், பார்ப்பது மட்டுமல்லாமல் என்னால் கேட்கவும் முடிந்தது.

எல்ஸீ பேசிக்கொண்டிருந்தார்.

''எனக்கென்னவோ, மிஸ்டர் ஸிம்மிங்டன்... ஹாஸ்டல்ல விடுமளவுக்கு பசங்க வளர்ந்துட்டதா தோணல. மேலும் அவங்களை ஹாஸ்டல்ல போடுவதிலும் எனக்கு இஷ்டமில்ல. ரொம்ப பிரியமா இருக்கேன் நான்.''

ஸிம்மிங்டன் சொன்னார்:

''ப்ரையானைப் பொறுத்தவரைக்கும் எனக்கென்னவோ நீங்க சொல்வது சரின்னே தோணுது, மிஸ் ஹாலண்ட். இவனைவிட சின்னவன் காலின். ஆக, பொறுத்திருக்கணும் தான்.''

''யெஸ்.''

குடும்பம் சம்பந்தப்பட்ட வெறும் பேச்சு.

அப்போதுதான் கதவு திறந்தது, மேகன் அங்கு வந்தாள்.

அவள் அறையின் நுழைவிலேயே நிமிர்ந்த மார்புடன் நின்றாள். அதைப் பார்த்தவுடனேயே எதனாலோ அவள் டென்ஷனுடனும் மூர்க்கமாகவும் இருக்கிறாள் என்பதை

நான் விளங்கிக் கொண்டேன். அவளது முகத் தசை இறுகியும் கனத்தும் இருந்தன. கண்கள், பளபளப்பாய் ஒரு முடிவோடு கனன்றன. இந்த இரவில் நான் பார்த்த மேகனிடம், குழந்தைத்தனமோ சிறுமித்தனமோ கிஞ்சித்தும் கிடையாது.

அவள் ஸிம்மிங்டன்னைப் பார்த்து, எவ்விதமான உறவுமுறையும் குறிப்பிடாமல், ''நான் உங்ககூட பேச விரும்பறேன், ப்ளீஸ்'' என்றாள். ''தனியாய்.''

இதற்கு ஸிம்மிங்டன் ஆச்சரியப்பட்டதாய் தோன்றியது எனக்கு - ஆனால் நிம்மதியடைந்தவராய் தோன்றவில்லை. அவர் முகஞ்சுளித்தார். ஆனால், வழக்கமாய் மேகனிடம் காணக்கிடைக்காத வைராக்கியத்துடன், தான் கூறிய வார்த்தைகளில் பிடிப்புடன் இருந்தாள் அவள்.

அவள் எல்ஸீ ஹாலண்ட் பக்கம் திரும்பினாள்:

''நீங்க ஆட்சேபிப்பீங்களா, மிஸ் ஹாலண்ட்?''

''ஓ, அஃப்கொர்ஸ் நாட். கிடையாது'' எல்ஸீ குதித்தெழுந்தார். துணுக்குற்றவராய் தோன்றிய அவரிடம், வீழ்த்தப் பட்ட ஒருவரின் சோகமும் சின்னதாய் இருந்தது.

அவர் எழுந்து கதவருகே போக, அதன் வழியே அவர் வெளியேற ஏதுவாக இன்னும் அறைக்குள் தள்ளி வந்து நின்று கொண்டாள் மேகன்.

அக்கணத்தில், அந்த ஒரு நொடியில், அசைவற்று, சென்று கொண்டிருக்கும் எல்ஸீயை தனது தோள்களின் வழியே பார்த்தவாறே இருந்தாள் மேகன்.

எல்ஸீயின் உதடுகள் இறுகியிருந்தன. சிலையாய் தோன்றினார். ஒரு கையில் நூற்கண்டு சகிதமும் மறுகையில்

கதவினைத் தள்ளியபடியும் இருந்த அவரின் பிரமாத அழகினை நான் மூச்சுமுட்டக் கவனித்தேன்.

அக்காலத்து கிரேக்க ஓவியங்களில் கிடைக்கப்பெறும் அப்பழுக்கற்ற அழகு தேவதையின் அத்தனை அம்சங்களும் பெற்றிருந்தார் அப்போது அவர்.

பிறகு கதவினைத் தள்ளி மூடிவிட்டு வெளியேறினார்.

ஸிம்மிங்டன் கடுப்பாய் பேசினார்:

‘‘வெல் மேகன், என்னது இது? என்ன வேணும் உனக்கு?’’

இப்போது மேகன் அவருடைய டேபிள் நுனி வரை வந்திருந்தாள். அங்கு அப்படியே ஸிம்மிங்டன்னைக் கீழ் நோக்கிப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் அவள். அவளது முகத்தில் தெரிந்த துணிவும், தீர்மானமும் எனக்குப் புதிதானவை... என்னை நேருக்கு நேராய் அறைந்தவை. மேகனின் பாறையின் கடுமை போன்ற அந்த வைராக்கியம், எனக்குப் புதிது.

பிறகு அவள் இதழ்கள் திறந்தாள். அப்போது அவள் சொன்னவை என்னை அடிவரை உலுக்கின:

‘‘எனக்குக் கொஞ்சம் பணம் வேணும்.’’

இக்கோரிக்கை ஸிம்மிங்டன்னின் மனோநிலையை அப்படியொன்றும் மேம்படுத்தி விடவில்லை. அவர் கறாராய் சொன்னார்: ‘‘இதுக்கு நீ நாளை காலை வரை பொறுத்திருந் திருக்க கூடாதா? எதுக்காக? உனக்கு தரப்படும் பணம் போதலையா?’’

அற்புதமான மனிதன் என்றெண்ணினேன் நான். அப்போதுகூட, உணர்ச்சிவசப்படாமல், உரையாடலுக்குச் சம்மதிக்கின்றாரே...

மேகன் சொன்னாள்: ‘‘எனக்கு நிறைய பணம் வேணும்.’’

ஸிம்மிங்டன் தனது நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்துக் கொண்டார். அவர் சொன்னார்:

‘‘நீ இன்னும் சில மாதங்கள்ல மேஜராகிடுவே. பிறகு, உன் பாட்டி உனக்கு விட்டு வெச்சிருக்கும் பணம் அத்தனையும் உனக்கே சட்டபூர்வமா வந்துடும்.’’

மேகன் பேசினாள்:

‘‘உங்களுக்குப் புரியல. எனக்கு உங்ககிட்டேயிருந்து பணம் வேணும்.’’ அவள் விடாமல் வேகமாய் பேச ஆரம்பித் தாள்: ‘‘யாருமே என்னிடம் என்னுடைய அப்பாவைப் பற்றி அதிகமா பேசினது கிடையாது. அவரைப் பற்றி நான் தெரிஞ்சுக்கக் கூடாதுன்னு நினைச்சிருக்காங்க அவங்க. அவர் சிறைக்கு போனவர் என்பதும் அது எதுக்காகன்னும் எனக்கு தெரியும். அது, ப்ளாக்-மெயிலுக்காக!’’

அவள் சற்று தாமதித்து நிறுத்தினாள்.

‘‘வெல், நான் அவரோட பொண்ணு. சொல்லப் போனால், அவரைப் போலவே வந்திருப்பவ நான். எப்படியோ போகட்டும். நான் உங்ககிட்டே இப்ப பணம் கேக்கறேன். ஏன்னா - ஒருவேளை நீங்க தர மறுத்தால் -’’ இங்கு நிறுத்திய அவள், பிறகு மெதுவாகவும் கோவையாகவும் சொன்னாள்: ‘‘தர மறுத்தால், அந்த அசம்பாவித நாளன்று நீங்க அம்மாவின் அறைல அவங்க மருந்து பாக்கெட்டுடன் என்ன பண்ணிக்கிட்டிருந்தீங்க என்பதை, சொல்லிடுவேன்.’’

இங்கு சிறு தாமதம். பிறகு ஸிம்மிங்டன் எவ்வித உணர்ச்சிப் போராட்டமும் அற்ற குரலில் சொன்னார்:

''நீ என்ன சொல்றேன்னே எனக்கு விளங்கல.''

மேகன் சொன்னாள்: ''உங்களுக்கு நல்லா விளங்குதுன்னு நினைக்கிறேன்.''

பிறகு அவள் சிரித்தாள். அது ஒரு நல்ல சிரிப்பு கிடையாது.

ஸிம்மிங்டன் எழுந்து கொண்டார். எழுதுவதற்காக இருந்த டெஸ்க் வரை சென்றார். அவரது பாக்கெட்டிலிருந்து காசோலைப் புத்தகத்தை எடுத்து ஒரு செக்கினை எழுதினார். அதனைக் கொண்டு வந்து மேகனிடம் தந்தார்.

''இப்ப நீ ஒரு வளர்ந்த பொண்ணு'' என்றார். ''நீ ஸ்பெஷலா உடைகளோ அல்லது அப்படி ஏதாவது சாமான்களோ வாங்க நினைக்கலாம். நீ எதைப் பற்றி இப்ப பேசினேன்னு எனக்குத் தெரியாது. அதுல நான் கவனமும் பதிக்கல. ஆனா, இதோ செக்.''

மேகன் அதனைப் பார்த்துவிட்டு சொன்னாள்:

''தேங்க் யூ. இப்போதைக்கு இது போதும்.''

அவள் திரும்பினாள், அறையை விட்டு வெளியேறினாள். ஸிம்மிங்டன் அவளையும் மூடப்பட்ட கதவையும் முறைத்த படியிருந்தார். பிறகு அவர் திரும்பினார். அவரது முகத்தைப் பார்த்ததும், நான் முன்நோக்கி, ஒரு துரிதமான மற்றும் கட்டுப்படுத்த முடியாத நகர்த்தலை செய்தேன்.

**சூ**ப்பரின்டெண்டெண்ட் நாஷின் கரங்கள் என்னை இறுகப்பிடித்ததால் என்னிடம் நேர்ந்த கட்டுப்பாடிழந்த தடுமாற்றம் இது. அவரது குரல் என் காதுகளுக்குள் ஓசையின்றி சொல்லியது:

''அமைதி பர்ட்டன். ப்ளீஸ் - மூச்.''

பிறகு, மிகவும் ஜாக்கிரதையாய் அவர் அங்கிருந்து அங்குலம் அங்குலமாய் வெளியேறினார் ஒரு கையில் என்னை இறுகப் பிடித்துக் கொண்டு.

வீட்டைச் சுற்றிக்கொண்டு வந்ததும் தன்னையும் தனது உடைகளையும் நேர்செய்து கொண்டார் அவர்.

''அஃப்கோர்ஸ்'' என்ற அவர், ''இப்படிப்பட்ட ஒரு முக்கிய கட்டத்துல நீங்க மூக்கை நுழைச்சுத்தானே ஆகணும்!'' என்றார்.

''அந்தப் பொண்ணுக்கு பாதுகாப்பு இல்ல'' என்றேன் நான் அவசரமாய். ''இவருடைய முகத்தைக் கவனிச்சீங்கல்ல? இங்கிருந்து அவளை நாம உடனே வெளியே கொண்டு போயிடணும்.''

நாஷ் என் கரத்தினை நகர முடியாத அளவுக்கு இறுக்கி தன்னகப்படுத்திக் கொண்டார்.

''இப்ப பாருங்க மிஸ்டர் பர்ட்டன்... நான் சொல்வதை மட்டுந்தான் நீங்க கவனிக்கணும்.''

## VI

வெல், நான் கவனித்தேன்.

அவர் சொன்னதைக் கேட்டேன்.

அது எனக்கு பிடிக்கவில்லை, ஆயினும் சம்மதித்தேன்.

இவர் செல்லும் இடத்தில் நானும் இருப்பேன் என்றும், இவரது கட்டளைகளுக்கு அங்கு மறுக்காமல் நான் தலைவணங்குவேன் என்றும் அறுதியிட்டு உறுதியளித்தேன்.

இப்படியாக, நாஷ் மற்றும் பார்க்கின்ஸனுடன், ஏற்கெனவே தாழ்ப்பாள் விலக்கப்பட்டுத் தயாராய் வைக்கப் பட்டிருந்த வீட்டின் பின்பக்கத்துக் கதவு வழியாக வீட்டுக்குள் வந்திருந்தேன் நான்.

மாடியின் உச்சியில் ஒரு தாழ்வாரம் இருந்தது. வராண்டா என்றும் சொல்லலாம். அதிலிருந்த ஒரு பெரிய வெல்வெட் திரைச்சீலைக்குப் பின்னால் நானும் நாஷும் மறைந்து நின்று கொண்டோம். காத்திருந்தோம். அங்கிருந்த கடியாரம் இரவு மணி இரண்டு என்றடிக்கும்வரை அப்படியே அசைவற்று நின்றபடியிருந்தோம். அப்போது ஸிம்மிங்டன்னின் அறைக் கதவு திறந்தது. அவர் வராண்டாவின் குறுக்காய் மறுபக்கத் துக்கு நடந்து போய் மேகனின் அறைக்குள் நுழைந்தார்.

அவ்வறையின் கதவுக்குப் பின்னால் பார்க்கின்ஸ் இருப்பது எனக்கும் தெரியும். ஆகையால் நான் கலவர மடைந்தோ அல்லது அசைந்தோ எவ்விதமான பங்கத்தையும் விளைவிக்கவில்லை. பார்க்கின்ஸனுக்கு தனது தொழிலை எப்படி செவ்வனே செய்ய வேண்டும் என்பது தெரியும் உள்ளே, பாதுகாப்பினை அவர் பார்த்துக் கொள்வார்.

என் இதயம் துடிதுடிக்க, அங்கு காத்துக் கொண்டே யிருந்தபோது, தனது கைகளில் மேகனைச் சுமந்தபடி ஸிம்மிங்டன் அறையை விட்டு வெளியே வருவதைப் பார்த்தேன் நான். அவளைச் சுமந்தபடி அவர் படியிறங்கினார் நானும் நாஷும் ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் அவரைப் பின்தொடர.

நேராய் அவளைக் கிச்சனுக்குள் கொண்டு போனார் அவர். அவளை அப்படியே இவரது வசதிக்குக் கிடத்திவிட்டு தலையை நேராய் காஸ் ஓவனுக்குள் நுழைத்து நிறுத்தினார்.

காஸின் திருகினைத் திறந்தார்... அதே கணத்தில் நானும் நாஷும் அடுக்களையின் நுழைவின் வழியாக உள்ளே வந்து விளக்கினை எரிய விட்டோம்.

அதுதான் ரிச்சர்ட் ஸிம்மிங்டன்னின் முடிவு. அவர் நொறுங்கிப் போனார். மேகனை நான் சட்டென்று வெளியே இழுத்து காஸினை அணைக்கும்போது சுக்கு நூறாய் சிதறிப் போயிருந்தார் அவர். எங்களுடன் மோது வதற்கு ஒரு சிறு முயற்சியைக்கூட அவர் மேற்கொள்ள வில்லை. அவருக்குத் தெரிந்துவிட்டது, அவர் தப்பாய் விளையாடித் தோற்று விட்டார் என்று.

# VII

மாடியில், மேகனின் படுக்கை நுனியில் உட்கார்ந்தபடி, அவள் நினைவு திரும்ப வருகைக்காக காத்திருந்தேன் நான். அவ்வப்போது தீவிரமாய் நாஷினை நான் சபித்தேன்.

''அவளுக்கு ஒண்ணும் ஆகலைன்னு எப்படி நீங்க உறுதியா சொல்றீங்க? எனக்குப் பயமாயிருக்கு... நீங்க செயல்படுத்தினது, ஒரு மாபெரும் ரிஸ்க்.''

நாஷ் மிக்க ஆதரவாய் இருந்தார்.

''அஞ்சாதே, தோழா'' என்றார். ''அது வெறும் மயக்கப்பவுடர், தட்ஸ் ஆல். மேகன் தினசரி ராத்திரி குடிக்கும் பாலில் கலக்கப்பட்டது. நத்திங் மோர்! இதை செஞ்சதுக்குக் காரணம் இருக்கு. மேகனுக்கு விஷம் வைக்க அவரால துணிய முடியாது. அவரைப் பொறுத்தவரைக்கும் இந்த முழு பிஸினஸுமே மிஸ் க்ரிஃபித்தின் கைது நடந்ததுடன் மூடப்பட்டாச்சு முடிஞ்சாச்சு. மேற்கொண்டு வன்முறை

கிடையாது. விஷம் கிடையாது. ஆனா தனது தாயின் தற்கொலையை எண்ணியெண்ணிக் குழம்பிக்கிட்டேயிருந்த ஒரு பொண்ணு கடைசியில நேரா காஸ் ஒவனுக்குள்ளே கொண்டுபோய் அதைத் திருகி விட்டுக்கிட்டா வாவ்... ஜஸ்ட் ரெண்டு நிமிஷத்துல பஸ்மமாகிடும். ஊர்ஜனங்களும், 'அவளே ஒரு மறை கழன்ற கேஸு... அம்மா மரணம் தாளல... போயிட் டா'னு அடங்கிடுவாங்க.''

நான் மேகனைக் கவனித்தபடி சொன்னேன்:

''அவ மயக்கம் தெளிய நேரமாகும் போல தெரியுது.''

''டாக்டர் க்ரிஃபித் என்ன சொன்னார்ன்னு நீங்க கேட்டீங்கல்ல? அவங்க இருதயமும் நாடித்துடிப்பும், துல்லியம். ஜஸ்ட் தூங்கிட்டு சகஜமா எழுந்திடுவாங்க. தன் அனைத்து நோயாளிகளுக்கும் அவர் தரும் மயக்க மருந்து தானாம் அது.''

மேகன் நெளிந்தாள். அவள் என்னவோ முணு முணுத்தாள்.

சூப்பரின்டெண்டெண்ட் நாஷ் ஓசைப்படாமல் அறையிலிருந்து வெளியேறினார்.

தற்சமயம் மேகன் அவளுடைய கண்களைத் திறந்தாள். ''ஜெர்ரி''

''ஹலோ, ஸ்வீட்.''

''நான் என் பாகத்தை நல்லா செஞ்சேனா?''

''தொட்டிலிலிருந்தே உனக்கு ப்ளாக்-மெயில் என்பது ரத்தத்துல ஊறியிருக்கணும்!''

மேகன் அவளது கண்களை மீண்டும் மூடிக்கொண்டாள். அப்படியே அவள் முணுமுணுத்தாள்:

‘‘நேற்றிரவு நான் உங்களுக்காக கடிதம் எழுதிக் கிட்டிருந்தேன். ஒருவேளை - ஏதாவது - ஏதாவது - தவறுதலா முடிஞ்சுட்டா இருக்கட்டுமேன்னு. ஆனா அதை முடிக்க முடியாம ஒரு மயக்கம் தூக்கக்கலக்கம். அது அங்கே தானிருக்கு.’’

நான் அந்த டேபிள் நோக்கிப் போனேன். அங்கு மேகனின் முடிக்கப்படாத கடிதத்தினை அங்கு பார்த்தேன்.

‘‘மை டியர் ஜெர்ரி’’ என்று அது அழுத்தமாய் துவங்கியது:

‘‘என்னுடைய பள்ளிக்கூடத்து ஷேக்ஸ்பியர் பாடத் திலிருந்து நானெடுத்த கவிதையிது:

வாழ்க்கைக்கு உணவு எப்படியோ அப்படி நீ எனது சிந்தனைக்கு.

இனிய வஸந்தகாலத்தில் நிலத்தில் விழுந்து அதற்கு இன்பம் கொடுக்கும் மலர்களைப் போன்றவன் நீ எனக்கு.’’

ஜெர்ரி... இப்ப விளங்குது ஜெர்ரி. நான் உன்மேல காதல் வயப்பட்டிருக்கேன். ஏன்னா, ஏன்னா, ஓஹ், ஏன்னா, அப்படித்தான் நான் உணர்றேன்...’’

# அத்தியாயம் - 14

''அப்ப நான் செய்தது சரின்னு விளங்குதா?'' என்று கேட்டார் மிஸஸ் டேனே கேத்ராப். ''நான் ஒரு நிபுணரை உள்ளே கொண்டு வந்து புகுத்தியிருப்பது, சரிதானே?''

நான் அவரைப் பார்த்து முழித்தேன். நாங்கள் எல்லோரும் பாதிரியாரின் வீட்டில் இருந்தோம். வெளியே மழை கொட்டிக் கொண்டிருக்க, அதன் வெடவெடப்பைத் தணிக்க நல்லதொரு கணப்பு மூட்டப்பட்டிருந்தது. இங்குமங்கும் அலைந்தார் மிஸஸ் டேனே. பிறகு ஒரு தலையணை குஷனைக் கையிலெடுத்துக் கொண்டார். நடந்தார். பிறகு, அவருக்கே வெளிச்சமான ஏதோவொரு காரணத்துக்காக அதை ப்யானோவின் தலையில் தூக்கி வைத்தார்.

''அப்படி யாரையாவது கூட்டிட்டு வந்தீங்களா, என்ன?'' என்றேன் நான் ஆச்சரியமாய். ''யாரது? அந்த ஜென்டில்மேன் என்னதான் பண்ணினார்?''

''அது மேன் கிடையாது'' என்றார் மிஸஸ் டேனே.

கையை பெருமதிப்பாய் வீசி மிஸ் மார்ப்பிள்ளைச் சுட்டிக்காட்டினார். ''இவதான் என் எக்ஸ்பர்ட்'' என்றார்.

''ஜேன் மார்ப்பிள். அவளைக் கொஞ்சம் நல்லா கவனிங்க. சொல்றேன் குறிச்சுக்கங்க: உலகத்தில் வேறெந்த மனிதனுக்கும் இல்லாத அளவுக்கு 'நயவஞ்சகம்னா என்ன?' என்பதன் முழு ஞானமும் இவளுக்கு இருக்கு!''

''ஏய், இவ்ளோ கேவலமா என்னை நீ சொல்லணுமா, டியர்'' என்றார் மார்ப்பிள்.

''ஆனா அப்படிப்பட்டவதான் நீ.''

தான் நெய்து கொண்டிருந்த கம்பளி உடையை தற்போது கீழே வைத்தார். நிமிர்ந்தமர்ந்தார். இப்போது அவரிடமிருந்து ஒரு விரிவுரை எதிர்பார்க்கப்படுவதைப் போல ஒருமுறை சுற்றிவரப் பார்த்து விட்டு, கொலை பற்றிய ஆய்வுக்கட்டுரை ஒன்றை வரைந்தார்:

''இவ்வகை கொலை வழக்குகள்ல மிகமிக முக்கிய மானது, திறந்த மனதுடன் அதனை அணுகுவது ஒன்றுதான். கொலைகள்ல ஏறத்தாழ அனைத்துமே, ரொம்ப சிம்பிளானவை. இதுகூட. சுற்றிவளைக்காம நேரடியா முடிவைத்தரும் இதுபோன்ற இன்னொரு வழக்கைக் காட்டு வதரிது! அஃப்கொர்ஸ் இக்கொலையை, 'புரிஞ்சுக்கவும் முடியுது' - ஆனா மிகவும் சோகமான முறைல.''

''ரொம்பவும் சோகமானது இது!''

''இதன் நிஜம் வெளிப்படையானது. கண்ணுக்கு முன்னாடியே இருக்கு. நீங்களே அதை பார்த்தீங்க, தெரியுமா, மிஸ்டர் பர்ட்டன்?''

''சேச்சே, கிடையாது. எனக்கு அந்த நிஜமுடிவு கடைசி வரை தட்டுப்படல.''

"தட்டுப்பட்டுது. பார்த்தீங்க. இக்கொலையின் முழு சமாச்சாரத்தையும் எனக்கு நீங்கதான் குறிப்பிட்டு, அடிக்கோடிட்டுக் காட்டினீங்க. ஒன்றுக்கொன்று உள்ள தொடர்புகளைப் பிசகில்லாமல் பார்த்தது நீங்க மட்டுந்தான்! ஆனா, நிஜத்தை அடையாளம் காட்டி உங்களுக்குள்ளே தோன்றிய அந்த உணர்வுகளை விளங்கிக்க உங்களுக்குப் போதுமான அளவு நம்பிக்கை தன்னம்பிக்கை இதுதான் ஜஸ்ட் இல்லாம ஆகிடுச்சு. ஆரம்பமாக, உங்களைப் போரடிக்க வைத்த அந்த பதம்: 'நெருப்பில்லாமல் புகையாது.' இது உங்களை எரிச்சலாக்கியது ஆனா இதை என்னன்னு லேபிள் ஒட்டிக்காட்ட நீங்க சரியா முன்னேறினீங்க: யெஸ், 'புகைப்படலம்.' தவறான திசைநோக்கித் திருப்பிவிடுதல்! அதாவது, எல்லாரும் தப்பான ஒரு விஷயத்தை மட்டுமே பிடிச்சுக்கிட்டு தொங்குவது. அதாவது? அந்த மொட்டைக் கடுதாசிகள். கவனிங்க: மொட்டைக் கடுதாசிகளை நோக்கி ஒட்டுமொத்தக் கிராமமுமே தவறா திசைதிருப்பி விடப்பட்டது. யெஸ்... இதுல முழு விஷயமே, அப்படி ஒரேயொரு மொட்டைக் கடுதாசிகூட கிடையாது என்பதுதான்!"

"ஓ, மை டியர் மிஸ் மார்ப்பிள்... ஒன்றில்லை... பல மொட்டைக் கடுதாசிகள் இருந்தன்னு என்னால சத்தியம் பண்ணிச் சொல்ல முடியும். எனக்கே ஒண்ணு வந்திருக்கு."

"ஓ யெஸ். இருக்கு, இருக்கு. ஆனா அவை உண்மையானவை கிடையாது - நாட் ரியல்! அமைதியான லிம்ஸ்டாக் போன்ற குக்கிராமங்களிலும் புரளிகளும் கிசுகிசுக்களும் ரகசியத் தவறுகளும் உண்டு... ஆகவே அப்படிப்பட்ட அனைத்துமே வம்படிக்கும் குணம் கொண்ட பெண்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். ஆனா ஆண் இருக்கான் பாருங்க... அவனுக்கு இப்படிப்பட்ட வம்புகளில் ருசியிருக்காது. அவன்,

அப்படித்தான். அதிலும், எல்லாவற்றிலிருந்தும் விலகியே இருக்கும் மிஸ்டர் ஸிம்மிங்டன் போன்ற ஆண்கள், வம்புப் பேச்சுகளில் சேரவே மாட்டாங்க. ஆக ஒரு பெண் எழுதும் போதுதான் அதுல சரியா குறிவெச்சு சமாச்சாரத்தைக் கொட்ட முடியும்.

''ஆக, புகைப்படலத்தை விலக்கிட்டு நேரடியா நெருப் புக்கே நீங்க வந்தீங்கன்னா, நீங்க எங்கே வந்து நேரடியா நிக்கறீங்கன்னு உங்களுக்கே தெரியும். நிஜத்துல என்ன நடந்தது எனும் உண்மையான சாட்சிகளுக்கே நீங்க நேரடியா வரீங்க. அதனால மொட்டைக் கடுதாசிகள் எனும் புகைப்படலத்தை நீங்க விலக்கி ஒதுக்கிட்டீங்கன்னா, மிஸஸ் ஸிம்மிங்டன்னின் மரணம் எனும் நிஜத்துல வந்து இறக்கி விடப்படறீங்க.

''பிறகு, நேச்சுரலி, யார் மிஸஸ் ஸிம்மிங்டன் மரண மடையணும்னு நினைச்சிருப்பாங்க எனும் கேள்வி தவிர்க்க முடியாம முதல்ல வரும். இதுபோன்ற வழக்குகள்ல அதுக் கான விடையாய் கணவன்தான்னு விடை வந்து முன்னால நிக்கும். தொடரும் அடுத்த கேள்வி: காரணம்? ஏதாவது இலக்கு? உதாரணத்துக்கு, வேறு ஒரு பெண்ணின் நுழைவு?

''இக்கேள்வி வந்தவுடனேயே, அந்த வீட்டுல ஒரு கவர்ச்சிகரமான வேலைக்காரி இருக்கான்னு ஒரு சேதியை நான் கேள்விப்படும்படி ஆகுது! ஆக, க்ளியராயிடுச்சு, சரியா? மிஸ்டர் ஸிம்மிங்டன் நரம்பதிர்வுப் பெண்மணியைக் கலியாணம் கட்டிக்கிட்டு காய்ந்து கிடக்கிறார் உணர்வு களை அடக்கிக்கிட்டு காலத்தை ஓட்டிக்கிட்டிருக்கார் அப்ப திடீர்னு கதிர்வீச்சாய் அமைந்திருக்கும் இந்தப் பொண்ணு நுழையறா.

''நீங்க எல்லாருமே கவனிச்சுக்கங்க... ஒரு குறிப்பிட்ட வயதினைக் கடந்து காதலில் விழும்போது, அந்த நோயால் அதிகமா பாதிக்கப்பட்டுடறாங்க மனுஷங்க. பைத்தியமா கிடறாங்கன்னுகூட சொல்லலாம். இந்த மிஸ்டர் ஸிம்மிங் டன்னைப் பொறுத்தவரைக்கும், எனக்குத் தெரிந்துள்ள தகவல்களை வெச்சு சொல்றேன்... அவ்ளோ நல்ல மனுஷனா அவர் எப்பவுமே கனிவானவரோ, அன்புமிக்கவராகவோ அல்லது கருணை பொழிபவராகவோ இருந்ததில்ல. அவருடைய தரமே எதிர்மறையானது தான் நெகடிவ். இதனாலத்தான் காதல் எனும் பைத்தி யத்தை எதிர்த்து வீழ்த்தும் பலம் அவருக்கு இல்லாம போச்சு. மேலும், இதைப்போன்ற குக்கிராமங்கள்ல காதலியை தனிமையான இடத்தில் போய்ப் பார்க்க முடியுமா ஊருக்கே தெரிஞ்சுடுமே... ஆக, இந்த ப்ராப்ளத்துக்கான ஒரே தீர்வு அவருடைய மனைவியின் மரணந்தான். அவருக்கு அந்தப் பொண்ணைக் கலியாணம் கட்டியாகணும் இதைக் கவனத்துல வெச்சுக்கங்க. மரியாதை தெரிஞ்ச பொண்ணு அவ. இதுக்கு நடுவுல, தன்னுடைய குழந்தைங்க பேர்ல அவருக்கு அலாதி ப்ரியம் இருக்கு. அதனால் அவங்களை இழந்துட அவர் துணிய மாட்டார். பாருங்க, அவருக்கு எல்லாமும் தேவை: அவர் வீடு, குழந்தைங்க, மட்டு-மரியாதை மற்றும் எல்ஸீ! இதுக்கு அவர் கொடுக்க வேண்டிய விலை - கொலை.

''இதுக்கு அவர் புத்திசாலித்தனமான ஒரு வழியைத் தெரிந்தெடுத்திருக்கார்னுதான் நான் சொல்லுவேன். ஒரு மனைவி எதிர்பாராமல் இறக்கும்பட்சத்தில் அந்த மரணத்தின் மீதான சந்தேகம் மிகச் சுலபமா அவளுடைய கணவன் மீதுதான் விழும் என்பது, க்ரிமினல் வழக்குகளைக்

கையாண்ட அனுபவத்திலிருந்து ஸிம்மிங்டன்னுக்கு நல்லாவே தெரியும். ஆகவே, அவர் மரணத்தை உருவாக்கினார். பார்த்தால், வேறு ஏதோவொரு காரணத்தினால்தான் அது நடந்தது என்பதை மாதிரி. அவர், உயிருடன் இல்லாத, ஸ்தூலமாய் வாழாத ஒரு 'மொட்டைக் கடுதாசி எழுத்தாளரை' வடிவமைத்தார். பெண்கள்தானே வம்புகளில் பிரசித்தி எனவே போலீஸ் நிச்சயமா ஒரு பொண்ணைத்தான் சந்தேகப்படும் என்பதுதான் இந்த படைப்பின் புத்திசாலித்தனம். அக்கடிதங்களும் இந்த எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும்படிதான் அமைந்திருந்தன. அனைத்துக் கடிதங்களும் ஒரு பெண்ணின் மொட்டைக் கடுதாசிகள். அவற்றை, டாக்டர் க்ரிஃபித் சொன்ன வழக்கிலிருந்து புனைந்தார் ஸிம்மிங்டன். அப்படியே அட்சரம் அட்சரமா எடுத்துப் பயன்படுத்தினார்னு சொல்ல மாட்டேன்... வாக்கியங்கள் மற்றும் 'பாவங்களை' அவற்றிலிருந்து எடுத்து ஒரு கலக்குக்கலக்கி, இறுதியா வரும் கடிதம் ஒரு பெண்ணின் மனோநிலையையே பிரதிபலிக்குமாறு கொண்டு வந்தார். அதாவது பாதி கிறுக்குப் பிடிச்ச ஒரு லூஸுப் பொண்ணு எழுதியதைப்போல.

''போலீஸ் பயன்படுத்தும் அத்தனை உபாயங்களும் அவருக்குத் தெரியும். கையெழுத்து, டைப் மெஷின் இத்யாதிகள். யெஸ், இக்கொலைக்கான களத்தை அவர் கொஞ்ச காலமாகவே உருவாக்கி வந்திருக்கிறார். டைப்மெஷினை எடுத்து பெண்கள் இன்ஸ்டிட்யூட்டுக்குத் தருவதற்கு முன்னாலேயே அனைத்து முகவர்களையும் தபால் உறைகளில் அடிச்சு வெச்சுக்கிட்டார். லிட்டில் ஃபர்ஸ் வீட்டிலிருந்து அப்புத்தகத்தின் பக்கங்களையெல்லாம், கொஞ்ச நாட்களுக்கு முன்னால அந்த அறைல காத்திருந்தபோது நறுக்கி

எடுத்திருக்கார். யாரும் பொன்மொழிகள் புத்தகத்தைப் போய் அடிக்கடி எடுத்துப் படிப்பதில்லையே!

"பிறகு இறுதியாய், இந்த விஷப்பேனா போலித் திட்டத்தை நல்லா நிலைநிறுத்தியபிறகு, நிஜமான திட்டத்தை அரங்கேற்றினார் அவர். புகைப்படலத்துக்கு உள்ளே போனால், உண்மை! மதியத்துல, வீட்டைப் பார்த்துக்கும் பொம்பிளை, பசங்க, பொண்ணு எல்லாரும் வெளியேயிருப் பாங்க - அது, வேலைக்காரர்களின் விடுப்பு நாளாயிருந்தால், அவங்களும் இருக்க மாட்டாங்க. இந்த ஏக்னஸ் பொண்ணு காதலனோட சண்டை போட்டுக்கிட்டுத் திரும்பி வீட்டுக்கே வந்துடும்னு அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார்."

ஜோன்னா கேட்டாள்:

"ஆனா அவ என்னத்தைப் பார்த்தாள்? உங்களுக்குத் தெரியுமா?"

"எனக்குத் தெரியாது. ஊகிக்க மட்டுந்தான் என்னால முடியும். என் ஊகம், அவ அங்கே ஒண்ணையும் பார்க்கலே என்பதுதான்."

"அப்படின்னா?"

"அவ அந்த ஜன்னலருகிலேயே நின்னுக்கிட்டிருந் திருக்கா. காதலன் வருவானான்னு வழிமேல் விழிவைத்த மதியம் முழுக்க அங்கேயேதான் அவ நின்னிருக்கா. ஆனா, மன்னிப்புக் கேட்க அவன் வரல. மேலும், ஒருத்தரும் வரல. யாரும் வீட்டுக்கு வரவே இல்ல. போஸ்ட்மேன், அல்லது வேறு யாராவது - நோ, நோ.

"அவ சூட்டிகை கம்மி, ஆகவே இது நெருடலா இருக்கேன்னு அவளுக்கு சற்று நேரம் கழிச்சுத்தான் பிடிபட்டிருக்கு.

ஏன்னா, அன்னிக்கு மத்தியானம் மிஸஸ் ஸிம்மிங்டன்னுக்கு அந்த மொட்டைக் கடுதாசி வந்திருக்கு.''

''அதானே சரி. அப்ப என்ன சொல்ல வரீங்க அவங்களுக்கு கடிதம் வரலேனா?''

''யெஸ், யெஸ். அவங்களுக்கு அந்தக் கடிதம் வரலேன்னு இல்ல. நான் முன்னமேயே சொன்னது மாதிரி, இந்தக் கொலை ரொம்பவுமே சிம்பிள். லஞ்சுக்கு அப்புறம் மேடம் எடுத்துக்கும் மருந்துகளுக்கு மேல, அன்னிக்கு மட்டும் ஸயனைட் மாத்திரையை வெச்சிருக்கார் அவர். கவனிங்க, மிஸ்டர் ஸிம்மிங்டன் செய்ய வேண்டியதெல்லாம் இவ்ளோ தான்: கொஞ்சம் முன்னாலேயே அல்லது எல்ஸீ வரும் போதோ வந்து வீட்டுக்குள்ளே அவர் நுழையணும், மனைவியை அழைக்கணும், பதில் இருக்காது, மேலே மனைவியின் அறை வரைக்கும் போகணும், மருந்து சாப்பிட அவர் பயன்படுத்திய தண்ணீர் டம்ளரில் ஒரு துளி ஸயனைடைக் கலக்கணும், கசக்கிய கடிதத்தைக் கணப்புக்கு அருகில் எறியணும், மிஸஸ் கையாலேயே எழுதப்பட்ட 'என்னால இனிமே முடியாது' எனும் துண்டுச்சீட்டைக் கண்ணுல படும்படி போடணும். ஆஹ், ஒரு கொலைதான் எத்தனை சிம்பிள்.''

மிஸ் மார்ப்பிள் என் பக்கமாய் திரும்பினார்.

''இதுபற்றிய உங்கள் ஊகமும்கூட ரொம்பவும் சரியாவே இருந்தது, மிஸ்டர் பர்ட்டன். ஒரு துண்டுச்சீட்டு இது ரொம்பத் தப்பு. தற்கொலை பண்ணிக்கொள்பவர்கள் சுண்டுவிரல் அளவுக்கான ஒரு துண்டுச்சீட்டுல காரணத்தை எழுதிட்டுப் போக மாட்டாங்க. அது பலருக்கும் தெரியணும் என்னதுதானே எழுதுவதன் நோக்கமே. அதனால ஒரு ஷீட்

பேப்பர்ல கொட்டைக்கொட்டையா எழுதி வெப்பாங்க. அதை ஓர் உறைல போட்டுக்கூட பத்திரமா டேபிள் மேல வெப்பதுண்டு. யெஸ், ஒரு துண்டுச்சீட்டு இது ரொம்பத் தப்பு... இது உங்களுக்கும் தெரியும்.''

''எனக்கா? தெரியுமா? நோ, நோ! நீங்க என்னை ரொம்பவுமே தூக்கி வெச்சுப் பேசறீங்க'' என்றேன் நான். ''எனக்கு ஒண்ணுமே தெரியாது.''

''ஆனா உங்களுக்குத் தெரிஞ்சிருக்கு, ரியலி தெரிஞ்சிருக்கு, மிஸ்டர் பர்ட்டன். இல்லேன்னா, உங்க சகோதரி டெலி போன் பக்கத்துல எழுதி வெச்சிருந்த அந்த சின்னக் குறிப்புல நீங்க எதுக்காக உடனடியா ஈர்க்கப்படணும்?''

''நான் மெதுவாய் அதனை மீண்டும் சொல்லிப் பார்த்தேன்: 'செவ்வாய்க்கிழமை போக, என்னால இனிமே முடியாது...' ஓஹோ, இப்ப விளங்குது. என்னால இனிமே முடியாது...' இதையா சொல்றீங்க?''

மிஸ் மார்ப்பிள் என்னைக் கதிர்வீச்சாய் பார்த்தார்.

''எக்ஸாக்ட்லி, எக்ஸாக்ட்லி. மிஸ்டர் ஸிம்மிங்டன்னும் இப்படிப்பட்ட துண்டுக் குறிப்புகளைப் படிச்சிருக்கணும். இதிலிருக்கும் சாத்தியக்கூறுகளைக் கவனிச்சிருக்கணும். காலம் வரும்போது இவருக்கு உதவவல்ல வார்த்தைகளை மட்டும் கட் பண்ணி எடுத்து வெச்சிருக்கார் - அவருடைய மனைவியின் கையெழுத்தினாலேயே ஆனதொரு குறிப்பு.''

''ஓ... என் பக்கத்துல மேற்கொண்டு ஏதாவது மேதா விலாசம் இருக்கா?''

மிஸ் மார்ப்பிள் என்னைப் பார்த்து கண்ணடித்தார்.

''என்னை நீங்க சரியான பாதையில பிசகாம நிலைநிறுத்தினீங்க, தெரியுமா? சாட்சியங்கள் அனைத்தையும் நீங்க வரிசைக்கிரமமா எனக்காக அடுக்கிக் கொடுத்தீங்க. அவையனைத்தின் தலையின் மீதும், மிகவும் முக்கியமான சாட்சியத்தைத் தூக்கி வெச்சு வசதி பண்ணித் தந்தீங்க - எல்ஸீ ஹாலண்ட்க்கு ஒரு மொட்டைக் கடுதாசிக்கூட வந்தது கிடையாது எனும் முதன்மையான சாட்சியம்.''

''ஒரு விஷயம் தெரியுமா?'' என்ற நான், ''நேற்று ராத்திரி சிந்திச்சுக்கிட்டிருந்தபோது, இந்த மொட்டைக் கடுதாசிகள் அனைத்தையும் எழுதுவதே எல்ஸீ தானென்றும், அதனால தான் அவங்களுக்கு மட்டும் ஒரு கடுதாசிகூட வரலேன்னும் நான் முடிவெடுத்தேன்'' என்றேன்.

''ஓ டியர், நோ... மொட்டைக் கடுதாசிகளை எழுதும் பொம்பிளைகள் அவங்களுக்கும் ஒரு கடுதாசியை நிச்சயம் அனுப்பிப்பாங்க. இதுவும், வெல், அவர்கள் அடையும் கிளர்ச்சியின் ஒரு பகுதியே. இந்த கேஸ்ல இந்த சாட்சியம் என்னை வேறொரு கோணத்துல ஈர்த்தது. மிஸ்டர் ஸிம்மிங் டன்னின் பலஹீனத்தை இது உண்மையா விளக்கிச்சு. அவர் மிகவும் விரும்பும் ஒரு பெண்ணுக்கு எதிரா அவரால போலிக் கடுதாசி எழுத முடியாது. இதுதான் மனித உள்உணர்வுகளின் இண்ட்ரஸ்டிங்கான நிஜம் மிஸ்டர் ஸிம்மிங்டன்னைத் தோற்றுப்போக வைத்த நிஜம்.''

ஜோன்னா கேட்டாள்:

''அப்ப ஏக்னஸை அவர்தான் கொன்றிருக்கார். ஆனா இது அவசியமே கிடையாதே?''

''இருக்கலாம். ஆனா நீ கொலை பண்ணினது கிடையாது, மை டியர். அதனால விளங்கல. பேட்ரிட்ஜுக்கு போன்

போட்டு, மிஸஸ் ஸிம்மிங்டன்னின் மரணத்திலிருந்தே தன்னை ஏதோ ஒன்று குழப்புவதாகவும், தனக்கு ஏதோ ஒண்ணு விளங்கலேன்னும் ஏக்னஸ் சொன்னதை, மிஸ்டர் ஸிம்மிங்டன் சந்தேகத்துக்கிடமின்றி கவனிச்சிருக் கார். அவர் இனிமேல் எவ்விதமான ரிஸ்க்கும் எடுக்க முடியாது. இந்த முட்டாள், மூளையற்ற பொண்ணு எதையோ பார்த்திருக்கு, என்னவோ தெரிஞ்சு வெச்சிருக்கு.''

''சம்பவம் நடந்த மதியம் முழுக்க அவர் அலுவலகத் திலேயே இருந்ததுதான் வெளிப்படையா தெரியுதே?''

''அப்படின்னா, கிளம்பிப் போவதற்கு முன்னாலேயே ஏக்னஸை அவர் கொன்னிருக்கணும்னுதான் என்னால நினைக்க முடியுது. மிஸ் ஹாலண்ட் டைனிங் ரூமிலும் கிச்சனிலுமா மாற்றிமாற்றி இருந்திருக்காங்க. இவர் ஜஸ்ட் ஹாலுக்குள்ளே போயிருக்கணும். போனதும்தான் வெளியே எங்கேயோ போவதைப் போன்ற நிலைமையை உருவாக்க முன்கதவினைத் திறந்து பின்பு மூடியிருப்பார். பிறகு ஹாலிலிருந்து மளமளன்னு அந்த சின்ன அறைக்குள்ளே நழுவியிருப்பார். அப்புறம் ஏக்னஸ் மட்டும் தனியா வீட்டுல விடப்பட்டபோது மெல்லமா போய் அவர் அழைப்பு மணியை அடிச்சிருப்பார். அடிச்சுட்டு டக்குனு அதே சின்ன அறைக்குள்ளே நழுவியிருப்பார். காலிங் பெல்லுக்கு பதில்தர ஏக்னஸ் வந்து முன்கதவைத் திறக்கும்போது மண்டைல ஓங்கியடிச்சிருப்பார். பாடியை வேகவேகமா கப்-போர்டுக் குள்ளே திணிச்சுட்டு ஆபிஸூக்குப் போயிருப்பார். இதுல யாரும் ஓர் ஆம்பிளையை சந்தேகிக்கவே இல்ல என்பதைக் கவனத்துல வெச்சுக்கணும்.''

''குரூரம், குரூரம்'' என்றார் மிஸஸ் டேனே.

''மிஸ்டர் ஸிம்மிங்டன்னுக்காக நீங்க வருந்தலியா, மிஸஸ் டேனே?'' - நான் விசாரித்தேன்.

''கொஞ்சங்கூட கிடையாது. ஏன்?''

''இதைக் கேட்க எனக்கு சந்தோஷமாயிருக்கு, அவ்ளோ தான்.''

ஜோன்னா கேட்டாள்:

''இதுல எப்படி ஐமீ க்ரிஃபித் உள்ளே வரா? மருந் தரைக்கும் குழவி, ஊசி இதெல்லாம் மிஸ்டர் ஓவனின் மருந்தகத்திலிருந்து எடுக்கப்பட்டிருப்பது எனக்குத் தெரியும். இதையெல்லாம் ஒரு கிச்சனுக்குள்ளே கொண்டு போய் யார் கண்ணிலும் படாமல் வைப்பது ஒரு ஆணுக்கு ரொம்ப கஷ்டம். இப்பத்தான் நாஷ் என்கிட்டே சொல்லிக்கிட்டிருந் தார், அதெல்லாம் எங்கேயிருந்ததுன்னு. மிஸ்டர் ஸிம்மிங் டன்னின் ஆப்புஸ்லேயாமே? தொலைச்சுத் தலைமுழுகாம ஒளிச்சா வெப்பாங்க?''

''யாருக்கும் மிஸ்டர் ஸிம்மிங்டன் மீதோ குறிப்போ எந்த ஆணின்மீதோ - சந்தேகம் கிடையாதே, ஜோன்னா...''

''ஆனா அந்த சின்ன அம்மிக் குழவியால ஏக்னஸை அவர் தாக்கல. அங்கே ஒரு பேப்பர் வெயிட் கண்டெடுக்கப் பட்டிருக்கு - தலைமுடி மற்றும் ரத்தக்கறையோடு. ஐமீ கைது பண்ணப்பட்ட அன்று, அவர் நறுக்கி எடுத்திருந்த புத்தக் கத்தின் பக்கங்களையெல்லாம் ஐமீ வீட்டுல கொண்டு போய் இவர் திணிச்சிருக்கணும்னு சொல்லுது போலீஸ். இது என்னை மறுபடியும் என் முதல் கேள்விக்கே இழுத்துக்கிட்டுப் போகுது. ஐமீ க்ரிஃபித்துக்கு பதில்? அவங்க கடிதாசி

எழுதினதை போலீஸ் தனது லெண்டு கண்களால பார்த்திருக்கு...''

''யெஸ், அஃப்கொர்ஸ்'' சொன்னார் மார்ப்பிள். ''அவங்கதான் அந்தக் கடுதாசியை எழுதியிருக்காங்க.''

''ஏன்?''

''ஓ டியர் தன் வாழ்நாள் முழுமைக்கும் மிஸ்டர் ஸிம்மிங்டன்னின் மீது மிஸ் க்ரிஃபித் தொய்யாக் காதல்ல இருந்திருப்பதை நீங்க கவனிக்கவே இல்லையா?''

''பரிதாபத்துக்குரியவள்!'' - இயந்திரத்தனமாய் சொன்னார், மிஸஸ் டேனே.

''ரெண்டு பேரும் எப்பவுமே நல்ல நண்பர்களா இருந்திருக்காங்க. மேலும், மிஸஸ் ஸிம்மிங்டன் மரண மடைஞ்சதுக்கப்புறம், எப்படியாவது ஒருநாள், தான் தனது காதலரோட---'' இங்கு நாசூக்காய் இறுமினார் மிஸ் மார்ப்பிள். ''அப்புறமா எல்ஸீ ஹாலண்ட்டைத் தொடர்பு படுத்தி கிசுகிசு பரவுது. அது அவங்களை அடிவரை உலுக்கி யிருக்கும்னு நான் எதிர்பார்க்கிறேன். ஸிம்மிங் டன்னின் கருணையைப் பெற இந்த ஹாலண்ட் பொம்பளை நாடகம் ஆடுதுன்னும், அவருக்குத் தகுந்தவ கிடையாது இவள்னும், மிஸ் ஐமீ நினைச்சிருக்கணும். ஆகவே, அவரை அறியாமலே, அவருக்குள்ளே ஓர் உந்துதல் வந்திருக்கணும். ஏன் இன்னொரு மொட்டைக் கடுதாசியைத் தட்டிவிடக் கூடாது? அந்தப் பொம்பிளையை பயமுறுத்தி இடத்தை விட்டே தூக்கிடக் கூடாது? இதுதான் பாதுகாப்பான வழின்னு நினைச்ச அவங்க, அனைத்து எச்சரிக்கைகளையும் கடைபிடிச்சு அந்தக் கடுதாசியை தயாரிச்சிருக்காங்க.''

"அப்புறம்?" கேட்டாள் ஜோன்னா.

"கடுதாசியை மிஸ் ஹாலண்ட் கொண்டுபோய் நேரா மிஸ்டர் ஸிம்மிங்டன்னிடம் காட்டியபோது, அதை யார் எழுதியிருக்கணும் என்று அவர் உடனடியா உணர்ந்திருக்கணும். இதுல கேஸை ஒட்டுமொத்தமா முடிச்சுட்டு நிரந்தரப் பாதுகாப்பை அடைய இருக்கும் சாத்தியத்தையும் அவர் கவனிச்சிருக்கணும். இருந்தாலும் அவருக்குள்ளே ஒரு பயம் - போலீஸ் மொட்டைக் கடுதாசி எழுத்தாளரைப் பிடிக்காம ஓயாதே எனும் பயம். கடுதாசியைத் தூக்கிக்கிட்டுப் போலீஸிடம் போனபோது அங்கே ஐமீ க்ரிஃபித் மொட்டைக் கடுதாசியை எழுதியதைப் பார்த்ததா அவங்க சொன்ன போது - ஓ, கேஸை வசதியா முடிக்க அருமையான ஒரு வாய்ப்பை அவர் கவனிக்கிறார்.

"அவங்க வீட்டுக்கு டீ சாப்பிட அன்று மதியம் வரும் போது, தனது அலுவலகப் பெட்டியிலேயே நறுக்கியெடுத்திருந்த காகிதங்களைக் கொண்டு வந்துடலாம்... மூச்சுக் காட்டாமல் அவற்றை அவங்க வீட்டு அலமாரியிலேயே எங்காவது வெச்சுட்டு நகர்ந்துடலாம்... மாடிப்படிகளுக்குக் கீழே பதுக்கியது, ஒரு செம டச்."

"இத்தனை கூர்மையா நீங்க கேஸை படிச்சிருக்கும் போதும், உங்களை நான் ஒரு விஷயத்துக்காக மன்னிக்க முடியாது, மிஸ் மார்ப்பிள்" என்றேன் நான். "மேகனைக் கட்டிக்கிட்டு நீங்க அழுதது!"

என்னைத் தனது மூக்குக்கண்ணாடி வழியே பார்த்த அவரது பார்வை, அசையாது துளைத்தெடுக்கும்படி இருந்தது.

"மை டியர் யங் மேன், ஏதாவது பண்ணித்தான் ஆகணும். இந்த புத்திசாலித்தனமான, அதே சமயம் ஈவிரக்கமற்ற

ஆளுக்கு எதிரா ஒரு சாட்சிகூட கிடையாது. எனக்கு யாருடைய உதவியாவது தேவை மகா தைரியமும் நல்ல மூளையும் உள்ள ஒருவரது உதவி. இப்படிப்பட்ட நபரை நான் கண்டுபிடிச்சு பயன்படுத்தினேன்!''

''அவளுக்கு மிகவும் ஆபத்தா முடிஞ்சிருக்கலாம்...''

''யெஸ். ஆபத்தானதுதான். ஆனா, ஒரு தவறும் செய்யாத சக மனிதன் ஒருவனின் உயிருக்கே உலை வைக்கப்படும் போது, அதை பார்த்துக்கிட்டு சும்மா உட்கார்வதற்காக நாம இந்த பூமிக்குள்ளே இன்னும் விட்டுவைக்கப்படல, மிஸ்டர் பர்ட்டன். விளங்குதா?''

எனக்கு விளங்கியது.

# அத்தியாயம் - 15

ஹை ஸ்ட்ரீட்டில். காலைப்பொழுது.

மாமிசக்கடையிலிருந்து, அவரது ஷாப்பிங் பை முழுவதையும் நிரப்பிக் கொண்டு வெளிவருகின்றார் மிஸ் எமிலி பார்ட்டன். அவரது கண்கள் பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தன.

''ஓ, மிஸ்டர் பர்ட்டன். நான் கிளர்ச்சியில மிதந்து கிட்டிருக்கேன். கடைசியா நானும் ஒரு கப்பல் பிரயாணத்துல இடம்பெறப்போறேன்னு நினைச்சாலே சிலிர்க்குது!''

''நல்லா என்ஜாய் பண்ணுவீங்கன்னு நினைக்கிறேன்.''

''ஓ, நிச்சயமா. நான் தனியாப் போக என்னிக்குமே துணிஞ்சிருக்க மாட்டேன். எல்லாம் அவன் செயலாப் போயிக்கிட்டிருக்குப் பாருங்க. ரொம்ப நாளாவே லிட்டில் ஃபர்ஸிலிருந்து விலகியிருக்கணும்னு நான் நினைச்சுக் கிட்டிருந்தேன்... ஆனா என்னுடைய அணுகுமுறைகள் எல்லாமே நேரடியா இருந்ததால அந்நியர்கள் யாரும் அங்கே வந்து தங்குவதை என்னால தாங்கிக்க முடியல. ஆனா பாருங்க இப்பத்தான் நீங்க இருக்கீங்க, இனிமே மேகனோட! எல்லாம்

வித்தியாசமாப் போகுது. இந்த ஐமீப்பொண்ணு இருக்கு. அவளோட டெரிபிள் அனுபவங்களுக்குப் பிறகு மேற்கொண்டு என்ன செய்வதுன்னு விளங்காம இருக்கா... இந்த நிலைமைல அவளோட சகோதரரின் திருமணம். மீன்கூட வர ஒத்துக்கிட்டிருக்கா அவ. ரெண்டு பேரும் இங்கிருந்து கிளம்பி, நிறைய நாட்கள் தள்ளியிருக்கப் போறோம். சொல்லப்போனா, நாங்க ரெண்டு பேரும்---'' இங்கு மிஸ் எமிலி சட்டென்று குரலைத் தாழ்த்திக் கொண்டார்: ''---உலகையே ஒரு சுற்று சுற்றிட்டு வருவோம்!'' தொடர்ந்தார்: ''ஐமீ சிறந்த கம்பெனி. அற்புத மானவ, ப்ராக்டிக்கலானவ. பார்த்தீங்களா... எல்லாமே நல்லதுக்குத்தான் நடக்குது. என்ன சொல்றீங்க?''

கல்லறையில் புதைந்து கிடக்கும் மிஸஸ் ஸிம்மிங்டன்னும் ஏக்னஸும் மிஸ் எமிலியின் இந்தப் பேச்சினை சகித்துக் கொள்வார்களா என்று ஒருகணம் நான் சிந்திக்க வேண்டிய தாயிற்று. ஸோ வாட் எல்லோரும் ஒருநாள் மரணிக்க வேண்டியதுதானே! ஆகவே எல்லாம் நன்மைக்கே என்ற மிஸ் எமிலியின் அணுகுமுறையை நான் ஏற்றுக் கொண்டேன்.

ஹை ஸ்ட்ரீட் வழியாய் போன நான், ஸிம்மிங்டன் வீட்டின் கேட்டுக்குள் நுழைந்தேன். என்னைச் சந்திக்க மேகன் வெளியே வந்தாள்.

அப்படியொன்றும் அது ரொமாண்டிக் மீட்டிங்காய் அமையவில்லை. அவளுடன் கூடவே வந்த ஒரு வளர்ந்த நாய் அப்படியே என்மேல் பாய எத்தனிக்க, நான் தடுமாற வேண்டியதாயிற்று.

''இவன் நல்லா இல்ல?'' கேட்டாள் மேகன்.

''தாள முடியாத அன்பு! உன் நாயா என்ன?''

''யெஸ். திருமண அன்பளிப்பாய் ஜோன்னா தந்தது. நமக்கு சூப்பரான வெட்டிங் ப்ரஸண்ட்டுகள் கிடைச்சிருக்கு, ஆங்? கம்பளியால் நெய்த அந்த உடையலங்காரம் மிஸ் மாப்பிள்ளிடமிருந்து. அற்புதமான சைனா டீ-செட் மிஸ்டர் பையிடமிருந்து. எல்ஸீ ஒரு ரொட்டி சுடும் வலை அனுப்பி யிருக்காங்க---''

''என்ன ஒரு தெரிவு...'' நான் பொய்யாய் வியந்தேன்.

''அவங்க பல்வலிக்கு டாக்டரின் சிகிச்சை நல்லா குணமாக்கிடுச்சாம். சொன்னாங்க. ஆங், எங்கே விட்டேன்...''

''திருமண அன்பளிப்புகள்ல. மறந்துடாதே... நீ மனசை மாத்திக்கிட்டா எல்லாத்தையும் திருப்பி அனுப்பிடணும்.''

''நான் என் மனசை மாத்திக்கவே மாட்டேன். வேறென்ன நமக்கு வந்திருக்கு. ஓ யெஸ், மிஸஸ் டேனேயும் எகிப்திய ப்ரஸண்ட் ஒண்ண அனுப்பியிருக்காங்க.''

''சர்வதேச அன்பளிப்புகள், ஆங்?''

''ஓ! ஓ! ஆனா இதுல மிகச் சிறந்தது என்னன்னு உங்களுக்கு இன்னும் தெரியாது. பேட்ரிட்ஜூம் ஆக்சுவலா எனக்கொரு அன்பளிப்பு அனுப்பியிருக்காங்க. அற்புதமான ஒரு கவுன். இப்ப அவங்களுக்கு என்னைப் பிடிக்க ஆரம்பிச்சிருக் கணும்னு நினைக்கிறேன். அதுல இருக்கும் எம்பிராய்டரி வேலை முழுக்க அவங்களே செஞ்சதா சொன்னாங்க.''

''டியர், டியர்'' என்ற நான், ''பேட்ரிட்ஜ் வரா'' என்றேன்.

என்னை அப்படியே வீட்டுக்குள் இழுத்துக் கொண்டாள் மேகன்.

*சொன்னாள்:*

*''நாய்கூட ஒரு நாய்ச்சங்கிலி அனுப்பியிருக்கும் ஜோன்னா, கூடவே இன்னொரு நாய்ச்சங்கிலியும் அனுப்பியிருக்கா. எதுக்காக இருக்கும்?''*

*''அது'' என்ற நான், ''ஜோன்னா பண்ணியிருக்கும் ஒரு சின்ன ஜோக்'' என்றேன்.*

**முற்றும்**

# மின்நூல் கூடம்

## DIGITAL LIBRARY



Do you enjoy reading but can't get to your local library?

Then let us bring the library to **YOU**!

மின்நூல் ஆக்கம் : தமிழ் நேசன்

மொட்டைக் கடுதாசிகள்....
அந்தச் சிறு கிராமம் முழுக்க ஒருத்தர் பாக்கியில்லாமல் அனைவருக்கும் வருகின்றது. அனைத்தின் சாரமும் ஒன்றுதான்... செக்ஸ் தாக்குதல்கள்.
கடுதாசிகள் கூறும் அனைத்தும் பொய் என்று ஒதுக்கி விடுகிறவர்கள் இருக்கிறார்கள். அதே சமயம் அது பொய்யென்று தனக்கும் மற்றவர்களுக்கும் தெரியும் என்று அறிந்திருந்தாலும் சீரியஸாக எடுத்துக் கொள்பவர்களும் இருக்கிறார்கள். இவ்வாறு மனத்தளவில் பாதிக்கப்பட்டு விடும் ஒருவர் இறந்தும் போகிறார்.

இங்கு ஒரு சந்தேகம் வந்த மொட்டைக் கடுதாசியின் தாக்குலால்தான் அவர் இறந்தாரா அல்லது...
ஒருவேளை அது கொலையாய் இருந்தால் யார் செய்திருப்பார்கள் ?காரணம்?

கொலைக்கான இலக்கே தட்டுப்படாதபோது அது கொலைதான் என்று நிரூபிக்க எடுக்கப்படும் முயற்சிகள் ஜெயிக்குமா? மொட்டைக் கடுதாசி எழுதிய அதே நகரும் விரல்கள்தான் கொலைக்கான காரணமா? அல்லது இக்கொலையே மொட்டைக் கடுதாசிகளுடன் தொடர்பற்ற ஒரு தனி ட்ராக்கா?

அற்புதமாய் நகரும் இந்த க்ரைம் த்ரில்லரின் க்ளைமாக்ஸ் இருக்கிறது பாருங்கள்... மொட்டைக் கடுதாசிகள் மற்றும் கொலை ஆகியவற்றின் தோலுரிக்கப்படும் அந்தக் கடைசி நிமிடங்கள் இருக்கின்றன பாருங்கள்... வாவ்... நேரத்தை ஒதுக்கி ஏறத்தாழ முன்னூறு பக்கங்கள் படித்ததன் பலன் கிட்டும் நிமிடங்கள் அவை.